# உயிரே
## உனக்காக



சி. செந்தமிழ்ச்சேய்

# உனக்காக



சி. செந்தமிழ்ச்சேய்

# உயிரே உனக்காக

புலவர், பொறிஞர்.

சி. செந்தமிழ்ச்சேய்; பொறி.இ; இல.இ.

செந்தில் பதிப்பகம்,

24, கே.டி.ஆர் நகர், கடற்கரைச்சாலை,

கடலூர் – 607 001. ✆: 322950, 324170

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | உயிரே உனக்காக. |
| பொருள் | : | கதை நாடகம். |
| ஆசிரியர் | : | புலவர், பொறிஞர். சி. செந்தமிழ்ச்சேய். |
| பதிப்பு | : | முதற் பதிப்பு. நளி திங்கள், இருபத்தைந்தாம் நாள், திருவள்ளுவர் ஆண்டு 2031, (10.12.2000). |
| பதிப்பாளர் | : | சீ. செந்தில், 24, கே.டி.ஆர் நகர், கடற்கரைச் சாலை, கடலூர் - 607 001. |
| உரிமை | : | ஆசிரியர்க்கு. |
| பக்கங்கள் | : | 256 + xvi |
| தாள் | : | வெள்ளைத்தாள் 11.6 |
| எழுத்து | : | 11 புள்ளிகள். |
| விலை | : | **உருபா : 50/-** |
| நூல்கள் கிடைக்குமிடம் | : | சி. செந்தமிழ்ச்சேய், சேயகம், 49, துரைசாமிநகர், கடலூர் - 607 001. |
| அச்சிட்டோர் | : | சபாநாயகம் அச்சகம், 176, கீழத்தேர் வீதி, சிதம்பரம் - 608 001. ✆ : 23040, 23020. |

# என்னுரை

இஃது ஒரு நாடக நூல். நடிப்பதற்காக அன்று; படித்து மகிழ்வதற்காக எழுதப்பட்டது. எனவே, நாடக மரபுகளை நாடி, ஆய்ந்து, மரபுகள் மீறப்பட்டனவே என்று யாரும் மறுகத் தேவை இல்லை.

புத்தகக் குவியல்களுக்கிடையே புதைந்து கிடந்த கையெழுத்துப் படியைத் தூசு தட்டித் தூய்மை படுத்தி, எடுத்துப் படித்து இனிதென்று உரைத்தவர் என் மகன் **செல்வக்குமரன்.** பிள்ளைக்குப் பிடித்த நூலை இப்போது அச்சில் பதித்திருக்கிறேன்.

'கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும்' திறனுடைய இனிய நண்பர், இன்முகத்தர், ஒல்லும்வாய் எல்லாம் உயர்ந்து நிற்கும் என் கெழுதகை ஆசிரியர், **முனைவர். இரா. செல்வக்கணபதி** அவர்கள் பல்வேறுபட்ட தன் தமிழ்ப்பணிகளுக்கு இடையிலும் இந்நூலைப் படித்துப் பார்த்துப் பயனுள்ள ஓர் அணிந்துரையை அளித்துள்ளார். நேரில் சென்று வேண்டா நிலையிலும் நேரிய ஆய்வுரை அளித்துள்ள அருளாளர் அவர். மேலும், நூல் மேம்பாட்டிற்கு வேண்டிய பல்வேறு திருத்தங்களைப் பரிந்துரைத்த பண்பாளர் ஆவர்.

என் எழுத்துப் பணிகளுக்கு இடையறாது ஊக்கமும் உதவியும் உற்றுழி எல்லாம் அளித்து வருபவர் **பெரியவர் வெள்ளையாம்பட்டுச் சுந்தரமும் அனந்தபுரம் கோ. கிருட்டிண மூர்த்தியும்** ஆவர். பதிப்புத் துறையிலும் எழுத்துத்துறையிலும் பட்டறிவு மிக்க இவர்களால் எழுத்தாளர்கள் என்று ஏற்றம் பெற்றோர்

எண்ணிக்கை இலர். என்றும் ஏறப் பயன்படும் ஏணி ஒப்ப எந்த எதிர்பார்ப்பும் இல்லாத இனியர் இவர். இருவர் ஆகும்.

இளையர் எனினும் யாரோடும் இயைந்து பழகும் ஆரவாரமற்ற அழகு முகத்துக்குச் சொந்தக்காரர், முகநகப் பழகா அகநெகிழ்வுடையார், என் விளையாட்டுத் தோழரும் மின்வில் பற்றவைப்பு நிறுவன உரிமையாளருமான **செந்தில்** ஆவர். இந் நூலை நானே வெளியிடுகிறேன் என்று தானே முன்வந்தவர் அவராகும்.

முடிந்த நிலையில் நூலைப் படித்து, வேண்டிய பயனுள்ள திருத்தங்களைத் தெரிவித்தவர் இனிய நண்பர், **வழக்குரைஞர். சீனி. சிவானந்தம்.**

சட்டத்துறைச் சார்ந்த என் வினாக்களுக்குச் சளைக்காமல் விடையளித்து உதவியவர் கடலூர் **வழக்குரைஞர் தமிழரசன்** ஆவர்.

முகப்பு அட்டையை எண்ணப்படி வடிவமைத்து அளித்தவர் கவிச்சித்தர் க.பொ. இளம்வழுதியின் மகனார் **பரிதி.**

எப்போதும் போல அழகிய கட்டமைப்போடு அச்சிட்டுத் தந்தவர் சிதம்பரம் சபாநாயகம் அச்சக உரிமையாளர், பழகுதற்கினிய **கௌதம சங்கரும்** அவர்தம் அன்புத் தோழர்களும் ஆவர்.

அருளாளர் அனைவர்க்கும் அகனார்ந்த என் அன்பு நன்றி.

**சி. செந்தமிழ்ச்சேய்,**
49, துரைசாமி நகர்,
கடலூர் - 607 001.

# அணிந்துரை

முனைவர். இரா. செல்வக்கணபதி, எம்.ஏ., பிஎச்.டி.,
மயிலாடுதுறை.

'உயிரே உனக்காக' என்ற தலைப்பில் நண்பர் திரு. சி. செந்தமிழ்ச்சேய் எழுதியுள்ள நாடக இலக்கியத்தை முழுவதுமாகப் படித்து மகிழ்ந்தேன்.

ஒரு காலத்தில் படிப்பதற்கென்றும், நடிப்பதற்கென்றும் நாடகங்கள் எழுதப்பட்டன. சிறுகதைகளையும், புதினங்களையும் விரும்பிப் படித்த அக்கால தமிழ் ஆர்வலர்கள், நாடக வடிவில், உரையாடல் உத்திகளோடு அமைந்த நாடகங்களைப் படித்து மகிழ்வதிலும் பெரிதும் நாட்டம் கொண்டிருந்தனர்.

மேடை நாடகங்களின் மேல் மக்கள் காட்டிய ஆர்வத்தைப் பயன்கொண்டு, மேடைகளில் வெற்றி பெற்ற நாடகங்களின் உரையாடல்கள் நூல்களாக அச்சிட்டு வெளியீடப் பெற்றன. நவாப். இராசமாணிக்கம், ஔவை சண்முகம், நாமக்கல் கவிஞர், அண்ணாதுரை, கருணாநிதி, இளங்கோவன், ஏ.எஸ்.ஏ. சாமி முதலியோரின் நாடகங்களை விரும்பிப் படிப்பதும், வசனங்களை மனப்பாடம் செய்வதும், பாத்திரங்கள் மேடைகளில் பேசியவாறே பேசி மகிழ்வதிலும் தமிழ் இளைஞர்கள் திளைத்து மகிழ்ந்த காலம் நினைவில் நிற்கிறது.

திரைப்படங்களின் இடையே சிறப்புமிக்க வரலாற்று நாடகக் கூறுகள், கூர்மையான உரையாடல் அழகுடன் இணைக்கப்பெற்றுப் பெரும் வரவேற்பைப் பெற்றன.

கடந்த இருபது ஆண்டுகளில் கிட்டத்தட்ட நாடகக் கலை மெல்ல மெல்ல சென்று தேய்ந்து இற்றுவிட்டது. திரைப்படங்களின் வீச்சும், இசைதந்த மயக்கமும், புதிய உத்திகளும் உரையாடல் செல்வாக்கைப் பெரிதும் இல்லாது ஆக்கிவிட்டன. மிகக் குறைந்த உரையாடல்கள் இடம் பெற்ற படங்களைக் கலைப்படங்கள் என்று கூறி மகிழ்ந்து, உரையாடல் உத்திக்கு மூடுவிழாக் கண்டனர்.

இந்த வரலாற்றுப் பின்புலம் அறியாதவர் அல்லர் செந்தமிழ்ச்சேய். இருந்தும் காலம் மாறும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் 'உயிரே உனக்காக' என்ற இந்த நாடகத்தைப் படைத்துத் தமிழ் உலகிற்கு வழங்க முன் வந்துள்ளமை பாராட்டிற்குரியது.

மூன்று கவிதை நூல்களையும், 'செம்பியன் தமிழவேள்' என்ற வரலாற்றுப் புதினத்தையும் நண்பர், தமிழ் இலக்கிய உலகிற்கு முன்னரே வழங்கியுள்ளார். அவற்றுள் அவரது புதினம் தமிழ்நாடு அரசால் விருது வழங்கிச் சிறப்பிக்கப் பட்டது.

மின்துறைப் பொறியாளராக வாழ்வைத் தொடங்கி, தமிழ் ஆர்வத்தால் முறையாகத் தமிழ் கற்று, பி.லிட்., பட்டம் பெற்று, மரபில் ஊன்றி நிற்கும் நண்பர், அண்மையில் இரு அகர முதலிகளையும் முறையாகத் தொகுத்து வெளியிட்டார். தமிழ்அன்பு, நேர்மை தவறாத வாழ்க்கை முறை, சமூகப் புதுமைகளை உறுதியோடு ஏற்றுப் போற்றும் திண்மை, மிக எளிமையான, சிறிதும் ஆரவாரம் கலவாத வாழ்க்கை முறை முதலியவற்றில் ஊன்றி நிற்கும் நண்பர், தாம் விரும்பிய சில நல்லனவற்றைச் சமூகத்திற்கு எடுத்துரைக்கும் நோக்கிலேயே இந்நாடகத்தைப் புனைந்திருக்கிறார்.

கதை என்று பெரிதாகச் சொல்வதற்கு இந்நாடகத்தில் ஒன்றும் இல்லை. கதை சொல்வதும் ஆசிரியரின் நோக்கம் அன்று என்பது புலனாகிறது.

ஒரு பெண் கொலை செய்யப்படுகிறாள். கொலையாள் யார் என்பதைத் தம் கூர்த்த அறிவால், ஒரு இளைய வழக்குரைஞர் வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறார். வழக்குரைஞர் துப்புத் துலக்குபவராக மாறி, தடய அறிவியல் கண்கொண்டு உண்மையைக் கண்டுகாட்டக் காரணம், கொலைக்குற்றம் சாட்டப்பட்டவரின் குடும்ப நலத்தில் அக்கறை கொண்ட எழிலி என்ற பெண் மீதான காதல்தான் என்பது சுவை குன்றாது நிலைநாட்டப்பட்டுள்ளது. 'கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால், மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்' என்ற பாவேந்தர் கவிதை வரிகளுக்கு நல்ல வடிவம் அமைந்து கிடப்பது மகிழ்ச்சி தருகிறது.

பேச்சுத்தமிழ், வழக்குத்தமிழ், வட்டாரத்தமிழ் என்று உரையாடல் கலை மரண வாயிலில் நிற்கும் நேரம் இது. நல்ல தனித்தமிழ் நடையில் - பிறமொழி சொல் கலவாத உரையாடல்களால் கதை நடத்தும் ஆசிரியரின் துணிவு பாராட்டத்தக்கது. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களை எடுத்தாள்வதோடு, புதிய கலைச் சொற்களையும் ஆக்கிக் கொண்டிருப்பது அறிஞர் உலகின் பாராட்டைப் பெறும் என்பது உறுதி.

எந்த ஒரு கலை வடிவமாயினும் ஒரு குறிக்கோளை உள்ளடக்கி இராவிட்டால் அது பயனின்றி அழியும். ஆயினும், ஆசிரியரின் விருப்பம் இலைமறை காயாகக் கதை ஓட்டத்தோடு இணைந்தே அமைதல் வேண்டும். குறிக்கோளை

முன்னிறுத்துதல் துருத்திக்கொண்டு நின்றால் கலைவடிவம் குறைவதோடு, பெரும்பான்மையோர் புறக்கணிக்கவும் செய்வர். சிலப்பதிகாரம் பெற்ற வெற்றியை மணிமேகலை பெற இயலாமைக்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்? பாரதிக்குக் கிடைத்த பெரும் வரவேற்பைப் பாவேந்தர் பெற இயலாமைக்கும் கூட இதுவே அடிப்படையதால் கூடும்.

நாடக ஆசிரியர் செந்தமிழ்ச்சேய் அழகிய தமிழ் இலக்கியத் தொடர்களை ஆங்காங்கே பெய்து, தமிழ் மொழிக்கு அணிசேர்க்க முயல்கிறார். திருக்குறள், பாரதி பாடல்கள், பாவேந்தர் பனுவல்கள் உரிய இடங்களில் அழகுறக் கையாளப்பட்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது.

தமிழ்நாட்டில் இசையின் பெயரால் நிகழ்த்தப் பெறும் பல்வேறு கீழ்மைகளை உணர்வோடு கண்டிப்பதில் ஆசிரியரின் சமூக விருப்பம் புலனாகிறது. காமம் பொருந்திய பாடல்களை, அவற்றின் பொருள் உணராமலேயே பாடுவதும், பாடக்கேட்பதும் ஆசிரியரால் கண்டிக்கப்படுவதை அனைவரும் ஏற்கவே செய்வர். அழகிய இசை வடிவங்களையும் பண் அடைவுகளையும், சிலப்பதிகாரம், அதன் உரைகள், தேவாரம் முதலியன எடுத்துரைத்தும், அவற்றை ஏற்றுப் போற்றாது வடமொழி இராகப் பெயர்களைக் கையாண்டு மகிழும் இசை உலகினரை எள்ளி நகையாடுகிறார்.

> ‘என்னவோ அம்சதுவணியாம், அரகரப் பிரியாவாம், சங்கராபரணமாம், சப்த சுரமாம்! எப்படிப் புரியும் என்னைப் போன்ற எளிய மக்களுக்கு? அஃதென்ன ஆரோகணம்? அவரோகணம்? ஏற்றம் இறக்கம் என்றால் எல்லோரும் தெரிந்துகொள்ளப் போகிறார் களோ என்பதற்காக ஏமாற்றா? இசை என்று

சொன்னால் எல்லோர்க்கும் தெரியாதா? சங்கீதமாம்; சங்கீதம்!'

அறிவாளனைப் பேசவிட்டுத் தமிழ் மக்களின் நீடுதுயில் நீக்க ஆசிரியர் முனைவது புரிகிறது. அண்ணாமலைச் செட்டியார் முயற்சியால் தமிழ்இசைச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டு அரை நூற்றாண்டு கடந்தும், தமிழ் இசையை இனம் கண்டு, வேறு பிரித்து வளர்க்க முயலாத நம்மவர் கீழ்மை வேதனைக்கு உரியது.

ஆசிரியரின் அழகிய சில சொல்லாட்சிகளைக் குறிப் பிடுவது என் கடமையாகிறது. சாட்சி, சான்றுரைஞராக வலம் வருகிறார். 'ரூம்' என்ற ஆங்கிலச் சொல் 'தங்கறை' என வடிவம் பெறுகிறது. 'அனுபவம்', 'பட்டறிவாக'ப் பளிச்சிடு கிறது. துன்பம் என்பதை 'உயவு' என மொழிமாற்றிக் காட்டுகிறார். தமிழில் 'ர'கரம் மொழி முதலில் வாராது என்ற தொல்காப்பிய நெறி புதுக்கி 'ரோஜா'வை 'இரோசா' என வடிவமைக்கிறார். 'ஜூஸ்,' பழச்சாறாக செவியில் இனிக்கிறது. என் 'யூகம்' சரிதானா எனப் பேசிய நமக்கு என் 'கணிப்பு'ச் சரியா என நல்ல சொல் பெய்து தொடர் அமைக்கிறார். விருப்பத்துடன் காத்திருப்பதை 'அணியமாய்க் காத்திருப்பேன்' என்று எழுதிக் காட்டுகிறார். 'புரூட் சாலட்' என்ற தொடர் 'பழக்கூழா'க மாற்றம் கொள்கிறது. அதனைப் 'பழக்கலவை' என்று கூடக் கூறலாம் போல் தோன்றுகிறது.

ஒரு நல்ல நூல் நூலாசிரியரின் பட்டறிவின் பதிவு களைத் தாங்கி நிற்றல் வேண்டும். 'யாம் மெய்யாக் கண்ட வற்றுள் இல்லை' என்றும், 'பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை' என்றும் தொடங்கி வள்ளுவர் தம் பட்டறிவுத் தேட்டங்களைப் பதிவு செய்திருப்பது வள்ளுவத்தின் காலங் கடந்த வாழ்விற்கு அடித்தளம் ஆகிறது.

செந்தமிழ்ச்சேய் இவ்வகையில் சிறந்து நிற்கிறார். துணிவான முடிபுகளையும், சமூகத்தோடு ஒத்துப்போகாது, புதிதாகத் தான் கண்ட நல்ல கொள்கைகளையும் அழுத்த மாகக் கதை மாந்தர்கள் கூற்றில் பதிவு செய்கிறார்.

> 'நட்பாகட்டும் குடும்பமாகட்டும் எதற்கும் இரண்டு பேர் தேவை. அந்த இருவரில் ஒருவராவது விட்டுக் கொடுத்து இணங்கி நடந்தால்தான் எதுவுமே இனிதாய்த் தொடரும்'. - மணியரசன்.
>
> 'வெறுக்கிறவளை நம்பினாலும் நம்பலாம்; சிரிக்கிறவளை மட்டும் நம்பக்கூடாது'. - கதிரவன்.
>
> 'காதலில் உண்மைக் காதல், பொய்க் காதல் என்பதெல்லாம் இல்லை; காதல் என்பது உண்மை'.
> - மங்கை.
>
> 'காதல் அழகானது; காமமோ அதனினும் அழகானது. காதலும் காமமும் ஒரே இடத்தில் ஒன்றும்போதே கரைகாணக் கூடாக் கழி பேரின்பம் பெருக்கெடுக்கிறது'.
> - மங்கை.
>
> 'வள்ளுவர், 'பெண்களை ஆண்களுக்குத் துணை என்றுதானே சொல்லி' உள்ளார். எங்கேனும் ஆண்களுக்கு இணை என்று சொல்லியுள்ளாரா?'
> - தேன்மொழி.
>
> 'உன்னால் விரும்பப்படுபவனைக் காட்டிலும், உன்னை விரும்புகிறவன் வாழ்க்கைக்கு மேலானவன் என்பது என் துணிபு'. - மங்கை.

பாத்திரங்களின் வாயிலாக ஆசிரியர் வெளிப்படுத்தும் உண்மைகள் அவரது ஆழ்ந்த சமூகப்பார்வையின் வெளிப்பாடு கள். நாடகத்தின் கதைப்போக்கினைக் கடந்த இத்தகு

சிந்தனைகளில்தாம், அதன் வாழ்வு நிலைபெற்றிருப்பதாக உணரமுடிகிறது.

சமூகத்தின் பலதரப்பட்ட மக்களுக்காக வழங்கப்படும் கலைவடிவம், சமூகத்தை, அதன் பிரிவுகளை, விருப்பு வெறுப்புக் களை உள்வாங்கிக் கொள்ளும் ஆற்றல் மிக்க எழுத்தாளர் களாலேயே சிறப்புப் பெறும். நண்பர் செந்தமிழ்ச்சேய், பொறியாளர், தமிழ்அறிஞர் என்ற நிலைகளுக்கும் மேலாக, சட்ட அறிவும், தடய அறிவியலும், உலகியலும், உளவியலும் கற்றறிந்தவராக தம் நூலுள் மேலெழுந்து நிற்பது பெருஞ் சிறப்பாக அமைகிறது.

துப்பறியும் கதைகளில் முடிபை வாசகர்கள் கடைசிவரை அறிந்துகொள்ள இயலாது கதை நடத்துவது கடினம். இப்புதினத்தில் கொலையாளி யார் என்பதைக் கடைசிவரை அறிந்துகொள்ள இயலாது ஆசிரியர் கதை நடத்தி வெற்றி பெறுகிறார்.

நாடகங்களின் வெற்றி, கதை மாந்தர்களை எவ்வாறு, எங்கே, எந்த அளவு பேசவைப்பது என்பதிலேயே அடங்கி யுள்ளது.

பேச்சு வழக்கிற்கும் மேலான, தனித்தமிழ் இலக்கிய நடையைக் கையாண்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது. ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தவர்களும் புரிந்து கொள்ளுமாறே உரையாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. நீதிமன்றங்களில் வழக்குரைஞர்கள் வாதங்களை நீள நீட்டியிருப்பது சற்றே சலிப்பைத் தருகிறது. இடையிடையே சில குறுக்கீடுகளைக் கையாண்டு சுவை கூட்டியிருக்கலாமே என எண்ணத் தோன்றுகிறது.

ஒரு கற்பனைக் கதையில் நிகழ்ந்ததாகச் சித்திரிக்கப் படும் ஒரு கொலை நிகழ்வை, வரைபடம் வரைந்து விளக்கி யிருக்கும் ஆசிரியர் திறம், அவர் வாசகர்களைப் புரிந்து கொள்ள வைப்பதில் காட்டியிருக்கும் ஆர்வ வெளிப்பாடாக அமைகிறது.

காதல் ரசம் பொதிந்த உரையாடல்கள் நிறையவே இடம்பெற்றுள்ளமை இளைஞர்களுக்கு ஏற்பாக அமையும் என்று நம்பலாம்.

நல்ல தமிழில், சமூகத்தை உயர்த்த வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் ஆசிரியர் செந்தமிழ்ச்சேய் எழுதி வழங்கியுள்ள உயிரே உனக்காக என்னும் இந்த நாடக நூலை, தமிழ் வாசகர்கள் ஏற்றுப் போற்ற வேண்டும்.

ஆசிரியரின் புதிய இந்த முயற்சியைப் பாராட்டுகிறேன். புதிய சிந்தனைகளோடு, மனித குலத்தை, அதன் இருப்பிடத்தி லிருந்து நகர்த்தி மேலெடுத்துச் செல்லும் முயற்சியை யார் மேற்கொண்டாலும், அவர்கள் மனிதகுலத்தின் நன்றிக் குரியவர்கள்.

எழுத்தாளன் வியாபாரி அல்லன். எவ்வளவு விற்கும்? எத்தனைபேர் வாங்குவார்கள் என்றெல்லாம் கணக்கெடுப்பது அவன் வேலையன்று. உணர்ந்தனவற்றையும், உயர்ந்தன வற்றையும், பதிவு செய்தல் அவன் கடன். என்றேனும் ஒருநாள் எல்லாவற்றிற்கும் ஒரு தேவை வரும். விழைவு களும், விருப்பங்களும் மாறி மாறி வரும் இயல்புடையன.

ஆசிரியரின் புதிய இந்த முயற்சியை நெஞ்சாரப் பாராட்டி மகிழ்கிறேன்.

**முனைவர். இரா. செல்வக்கணபதி,**
மயிலாடுதுறை.

புலவர், பொறிஞர்

**சி. செந்தமிழ்ச்சேய் அவர்களின்**

**பிற தமிழ் நூல்கள்:**

1. சோலைமலர் - மரபுப் பாவியம்.
2. பூம்பொழில் - மரபுப் பாவியம்.
3. செம்பியன் தமிழவேள் - வரலாற்றுப் புதினம். 320 பக்கங்கள்; உரூ. 60.00.
4. பூக்காடு - கவிதைக் கலவைகள். 92 பக்கங்கள்; உரூபா. 20.00.

---

**மின்வாரியத் தமிழார்வலர் தமிழ்ப்பணி அறக்கட்டளை வெளியீடுகள்:**

1. ஆட்சிச் சொற்கள் அகரமுதலி - ஆங்கிலம் - தமிழ்; 256 பக்கங்கள்; உரூபா. 60.00
2. பொறியியற்றுறைக் கலைச்சொற்கள் அகரமுதலி; 96 பக்கங்கள்; உரூபா. 20.00

**நூல்கள் கிடைக்குமிடம் :**

**சேயகம்,**

**49, துரைசாமிநகர், கடலூர் - 607 001.**

# உயிரே
# உனக்காக

(நாடகம்)

## நாடக மாந்தர் :

| | | |
|---|---|---|
| **கண்ணன்** | - | வழக்குரைஞர். |
| **கதிரவன்** | - | கண்ணனின் கல்லூரி நண்பர். |
| **அறிவாளன்** | - | கதிரவனின் உயிர் நண்பர்,<br>உடன் படித்தவர். |
| **மணியரசன்** | - | வழக்குரைஞர்,<br>கண்ணனின் உதவியாளர். |
| **தங்கப்பர்** | - | கண்ணனின் தாய்மாமன். |
| **அரிச்சந்திரன்** | - | காவற்றுறை ஆய்வாளர். |
| **தூயவன்** | - | காவற்றுறைத் துணை ஆய்வாளர். |
| **மங்கை** | - | கண்ணனின் தங்கை. |
| **தேன்மொழி** | - | கதிரவனின் தங்கை,<br>மங்கையின் கல்லூரித் தோழி. |
| **எழிலி** | - | கண்ணனின் மாமன் மகள் -<br>தங்கப்பரின் மகள். |
| **கோதை** | - | கதிரவனின் காமக்கிழத்தி. |
| **முத்தப்பர்** | - | உணவு விடுதி மேலாளர். |

# உயிரே உனக்காக

## காட்சி - 1

| | | |
|---|---|---|
| **இடம்** | : | வழக்கு மன்றம். |
| **காலம்** | : | பிற்பகல் மணி மூன்று. |
| **உறுப்பினர்கள்** | : | நடுவர், அரசு வழக்குரைஞர், வழக்குரைஞர் கண்ணன், குற்றஞ் சாட்டப் பெற்ற கோதை, உணவு விடுதி உரிமையாளர் ஆண்டவர், காவல் துறைத் துணை ஆய்வாளர் அரிச்சந்திரன், மற்றும் பலர். |
| **சூழல்** | : | குற்றவாளிக் கூண்டிலே கோதை நிற்க, சான்றுரைஞர் கூண்டிலே ஆண்டவர் நிற்கிறார். அரசு வழக்குரைஞர் சான்றாளர் ஆண்டவரிடம் தன் உசாவலை முடித்துக் கொண்டு நடுவரை நோக்கிப் பேசுகிறார். |

**அரசு வழக்குரைஞர் :**

நல்லதோர் வீணை செய்தே, அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ? மதிப்பிற்குரிய நடுவர் அவர்களே! தன்னால் உருவமைக்கப்பட்ட தங்குவிடுதியின் புகழ் தாழ்த்தப்படுவதைத் தாங்கிக் கொள்ள முடியாத உரிமையாளர்

*(சான்றுரைத்த விடுதி உரிமையாளர் பேச்சில் பெருமிதம் வெளிப்படுகிறது. கண்ணன் மேலே தொடரத் தயங்குவது நன்கு தெரிகிறது)*

**கண்ணன் :**

பெண்களை உங்கள் விடுதியில் உள்ளே விடுவதில்லையா?

**ஆண்டவர் :**

நான் அப்படிச் சொல்லவில்லை. விலைமகளிர்க்கு என் விடுதியில் இடமில்லை என்றுதான் சொன்னேன். இன்னும் சொல்வதென்றால், புலால் உணவுகளைக் கூட விடுதிக்குள் நுழைய விடுவதில்லை.

*(கண்ணன் தன் கையிலிருந்த குறிப்புகளைப் புரட்டி ஆய்கிறார்)*

**கண்ணன் :**

உங்கள் விடுதியில் மதுவோ, மகளிரோ, புலால் உணவோ புழக்கத்தில் இல்லை என்பதை உங்களால் உறுதியாக உரைக்க முடியுமா? நன்கு சிந்தித்துச் சொல்லுங்கள்.

*(விடையளிக்கும் முன்னர் உணவக உரிமையாளர் ஆண்டவர் சற்றுத் தயங்கியது வெளிப்படையாகத் தெரிகிறது)*

**ஆண்டவர் :**

நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?

**கண்ணன் :**

சரி. இந்த வினாவிற்கு விடை சொல்லுங்கள். உங்கள் உணவு விடுதியின் மதிப்பு என்ன?

**ஆண்டவர் :**

இன்றைய மதிப்பீட்டின்படி இருபது கோடி இருக்கலாம்.

**கண்ணன் :**

இதைத் தவிர வேறென்ன என்ன சொத்துகள் உள்ளன?

**அரசு வழக்குரைஞர் :**

மதிப்பிற்குரிய நடுவர் அவர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும். இவ்வழக்கிற்கும் இவ்வகையான வினாக் களுக்கும் என்ன தொடர்பு? இயைபற்ற வினாக்கள் தொடர்வதை நான் எதிர்க்கிறேன்.

*(நடுவர் கண்ணனை அமைதியாக நோக்குகிறார். கண்ணன் நடுவரை நேரிட்டுப் பார்த்தவாறு பேசுகிறார்.)*

**கண்ணன் :**

இவ்வழக்கிற்குத் தொடர்புடையனவே என் வினாக்கள். இன்னும் ஒரு சில வினாக்கள் கேட்க மதிப்பிற்குரிய நடுவர் அவர்கள் இசைவளிப்பீர்களேயாயின், என் வினாக்களின் தொடர்பு தெரியவரும்.

**நடுவர் :**

நல்லது; நீங்கள் உங்கள் வினாக்களைத் தொடரலாம்.

*(அரசு வழக்குரைஞர் தன்னிடத்தில் மெல்ல அமரக் கண்ணன் தன் குறுக்குக் கேள்விகளைத் தொடர்கிறார்.)*

**கண்ணன் :**

ஆண்டவர் அவர்களே, அந்த வினாவையையே இப்போதும் கேட்கிறேன். இருபது கோடி பெறுமானமுள்ள இவ்வுணவு விடுதி தவிர, வேறென்ன என்ன சொத்துகள் உங்களுக்கு உள்ளன?

**ஆண்டவர் :**

நான்கு வணிக வளாகங்கள், இரண்டு திரை அரங்குகள், இரண்டு திருமண நிலையங்கள், இன்னும் இப்படிச் சில சொத்துகள் மேலும் உள்ளன.

**கண்ணன் :**

இத்தனை சொத்துகளையும் நீங்கள் ஒருவரே கவனித்துக் கொள்கிறீர்களா?

**ஆண்டவர் :**

இல்லை. இவைகளைக் கவனித்துக்கொள்ளத் தனித் தனியே மேலாளர்களை அமர்த்தியுள்ளேன். மேலும், எல்லா

வற்றையும் மேற்பார்வையிடவும் கண்காணிக்கவும் தகுதி வாய்ந்த கண்காணிப்பாளர்களை என் நேரடிப் பார்வையில் வைத்துள்ளேன்.

**கண்ணன் :**

அப்படியா? நல்ல ஏற்பாடு! மிக்க மகிழ்ச்சி. உங்கள் உணவு விடுதிக்கு நீங்கள் அடிக்கடி செல்லும் வழக்கம் உண்டா?

**ஆண்டவர் :**

இல்லை; தேவை நேரின் மட்டுமே செல்வேன்.

**கண்ணன் :**

அண்மையில் எப்போது சென்றீர்கள் என்பதனைச் சொல்ல முடியுமா?

**ஆண்டவர் :**

நினைவில் இல்லை.

**கண்ணன் :**

நினைவில் இல்லையா? சரி; ஒரு மாதம் இருக்குமா?

**ஆண்டவர் :**

மேலே இருக்கும்.

**கண்ணன் :**

ஓராண்டு?

**ஆண்டவர் :**

இருக்கலாம். மேலேயும் இருக்கலாம்.

*(கண்ணன் வியப்போடு அவரைப் பார்க்கிறார்.)*

**கண்ணன் :**

ஓராண்டிற்கும் மேலாகவா?

**ஆண்டவர் :**

ஆமாம்.

**கண்ணன் :**

பின்னர் எப்படி விடுதியில் நடப்பவைபற்றி உங்களால் உறுதியாகக் கூற முடிகிறது? உங்கள் விருப்பத்திற்கு மாறாக,

உங்கள் கவனத்திற்கு வராமலேயே சில, பல தவறுகள் நடந்திருக்கலாம் அல்லவா?.

*(சான்றுக் கூண்டிலே நின்றிருந்த ஆண்டவர் சற்றே சிந்திப்பது தெற்றெனத் தெரிகிறது. விடையளித்தபோது குரல் நெகிழ்ந்து ஒலிக்கிறது.)*

**ஆண்டவர் :**

நடந்திருக்கலாம்.

**கண்ணன் :**

நன்றி, உங்கள் நேர்மையைப் பாராட்டுகின்றேன். உங்கள் விடுதியின் அறைகளிலே வாடிக்கையாளர்களுக்கு மது வழங்கப் படுகிறது; வயிற்றுப் பசிக்குப் புலால் உணவு படைக்கப்படு கிறது; உடற்பசிக்கு ஒய்யாரிகள் உள்ளனர். இதை நான் சொல்கிறேன்; மறுக்க முடியுமா உங்களால்?

**ஆண்டவர் :**

முடியும்.

**கண்ணன் :**

மறுக்கிறீர்களா?

**ஆண்டவர் :**

ஆம்; அப்படி நடைபெறுவதாக இதுநாள்வரை என் கவனத்திற்கு எதுவும் வந்ததில்லை.

**கண்ணன் :**

வந்திருந்தால்?

**ஆண்டவர் :**

கண்டிப்பாய் உடனடியாக உரிய மாற்று நடவடிக்கை எடுத்திருப்பேன்.

*(கண்ணன் சில நொடிகள் பேசாமல் அமைதி காக்கிறார்.)*

**கண்ணன் :**

உங்கள் கவனத்திற்கு வராமல் உங்கள் விடுதியில் தவறுகள் நடந்திருக்க வாய்ப்புகள் உண்டா? இல்லையா? எண்ணிப் பார்த்துச் சொல்லுங்கள்.

*(ஆண்டவர் விடை தெளிவாக உறுதியாக வெளிப் படுகிறது.)*

**ஆண்டவர் :**

இதில் எண்ணுதற்கு என்ன உள்ளது? நீங்கள் கூறியபடி நடக்க வாய்ப்புகள் உள்ளன; மறுப்பதற்கில்லை.

**கண்ணன் :**

மாண்பமை நடுவர் அவர்கள் ஆண்டவர்தம் கூற்றினைக் குறித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். *(மீண்டும் ஆண்டவர் பக்கம் திரும்பி)* மிக்க நன்றி. இதோ, இந்தப் படங்களைப் பாருங்கள்.

*(கண்ணன் சில படங்களைக் காட்டுகிறார். அவற்றைப் பெற்று ஆண்டவர் பார்க்கிறார். அவர் முகம் இறுக்கம் கொள்கிறது.)*

**கண்ணன் :**

"இப்போது ஏதேனும் புதியதாகச் சொல்ல விழை கிறீர்களா?"

*(மெல்ல, தெளிவாக விடை வருகிறது.)*

**ஆண்டவர்:**

எங்கள் விடுதியில் தவறுகள் நடந்து உள்ளன என்பது உண்மையே. நடந்த நிகழ்வுகளை அறியாது நானிங்கு உரைத்தமைக்குப் பெரிதும் வருந்துகிறேன்; மன்னிக்கவும்.

**கண்ணன் :**

நல்லது. என்னுடைய கட்சிக்காரர் கோதைக்கு எதிராக நீங்கள் சாட்டிய குற்றச்சாட்டுத் தவறென்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா?

**ஆண்டவர் :**

இல்லை. உங்கள் கட்சிக்காரர் என் விடுதி அறையைச் சட்டத்திற்கு முரணான செய்லுக்குப் பயன்படுத்துகிறார் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது; அதை நான் காவல் துறையினரிடம் தெரிவித்தேன்; அவ்வளவே. சரியா?

இல்லையா? நான் அறியேன். முடிவு செய்ய வேண்டியது இவ்வழக்கு மன்றமே. எனக்குக் கிடைத்த செய்தி உண்மை யானதுதான் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது; அதனாலேயே முறையிட்டேன். இதுதான் உண்மை.

**கண்ணன் :**

நான் எதிர்பார்த்ததும் அவ்வளவே.

*(கண்ணன் தன்னிடத்திற்குச் செல்லத் திரும்பி நடந்தவர், ஏதோ நினைவிற்கு வந்தவராய்த் திரும்பி வருகிறார்.)*

**கண்ணன் :**

என் கட்சிக்காரரை நீங்கள் இதற்கு முன்னர்ச் சந்தித்தது"ம் இல்லை; அவருக்கும் உங்களுக்கும் எந்த வகையிலும் தொடர்பும் இருந்ததில்லை என்று முன்னரே இங்குச் சொல்லி இருக்கிறீர்கள். அப்படி இருந்தும், இப்படி ஒரு மிகமிகச் சிறிய வழக்கில் உங்களை இணைத்துக் கொண்டதேன்? சான்றுரைக்க வென உங்கள் பொன்னான நேரத்தைச் செலவழிப்பதேன்? நெருடலாகத் தெரிகிறதே!

*(ஆண்டவர் விடை அளித்தபோது, அவர் கொண்ட சிந்தனை அனைவர்க்கும் நன்கு புலப்படுகிறது.)*

**ஆண்டவர் :**

உண்மைதான். அதே எண்ணம் எனக்கும் உண்டு. என் விடுதிப் பொறுப்பாளரே இதையெல்லாம் செய்திருக்கலாம்.

**கண்ணன் :**

மிக்க நன்றி. என் வினாக்கள் அவ்வளவே. தாங்கள் போகலாம்.

*(கண்ணன் தன்னிடத்திலே சென்றமர்கிறார். ஆண்டவர் சான்றாளர் கூண்டினின்று அகல்கிறார். குறிப்புகளை எடுத்துக் கொண்டிருந்த நடுவர், கண்ணனை ஏறிட்டு நோக்குகிறார்.)*

**நடுவர் :**

கண்ணன், நீங்கள் சான்றுரைஞரிடம் காண்பித்த நிழற் படங்கள் என்ன? அவை இவ்வழக்கிற்கு எவ்வகையில் தொடர்புடையவை?

*(கண்ணன் எழுந்து விடையளிக்கிறார்.)*

**கண்ணன் :**

மிக உறுதியான சான்றுகளே; இவ்வழக்கிற்குத் தொடர்புடையவைதாம். ஏற்புடைய நேரத்தில் அவைகளை ஆவணங்களாக இம்மன்றத்திலே அளிக்கப்படும்.

**நடுவர் :**

நல்லது. அரசு வழக்குரைஞர் அடுத்துத் தன் பக்க வழக்கைத் தொடரலாம்.

*(அரசு வழக்குரைஞர் மெல்ல எழுந்து நடுவர் அருகே நெருங்கிப் பேசுகிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

அரைமணி நேரத்திலே முடிய வேண்டிய வழக்கு இது; இப்படி இழுபறியாய்க் காலத்தை வீணாக்கிக் கொண்டிருப்பது வேதனையை அளிக்கிறது. இப்படிப்பட்ட குற்றச்சாட்டிற்கு அதிக அளவு தண்டனை மூன்று மாதச் சிறை; அல்லது ஓராயிரம் உரூபாய் தண்டம்.

*(நடுவர் குறுக்கிடுகிறார்.)*

**நடுவர் :**

உண்மைதாம். ஆனால், குற்றச்சாட்டை உரியவர் எதிர்க்கும் போது இம்மன்றம் வேறெதுவும் செய்வதற்கில்லை.

*(கண்ணன் எழுந்து குறுக்கிடுகிறார்.)*

**கண்ணன் :**

மாண்பமை நடுவர் அவர்களே! இவ்வழக்கின் தொடக்கத்தில் அரசு வழக்குரைஞர் இங்கு உரைத்தவைகளை மீண்டும் நினைவுபடுத்த விழைகிறேன். குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப் பட்டிருக்கும் கோதை, மஞ்சத்தைத் தஞ்சம் அடைபவர்க்கு வஞ்சனை இன்றி உடல் இன்பத்தை வாரி வழங்குபவர்; உடலை விற்று உயரிய வாழ்வு வாழ்பவர்; இளைஞரை நிலை தடுமாறச் செய்யும் கலை தேர்ந்தவர்; வாடகைக்குத் தங்கிய விடுதியைத் தன் இளமை வணிகத்திற்கு இடமாக்கிக்

கொண்டவர்; இப்படி எல்லாம் இட்டுக்கட்டிக் குற்றங்கள்! அடுக்கி உரைத்தார் அரசு வழக்குரைஞர். ஆயிரம் உரூபாய் தானே தண்டம் என்பதற்காக ஏற்றுக் கொள்ளத்தகு குற்றங்களா இவை? இவற்றை மட்டும் எதிர்ப்பதன்று என் நோக்கம்.

**நடுவர் :**

புரியவில்லையே! எதிர்கட்சி வழக்குரைஞருக்குத் தன் கட்சிக்காரரின் மீது சாட்டப்பெற்ற குற்றங்களினின்றும் விடுவிப்பதன்றோ குறிக்கோளாக இருக்க வேண்டும்? மற்ற வேறெந்த நோக்கத்திற்கும் இந்த மன்றம் ஒப்புதல் அளிக்க முடியாது.

**கண்ணன் :**

மாண்பமை நடுவரின் கருத்துக்களை நான் மறுக்க வில்லை. பெரும் பணக்காரரும் பெரிய மனிதருமான ஆண்டவர் அளித்த அடிப்படையற்ற செய்திகளைக் கொண்டு, கோதை என்ற குலமகளை விலைமகளாக்கி வீணடிக்கப் பார்க்கிறார்கள் இங்கு; அதைத் தடுக்க வேண்டியதே என் தலையாய பணி. அதோடு புகழ் வாய்ந்த நிறுவனங்களின் புரட்டல்களை உலகுக்கு உரித்துக் காட்ட விழைகிறேன்.

**நடுவர் :**

நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?

**கண்ணன் :**

ஆண்டவர் உண்மையில் மிகப் பெரியவர்; ஒப்புக் கொள்கிறேன். ஆனால், அவருக்கு உரிமையான உணவு விடுதி? பெயர்தான் பெரிய பெயர்! நடப்பவையோ அத்துணை நல்லவை இல்லை. மக்கள் கூட்டம் மந்தை மந்தையாய் அங்குக் கூடுகிறார்கள் என்றால், காரணம், கட்டிலிலே கட்டிப் புரண்டு களியாட்டம் புரியக் காரிகையர் அங்கே ஏராளம், ஏராளம்! தங்கள் மகளிர் கூட்டத்திலே கோதையை யும் வளைத்துச் சேர்க்க முயன்று தோல்வி கண்ட விடுதிப் பொறுப்பாளர்கள், இப்படி ஒரு பொய் வழக்கைப் புனைந்து இங்கே அரங்கேற்றியுள்ளனர்.

*(கண்ணன் அத்தோடு தன் பேச்சை நிறுத்திக் கொள்கிறார். அங்குச் சிறிது நேரம் அமைதி நிலவுகிறது. சிறிது சிந்தனைக்குப் பிறகு, நடுவர் அரசு வழக்குரைஞர் பக்கம் திரும்பிப் பேசுகிறார்.)*

**நடுவர் :**

நீங்கள் உங்கள் பக்க வழக்கை மேலே தொடரலாம்.

*(கண்ணன் தன் இருப்பிடத்தில் அமர்கிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

அடுத்து அரசு சார்பில் காவல்துறைத் துணை ஆய்வாளர் அரிச்சந்திரன் சான்று அளிப்பார்.

*(காவல் துறைத் துணை ஆய்வாளர் அரிச்சந்திரன் சான்றாளர் கூண்டிலேறி உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார். அரசு வழக்குரைஞர் அவரை நெருங்கித் தன் வினாக்களைத் தொடுக்கிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

குற்றஞ் சாட்டப்பட்டுள்ள கோதையை நீங்கள் அறிவீர்களா?

**அரிச்சந்திரன் :**

அறிவேன்.

**அரசு வழக்குரைஞர் :**

எப்படி?

**அரிச்சந்திரன் :**

கடந்த மே மாதம் இருபத்தாறாம் நாள், வெள்ளிக் கிழமை இரவு, மணி ஒன்றிருக்கும்; அப்போது, விடுதி விண்மீன் உரிமையாளர் என்னை உடனே புறப்பட்டு விடுதிக்குச் செல்லுமாறு தொலைப்பேசி மூலம் கேட்டுக் கொண்டார்.

**அரசு வழக்குரைஞர் :**

ஏன் என்று சொன்னாரா?

**அரிச்சந்திரன் :**

இல்லை; ஆனால், எதற்காக என்பதை நான் முன்னரே அறிவேன்.

**அரசு வழக்குரைஞர் :**

முன்னரே அறிவீர்களா? எப்படி?

**அரிச்சந்திரன் :**

விடுதியிலே தங்கியுள்ள பெண்ணொருத்தி தகாத முறையில் நடந்து கொள்வதாகவும் அதைத் தடுத்து நிறுத்தத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் விடுதியின் மேலாளர் ஏற்கனவே என்னிடம் சிலமுறை சொல்லி இருந்தார்; அதனால் தான், தொலைப்பேசியில் விடுதியின் உரிமையாளர் தொடர்பு கொண்டதும் காவலர் இருவருடன் புறப்பட்டுச் சென்றேன்.

**அரசு வழக்குரைஞர் :**

பிறகு என்ன நடந்தது?

**அரிச்சந்திரன் :**

ஆடை குலைந்து, அரை மயக்கத்திலே விடுதி அறையில் தங்கியிருந்த இந்தப் பெண்ணைச் சிறை செய்தோம்.

**அரசு வழக்குரைஞர் :**

உடனிருந்த அந்த ஆள் என்ன ஆனார்?

**அரிச்சந்திரன் :**

அவர் யாரென்று தெரியவில்லை. எங்கள் வருகையை எப்படியோ அறிந்து கொண்ட அவர் தப்பித்துச் சென்று விட்டார்.

**அரசு வழக்குரைஞர் :**

நன்றி.

*(அரசு வழக்குரைஞர் தன்னிடத்தில் சென்று அமர்கிறார். நடுவர் கண்ணனைக் குறிப்பாக நோக்கக் கண்ணன் எழுந்து சான்றுரைஞர் அருகே நெருங்குகிறார்.)*

**கண்ணன் :**

உங்கள் பெயர் என்னவென்று சொன்னீர்கள்?

**அரிச்சந்திரன் :**

அரிச்சந்திரன்.

**கண்ணன் :**

நல்ல பெயர்! பெயருக்கு ஏற்ப உண்மையே பேசுவீர்கள் என்று நம்பலாமா?

**அரிச்சந்திரன் :**

நிச்சயமாக. அதிலேதும் ஐயமே தேவையில்லை.

**கண்ணன் :**

மிக்க மகிழ்ச்சி. இரவு ஒரு மணி; எல்லோரும் அயர்ந்து உறங்குகின்ற நேரம். சரி தானே?

**அரிச்சந்திரன் :**

உண்மைதான்.

**கண்ணன் :**

அந்த நடு இரவிலே, அறைக் கதவைத் தட்டி எழுப்பு கிறீர்கள்; ஏதோ, என்னவோ என்று, அஞ்சி நடுங்கி, அரைகுறை ஆடையோடு, விரைந்து வந்து கதவைத் திறக்கிறார் என் கட்சிக்காரர். அப்படி அரை குறை ஆடையோடு கதவைத் திறந்ததாலேயே அவர் குற்றவாளி ஆகிவிட முடியுமா?

**அரிச்சந்திரன் :**

முடியாது.

**கண்ணன் :**

பின் எந்தக் காரணத்தைக் கொண்டு என் கட்சிக்காரரை நீங்கள் சிறை செய்தீர்கள்?

**அரிச்சந்திரன் :**

முன்னரே அவரைப்பற்றி விடுதி மேலாளர் எங்களிடம் சிலமுறை முறையிட்டிருந்தார்.

*(கண்ணன் மெல்லச் சிரிக்கிறார்.)*

**கண்ணன் :**

அதுதான் காரணமா? வேடிக்கையாய் உள்ளதே! தகுந்த சான்றுகள் இருந்தாலன்றி எந்த ஒருவரையும் சிறைப்படுத்த சட்டத்தில் இடமில்லை; தெரியுமல்லவா உங்களுக்கு?

*(காவல்துறைத் துணை ஆய்வாளர் அரிச்சந்திரன் அமைதியாக நிற்கிறார். கண்ணன் தன் கேள்விகளைத் தொடர்கிறார்.)*

**கண்ணன் :**

சரி; சட்டத்தின் எந்தப் பிரிவின்படி என் கட்சிக்காரரைச் சிறைப்படுத்தினீர்கள்?

**அரிச்சந்திரன் :**

பரத்தமைத் தடுப்புச் சட்டம் பிரிவு ஏழின் உட்பிரிவு ஒன்று அ வின்படி.

**கண்ணன் :**

அந்தச் சட்டப் பிரிவைக் கொஞ்சம் விளக்குங்கள்; கேட்கலாம்.

**அரிச்சந்திரன் :**

யார் ஒருவர் பரத்தமைத் தொழில் நடத்துகிறாரோ, அவருக்கும் யாரோடு நடத்தப்பட்டதோ, அவருக்கும் மூன்று மாதங்கள்வரை நீட்டிக்கத் தக்க சிறைதண்டனை விதிக்கப்படும்.

**கண்ணன் :**

நீங்கள் என் கட்சிக்காரரை இரவு ஒரு மணி அளவில் சிறை செய்ததாகக் கூறினீர்கள்; இல்லையா?

**அரிச்சந்திரன் :**

ஆமாம்.

**கண்ணன் :**

விடுதி விண்மீனுக்கு எப்படிச் சென்றீர்கள்?

**அரிச்சந்திரன் :**

காவல்துறை வண்டியில்.

**கண்ணன் :**

வண்டி ஓட்டுநர் தவிர வேறு யார் யார் உடன் வந்தார்கள்?

**அரிச்சந்திரன் :**

இரண்டு காவலர்கள்.

**கண்ணன் :**

அவர்கள் பெயர்கள்?

**அரிச்சந்திரன் :**

ஆராவமுதன், மலையமான்.

**கண்ணன் :**

நல்ல தமிழ்ப் பெயர்கள்! சரி. இவர்கள் இருவரைத் தவிர வேறு யாரையும் அழைத்துச் செல்லவில்லையா? நன்கு சிந்தித்துச் சொல்லுங்கள்.

**அரிச்சந்திரன் :**

வேறு யாரும் இல்லை.

**கண்ணன் :**

இது போன்ற பணிகளுக்குச் செல்லும்போது பெண் காவலர்கள் இருவரை அழைத்துச் செல்ல வேண்டியது சட்டமில்லையா?

**அரிச்சந்திரன் :**

உண்மைதான். ஆனால், அந்த இரவு நேரத்தில் பெண் பணியாளர்கள் யாரும் அங்கிருக்கவில்லை.

**கண்ணன் :**

என் கட்சிக்காரரைச் சிறை செய்தீர்களே, அதை உடனே உங்கள் மேலதிகாரியிடம் தெரிவித்தீர்களா?

**அரிச்சந்திரன் :**

இல்லை.

**கண்ணன் :**

ஏன்?

**அரிச்சந்திரன் :**

அவர் இரண்டு நாட்கள் விடுப்பில் சென்றதால் சொல்லக் கூடவில்லை.

**கண்ணன் :**

அவர் விடுப்பிலிருந்து திரும்பிய பிறகாவது சொன்னீர்களா?

**அரிச்சந்திரன் :**

இல்லை.

**கண்ணன் :**

இல்லையா? ஏன்?

**அரிச்சந்திரன் :**

மறந்துவிட்டது.

**கண்ணன் :**

மறந்துவிட்டதா? மிகவும் வியப்பாக உள்ளதே! அரிச்சந்திரன், காவல்துறையில் உங்கள் பதவி என்ன?

**அரிச்சந்திரன் :**

துணை ஆய்வாளர்.

**கண்ணன் :**

இது போன்ற வழக்குகளில் உங்களின் அதிகார வரம்பு என்ன?

*(அரிச்சந்திரன் ஏதும் புரியாமல் தடுமாறுகிறார்.)*

**கண்ணன் :**

விளக்கமாகவே கேட்கிறேன். பரத்தமைத் தடுப்புச் சட்ட விதிகளின்படி, துணை ஆய்வாளரான உங்களுக்கு என் கட்சிக்காரரைச் சிறை செய்ய அதிகாரம் இல்லை; சரி தானே?

**அரிச்சந்திரன் :**

சரி தான். ஆனால், அதற்கும் விதி விலக்குண்டு.

**கண்ணன் :**

எப்படி?

**அரிச்சந்திரன் :**

பரத்தமைத் தடுப்புச் சட்ட விதிகளின்படி ஆய்வாளருக்கே அனைத்து அதிகாரங்களும் உண்டு. எனினும், ஆய்வாளரின் முன் ஒப்புதல் இன்றியும் துணை ஆய்வாளர் நடவடிக்கை எடுக்க இடமுண்டு. அஃது அப்போதைய சூழ்நிலைகளைப் பொறுத்தது.

**கண்ணன் :**

அப்படி என்னென்ன சூழ்நிலைகள் இந்த வழக்கில் எழுந்தன?

**அரிச்சந்திரன் :**

ஒன்று, எங்களுக்குச் செய்தி வந்தது நள்ளிரவு நேரம். இரண்டு, அதிகாரம் உள்ள ஆய்வாளர் விடுப்பில் சென்றிருந்தார்.

**கண்ணன் :**

சட்டத்தை நீங்கள் மிகச் சரியாகவே தெரிந்து வைத் திருக்கிறீர்கள்! ஆனால், அதே சட்டம் இதுபோன்ற குற்றங் களை ஆய்வு செய்யும்போது பெண் அலுவலர்கள் உடனிருக்க வேண்டுமென்கிறதே, அது தெரியாதா?

*(அரிச்சந்திரன் விடையளிக்காது அமைதியாக நிற்கிறார்.)*

**கண்ணன் :**

துணை ஆய்வாளரான உங்களுக்கு, தேவைப்படின் முன்னொப்புதல் இன்றி நடவடிக்கை எடுக்க அதிகாரம் உள்ள தென்று தெரிந்திருக்கிறது; ஆனால், அந்த நடவடிக்கைக்குப் பிறகு மேலதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டுமென்பது மட்டும் மறந்துவிட்டது! இல்லையா?

*(அரிச்சந்திரன் தொடர்ந்து அமைதியாக நிற்கிறார்.)*

**கண்ணன் :**

இன்னொரு வினா, இதற்காவது விடையளிக்க முடியுமா, பாருங்கள். பரத்தையர் என்ற சொல்லுக்குச் சட்டநூலில் உள்ள விளக்கம் என்ன என்பதனைச் சொல்ல முடியுமா?

**அரிச்சந்திரன் :**

பணத்திற்காக உடலை விற்பவர்.

**கண்ணன் :**

விற்பவரா? விற்பதைத் தொழிலாக உடையவரா?

**அரிச்சந்திரன் :**

தொழிலாக உடையவர் என்பது தான்.

**கண்ணன் :**

என் கட்சிக்காரர் இதற்கு முன்னர் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கி இருக்கிறாரா?

**அரிச்சந்திரன் :**

இல்லை.

**கண்ணன் :**

ஒருவரை விலைமகள் என்று குற்றஞ்சாட்ட, ஒன்றுக்கும் மேற்பட்ட நிகழ்வுகள் தேவை; சரி தானே?

**அரிச்சந்திரன் :**

ஆமாம்; சரி தான்.

**கண்ணன் :**

பரத்தமை என்பது வாணிப நோக்கான ஒரு தொழில். என் கட்சிக்காரர் அத்தொழிலைத்தான் செய்து வந்தார் என்பதற்கு என்ன சான்றுகள் வைத்திருக்கிறீர்கள்?

**அரிச்சந்திரன் :**

ஏதும் இல்லை.

**கண்ணன் :**

இப்படங்களைக் கொஞ்சம் பாருங்கள்.

*(கண்ணன் தன்னிடம் இருந்த மூன்று படங்களை அரிச்சந்திரனிடம் கொடுக்கிறார். அரிச்சந்திரன் அப்படங்களைக் கூர்ந்து பார்க்கிறார். பின்னர்க் கண்ணனை நோக்குகிறார்.)*

**கண்ணன் :**

இப்படங்களில் உள்ளவர்களை நீங்கள் அறிவீர்களா?

**அரிச்சந்திரன் :**

அறிவேன்.

**கண்ணன் :**

அந்தப் பெண்கள் யாரென்று கூறக் கூடுமா?

**அரிச்சந்திரன் :**

அவர்கள் அனைவரும் பரத்தமைக் குற்றத்திற்காக முன்னரே சில முறை தண்டனை அடைந்தவர்கள்.

**கண்ணன் :**

மிக்க நன்றி. அவ்வளவே.

*(கண்ணன் அப்படங்களைத் திரும்பப் பெற்று, நடுவரிடம் சென்று ஒப்படைக்கிறார்.)*

**கண்ணன் :**

இந்தப் படங்கள் யாவும் விடுதி விண்மீனின் மேலாளர் அறையிலே எடுக்கப்பட்டவை; அனைத்துப் படங்களிலும் விடுதி மேலாளர் விலைமகளிருடன் பேசிக்கொண்டுள்ளார். இப்படங்களை வழக்கின் சான்றாவணங்களாக ஏற்குமாறு நடுவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*(நடுவர் அவற்றைக் கவனமாக ஆய்வு செய்து, பின்னர் அருகே வைத்துக் கொள்கிறார். பின்னர் அரசு வழக்குரைஞர் பக்கம் திரும்புகிறார்.)*

**நடுவர் :**

அரசு வழக்குரைஞர் வழக்கைத் தொடரலாம்.

**அரசு வழக்குரைஞர் :**

இத்தோடு என் பக்க வழக்கை முடித்துக் கொள்கிறேன்.

**நடுவர் :**

எதிர் பக்க வழக்குரைஞர் தன் பக்க வழக்கை எடுத்து நடத்தலாம்.

**கண்ணன் :**

என் பக்க வழக்கையும் இத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

*(நடுவர் எதிரே சுவரில் இருந்த நேரங் காட்டியைப் பார்க்கிறார்.)*

**நடுவர் :**

இப்போது நேரம் ஆகிவிட்டதால், இவ்வழக்கு நாளைப் பிற்பகல் இரண்டு மணிக்கு ஒத்திவைக்கப் படுகிறது. வழக்குரைஞர்களின் தொகுப்புரையோடு நாளை இவ்வழக்கு தொடரும். இப்போது கலைந்து செல்லலாம்.

*(அனைவரும் எழுகின்றனர்.)*

❁ ❁ ❁ ❁ ❁

**காட்சி - 2**

**இடம்** : கண்ணன் வீட்டு அலுவல் அறை.

**காலம்** : காலை மணி எட்டு.

**உறுப்பினர்கள்** : கண்ணன், கதிரவன், கண்ணனின் தங்கை மங்கை.

**சூழல்** : கண்ணன் தன் அலுவல் அறையில் அன்றைக்கான வழக்குக் கட்டுகளைப் பார்த்து முடித்துக் கட்டி வைக்கிறார். எதிரே கதிரவன் அமர்ந்திருக்கிறார்.

**கண்ணன் :**

இது போன்ற சின்னஞ்சிறு வழக்குகளை நான் எப்போதுமே எடுத்துக் கொள்வதில்லை. என்னுடைய கல்லூரி நண்பன் நீ; உன்னுடைய வற்புறுத்தலாலேயே இவ்வழக்கை எடுத்துக் கொண்டேன்.

**கதிரவன் :**

மிக்க நன்றி.

**கண்ணன் :**

எதற்கு நன்றி? இஃதொரு வழக்கே இல்லை. அரசு வழக்குரைஞர் நேற்றுச் சொன்னது போல, ஐந்து மணித் துளிகள் என்பதில்லை, அரை மணித்துளியில் முடிய வேண்டிய மிகமிகச் சிறு வழக்கு இது. குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தால் முதல் முறை என்பதால் மன்னித்து விடப்பட்டிருக்கலாம்; இல்லை, ஓர் ஆயிரம் உரூபாய் தண்டம் கட்ட வேண்டி இருந்திருக்கலாம்.

**கதிரவன் :**

உண்மைதான்; ஆனால், அப்படி எதுவும் இங்கு நடந்து விடக் கூடாது. அதற்காகத்தான் நண்பன் உன்றன் உதவியை நாடினேன்.

**கண்ணன் :**

நட்பிற்காக இங்கு நாம் எதையெல்லாம் செய்ய வேண்டியுள்ளது, பார்த்தாயா? நீ திருந்தவே மாட்டாயா? கல்லூரி நாட்களில் இருந்ததைப் போலவே இன்றும் கட்டுப்பாடின்றி இருக்கிறாயே, சரிதானா? பணம் நிறைய இருக்கிற திமிரில் பரத்தையரைத் தேடி, நீயும் உன் நண்பர்களும் எங்கெங்கெலாம் சுற்றி அலைந்தீர்கள்? இன்றும் அவை என் நினைவில் அப்படியே உள்ளன! உன் பழைய நண்பர்கள் இன்று நல்லவர்களாகி விட்டனர்; ஆனால், நீயோ இன்னும் அப்படியே இருக்கிறாய். விலைமகளிர் தொடர்பு உன்னை விட்டபாடில்லை.

**கதிரவன் :**

இல்லை கண்ணா; நான் அப்படிப்பட்டவன் இல்லை. அவற்றை எல்லாம் நான் மறந்து ஆண்டுகள் பல ஆகின்றன.

**கண்ணன் :**

பின்னர் எப்படி இப்பெண்ணின் பழக்கம்?

**கதிரவன் :**

உன்னிடத்தில் ஒளிப்பானேன்? இவள் எனக்கு மிகப் பழக்கமானள், மறுக்கவில்லை; ஆனால், இவள் ஒரு விலைமகள் இல்லை. எனக்கு மட்டுமே நெருக்கமானவள்;

என்னிடம் உண்மையானவள். அதனால்தான், உன் உதவியை நாடினேன். என்னிடம் மட்டுமே நெருக்கமான, உண்மையான ஒருத்தியை விலைமகள் என்று முத்திரை இடப்படுவதை நான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

**கண்ணன் :**

எனக்கென்னவோ நீ செய்வது நல்லதாகத் தெரியவில்லை. உன்னைப்பற்றி, உன் குடும்பத்தைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும். பிறவியிலேயே பெரிய செல்வந்தன் நீ; மேலும், நன்கு படித்தவன். நல்ல குடும்பத்தைச் சேர்ந்த உன்னை எந்தப் பெண்ணும் மணக்க மறுக்க மாட்டாள். இருந்தும், நீ ஏன் திருமணம் இன்றுவரைச் செய்து கொள்ளவில்லை? திருமணம் செய்து கொண்டிருந்திருந்தால், இது போன்ற சிக்கல் வந்திருக்காது; இல்லையா?

**கதிரவன் :**

உண்மைதான். அஃதிருக்கட்டும். நீ என்னைப் போன்றவன் இல்லை; மிக மிக ஒழுக்கமானவன்; ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்புபவன். அப்படி இருந்தும் நீ ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை?

**கண்ணன் :**

திருமண அகவையில் எனக்கொரு தங்கை இருக்கிறாள். அவள் படிப்பு இந்த ஆண்டில் முடிகிறது. முதலில் அவள் திருமணம்; அடுத்து என் திருமணம்தான்.

**கதிரவன் :**

நீ சொன்ன அதே காரணத்தால்தான் என் திருமணமும் தள்ளிப் போகிறது.

**கண்ணன் :**

சரி, நீ கொஞ்சம் காத்திரு; நான் குளித்து முடித்து வந்து விடுகிறேன்.

*(கண்ணன் எழுந்து செல்கிறார். கதிரவன் அங்கிருந்த நாளிதழை எடுத்துப் படித்துக் கொண்டிருக்கிறார். அப்போது மங்கை அறை உள்ளே நுழைகிறார்.)*

**மங்கை :**

அண்ணா! அண்ணா!

*(குரல் கேட்டுக் கதிரவன் திரும்பிப் பார்க்கிறார். அவரை அங்குக் கண்ட மங்கை வியப்படைகிறாள்.)*

**மங்கை :**

அடடே! நீங்களா? எப்போது வந்தீர்கள்?

*(கதிரவன் அவள் பேச்சினைக் கேட்டு வியப்படைகிறார்.)*

**கதிரவன் :**

என்னைத் தெரியுமா உங்களுக்கு? உங்களை நான் இதற்கு முன்னர்ப் பார்த்ததில்லையே.

*(மெல்லப் புன்னகை புரிந்தவாறு மங்கை பேசுகிறாள்.)*

**மங்கை :**

உங்களை நான் அறிவேன். உங்கள் தங்கை தேன்மொழி என்னோடு படிப்பவள்; என்னுடைய உயிர்த்தோழி.

**கதிரவன் :**

அப்படியா? நான் உங்களைப் பார்த்ததில்லை.

**மங்கை :**

நான் உங்களைப் பல முறைப் பார்த்திருக்கிறேன். இங்கு என் அண்ணா இருந்தாரே?

**கதிரவன்:**

யார்? கண்ணனா? அவர் உங்கள் அண்ணனா?

**மங்கை :**

ஆம்; சற்று முன்னர் இருந்தாரே?

**கதிரவன் :**

குளித்துவிட்டு வருவதாய்ச் சொல்லிச் சென்றார்.

**மங்கை :**

கொஞ்சம் இருங்கள்; குடிக்கச் சூடாகத் தேனீர் கொண்டு வருகிறேன்.

**கதிரவன் :**

வேண்டா; எதற்கு உங்களுக்கு வீண் தொல்லை?

**மங்கை :**

இதிலென்ன தொல்லை? இதோ வந்து விடுகிறேன்.

*(மங்கை விரைந்து மறைகிறார். சற்று நேரத்தில் கண்ணன் அணியமாய் வந்தமர்கிறார்.)*

**கண்ணன் :**

இன்றைக்காவது வழக்கு மன்றத்திற்கு வருகிறாயா?

**கதிரவன் :**

இல்லை; என் தொடர்பு வெளியில் தெரிய வேண்டா. இன்றைக்குத் தீர்ப்பு எப்படி இருக்கும்? நீ அதைப்பற்றி எதுவும் சொல்லவில்லையே?

**கண்ணன் :**

சொல்வதற்கு என்ன இருக்கிறது? இஃது ஒரு வழக்கே இல்லை. அரசு வழக்குரைஞராக நான் இருந்திருப்பின், இவ் வழக்கை எப்போதோ திரும்பப் பெற்றிருப்பேன். அப்படிச் செய்வதால் எந்த இழுக்கும் ஏற்பட்டு இருக்காது. *(அப்போது மங்கை உள்ளே நுழைகிறார்.)* என்ன அது?

**மங்கை :**

குடிப்பதற்குத் தேனீர் கொண்டு வந்திருக்கிறேன்.

*(மங்கை இருவருக்கும் தேனீர் நிறைந்த குவளைகளைத் தருகிறார்.)*

**கண்ணன் :**

நம்ப முடியவில்லையே! இதற்கு முன்னர் யாருக்கும் எதுவும் கொண்டு வந்து தரமாட்டாயே; இன்று மட்டும் எப்படி?

**மங்கை :**

இவர் எனக்குத் தெரிந்தவர்; என் தோழி தேன்மொழியின் அண்ணன். போதுமா? நீங்கள் தேனீர் அருந்துங்கள்.

**கண்ணன் :**

தயங்க வேண்டா; குடி. என் தங்கை கை பட்டவை எல்லாமே நன்றாகவே இருக்கும்.

*(இருவரும் அருந்துகின்றனர்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி – 3

| | | |
|---|---|---|
| **இடம்** | : | வழக்கு மன்றம். |
| **காலம்** | : | மாலை மணி மூன்று. |
| **உறுப்பினர்கள்** | : | நடுவர், அரசு வழக்குரைஞர், கண்ணன், கோதை, அரிச்சந்திரன், மற்றும் பலர். |
| **சூழல்** | : | அனைவரும் அவரவர் இடங்களிலே அமர்ந்திருக்கின்றனர். கோதை குற்றக் கூண்டிலே நின்று கொண்டிருக்கிறார். |

**நடுவர் :**

அரசு வழக்குரைஞர் முடிவாகத் தன் பக்க வழக்கினைத் தொகுத்து எடுத்து உரைக்கலாம்.

*(அரசு வழக்குரைஞர் எழுந்து நடந்து குற்றவாளி கூண்டருகே வந்து நிற்கிறார். பின்னர் மன்றத்தை மெல்லச் சுற்றிப் பார்த்தவாறு தன் பேச்சைத் தொடங்குகிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

மதிப்பிற்குரிய மன்ற நடுவர் அவர்களே, வணக்கம். சிக்கல் எதுவுமே இல்லாத மிகச் சிறிய வழக்கு இது. இதற்குத் தொகுப்புரையோ, முடிப்புரையோ தேவை இல்லை என்பது என் எண்ணம். குற்றக் கூண்டிலே நிற்கின்ற பெண் கோதை, விடுதி விண்மீனில் அறையை வாடகைக்கு எடுத்து அடிக்கடி தங்குபவர்; தன் அடாத தொழிலுக்கு அவ்வறையைப்

பயன்படுத்திக் கொள்பவர். அவருடைய தகாத செயலால் தங்கு விடுதியின் பெயர் கெடுவதை விரும்பாத மேலாளர், முன்னரே பலமுறை முறையீடு செய்துள்ளார். அதே முறையில் தான், மே மாதம் இருபத்தாறாம் நாள் இரவு விடுதியின் உரிமையாளர் தொலைப்பேசியில் காவல்துறைத் துணை ஆய்வாளர் அரிச்சந்திரனிடம் முறையிட்டுள்ளார். அந்த முறையீட்டின் மேல், துணை ஆய்வாளர் அரிச்சந்திரன் விடுதி அறையிலிருந்த குற்றஞ் சாட்டப் பெற்றவரைச் சிறை செய்துள்ளார்; அவ்வளவே. வழக்கமாக நிகழ்கின்ற குற்றம் இஃதென்பதால், போதிய சான்றுகளைக் கையகப்படுத்தக் காவல்துறை தவறி விட்டது. எனினும், குற்றம் சாட்டப் பெற்றவர் கடந்த ஓராண்டாய் மாதம் தவறாமல் சில நாட்கள் விடுதி விண்மீனில் அறை எடுத்துத் தங்கியுள்ள செய்கையே அவர் குற்றத்தை உறுதிப் படுத்தும்; அஃதே உண்மையும் ஆம். எனவே, செய்த குற்றத்தைச் சீர் தூக்கி ஆய்வு செய்து, அதற்கான தகுந்த தண்டனையை அளிக்குமாறு வேண்டி முடித்துக் கொள்கிறேன்.

*(அரசு வழக்குரைஞர் தன்னிடத்தில் அமர்கிறார்)*

**நடுவர் :**

எதிர்பக்க வழக்குரைஞர் தன் பக்க வழக்கின் தொகுப்புரையை எடுத்து உரைக்கலாம்.

*(கண்ணன் மெல்ல எழுந்து அவை நடுவே வந்து பேச்சைத் தொடங்குகிறார்.)*

**கண்ணன் :**

மதிப்பிற்குரிய நடுவர் அவர்களே! என் தொகுப்புரையை ஒரே தொடரில் முடித்துக் கொள்ள முடியும். போதிய சான்று களைக் கையகப்படுத்தக் காவல்துறை தவறிவிட்டது என்று அரசு வழக்குரைஞரே தன்னுரையில் ஒப்புக் கொண்டுவிட்ட பிறகு, இவ்வழக்கைத் தள்ளுபடி செய்வதைத் தவிர வேறென்ன தடை இருக்கப் போகிறது? மெத்த படித்த, பட்டறிவுடைய அரசு வழக்குரைஞர் அவர்களே இவ்வழக்கைத் திரும்பப் பெறுவார் என்று நான் மிகவும் எதிர்பார்த்தேன்; அவர் அப்படிச் செய்யாதது எனக்கு வியப்பையே விளைவித்தது.

மதிப்பிற்குரிய நடுவர் அவர்கள் இவ்வழக்கில் ஒரு நல்ல முடிவிற்கு முன்பே வந்திருப்பார்; எனினும், முறைமை கருதி என் பக்க உண்மைகளை ஒருமுகப்படுத்தி உரைக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

*ஒன்று :* ஆணுக்குப் பெண் அனைத்திலும் சமம் என்கிறோம்; உண்மைதானா? தங்கு விடுதியிலே ஓர் ஆண் மகன் தன் விருப்பப்படி எப்போது வேண்டுமென்றாலும் எத்தனை நாட்கள் வேண்டுமென்றாலும் தங்கலாம்; அது தவறில்லை. ஆனால், அப்படி ஒரு பெண் தங்குவாரே யாயின் அது தவறு; விலைமகள் என்ற குற்றச்சாட்டு! இஃதென்ன நியதி? ஆணுக்கொரு சட்டம்; பெண்ணுக் கொரு சட்டம்; அப்படி ஏதும் சட்டப் புத்தகத்தில் கூறப் பட்டுள்ளதா?

*இரண்டு :* பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் முதன்மை யான நோக்கம் என்ன? அச்சட்டம் பெண்களைப் பாதுகாக்க உருவாக்கப் பட்டது; அவர்களைப் பாழ்ப்படுத்த அன்று என்பதை உணர வேண்டும். பாலியல் தவறு நடக்க ஆணோ, பெண்ணோ இருவர் கட்டாயம் இருந்தாக வேண்டும். இங்கே கூண்டிலே நிறுத்தப்பட்டிருப்பவர் ஒருவர்! அப்படி என்றால் இன்னொருவர் என்ன ஆனார்? அவர் இவ்வழக்கிற்கு இன்றியமையாச் சான்றாளர் இல்லையா?

*மூன்று :* பரத்தமை என்ற சொல்லுக்குச் சட்டம் அளிக்கும் விளக்கம் என்ன? எல்லோருமே மிக நன்றாகவே அறிந்து வைத்திருப்பர்; இருப்பினும் திரும்பத் தெரிவிக்க வேண்டியது என் கடமை ஆகிறது. எளிமையாகத் தெளிவாக எடுத்துச் சொல்வதென்றால், பணத்திற்காகவோ, மற்ற பயன்பாடு கருதியோ தன்னுடலை மற்றவர்க்குப் பாலியல் உறவு கொள்ள விற்பதைத் தொழிலாக உடைமைதான் பரத்தமையின் சட்ட விளக்கமாகும். இங்கே என் கட்சிக்காரருக்கு எதிராக ஏதேனும் சான்றுகள் காட்டப் பட்டனவா? உடலை விற்றாரா? அதற்காக, ஏதேனும் பணம் பெற்றாரா? வேறேதும் பயன்பாடு கொண்டாரா? அதையே தொழிலாக உடையவரா? காட்ட முடியுமா?

என் கட்சிக்காரர் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்பதை உறுதிப்படுத்த, இன்னும் நான் நிறையவே சொல்லிக்கொண்டு செல்லலாம். எனினும், இச்சிறு வழக்கிற்கு இவையே ஏராளம் என்பதால், இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

இறுதியாக, என் கட்சிக்காரருக்குத் திட்டமிட்டு இழைக்கப் பட்ட தீங்கைச் சுட்டிக்காட்ட விழைகிறேன். விடுதி நடத்துநர்கள் அவ்விடுதியை எந்த வகையிலே நடத்தி வந்தார்கள் என்பதைத் தகுந்த சான்றுகளோடு இம்மன்றத்தில் நிலை நிறுத்தி உள்ளேன். தாங்கள் நடத்திவரும் தகாத தொழிலில் என் கட்சிக்காரரை ஈடுபடுத்த முயன்றனர்; இயலாது தோற்றனர். அந்தக் காழ்ப்புணர்விலே என் கட்சிக்காரரைக் களங்கப் படுத்தும் முயற்சியில் காவல் துறையினரைப் பயன்படுத்திக் கொண்டனர். எடுப்பார் கைப் பாவையாகக் காவல் துறை யினரும் நடந்து கொண்டு உள்ளனர்.

என் கட்சிக்காரர் சிறை செய்யப்படுகிறார்; அஃதும் எப்போது? நள்ளிரவு ஒரு மணிக்கு! ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த என் கட்சிக்காரர், அறைக் கதவு தட்டப்படும் ஒலி கேட்டு விரைந்து வந்து கதவைத் திறக்கிறார். அரைகுறை ஆடையில் அப்போது அவர் இருந்தாராம்; அதனால், பரத்தமையில் ஈடுபட்டார் என்று காவல் துறையினர் அவரைச் சிறை செய்தார்களாம். என்னே காவல் துறையினரின் கடமை உணர்வு!

என் கட்சிக்காரரை என்றைக்குச் சிறைப்படுத்து கிறார்கள்? வெள்ளிக் கிழமை இரவு! ஏன்? அப்போது தானே அவர் உடனே பிணையில் வெளி வர முடியாது. விளைவு? என் கட்சிக்காரர் விடுமுறை நாள்களான சனி, ஞாயிறு இரு நாட்களும் காவலில் இருக்க வேண்டியதாயிற்று!

காவல் துறையினரின் நடவடிக்கைகள் பற்றி நான் முன்னரே தெளிவுபடுத்தி உள்ளேன். விதிகளுக்கு முரணாக எவைகளை எல்லாம் செய்யலாமோ, அவைகள் அனைத்தை யும் என் கட்சிக்காரருக்கு எதிராகத் திறம்படச் செய்துள்ளனர்.

விடுதி நடத்துநர்களாலும் அவர்களுக்கு உடந்தையாய்ச் செயல்பட்ட காவல் துறையினராலும் என் கட்சிக்காரர் அடைந்த துன்பங்களும் மன உலைச்சல்களும் அளவிடக் கூடியவை அல்ல. மதிப்பிற்குரிய நடுவர் அவர்கள் அனைத்தையும் மனதில் கொண்டு தகுந்த மாற்றீடு செய்வார்கள் என்ற நம்பிக்கையில் நான் அமைகிறேன். நன்றி.

*(கண்ணன் நடுவர்க்குப் பணிந்து வணக்கம் தெரிவித்துத் தன்னிடத்தில் சென்றமர்கிறார். நடுவர் சில மணித்துளிகள் எழுதிக் கொண்டிருக்கிறார். பின்னர்த் தலை நிமிர்ந்து அவையை நோக்கி அறிவிக்கிறார்.)*

**நடுவர் :**

எல்லோரும் ஏற்றுக் கொண்டதைப்போல இஃது ஒரு சிறு வழக்குத்தான். இருந்தும், இதை ஏதோ பெரும் கொலை வழக்குப்போல வழக்குரைஞர் கண்ணன் தன்னை முழுமையாக இவ்வழக்கில் ஈடுபடுத்திக் கொண்ட திறம் போற்றுதற்கு உரித்து. இரு பக்க வழக்குரைஞர்களின் வழக்காடலை நன்கு ஆய்ந்து நோக்கி, இவ்வழக்கிலே குற்றஞ்சாட்டப் பெற்றவர் மீது சாட்டப்பட்ட குற்றங்கள் சற்றேனும் உண்மையென்பதற்கான சான்றுகள் காட்டப்படவில்லை என்பதால், குற்றஞ்சாட்டப் பட்டவர் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று முடிவுக்கு வந்து, அவரை விடுதலை செய்கிறேன். எதிர்க்கட்சி வழக்குரைஞர் எழுப்பிய மற்ற பொருள்களின் மீது நாளை விரிவான தீர்ப்பு அளிக்கப்படும்.

*(அனைவரும் எழுந்து அகல்கின்றனர்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 4

**இடம்** : கதிரவனின் வீட்டின் மாடிக்கூடம்.

**காலம்** : மாலை மணி ஆறு.

**உறுப்பினர்கள்** : தேன்மொழி, மங்கை, அறிவாளன்.

**சூழல்** : கூடத்தின் ஓரமாக மங்கை அமர்ந்திருக்கிறார். ஒலி நாடா இசைப்பெட்டி பாட்டினைப் பாட, அதற்குத் தகத் தேன்மொழி நடனம் ஆடிக் கொண்டு இருக்கிறார்.

**மங்கை :**

நிச்சயம் வருவானடி! - மன
நிறைவினைத் தருவானடி! (நிச்சயம்)

அச்சம் இலாதவனாய் உச்சிப் பொழுதினிலே
அழைக்கா மலேவந்தென் அழகினைப்
போற்றியவன் (நிச்சயம்)

குன்றமே அவன்தோள்கள்! - மிகக்
கூரிய விழிவேல்கள்!

வென்றுமே சென்றானடி - நான்
வியந்துமே நின்றேனடி! (நிச்சயம்)

இதழ்களை இதழ்களால் மூடியவன்; - ஆழ்ந்து
என்னுறைப் பொய்கையில் ஆடியவன்;

மதக்களி றாமென மகிழ்ந்தனனே! - உளம்
மகிழ்ந்திட மழையினைப் பொழிந்தனனே! (நிச்சயம்)

பெண்மையில் மயங்கிடும் பித்தனடி; - தன்
பேச்சினால் மயக்கிடும் எத்தனடி!

என்ணவே இனித்திடும் சித்தமடி; - இங்கு
எனக்கென வாழ்ந்திடு முத்தனடி. (நிச்சயம்)

*(பாடலும் ஆடலும் முடிய, மங்கை புறப்பட அணியமாகிறார்.)*

**தேன்மொழி :**

என்னடி? அதற்குள்ளாகவா புறப்பட்டு விட்டாய்? மணி ஏழு கூட ஆகவில்லையே?

**மங்கை :**

உனக்கென்ன? நீ சொல்லி விட்டாய்! வீடு பக்கத்தில் என்றுதான் பேர்; நகரப் பேருந்தைப் பிடித்துப் போய்ச் சேர்வதற்குள் போதும் போதும் என்றாகி விடுகிறது.

**தேன்மொழி :**

கொஞ்சம் இரு; உணவு உண்டு செல்லலாம்.

*(கீழிருந்து அறிவாளன் குரல் கொடுக்கிறார்.)*

**அறிவாளன் :**

என்னை மறந்து விடாதீர்கள்; நானொருவன் அதற்காகவே நீண்ட நேரமாகக் கீழே காத்திருக்கிறேன்.

**மங்கை :**

யாரடி அவர்?

**தேன்மொழி :**

அவர் எங்கள் குடும்ப நண்பர்; அண்ணனுடைய உயிர்த் தோழர், அடிக்கடி இங்கு வந்து செல்வார். வா, கீழே போகலாம்.

*(இருவரும் கீழே இறங்கி வருகின்றனர். அவர்களைக் கண்டதும் அறிவாளன் எழுந்து நிற்கிறார்.)*

**தேன்மொழி :**

நிற்கிறீர்களே? அமருங்கள். இவள் என் தோழி; பெயர் மங்கை.

**அறிவாளன் :**

வணக்கம். *(மங்கையும் வணங்குகிறார்)* உங்கள் பாடல் மிக அருமை; அதிலும், உங்கள் குரல் இனிமை, அடடா! மிக மிக அருமை!

*(பெண்கள் இருவரும் மெல்லச் சிரிக்கின்றனர்.)*

**அறிவாளன் :**

ஏன் சிரிக்கின்றீர்கள்? யான் செய்த குற்றமும் யாதோ?

**தேன்மொழி :**

போதும்; போதும். உங்கள் நையாண்டிப் பேச்சு இனியும் வேண்டா. ஒலி நாடாப் பாடலைப் பதிவு செய்து கொண்டு வந்து கொடுத்தவரே நீங்கள்தானே?

**அறிவாளன் :**

ஆமாம்; இஃதென்ன பாடல்? உங்கள் ஆடல் பயிற்சிக்கு அழகு சேர்க்க வேறெந்தப் பாட்டுமே கிடைக்கவில்லையா?

**தேன்மொழி :**

ஏன்? என்ன பாடல் இஃதென்று உங்களுக்குத் தெரியுமா.

**அறிவாளன் :**

யாருக்குத் தெரியும்? எல்லோருக்கும் புரிகிறது போலவா பெயர் வைக்கிறீர்கள்? என்னவோ அம்ச துவணியாம், அரகரப் பிரியாவாம்; சங்கராபரணமாம், சப்த்த சுரமாம்! எப்படிப் புரியும் என்னைப் போன்ற எளிய மக்களுக்கு? அஃதென்ன ஆரோகணம்? அவரோகணம்? ஏற்றம், இறக்கம் என்றால் எல்லோரும் தெரிந்து கொள்ளப் போகிறார்களோ என்பதற்காக ஏமாற்றா? இசை என்று சொன்னால் எல்லோர்க்கும் தெரியாதா? சங்கீதமாம்; சங்கீதம்!

**மங்கை :**

ஐயா, உங்களுக்கு ஏன் இசையின் மேல் இத்தனை வெறுப்பு?

**அறிவாளன் :**

எல்லாம் புரிந்து கொள்ள முடியாததால் ஏற்படும் வெறுப்புத் தான்! நீங்கள் என்னை ஐயா என்று அழைத்த போது எவ்வளவு மகிழ்ச்சி எனக்குள் ஏற்பட்டது தெரியுமா? தெரிந்த மொழி தான் தெளிவைக் கொடுக்கும். சற்று முன்னர் ஒரு பாட்டிற்கு நடனம் ஆடினீர்களே அதன் பொருள் உங்களுக்குப் புரிந்து தான் ஆடினீர்களா?

**தேன்மொழி :**

புரியாமல் என்ன? எப்படிப்பட்ட இனிய பாடல் அது!

**அறிவாளன் :**

இனிய பாடல்தான்; இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால், பெண்கள் செவியால் கேட்பதற்கே அருகதை இல்லாத அருவருப்பான பாடல் அது. உங்கள் முன் அந்தப் பாடல் வரிகளைத் திரும்பச் சொல்லவே என் நா கூசுகிறது.

**தேன்மொழி :**

புதிர் போட்டது போதும்; விளக்கமாகச் சொல்லுங்கள்.

**அறிவாளன் :**

வற்புறுத்துவதால் சொல்கிறேன். அஃதென்ன? “என்னுறை பொய்கையில் ஆடியவன்; மதக்களிறென மகிழ்ந்தனனே; மகிழ்ந்திட மழையினைப் பொழிந்தனனே!” எண்ணிப் பாருங்கள். இது பெண்கள் பாடக்கூடிய பாடல்தானா? வெட்கம்!

*(பெண்கள் இருவரும் நாணத்தால் தலை தாழ்த்து கின்றனர்.)*

**தேன்மொழி :**

அறிவாளன் என்ற உங்கள் பெயருக்கு ஏற்ப, நீங்கள் எல்லாம் அறிந்தவர். அண்ணா இன்னும் வரவில்லை; வந்தால் சொல்கிறேன்.

**அறிவாளன் :**

நான் அவரைத் தேடி வரவில்லையே.

**தேன்மொழி :**

பின்னெதற்கு வந்தீர்களாம்?

**அறிவாளன் :**

இந்த இனிய மாலைப்போதில் இளந்தென்றலைத் தேடி ஓடோடி இங்கு வந்தேன்.

**தேன்மொழி :**

பெயருக்கு ஏற்ப உங்கள் பேச்சு அமையவில்லையே.

**அறிவாளன் :**

என்ன சொல்கிறாய்?

**தேன்மொழி :**

உங்கள் அறிவு வேலை செய்யவில்லை என்கிறேன்.

**அறிவாளன் :**

எப்படிச் சொல்கிறாய்?

**தேன்மொழி :**

தென்றலைத் தேடி எல்லோரும் கடற்கரைக்குச் செல்ல, நீங்களோ வழிதவறி இங்கே வந்துவிட்டீர்களே, அதைச் சொன்னேன்.

**அறிவாளன் :**

எல்லாம் தெரிந்த உனக்கு இது தெரியாதா?

**தேன்மொழி :**

அதனால் என்ன? உங்கள் வாயால் சொல்லுங்கள்; கேட்போம்.

**அறிவாளன் :**

சொல்கிறேன். இவ்வழியாகப் போய்க் கொண்டிருந்தேன். நிச்சயம் வருவானடி என்ற பாட்டின் வரி என் காதில் விழுந்தது. அடடே! என் தேன்மொழிதான் அழைக்கிறாள் போலும்; போய்ப் பார்ப்போமே என்று உள்ளே வந்தேன்; அவ்வளவு தான்.

**தேன்மொழி :**

என்ன தேன்மொழி?

**அறிவாளன் :**

ஏன்? என் தேன்மொழி.

*(தேன்மொழி சினங் கொள்கிறாள். சினத்தால் அவள் முகம் மேலும் சிவக்கிறது. பேசிய போது குரல் தடுமாறுகிறது.)*

**தேன்மொழி :**

நானென்ன உங்கள் தேன்மொழியா? வர வர உங்கள் பேச்சு வரம்பை மீறுகிறது! அண்ணா வரட்டும்; அவரிடம் சொல்கிறேன்.

**அறிவாளன் :**

சினத்தில் உன் முகம் தான் எத்துணைச் செழுமையாகச் சிறக்கிறது! சிவந்த முகம் மேலும் சிவப்பது, உன் அழகுக்கு

அழகு கூட்டுவதாய் அமைகிறது. நீ என் தேன்மொழி தானே? இதற்கு எதற்குச் சினம்?

**தேன்மொழி :**

மங்கை, நீ வா; நாம் போவோம். கீறல் விழுந்த இசைத்தட்டு இவர்; சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பார்!

**அறிவாளன் :**

மன்னிக்கனும். நீங்கள் இருவரும் என் பேச்சைத் தவறாகப் புரிந்து கொண்டீர்கள் என்று எண்ணுகிறேன். தேன்மொழி, உன் அப்பா பெயர் நாவுக்கரசர் இல்லையா? எனவே, நீ என் தேன்மொழி தானே? இதில் நான் செய்த தவறும் என்ன?

*(தேன்மொழியும் மங்கையும் வாய்விட்டு மெல்லச் சிரிக்கின்றனர்.)*

**தேன்மொழி :**

உங்களைப் பேச்சில் வெல்ல முடியுமா? நா. தேன்மொழி என்று சொல்லி இருக்கலாமே?

**அறிவாளன் :**

சொல்லி இருக்கலாம்; ஆனால், எந்தத் தமிழன் தன் தலைப் பெழுத்தைத் தமிழில் எழுதுகிறான்? தமிழில் சொல்கிறான்?

**தேன்மொழி :**

வாருங்கள்; அம்மா உணவோடு காத்துக் கொண்டிருப்பார்.

*(மூவரும் உள்ளறையை நாடிச் செல்கின்றனர்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 5

| | | |
|---|---|---|
| **இடம்** | : | வழக்கு மன்ற வளாக வழக்குரைஞர்கள் தங்கறை. |
| **காலம்** | : | காலை மணி பத்து. |

**உறுப்பினர்கள்** : கண்ணன், அரிச்சந்திரன், மற்றும் சில வழக்குரைஞர்கள்.

**சூழல்** : கண்ணன் ஓர் ஓரமாய் அமர்ந்து அன்றைய வழக்குக் கட்டுகளை மீளாய்வு செய்தவாறு இருக்கிறார். அப்போது, காவல்துறைத் துணை ஆய்வாளர் அரிச்சந்திரன் கண்ணனை நெருங்குகிறார்.

**அரிச்சந்திரன் :**

வணக்கம்.

**கண்ணன் :**

ஓ! நீங்களா? வணக்கம்; வாருங்கள்.

*(அரிச்சந்திரன் எதிரே அமர்கிறார்.)*

**கண்ணன் :**

சொல்லுங்கள்.

**அரிச்சந்திரன் :**

உங்களிடம் எப்படிச் சொல்வது என்று தயக்கமாய் உள்ளது. பணியில் உயர்வை மிக விரைவில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்த நேரத்தில் இந்த வழக்கின் தீர்ப்பு என் வாய்ப்பைப் பாழாக்கி விடுமோ என்று அச்சமாய் உள்ளது.

*(கண்ணன் மெல்லச் சிரிக்கிறார். அரிச்சந்திரன் தலையைத் தாழ்த்தியவாறு அமர்ந்திருக்கிறார்.)*

**கண்ணன் :**

கவலை வேண்டா. நடுவர், நடுநிலையானவர் மட்டும் அன்று; மிக மிக நல்லவரும் ஆவார். தீர்ப்பை அறிவிப்பதற்கு முன்னர் நான் பார்த்துச் சொல்கிறேன். நிச்சயம் ஆவன செய்வார்.

**அரிச்சந்திரன் :**

மிக்க நன்றி.

**கண்ணன் :**

அரிச்சந்திரன், உங்களை ஒன்று கேட்க வேண்டும் என்று நேற்றே எண்ணி இருந்தேன்; ஆனால், மறந்து விட்டது.

**அரிச்சந்திரன் :**

கேளுங்கள்; சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

**கண்ணன் :**

வேறொன்றுமில்லை. நேற்று முன்னிரவே விடுதி விண்மீன் முழுமையாக ஆய்வு செய்யப் பட்டதாக அறிய வந்தேன்; என்ன நடந்தது?

**அரிச்சந்திரன் :**

இருபதுக்கும் மேற்பட்ட விலைமாதர்கள் அங்கே சிறைப் படுத்தப் பட்டனர்; விலையுயர்ந்த வெளிநாட்டு மது வகைகள் ஏராளம் கைப்பற்றப் பட்டுள்ளன. சட்டங்களுக்கு உட்பட்டு இம்முறை வழக்குத் தொடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுத்து வருகிறோம்.

**கண்ணன் :**

நல்லது. எதற்கும் சட்ட வல்லுநர்களை அடிக்கடி கலந் தாய்ந்து செய்யுங்கள்; ஆண்டவர் மிக மிக அரசியல் செல்வாக்கு உள்ளவர் என்று அனைவரும் சொல்கிறார்கள். மேலும், அவர் மிகப் பெரிய பணக்காரர்; பணத்திற்குப் பணியாத நல்ல உள்ளங் களை இப்போதெல்லாம் பார்ப்பதே அரிதாக உள்ளது.

**அரிச்சந்திரன் :**

உண்மைதாம். ஆனால், சில நல்லவர்களும் உள்ளனர்.

**கண்ணன் :**

அப்படியா?

**அரிச்சந்திரன் :**

ஆமாம். காவல் துறைப் பெருந்தலைவர் அவர்களின் நேரடி ஆணையின் மேல்தான் நாங்கள் இந்நடவடிக்கையை மேற்கொண்டோம்.

**கண்ணன் :**

உங்கள் பேச்சைக் கேட்க உண்மையில் மகிழ்ச்சி கொள்கிறேன். இப்படியும் சிலர் இங்கு இருப்பதாலேயே எல்லாம் நல்லபடி நடந்து வருகின்றன. பெரியார் சொற்கள் என்றும் பிறழ்வதில்லை!

**அரிச்சந்திரன் :**

எதைச் சொல்கிறீர்கள்?

**கண்ணன் :**

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை எனும் வழக்கினைச் சொல்கிறேன்.

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 6

| | | |
|---|---|---|
| **இடம்** | : | கண்ணனின் அழகிய சிறு இல்லம். |
| **காலம்** | : | காரிக்(சனி) கிழமைக் காலை மணி ஒன்பது. |
| **உறுப்பினர்கள்** | : | கண்ணனின் தங்கை மங்கை, மாமன் மகள் எழிலி, மணியரசன். |
| **சூழல்** | : | வீட்டின் முன்கதவு மூடி இருக்கிறது. வாயில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த மணியரசன், மூடிய கதவின் முன் நின்று சுற்றும் முற்றும் பார்க்கிறார். |

**மணியரசன் :** *(தனக்குள்)*

புகழேந்தி தெரு, ஐந்தாம் எண் வீடு இதுதான். என்ன இது? ஒரு பெயர்ப் பலகை கூடவா வெளியே மாட்டக் கூடாது? சரி; கதவைத் தட்டுவோம்.

*(மணியரசன் கதவைத் தட்டுகிறார். தட்டொலி கேட்டு உள்ளிருந்து கண்ணனின் மாமன் மகள் எழிலி கதவைத்*

*திறக்கிறார். அந்நேரம், வீதியில் அழகிய பெண்ணொருத்தி அசைந்தசைந்து செல்வதைக் காண்கிறார் மணியரசன். அந்த அழகில் மயங்கினவராய்த் தன் பார்வையைத் திருப்பாமலேயே மீண்டும் கதவைக் கை விரல்களால் தட்டுகிறார். கதவைத் திறந்து நின்று கொண்டிருந்த எழிலியின் நெற்றியிலே அவர் விரல்கள் மோதி ஓசை எழுப்புகின்றன. தட்டோசையில் வேறு பாடு உணர்ந்த மணியரசன் தன் கவனத்தைத் திருப்புகிறார்.)*

**மணியரசன் :**

அடடா! நீங்கள் என்னை மன்னிக்கனும். தெரியாமல் தவறு நேர்ந்துவிட்டது. நான் அப்போதே நினைத்தேன், இஃதென்ன? ஏதோ வெற்றுக் குடத்தைத் தட்டினால் எழும் ஓசையாய் உள்ளதே என்று! இப்போது புரிகிறது.

**எழிலி :** *(சினத்துடன்)*

என்ன புரிகிறது? என்னை என்ன எதுவுமே தெரியாதவள் என்ற நினைப்பா?

**மணியரசன் :**

மன்னிக்கனும்; மீண்டும் மன்னிக்கனும். நானேதும் தவறாகச் சொல்லி விட்டேனா?

**எழிலி :**

போதும் உங்கள் பொறுப்பற்ற பேச்சு. வெற்றுக் குடத் திற்கும் நிறை குடத்திற்கும் வேறுபாடு என்ன என்பதை நான் நன்றாகவே அறிவேன். யார் நீங்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?

**மணியரசன் :**

வழக்குரைஞர் கண்ணன் வீடு இதுதானா?

**எழிலி :**

ஆமாம்; என்ன வேண்டும்?

**மணியரசன் :**

எல்லோரும் பாராட்டும் வழக்குரைஞர் கண்ணன் வீடு இதுதானா? உண்மையைச் சொல்லுங்கள்.

**எழிலி :**

ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?

**மணியரசன் :**

ஒரு பெயர்ப் பலகையைக் கூடக் காணோமே என்றுதான்.

**எழிலி :**

அதோ, இருக்கிறது; பாருங்கள். பலகை பழையதாகி விட்டது; புதுப்பிக்கப்பட வேண்டும்.

**மணியரசன் :**

பெயர்ப் பலகையில் பேர் அழிந்து விட்டிருக்கிறது. அதனால்தான் அஃதென் கண்களில் படவில்லை.

**எழிலி :**

உள்ளே வாருங்கள்.

*(எழிலி திரும்பி உள்ளே நடக்க, மணியரசன் அவரைத் தொடர்ந்து செல்கிறார்.)*

**எழிலி :**

மலர்ந்து மணம் வீசுகிறதே மல்லிகை, அது தன் இருப்பிடத்தை வண்டுகளுக்குப் பலகையில் எழுதியா வாவென்று வரவேற்கிறது?

**மணியரசன் :**

அடடா! மிக அருமை! நான் ஒரு மடையன்! *(எழிலி மெல்லச் சிரிக்கிறார்.)* நீங்கள் நம்புவீர்கள் என்பதை நானறிவேன். கண்ணன் பேர் போன வழக்குரைஞர் என்று எல்லோரும் சொன்னார்கள்; அஃதேன் என்று எனக்கு அப்போது புரியவில்லை. பெயர்ப் பலகையிலிருந்த பெயர் அழிந்து போகும் அளவிற்குப் பேர் போன வழக்குரைஞர் அவர் என்பது இப்போது புரிந்தது.

**எழிலி :**

மிக நன்றாகவே பேசுகிறீர்கள். அமருங்கள்.

*(மணியரசன் கண்ணனின் அலுவலக அறையில் போடப் பட்டிருந்த நாற்காலியில் அமர்கிறார்.)*

**மணியரசன் :**

மலர்களின் வாசம், வண்டுகளை வாவென்று அழைப் பதற்கான விளம்பரமே. விளம்பரம் இல்லையேல் எதுவும் விலை போகாது. பூப்பெய்திய பெண்ணுக்கு விழா எடுக்கின்றோமே, எதற்காக? எல்லாம் விளம்பரம் தான்.

**எழிலி :**

இருங்கள்; இதோ வந்து விடுகிறேன்.

**மணியரசன் :**

பொறுங்கள். எனக்கு எதுவும் வேண்டா. இப்போதுதான் சிற்றுண்டி உண்டு வருகிறேன்.

*(எழிலி அவரைப் புன்முறுவலோடு நோக்குகிறார்.)*

**எழிலி :**

நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?

**மணியரசன் :**

என் பெயர் மணியரசன்; கண்ணன் அவர்களைப் பார்க்க வேண்டும்.

**எழிலி :**

நான் போய்ச் சொல்கிறேன்.

*(எழிலி உள்ளே போகத் திரும்புகிறார். மணியரசனின் பேச்சு அவரைத் தடுத்து நிறுத்தித் திரும்ப வைக்கிறது.)*

**மணியரசன் :**

நீங்கள் யாரென்று சொல்லவில்லையே? கண்ணனுக்கு நீங்கள் என்ன உறவு?

*(எழிலி அவரைச் சற்று உற்றுப் பார்க்கிறார்.)*

**எழிலி :**

நிச்சயம் சொல்ல வேண்டுமா?

**மணியரசன் :** *(தயக்கத்துடன்)*

தவறாக எண்ண வேண்டா. சொன்னால் எனக்கு உதவி யாக இருக்கக் கூடும்; அதற்காகத்தான்.

**எழிலி :**

சொல்கிறேன். என் பெயர் எழிலி; அகவை இருபத்து நான்கு; இன்னும் திருமணம் ஆகவில்லை. கண்ணன் என் அத்தை மகன். போதுமா? இல்லை, இன்னும் செய்திகள் மேலும் தேவையா?

**மணியரசன் :**

போதும்; இவையே ஏராளம். மிக்க நன்றி. இன்னுமொரு வேண்டுகோள். நீங்கள்தான் எனக்கு எப்படியும் உதவ வேண்டும்.

**எழிலி :**

நானா?

**மணியரசன் :**

ஆமாம்; நான் உங்களையே நம்பி இங்கு வந்து உள்ளேன். கண்ணனிடம் என்னை உதவியாளராக நீங்கள்தான் சேர்த்துவிட வேண்டும்.

**எழிலி :** *(சிந்தனையுடன்)*

எதுவரைப் படித்திருக்கிறீர்கள்?

**மணியரசன் :**

உங்களுக்கு நினைவிருக்கும் என்று எண்ணி இருந்தேன்; நீங்கள் அதற்குள் மறந்து விட்டீர்கள். பொய்யை மெய்யாக்கப் போதிய அளவு படித்துள்ளேன்.

*(எழிலி கலகல எனச் சிரிக்கிறார்.)*

**எழிலி :**

கடைசியில் நீங்களும் ஒரு வழக்குரைஞர்தானா?

**மணியரசன் :**

ஏன்? நம்பிக்கை இல்லையா? இதோ பாருங்கள் நான் பெற்ற பட்டத்தை.

*(கையில் வைத்திருந்த கோப்பிலிருந்து தான் பெற்ற கல்விச் சான்றை எடுத்துக் கொடுக்கிறார். எழிலி பெற்றுப் பார்க்கிறார்; பின்னர்த் திரும்ப அவரிடம் ஒப்படைக்கிறார்.)*

**எழிலி :**

நான் நம்புகிறேன்.

**மணியரசன் :**

நான் ஒரு வழக்குரைஞன் என்பதை என்னைத் தெரிந்த சின்ன பையன் கூட நம்ப மறுக்கிறான். உங்களைத்தான் நான் முழுக்க நம்பி உள்ளேன். கண்ணனிடம் பயிற்சி பெறுவதே நான் கொண்ட கொள்கைக்கு உரம் சேர்க்கும். அதற்கு உங்களால் மட்டுமே உதவி செய்ய முடியும்.

**எழிலி :**

உங்களுக்கு உதவி செய்கிறேன்; அதனால் எனக்கு என்ன பயன்?

**மணியரசன் :**

பயன்தூக்கார் செய்த உதவி, நயன்தூக்கின் நன்மை கடலிற் பெரிது! உயிர் உள்ளவரை நான் உங்களை மறக்க மாட்டேன்.

**எழிலி :**

இதெல்லாம் இங்கு வேண்டா. தகுதி அறிந்து, அவரவர் வரிசைக்கேற்ப உதவி அளிக்க வேண்டும் என்பதையும் நான் அறிவேன். என்ன சொல்கிறீர்கள்?

**மணியரசன் :**

என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்.

**எழிலி :**

உங்களுக்கு வேண்டியதை நான் செய்கிறேன்; மாறாக, நான் சொல்பவற்றை நீங்கள் கேட்க வேண்டும். சரிதானே?

**மணியரசன் :**

நட்பாகட்டும், குடும்பமாகட்டும்; எதற்கும் இரண்டு பேர் தேவை. அந்த இருவரில் ஒருவராவது விட்டுக் கொடுத்து இணங்கி நடந்தால்தான் எதுவுமே இனிதாய்த் தொடரும். உங்கள் பேச்சை மீற மாட்டேன்; நிறைவுதானே?

**எழிலி :**

போதும். பேச்சு மாற மாட்டீர்களே?

**மணியரசன் :**

எண்ணித் துணிக கருமம்! உண்மையாகவே இதை உணர்ந்து செயல்படுபவன் நான். என் நா என் எண்ணத்திற்கு ஏற்பவே இயங்கும். இறுதியாக, இன்னொரு செயலும் உங்களால் ஆக வேண்டும்.

**எழிலி :**

சொல்லுங்கள்.

**மணியரசன் :**

சென்னையைப் பொறுத்த மட்டில் நான் அயலவன்; உறவினர்களோ, உற்ற நண்பர்களோ இங்கு யாரும் கிடையாது. தங்குவதற்குத் தகுந்த இடமில்லாது தடுமாறிக் கொண்டிருக் கிறேன். நீங்கள் ஏதேனும் ஏற்பாடு செய்து கொடுத்தால் மேலும் நன்றி உடையவனாய் இருப்பேன். உள்ளே வரும்போதே கவனித்தேன்; வீட்டிற்கு ஒதுக்குப் புறமாய்ச் சிறிய வீடு ஒன்று பூட்டப் பட்டிருந்தது.

**எழிலி :**

உம்! மிகத் திறமையானவர்தான். இந்த உதவி மட்டும் போதுமா? இன்னும் வேறெதுவும் தேவைப் படுகிறதா?

**மணியரசன் :**

இப்போதைக்கு இது போதும்.

**எழிலி :**

பிறகு? குடும்பம் நடத்தப் பெண் பார்த்துத் தரச் சொல்வீர்களோ?

**மணியரசன் :**

சேச்சே! உங்களிடமா? நீங்களே ஒரு பெண்தானே! வெண்ணெயைக் கையில் வைத்துக் கொண்டு, நெய்க்கு வெளியே யாரும் அலைவார்களா? அந்த அளவிற்கு அறிவிலி இல்லை.

**எழிலி :**

என்ன உளருகிறீர்கள்?

*(எழிலி அவரை முறைத்தபடி எழுந்து கொள்ள, மணியரசனும் எழுந்து நிற்கிறார். அப்போது மங்கை அங்கு வந்து சேருகிறார்.)*

**மங்கை :**

எழிலி, உன்னை எங்கே எல்லாம் தேடுவது? இங்கே அண்ணன் அலுவலக அறையில் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

*(மணியரசனை அங்கே பார்த்துத் தயங்கி நிற்கிறார்.)*

**எழிலி :**

மங்கை, இவர் பெயர் மணியரசன்; வழக்குரைஞருக்குப் படித்திருக்கிறார். அத்தானிடம் உதவியாளராகச் சேர வேண்டுமாம்.

**மணியரசன் :**

வணக்கம்.

**மங்கை :**

வணக்கம். அண்ணா ஒப்புக் கொள்ள மாட்டாரே, இவருக்குத் தெரியாதா?

**மணியரசன் :**

தெரியும். ஆனால், எப்படியும் சேர்த்து விடுவதாய் இவர்கள் சொல்லி இருக்கிறார்கள்; ஏன்? முடியாதா?

**மங்கை :** *(புன்னகையுடன்)*

இவள் சொல்லிவிட்டாளா? பிறகென்ன? எல்லாம் முடிந்தது போலத்தான்! கொடுத்து வைத்தவர் நீங்கள்! ஏய், என்னடி நாற்றம்? எதை அடுப்பில் விட்டுவிட்டு வந்தாய்? நான் போய்ப் பார்க்கிறேன்.

*(மங்கை விரைந்து உள்ளே ஓடுகிறார்.)*

**எழிலி :**

சரி, இப்போது நீங்கள் புறப்படுங்கள்.

**மணியரசன் :**

கண்ணனை நான் பார்க்க வேண்டாவா?

**எழிலி :**

இன்று வேண்டா. நான் அத்தானிடம் பேசி ஏற்பாடு செய்து வைக்கிறேன். நாளை ஞாயிற்றுக் கிழமை; அவர் ஓய்வாகத்தான் இருப்பார். நீங்கள் காலைப் பத்து மணிக் கெல்லாம் வந்து விடுங்கள்; அத்தானைப் பார்த்து விடலாம். அதன் பிறகு, என்னோடு பேருந்து நிலையத்திற்கு வருகிறீர்கள்; என்னை வழி அனுப்பி வைக்கிறீர்கள்.

**மணியரசன் :** *(திகைப்போடு)*

நானா?

**எழிலி :**

ஆமாம்; ஏன்? தன்மானம் அதற்குள் தடுக்கிறதோ?

**மணியரசன் :**

இல்லை; இல்லை. சொன்னபடி வந்து விடுகிறேன்.

**எழிலி :**

சரி; இப்போது போய் வாருங்கள்.

*(மணியரசன் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வெளியேறுகிறார். அவர் பார்வையிலிருந்து மறைந்ததும் கதவைத் தாழிட்டுவிட்டுத் திரும்புகிறார் எழிலி. அப்போது மங்கை அங்கே வந்து சேருகிறார்.)*

**மங்கை :**

யாரடி அவர்? உனக்கு முன்பே தெரிந்தவரா?

**எழிலி :**

தெரிந்தவர்தான்; நெருங்கிய பழக்கம் கிடையாது. அனைத்துக் கல்லூரிகளுக்கான பேச்சுப் போட்டியின் போது மேடையில் அறிமுகமானார். அதன் பிறகு, வழியில் பலமுறைப்

பார்த்திருக்கிறேன்; ஆனால், அடிக்கடி பேசிக் கொண்டதில்லை.

**மங்கை :**

அவ்வளவுதானா? நான் ஏதேதோ எண்ணிவிட்டேன்.

❀ ❀ ❀ ❀ ❀

## காட்சி - 7

**இடம்** : கண்ணனின் வீடு.

**காலம்** : காலை மணி ஒன்பது.

**உறுப்பினர்கள்** : கண்ணன், மங்கை, தேன்மொழி, மணியரசன்.

**சூழல்** : கண்ணன் அடுப்படியில் வேலை செய்து கொண்டிருக்கிறார். மேலறையிலிருந்து கீழிறங்கி வந்த மங்கை, கூடத்தில் அங்கே அமர்ந்திருந்த தேன்மொழியைக் கவனிக்காதவராய்க் கண்ணனைத் தேடிச் சமையலறைக்குச் செல்கிறார்.

**மங்கை :**

அண்ணா; அண்ணா.

**கண்ணன் :**

என்னம்மா?

**மங்கை :**

நேரமாகிவிட்டது பார்; என் தோழி தேன்மொழி வந்து விடப் போகிறாள்!

**கண்ணன் :**

வந்தால் வரட்டுமே; எனக்கென்ன அதைப் பற்றி? நல்ல தோழி வாய்த்தாள் உனக்கு!

**மங்கை :**

என் தோழியைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? தேன்மொழி எத்துணை இனியவள் தெரியுமா? அவளைப் போன்ற நல்ல தோழி கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!

**கண்ணன் :**

எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும்?

**மங்கை :**

என்ன கிண்டலா?

**கண்ணன் :**

அவள் எப்படிப் பட்டவளாகத்தான் இருக்கட்டுமே! அவளைப் பற்றிய அக்கறை எனக்கெதற்கு?

**மங்கை :**

நீங்கள் பேசுவது சற்றும் முறை இல்லை. என் தோழியைத் தகுதி தாழ்த்திப் பேசுவது சரிதானா?

**கண்ணன் :**

வேறெப்படிப் பேசுவது? நீதான், தோழி, தோழி என்று அவள் வீட்டிற்கு ஓடுகிறாயே ஒழிய, அந்த உன் உயிர்த் தோழி என்றாவது ஒரு நாள் உன் வீட்டிற்கு வந்திருக்கிறாளா?

**மங்கை :**

ஏன் வர வேண்டும்?

**கண்ணன் :**

ஏன் வரவில்லை என்றுதான் கேட்கிறேன். அவள் பணக்காரி தானே?

**மங்கை :** *(பெருமிதத்துடன்)*

அதிலென்ன ஐயம்? தேன்மொழி மிகப் பெரிய பணக்காரி!

**கண்ணன் :**

நினைத்தேன். அதனால்தான் உன்னைத் தேடி அவள் ஒரு நாளும் இங்கு ஓடி வந்ததில்லை. அவள் வர மாட்டாள்!

செல்வம் நிறைய இருக்கிறதே, நிச்சயம் செறுக்கு இல்லாமலா இருக்கும்?

**மங்கை :**

போதும்; என் தேன்மொழியைப் பற்றித் தேவையின்றி நீங்கள் எதுவும் பேச வேண்டா. நான் போகிறேன்.

**கண்ணன் :**

போயேன்; நானா தடுக்கிறேன்?

**மங்கை :**

பால் இல்லையா இன்றைக்கு?

**கண்ணன் :**

என்ன சொல்கிறாய்? இப்போதுதானே கொண்டு வந்து உன் எதிரில் வைத்து விட்டு வந்தேன்; நீ கவனிக்க வில்லையா?

*(மங்கை கூடத்திற்கு வருகிறார். அங்கே தேன்மொழி அமர்ந்திருப்பதைக் கண்டு ஆவலோடு விரைகிறார்.)*

**மங்கை :**

அடடே! நீ முன்னரே வந்து விட்டாயா? ஒரு குரல் கொடுத்திருக்கக் கூடாதா?

*(கண்ணன் பேச்சுக் குரல் கேட்டு அங்கே வந்து சேருகிறார்.)*

**கண்ணன் :** *(திகைப்புடன்)*

நீங்கள்?... நீங்கள்தான்..

**தேன்மொழி :**

அவள்!

**கண்ணன் :**

அவலா? எனக்குப் பிடிக்காதே.

**தேன்மொழி :**

இப்படிச் சொன்னால் எப்படி? உங்களுக்குப் பிடிக்கும் என்றன்றோ ஆசையோடு கொண்டு வந்தேன்.

**கண்ணன் :**

அதனால் என்ன? கொடுங்கள்; தின்று பார்க்கிறேன்.

*(தேன்மொழியும் மங்கையும் கலகல எனச் சிரிக்கின்றனர். காரணம் புரியாது கண்ணன் விழிக்கிறார்.)*

**மங்கை :** *(புன்னகையுடன்)*

என் தோழியை மதிப்பின்றி, அவள் இவள் என்று அழைத்தீர்களே, அந்தத் தேன்மொழி இவள்தான்.

**கண்ணன் :** *(மனத் தடுமாற்றத்துடன்)*

தெரியாமல் சொல்லிவிட்டேன்; மன்னிக்கவும், பால் குடியுங்கள்.

**தேன்மொழி :**

பாலா? சேச்சே!

**கண்ணன் :**

ஏன்? பிடிக்காதா?

**தேன்மொழி :**

பிடிக்கும்; ஆனால், நான் குடிப்பதில்லை.

**கண்ணன் :**

ஏனப்படி?

**தேன்மொழி :**

நான் பணக்காரி ஆயிற்றே! பால் எல்லாம் குடிக்கலாமா? ஆப்பிள் சாறு அல்லது திராட்சைச் சாறு இப்படித்தாம் நான் அருந்துபவை. அவை எல்லாம் இங்கே கிடைக்குமா?

**மங்கை :** *(குறுக்கிட்டு)*

போதுமடி. என் அண்ணன் ஏதோ தெரியாமல் சொல்லி விட்டார்; அதைப்போய்ப் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறாயே! இதோ, நீ பாதி; நான் பாதி. குடி; போகலாம்.

*(பாலை இருவரும் பகிர்ந்து குடிக்கின்றனர். தேன்மொழி குடித்தவாறே கண்ணனைக் குறும்பாகப் பார்த்துச் சிரிக்கிறார்.)*

❀ ❀ ❀ ❀ ❀

## காட்சி - 8

| | | |
|---|---|---|
| **இடம்** | : | கண்ணன் வீட்டின் எதிர்புறம் வீதி. |
| **காலம்** | : | மாலை மணி ஆறு. |
| **உறுப்பினர்கள்** | : | கண்ணன், மங்கை, தேன்மொழி. |
| **சூழல்** | : | வீதியில் வீட்டெதிரே மகிழுந்து வந்து நிற்கிறது. அதிலிருந்து மங்கை இறங்கிக் கொள்ள, தேன்மொழி வண்டி யிலேயே அமர்ந்திருக்கிறார். |

**மங்கை :**

தேன்மொழி, ஏன் வண்டியிலேயே அமர்ந்திருக்கிறாய்? இறங்கி உள்ளே வந்துவிட்டுப் போயேன்.

**தேன்மொழி :**

ஐயய்யோ! வேண்டவே வேண்டா. உன் அண்ணன் இருந்து விட்டாரோ, என் பாடு திண்டாட்டம்தான்! என்னை விடு; என்னால் தாங்க முடியாது.

**மங்கை :**

என்னடி சொல்கிறாய்? எனக்குப் புரியவில்லையே?

**தேன்மொழி :**

உனக்கு எப்படியடி புரியும்? அவர்தான் உன் அண்ணன் ஆயிற்றே! அப்படியே அள்ளி அள்ளி விழுங்கி விடுவது போல் பார்ப்பதும் பொருள் இல்லாமல் ஏதேதோ புலம்புவதும்; அப்பப்பா! போதும்; போதும்! பெண்களையே இதற்கு முன்னர்ப் பார்த்துப் பழகியது இல்லையா உன் அண்ணன்? இப்படியா வழிவார் மனிதர்!

**மங்கை :**

போடி, எல்லாம் உனக்கு விளையாட்டுத்தான்! என் அண்ணனைப் பற்றி நீ என்ன அறிவாய்? இதற்கு முன்னர் எந்தப் பெண்ணையுமே ஏறெடுத்துப் பார்க்காதவர்! நீ என்ன

மாயம் செய்தாயோ? தெரியவில்லை; இப்போது எல்லாமே நீ என்றாகி விட்டார்!

**தேன்மொழி :**

போதுமடி உன் அண்ணனின் புகழ்ப் புராணம்! எல்லாம் எனக்குத் தெரியும். அவர் தேனீரைத் தானே போட்டுக் கொண்டுவந்து கொடுப்பதும் குடி, குடி என்று விடாது வற்புறுத்துவதும் பெரும் வேதனை. அஃது உனக்கெப்படித் தெரியும்? நீ போய் உள்ளே பார்; உன் அண்ணன் இல்லை என்றால், சொல்; நான் வருகிறேன்.

*(சிரித்துக் கொண்டே மங்கை வீட்டினுள் நுழைகிறார், அப்போது, தேன்மொழியின் அருகில் கண்ணன் வந்து மெல்ல அழைக்கிறார்.)*

**கண்ணன் :**

தேன்மொழி!

*(அழைத்த அவரைத் தேன்மொழி திரும்பிப் பார்க்கிறார். அவர் கண்களைக் கண்டதும் அனைத்தையும் புரிந்து கொள்கிறார். சிறிது நேரம் அவர் கண்களைத் தன் கண் களால் கண்டு களிக்கிறார்; பின்னர் நாணத்தால் தலையைத் தாழ்த்திக் கொள்கிறார். கண்ணனின் கை விரல்கள் தேன்மொழியின் விரல்களைப் பற்றுகின்றன. தேன்மொழியின் உடல் வியர்க்கிறது.)*

**கண்ணன் :**

தேன்மொழி!

**தேன்மொழி :**

ஊஉம்.

**கண்ணன் :**

வீட்டினுள் வந்து செல்லக் கூடாதா?

**தேன்மொழி :**

எதற்காம்?

**கண்ணன் :**

உனக்குத் தெரியாதா? *(தேன்மொழி அமைதியாக இருக்கிறார்.)* தேன்மொழி! என்னோடு பேசக் கூடாதா? என் உள்ளம் உருகிக் கரைவதை உன்னால் உணர முடிய வில்லையா?

*(தேன்மொழி அமைதி காக்கிறார். உதடுகள் மெல்லப் பிரிகின்றன; கண் இமைகள் படபடக்கின்றன.)*

**கண்ணன் :**

தேன்மொழி, தேனினும் இனியவளே! கனியிதழ் வாய் திறந்து கனிவாகச் சில சொல்லி, எனக்குக் களிப்பூட்ட மாட்டாயா? கோவை இதழ் விரித்துக் கொஞ்சு சிரிப்பாலே என்னைக் கொள்ளை கொள்ள மாட்டாயா?

**தேன்மொழி :**

பழைய படங்கள் நிறைய பார்த்திருக்கிறீர்கள்! இன்றைக்குக் காதலியிடம் யார் இப்படிக் கவிதை பேசுகிறார்கள்?

*(மகிழ்ந்து விரைந்து அகல்கிறது. அங்கு மங்கை வந்து சேருகிறார்.)*

**மங்கை :**

தேன்மொழி இங்கு இருந்தாளே? அதற்குள்ளாகவா போய் விட்டாள்?

**கண்ணன் :**

இப்போதுதான் போனாள். சரி; வா, உள்ளே போவோம்.

*(இருவரும் வீட்டிற்காகத் திரும்பி நடக்கின்றனர். நடந்த படி கண்ணன் பேசுகிறார்.)*

**கண்ணன் :**

மாமா ஊரிலிருந்து கடிதம் எழுதி இருந்தார். உடனே என்னைப் புறப்பட்டு வரச் சொல்லி உள்ளார். எனக்கு ஒரு வழக்குப் பொருட்டு நிறைய வேலைகள் உள்ளன; நீ காலையில் புறப்பட்டுப் போய்ப் பார்த்துவிட்டு வா. உனக்கும் அடுத்த இரண்டு நாட்களும் விடுமுறை தானே?

**மங்கை :** *(தயக்கத்துடன்)*

மாமா உங்களைத்தானே வரச் சொல்லி எழுதி இருக்கிறார்? நான் போவது நன்றாக இருக்குமா?

**கண்ணன் :**

உண்மைதான்; ஆனால், எனக்குத் தவிர்க்க முடியாத வேலை இருக்கிறதே! என்ன செய்வது? நீ முதலில் போ; இன்னும் இரண்டு நாட்களில் வருவதாக மாமானிடம் சொல்லிவிடு.

**மங்கை :** *(வருத்தத்துடன்)*

என்ன அண்ணா இது? உங்களை வரச் சொன்னால் என்னை அனுப்புகிறீர்களே! தேன்மொழியோடு நாளை மாமல்லபுரம் வருவதாக ஒத்துக்கொண்டு இருக்கிறேனே.

**கண்ணன் :**

அதனால் என்ன? இன்னொரு நாளைக்குச் சென்றால் போயிற்று. மாமல்லபுரம் எங்கே போய்விடப் போகிறது? பக்கத்தில்தானே உள்ளது!

*(கண்ணன் தன் அறையை நாட, மங்கை அடுப்படியை நாடுகிறார்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 9

| | | |
|---|---|---|
| **இடம்** | : | கதிரவனின் வீடு. |
| **காலம்** | : | காலை மணி எட்டு. |
| **உறுப்பினர்கள்** | : | கதிரவன், அறிவாளன், தேன்மொழி. |
| **சூழல்** | : | கதிரவனும் அறிவாளனும் கூடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர். அப்போது, அழகாக உடையுடுத்தி, தேன்மொழி அங்கு வந்து சேருகிறார். |

**கதிரவன் :**

என்ன அறிவாளா? அப்படியே மலைத்து நின்று விட்டாய்?

**அறிவாளன் :**

எதைச் சொல்வேன்? அன்னம் நிகர்பெண்ணாள், அழகுச் சிலையாள் உன் தங்கை தேன்மொழியின் திகட்டாத அழகு என்னைத் திகைக்க வைக்கிறதே, அதைச் சொல்லவா? மது குடித்த வண்டாய்த் தேன்மொழியின் அழகிலே மயங்கிச் சோர்ந்து மலைத்து நிற்கிறேனே, அதைச் சொல்லவா?

**கதிரவன் :**

அறிவாளா, வர வர நீ ஒரு கவிஞனாக மாறி வருகிறாய்!

**அறிவாளன் :**

உண்மைதானே? கவிஞன் என்பவன் யார்? உள்ளத்து உணர்ச்சிகளுக்கு உருவமைத்து உயிரூட்டி ஏட்டிலே தருகிறான்; அவனைக் கவிஞன் என்று நாம் ஏற்றுக் கொள்கிறோம். அவ்வளவே! இலக்கணப்படி கவிதைப் படைப்பவனையா இன்று கவிஞன் என்கிறோம்? தேன்மொழி, உன் அழகு மிகவும் உயவு அளிக்கக் கூடியது.

**கதிரவன் :**

அஃதென்ன உயவு? புரியவில்லையே.

**அளிவாளன் :**

உண்மையான தமிழ்ச் சொல் உங்களுக்கு எப்படிப் புரியும்? trouble என்று ஆங்கிலத்தில் சொன்னால் ஆகாஅ! ஓகோஓ! என்பீர்கள். உயவு என்றால் துன்பம் என்பது பொருள். தேன்மொழியின் அழகு பார்ப்பவரை மட்டுமன்று, அவருக்கும் துன்பத்தை அளிக்க வல்லது.

**தேன்மொழி :** *(சினத்துடன்)*

என்னைக் காத்துக் கொள்ள எனக்குத் தெரியும்.

**அறிவாளன் :**

உன்னைக் காத்துக் கொள்ளத் தக்க உறுதி உனக்கு இருக்கலாம்; ஆனால், உன்னழகின் தாக்கத்திற்கு உள்ளாகும்

என்னைப் போன்ற எளியோர் நிலை என்னாவது? மலர்ந்து மணம் பரப்புகின்றதே இரோசா, அது தன்னைக் காத்துக் கொள்ளத்தான் முட்களைப் பெற்றிருக்கிறது; ஆனால், அதை அடைய எண்ணும் யாரும் அம்முட்களைத் தடைகளாகக் கொள்வதில்லையே! தேன்மொழி, எந்த இன்னல் எதிர் கொண்டு வந்தாலும் உன்னை அடைய முடியுமேல், எந்த மனிதனும் தன் இன்னுயிரை இழக்கவும் பொருட்படுத்த மாட்டான்; இது முற்றும் உண்மை.

*(அறிவாளன் மெல்லப் பொருளோடு புன்னகை புரிகிறார். தேன்மொழியின் முகம் சிவக்கிறது; பேச்சு தடுமாறுகிறது.)*

**தேன்மொழி :**

போதும் உங்கள் பொறுப்பற்ற பேச்சு. *(அண்ணன் பக்கம் திரும்பி)* அண்ணா, உங்கள் நண்பரை இனி அளவோடு பேசச் சொல்லுங்கள்.

**கதிரவன் :**

என்ன தேன்மொழி? இன்னும் சின்ன குழந்தை மாதிரி சினந்து கொள்கிறாயே! அவன் சொல்பவை அனைத்தும் உண்மை அல்லவா? அறிவாளா, நீ வருத்தப் படாதே. தேன்மொழியை அறியாதவனா நீ? தங்கையின் குணம் தங்கம்!

**அறிவாளன் :**

குணம் மட்டுமா? உடலே தங்கம்தான்!

**தேன்மொழி :**

என்ன? இன்னொரு முறை சொல்லுங்கள்.

**அளிவாளன் :**

வேறொன்றும் இல்லை. உடலெல்லாம் தங்க நகைகள் என்று சொன்னேன்; அவ்வளவுதான்.

**தேன்மொழி :**

அதுதானே பார்த்தேன். அண்ணா, நான் மாமல்லபுரம் போய் வருகிறேன்.

**கதிரவன் :**

மங்கை உடன் வருகிறாள் இல்லையா?

**தேன்மொழி :**

ஊம்; இருவரும்தாம் போகிறோம்.

**கதிரவன் :**

சரி; கவனமாய்ச் சென்று வாருங்கள். வரும் போது, மங்கையை இங்கு வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வா.

**தேன்மொழி :**

அவளிடம் சொல்கிறேன்; வந்தால் அழைத்து வருகிறேன். இல்லை என்றால்..

**கதிரவன் :**

எல்லாம் வருவாள்! கவனமாக வண்டியை ஓட்டிச் செல். நேரத்தோடு திரும்பி வந்து விடுங்கள்.

**தேன்மொழி :**

சரி; போய் வருகிறேன்.

*(தேன்மொழி வெளியேறுகிறார். அவர் சென்ற வழியைப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறார் அறிவாளன். கதிரவன் எழுந்து சென்று அறிவாளன் தோளை ஆறுதலாகத் தட்டி விடுகிறார்.)*

**கதிரவன் :**

கவலைப்படாதே. காலம் வரும்; காதல் கைக்கூடும்.

**அறிவாளன் :**

சில மாதங்களாகத் தேன்மொழியின் போக்கிலே சிறுசிறு மாற்றங்கள் தெரிகின்றன. முன்பெல்லாம் என்னிடம் முகம் மலர்ந்து பேசுவார்; நான் எப்படிப் பேசினாலும் சிரித்தபடி கேட்பார். ஆனால், இப்போதெல்லாம் அவர் என்னை வெளிப்படையாகவே வெறுக்கிறார். நீதான் இப்போது நேரிலேயே பார்த்தாயே!

**கதிரவன் :**

அறிவாளா, உன் மன வருத்தம் எனக்குப் புரிகிறது. ஒரு பெண்ணை அடைவது என்பது அத்துணை எளிதான செயல் இல்லை. ஆனால் ஒன்று, வெறுக்கிறவளை நம்பினாலும் நம்பலாம்; சிரிக்கிறவளை மட்டும் என்றும் நம்பக் கூடாது.

**அறிவாளன் :**

நீ என்னதான் சொல்கிறாய்?

**கதிரவன் :** *(வேதனையுடன்)*

காதல் இல்லையேல், சாதல்தான் என்று கதை பேசிய பெண்கள்தாம் காதலை மறந்து காசுள்ளவரை மணந்து கொண்டிருக்கின்றனர். நீ பொறுமையாய் இரு. ஆசையை மிகையாக வளர்த்துக் கொள்ளாதே. கிட்டாதாயின் வெட்டென மற! எல்லாம் அறிந்தவன் நீ; உனக்கு நான் உரைப்பதா?

**அறிவாளன் :**

புரிகிறது. ஏமாற்றத்தை எதிர் கொள்ள அணியமாய் இரு என்கிறாய்; சரிதானே?

**கதிரவன் :**

நல்லதை நினைப்போம்; நல்லதே நடக்கும். பெண்கள் உடலால் மட்டுமன்று, என்றும் உள்ளத்தாலும் மென்மையானவர். இவர்கள் எண்ணம் அறிந்து அதற்கேற்ப நடந்து மனதைக் கவர வேண்டும். என் உதவி என்னதான் உன் பக்கம் இருப்பினும், அவள் எண்ணத்திற்கு ஏற்ப நீ நடந்து கொள்ளவில்லை என்றால் தேன்மொழியை உன்னால் அடைய முடியாது. எனவே, நீ எதற்கும் ஏற்பாடாகவே இரு.

*(அறிவாளனிடமிருந்து ஒரு பெருமூச்சே அங்கு விடையாகப் பிறக்கிறது.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 10

| | | |
|---|---|---|
| **இடம்** | : | கண்ணனின் வீடு. |
| **காலம்** | : | காலை மணி ஒன்பது. |
| **உறுப்பினர்கள்** | : | கண்ணன், தேன்மொழி. |
| **சூழல்** | : | கண்ணன் சீழ்கை ஒலி எழுப்பியவாறு கூடத்தை அழகு செய்து கொண்டிருக் கிறார். |

**தேன்மொழி :** *(உள்ளே வந்து கொண்டே)*

மங்கை! மங்கை!

**கண்ணன் :**

யார்? தேன்மொழியா? வா, வா; உள்ளே வா.

**தேன்மொழி :**

மங்கையை வரச் சொல்லுங்கள்; இப்போதே நேரம் ஆகிவிட்டது.

**கண்ணன் :**

வெளியே சென்றிருக்கிறாள்; நீ வந்து உட்கார்.

*(தேன்மொழி அமர, கண்ணன் அணியமாய் செய்து வைத்திருந்த பழச்சாற்றைக் கொண்டு வந்து முன் நீட்டு கிறார். அதைத் தேன்மொழி பெற்றுக் கொள்கிறார்.)*

**தேன்மொழி :**

நீங்கள்?

**கண்ணன் :**

நான் முதலிலேயே குடித்து விட்டேன். நீ குடி.

*(தேன்மொழி குடிக்க, அவரை அப்படியே விழுங்கி விடுவது போல் கண்ணன் ஆசை பொங்கப் பார்க்கிறார். அதைக் கண்டு நாணமுற்ற தேன்மொழி மெல்லச் சிரித்தவாறு கேட்கிறார்.)*

**தேன்மொழி :**

என்ன அப்படி என் முகத்தையே பார்க்கிறீர்கள்?

**கண்ணன் :**

அதுவா? வேறொன்றும் இல்லை; அடுத்ததைக் காட்டும் பளிங்கன்றோ உன் அழகிய முகம்! பழச்சாறு எப்படி உள்ளது என்பதை உன் பளிங்கு முகத்தினின்று பார்த்துத் தெரிந்து கொள்கிறேன். அவ்வளவு தான்.

**தேன்மொழி :** *(குவளையே எதிரில் வைத்தவாறு)*

மிகவும் நன்றாகவே இருந்தது. நிற்கிறீர்களே? இப்படி அமருங்களேன்.

*(தேன்மொழி சற்று நகர்ந்து கொள்ள, கண்ணன் அருகே அமர்ந்து கொள்கிறார். முகத்தை வருத்தமாக வைத்துக் கொண்டு ஒரு பெருமூச்சை விடுகிறார்.)*

**தேன்மொழி :**

ஏன்? என்னவோ போல் இருக்கிறீர்கள்?

**கண்ணன் :**

யாருக்கும் என்னைப் பிடிப்பது இல்லை. என் தங்கையை விரும்புபவர்கள் கூட, என்னை விரும்புவது இல்லை.

**தேன்மொழி :**

ஏன் அப்படி?

**கண்ணன் :**

அதுதான் எனக்கும் பிடிபடவில்லை. அப்படி நான் என்ன தவறு செய்து விட்டேன்? நீயே சொல். மங்கையிடம் நீ நெருங்கிப் பழகுகிறாய்; இல்லையா?

**தேன்மொழி :**

ஆமாம்; அதிலென்ன ஐயம்? என் உயிரினும் மேலாக மங்கையை விரும்புகிறேன்.

**கண்ணன் :**

சரி! நான் அவள் அண்ணன்தானே? இருந்தும் என்னை நீ அப்படி விரும்புகிறாயா?

*(தேன்மொழி கலகலவென்று வாய்விட்டுச் சிரிக்கிறார்.)*

**கண்ணன் :**

ஏன் சிரிக்கிறாய்? என் உள்ளம் உருக்குலைந்து உருகிக் கரைவது உனக்குப் புரியவில்லையா?

*(கண்ணன் தேன்மொழியின் கைகளை மெல்லத் தன் கைகளால் பற்றிக் கொள்கிறார். தேன்மொழியின் உள்ளம் தன் உணர்வினை இழக்கிறது.)*

**தேன்மொழி :**

புரியாமல் என்ன? ஆனால், உங்கள் உள்ளத்தை எனக்கு உணர்த்திய முறை, என்னை எங்கோ இழுத்துச் சென்று விட்டது! ஆண்மகன் நீங்கள்; அதிலும் வழக்குரைஞர்! அப்படி இருந்தும், உங்கள் அகத்தில் உள்ளதை எடுத்துச் சொல்ல இத்துணை அச்சமா?

*(அப்போது சுவர் மணிகாட்டி ஒருமுறை ஒலி எழுப்பி ஓய்கிறது. மணியொலி கேட்டுத் தேன்மொழி நேரத்தை ஏறிட்டுக் கவனிக்கிறார்.)*

**தேன்மொழி :**

ஐயய்யோ! மணி ஒன்பதரை ஆகிவிட்டதே! மாமல்லபுரம் போய் எப்போது திரும்புவதாம்?

**கண்ணன் :**

தேன்மொழி, நானும் வரட்டுமா?

**தேன்மொழி :**

நீங்களுமா? *(தயக்கத்துடன்)* மங்கை ஏதும் சொல்ல மாட்டாளா?

**கண்ணன் :**

அவளுக்குத் தெரியாமல் போய் வந்துவிடலாம்; என்ன சொல்கிறாய்?

**தேன்மொழி :**

எப்படி? மங்கையும் நானும் போவதாக அன்றோ ஏற்பாடு?

**கண்ணன் :**

அவள் காலையில்தான் ஊருக்குச் சென்றிருக்கிறாள்; திரும்பி வர இன்னும் இரண்டு நாட்கள் ஆகும்.

**தேன்மொழி :**

வெளியே போய் இருப்பதாகச் சொன்னீர்களே, பொய்தானே?

**கண்ணன் :**

பொய்தான்; என்னை மன்னித்து விடு.

**தேன்மொழி :**

எதற்குப் பொய் சொன்னீர்கள்? என்னைத் தனியே சந்திப்பதற்குத்தானே?

**கண்ணன் :**

சேச்சே! அதெல்லாம் இல்லை.

**தேன்மொழி :**

எல்லாம் நான் அறிவேன். மங்கை என்னிடம் சொல்லி விட்டுத்தான் சென்றாள்.

*(கண்ணன் முதலில் திகைப்படைகிறார்; பின்னர் வாய்விட்டுச் சிரிக்கிறார்.)*

**தேன்மொழி :**

ஏன்? ஏன் சிரிக்கிறீர்கள்? இப்படித்தான் நடந்து கொள்வதா? உங்களுக்கு வெட்கமே கிடையாதா?

*(தேன்மொழியின் தோள்களைத் தொட்டுக் கண்ணன் தன் பக்கம் திருப்பி ஆசையோடு ஊன்றி நோக்குகிறார்.)*

**கண்ணன் :**

எல்லாம் தெரிந்திருந்தும் ஏன் நீ இங்கு வந்தாய்? *(கண்களைச் சிமுட்டியபடி)* என்னைப் பார்க்கத்தானே வந்தாய்? உண்மையைச் சொல்லிவிடு.

**தேன்மொழி :** *(சிரித்தபடி)*

அதுதான் இல்லை. உங்கள் திருட்டுத் தனத்தை நான் அறிவேன். அதை உறுதிப்படுத்திக் கொள்ளவே உண்மையில் இங்கு நான் வந்தது. சரி; எழுந்திருங்கள்; போகலாம்.

## காட்சி - 11

| | |
|---|---|
| **இடம்** | : கண்ணனின் வீடு. |
| **காலம்** | : இரவு மணி எட்டு. |
| **உறுப்பினர்கள்** | : கண்ணன், தேன்மொழி, மங்கை. |
| **சூழல்** | : மகிழுந்து வந்து கண்ணன் வீட்டு முன் நிற்கிறது. கண்ணனும் தேன்மொழியும் வண்டியை விட்டிறங்குகின்றனர். வீட்டினுள் விளக்குகள் எரிவது கண்டு இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி திகைத்து நிற்கின்றனர். கண்ணனை அங்கேயே இருக்குமாறு கண் குறிப்புக் காட்டி விட்டுத் தேன்மொழி வீட்டினுள் நுழைகிறார். அப்போது, உள்ளறையி லிருந்து மங்கை கூடத்திற்கு வருகிறார். |

**மங்கை :**

வா, தேன்மொழி. ஏது இந்த நேரத்தில்?

**தேன்மொழி :**

இந்தப் பக்கம் ஒரு வேலை; அதற்காக வந்தேன். ஒரு வேளை நீ வந்திருக்கக் கூடுமோ என்ற எண்ணம்; அதுதான் வந்தேன். ஆமாம்; நீ எப்போது வந்தாய்?

**மங்கை :**

நான் மதியமே வந்து விட்டேன். எனக்கென்ன அங்கு வேலை? எல்லாம் இந்த அண்ணன் செய்தது! மாமா அவரை வரச் சொன்னால், இவர் என்னை அனுப்பி வைத்து விட்டார். இதோ, அவரே வந்து விட்டார்.

*(கண்ணன் உள்ளே வந்து அமர்கிறார்.)*

**கண்ணன் :**

எப்பொழுதம்மா வந்தாய்?

**மங்கை :**

நான் மதியம் மூன்று மணிக்கெல்லாம் வந்து விட்டேன்.

**கண்ணன் :**

மாமா எதற்கு வரச் சொன்னாராம்?

**மங்கை :**

எழிலிக்கு அகவையாகி விட்டதாம்; உடனே திருமணத்தை முடிக்க வேண்டுமாம். அதனால் உன்னோடு பேச வேண்டுமாம்.

**கண்ணன் :**

என்னிடம் எதற்குப் பேச வேண்டும்.?

**மங்கை :**

மாப்பிள்ளையே இப்படிச் சொன்னால் நானென்ன மேலே சொல்ல உள்ளது?

**கண்ணன் :** *(எரிச்சலுடன்)*

உம், உம்; பிறகு என்ன?

**மங்கை :**

நீங்கள் கட்டாயம் உடனே புறப்பட்டு வர வேண்டுமாம்; மாமா மீண்டும் மீண்டும் வற்புறுத்திச் சொல்லி அனுப்பினார். எழிலியும் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். அத்தானை நாளையே அனுப்பி வை என்று எனக்கு ஆணையிட்டு அனுப்பி உள்ளாள்.

**கண்ணன் :**

சரி, சரி; எல்லாம் காலையில் பார்த்துக் கொள்ளலாம்.

*(அதுவரை அமைதியாக அங்கு நின்று கொண்டிருந்த தேன்மொழி புறப்பட அணியமாகிறார்.)*

**தேன்மொழி :**

மங்கை, நான் புறப்படுகிறேன். திங்கள் கிழமை கல்லூரியில் பார்ப்போம்.

**மங்கை :**

சரி, போய் வா.

*(தேன்மொழி கண்ணனை வெறுப்போடும் வேதனை யோடும் நோக்கி விட்டு வெளியேறுகிறாா். அதன் காரணத்தை அறிந்திருந்த மங்கை மெல்லப் புன்னகை புரிய, கண்ணன் சோா்ந்து அமா்விடத்தில் சாய்கிறாா்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 12

**இடம்** : கதிரவனின் வீடு.

**காலம்** : இரவு மணி ஒன்பது.

**உறுப்பினா்கள்** : தேன்மொழி, கதிரவன்.

**சூழல்** : கதிரவன் புத்தகம் ஒன்றைப் படித்தபடி கூடத்தில் அமா்ந்திருக்க, தேன்மொழி அப்போது வெளியிலிருந்து உள்ளே வருகிறாா்.

**கதிரவன் :**

ஏனம்மா இத்தனை நேரம்?

**தேன்மொழி :**

நேரமாகி விட்டது; அவ்வளவுதான்.

**கதிரவன் :**

தேன்மொழி, நீ மட்டும் தனியாகவா போய் வருகிறாய்?

**தேன்மொழி :** *(திடுக்கிட்டு)*

இல்லையே; ஏன் கேட்கிறீா்கள்?

**கதிரவன் :**

மங்கை இங்கு மாலையில் வந்திருந்தாள்; அதனால் கேட்டேன்.

**தேன்மொழி :** *(கலக்கத்துடன்)*

மங்கை இங்கு வந்திருந்தாளா? அவள் என்னிடம் சொல்ல வில்லையே! இப்போதுதானே அவளைப் பாா்த்து விட்டு வருகிறேன்.

**கதிரவன் :**

சொல்ல மறந்திருப்பாள். போய் உடை மாற்றிக் கொண்டு வா; உணவு உண்ணலாம்.

**தேன்மொழி :**

எனக்குப் பசிக்கவில்லை; பிறகு உண்கிறேன்.

**கதிரவன் :**

மங்கை வந்து போனதில் இருந்து, உன்னைப் பற்றியே அம்மா கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார். நாம் இருவரும் ஒன்றாய் உணவருந்தச் சென்றால், அவர் கொண்ட கவலை நீங்கும். மேலும், நான் பக்கத்தில் இருந்தால் உன்னிடம் இப்போதைக்கு எந்தக் கேள்வியும் கேட்க மாட்டார்.

**தேன்மொழி :**

இதோ வந்து விடுகிறேன்.

*(தேன்மொழி மாடிப் படிகள் ஏறித் தன்னறைக்குச் செல்ல, தங்கை செல்வதைக் கதிரவன் சிந்தனையோடு பார்த்தபடி அமர்ந்திருக்கிறார்.)*

❀ ❀ ❀ ❀ ❀

## காட்சி - 13

| | | |
|---|---|---|
| **இடம்** | : | கண்ணனின் வீடு. அலுவல் அறை. |
| **காலம்** | : | மாலை மணி ஆறு. |
| **உறுப்பினர்கள்** | : | கண்ணன், மணியரசன், மங்கை. |
| **சூழல்** | : | வழக்குகள் பற்றிய கோப்புகளை ஆய்ந்தபடி கண்ணனும் மணியரசனும் அமர்ந்து இருக்கின்றனர். |

**மணியரசன் :**

உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்; தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

*(கண்ணன் மணியரசனை வியப்போடு கூர்ந்து பார்க்கிறார்.)*

**கண்ணன் :**

கேளப்பா. தவறாகக் கூட உன்னால் கேட்கக் கூடுமா?

**மணியரசன் :**

கடந்த ஒரு மாதமாய்க் கவனித்து வருகிறேன். உங்கள் போக்கில் வெளிப்படையாக மாற்றம் தெரிகிறது. எப்போதும் எதையோ எண்ணியவாறே இருக்கிறீர்கள். முன்பு போல் வழக்குகளில் உங்கள் உள்ளார்ந்த ஈடுபாடு இருப்பதில்லை. கலகலப்பாக யாரிடமும் பேசுவதும் இல்லை.

*(கண்ணன் பேசாமல் அமர்ந்திருக்க, மணியரசன் சிறிது இடைவெளிக்குப் பிறகு, தானே பேச்சைத் தொடர்கிறார்.)*

**மணியரசன் :**

சில சிக்கல்கள் உங்களைச் சிக்க வைத்துள்ளன என்பது என் கணிப்பு, சரிதானே?

**கண்ணன் :** *(மெல்ல)*

உண்மைதான். இத்தனை தெரிந்து வைத்துள்ள உனக்குச் சிக்கல்களைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டுமே?

**மணியரசன் :** *(தயக்கத்துடன்)*

இரண்டு சிக்கல்கள் இப்போது உங்களை இடிக்கின்றன என்பது என் கணிப்பு; சரிதானே?

**கண்ணன் :**

இறுதியாகச் சொல்கிறேன்; நீ தொடர்ந்து சொல்.

**மணியரசன் :**

ஒன்று, காதல்! ஆனால், உடனடியாகக் கவலைப்பட அதிலெதும் இப்போது குழப்பம் இல்லை. இரண்டு, மாமன் மகள் எழிலியின் திருமணம்! இதுதான் இப்போதைக்குத் தலைபோகிற அளவிற்கு மலைபோன்ற சிக்கல்! இதை எப்படித் தீர்ப்பது? இதுதான் உங்களைக் கடந்த ஒரு மாதமாய் அலைகழித்து வருகிறது.

**கண்ணன் :**

உண்மைதான். ஆனால், இதைத் தீர்க்க என்ன வழி? விடை வைத்திருக்கிறாயா?

**மணியரசன் :**

எந்த மாதிரி விடை உங்களுக்கு வேண்டும்? நீங்கள் சொல்லுங்கள்.

**கண்ணன் :**

எழிலியின் திருமணத்தை இந்தத் திங்களிலேயே முடிக்க வேண்டும் என்பது மாமாவின் முடிந்த முடிவு. எழிலியோ இந்த மாப்பிள்ளை வேண்டா என்கிறாள். இடையே நான்! மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் அடி என்கிறார்களே, என்னைப் பொறுத்தவரை அது சரியாகவே உள்ளது.

**மணியரசன் :**

உங்களுக்கு என்ன வேண்டும்? இந்தத் திருமணம் நடக்க வேண்டுமா? வேண்டாவா? அதை மட்டும் சொல்லுங்கள்; மீதியை நான் கவனித்துக் கொள்கிறேன்.

**கண்ணன் :**

இப்போதைக்கு இந்தத் திருமணம் நடக்க வேண்டா.

**மணியரசன் :**

அவ்வளவுதானே? மாப்பிள்ளை எந்த ஊர்? முகவரியைச் சொல்லுங்கள்.

*(கண்ணன் மேசை இழுப்பறையைத் திறந்து ஒரு சிறு அட்டையை எடுத்து மணியரசனிடம் நீட்டுகிறார். மணியரசன் அதைப் பெற்றுக் கொள்கிறார்.)*

**கண்ணன் :**

மேற்கொண்டு உன் நடவடிக்கை என்ன?

**மணியரசன் :**

நீங்கள் இப்போதைக்குத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதே நல்லது. பத்து நாட்கள் எனக்குத் தேவை. இடையில் என்னை எதுவும் கேட்காதீர்கள்; பிறகு பாருங்கள்.

**கண்ணன் :**

இதோ பார்; சட்டத்திற்குப் புறம்பாக எதுவும் நடக்கக் கூடாது. அதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்.

**மணியரசன் :**

அந்தக் கவலை ஒருபோதும் தேவை இல்லை. அடுத்த பதினைந்து நாட்களுக்குள், உங்கள் மாமாவே நேரில் வந்து இந்த மாப்பிள்ளை வேண்டா என்று சொல்லுவார்; போதுமா?

**கண்ணன் :**

நல்லது மணி. உன்னிடம் மனந்திறந்து பேசியதில் பெருஞ்சுமை தலையிலிருந்து இறங்கியது போல் இப்போது உள்ளது. இதில் உன்னை நான் முழுமையாக நம்புகிறேன்.

## காட்சி - 14

| | | |
|---|---|---|
| **இடம்** | : | பூங்கா. |
| **காலம்** | : | மாலை. |
| **உறுப்பினர்கள்** | : | கதிரவன், மங்கை. |
| **சூழல்** | : | செடி கொடிகள் நிறைந்த தனி இடத்தில் கதிரவனும் மங்கையும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர். |

**கதிரவன் :**

மங்கை, அந்த மாலைக் கதிரவனைப் பார். அதன் பொன்னிற ஒளியில் உன் மஞ்சள் மேனி எத்துணை மயக்கத்தை என்னிடம் ஏற்படுத்துகிறது; தெரியுமா? உன் மலர்ச் சிரிப்பு எனக்கு மட்டிலா மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கிறது.

**மங்கை :**

பகலவன் நீங்களே என் பக்கத்தில் இருக்க, அந்த மாலைக் கதிரவன் என்னிடம் என்ன மாற்றத்தை ஏற்படுத்தி

விட முடியும்? அந்த மலர்களைப் பாருங்கள்; மாலைத் தென்றலிலே அவை மகிழ்வோடு ஆடி அசைகின்ற அழகே அழகு! அவற்றின் மகிழ்ச்சி முன் உங்கள் மகிழ்ச்சி?

**கதிரவன் :**

வெறும் கானல் நீர் இல்லை. *(மங்கையின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒத்திக் கொள்கிறார்.)* கட்டிக் கரும்பனைய கண்மணி நீ அருகிருந்தால் காலத்தை மறந்து விடுகிறேனே, அது பொய்யா?

**மங்கை :**

காலத்தை மறப்பது பிறகு இருக்கட்டும்; முதலில் நம் காதலுக்கு இப்போது வாருங்கள்.

**கதிரவன் :**

எப்படி அதிலிருந்து கரை ஏறுவது? அதுதான் தெரிய வில்லை. கவலையால் என் நெஞ்சு கரைகிறது.

**மங்கை :**

காதல் கசக்கிறதாக்கும்?

**கதிரவன் :**

காதலும் கசப்பது உண்டோ? எந்த அகவையிலும் ஈடிலா இன்பம் அளிப்பது காதல் மட்டுமே. காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் நோய் காதல் அன்று; அது காமம்.

**மங்கை :**

என்ன சொல்கிறீர்கள்?

**கதிரவன் :**

காதல் உணர்வுகளின் ஒன்றிப்பு; காமமோ இரு உடல் களின் பிணைப்பு. நான் உன்னிடம் கொண்டிருப்பது உண்மையான காதல்.

**மங்கை :**

அஃதென்ன உண்மையான காதல்? அப்படி என்றால் பொய்யான காதல் என்று உண்டா?

**கதிரவன் :**

உண்டு. உண்மையான காதல் உள்ளம் சார்ந்தது; உயிரைச் சேர்ந்தது. பொய்க் காதலோ புற அழகைப் பற்றியது; பொழுது போக்கானது. நான் உன் உள்ளத்தைக் காதலிக்கிறேன்; உன்னை உயிராய்ப் போற்றுகிறேன்.

**மங்கை :**

நீங்கள் என் உள்ளத்தைக் காதலிக்கிறீர்கள்; உடலைக் காதலிக்கவில்லை. சரிதானே?

**கதிரவன் :**

ஆமாம்.

**மங்கை :**

நல்ல வேளை; இப்போதாவது உண்மையை உரைத்தீர் களே! நான் தப்பித்தேன்.

**கதிரவன் ;**

புரியவில்லையே.

**மங்கை :**

உங்களைத்தான் மணம் செய்துகொள்வது என்று நான் உறுதியாக இருந்தேன். நீங்களோ என் உள்ளத்தைத்தான் காதலிக்கிறீர்கள்; உடலை அன்று? என் உடலை விரும்பாத உங்களை எதற்கு நான் மணக்க வேண்டும்? அப்படி மணப்பதால் அடையப் போவது என்ன?

**கதிரவன் :**

ஐயய்யோ! இஃதென்ன பேச்சு?

**மங்கை :**

உள்ளத்தை மட்டுமே நீங்கள் விரும்புகிறீர்கள்! அதற்குப் பெயர் காதல் இல்லை; நட்பு. நாம் நல்ல நண்பர்களாகவே இருப்போம்; சரிதானே?

*(கதிரவன் மங்கையின் இரு கைகளையும் பற்றிக் கொள்கிறார்.)*

**கதிரவன் :**

மங்கை, காதலோ? நட்போ? எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு நீ வேண்டும். நீ என்னோடு என்றும் இருக்க வேண்டும்; எனக்கே சொந்தமானவளாக இருக்க வேண்டும். அவ்வளவுதான்! *(மங்கை மெல்லப் புன்னகை பூக்கிறாா்.)*

**மங்கை :**

காதலில் உண்மைக் காதல், பொய்க் காதல் என்ப தெல்லாம் இல்லை. காதல் என்பது உண்மை. காதலுக்கு மூலம் கவர்ச்சிதான். அஃது உள்ளம் பற்றியதாக இருக்கலாம்; இல்லை, உடல் பற்றியதாக இருக்கலாம். தொடக்கம் எப்படி இருப்பினும், இறுதியில் ஒன்றிலிருந்து மற்றது பெறப் படுவது உறுதி.

**கதிரவன் :**

காதலும் காமமும் ஒன்றுதானா?

**மங்கை :**

ஒன்றா? வேறா? உறுதியாக எனக்குத் தெரியாது. ஆனால், ஒன்றின்றி மற்றது இருக்க இயலாது. காதல் அழகானது; காமமோ அதனினும் அழகானது. காதலும் காமமும் ஒரே இடத்தில் ஒன்றும் போதே கரை காணக்கூடாக் கழி பேரின்பம் பெருக்கெடுக்கிறது. அந்த இன்பத்திற்கு அளவே இருக்க முடியாது. அதுவே பேரின்பம்.

**கதிரவன் :**

அந்த இன்பம் எனக்குக் கிடைக்குமா?

**மங்கை :**

ஏன் கிடைக்காது? எண்ணம் போல் வாழ்வு என்பதை நீங்கள் அறிய மாட்டீர்களா? நீங்கள் எதை விரும்புகிறீர் களோ, அதை அடுத்தவருக்குக் கொடுங்கள்; நீங்கள் விரும்பியது தானே வேண்டி அடையும்.

## காட்சி - 15

**இடம்** : மெய்மையறி நிறுவன அலுவலகம் - உரிமையாளர் அறை.

**காலம்** : மாலை.

**உறுப்பினர்கள்** : மணியரசன், நிறுவன உரிமையாளர்.

**சூழல்** : மணியரசனும் உரிமையாளரும் அமர்ந்த படி பேசிக் கொண்டிருக்கின்றனர்.

**உரிமையாளர் :**

விளக்கமான அறிக்கை இந்த உறையில் உள்ளது. நீங்கள் எங்களுக்குக் கொடுத்த ஏழு நாட்களுக்குள் எங்களால் இயன்றதைச் செய்துள்ளோம்.

*(உரிமையாளர் உறையை நீட்டுகிறார்; மணியரசன் அதைப் பெற்றுக் கொள்கிறார்.)*

**மணியரசன் :**

மிக்க நன்றி. நீங்கள் உங்கள் கருத்தைச் சொன்னால் உதவியாக இருக்கும்.

**உரிமையாளர் :** *(சிந்தித்தபடி)*

சொல்கிறேன். குறுகிய காலமென்பதால் உறுதியான செய்திகளைக் கொடுக்கக் கூடவில்லை. எனினும், அறிக்கை யில் உள்ள செய்திகளே உங்கள் தேவையை நிறைவு செய்யப் போதுமானவை. நீங்கள் குறிப்பிட்ட மாப்பிள்ளை மிக நல்லவராகவே தெரிய வருகிறார். எந்தக் கெட்ட பழக்கமும் அவரிடம் காணக் கூடவில்லை. பொதுவாகப் பணக்காரப் பிள்ளை என்றால், அவரைச் சுற்றி எப்போதுமே சில நண்பர்கள் இருப்பர். ஆனால், இவரைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட நண்பர்களைக் காணக் கூடவில்லை. அப்பா, அம்மா, இரு தங்கைகள்; அவ்வளவே இவர் குடும்பம். நல்ல அமைதியான குடும்பச் சூழ்நிலை! தங்கைகள் இருவரும்

கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கின்றனர். அகவை முதிர்ந்த தந்தை; எனவே, அவருடைய தொழிலை இவர் தொடர்ந்து திறம்படப் பொறுப்பாகவே கவனித்து வருகிறார்.

**மணியரசன் :**

நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. இந்தப் பிள்ளைக்கு நான் பகைவன் இல்லை. இப்போது இவருக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வரும் திருமணத்தை நிறுத்த வேண்டும்; அவ்வளவுதான் நான் விரும்புவது.

**உரிமையாளர் :**

புரிகிறது. இவர் ஒரு பெண்ணோடு கடந்த சில மாதங்களாகக் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறார். இஃது இங்கு யார்க்கும் தெரியாது. மதிய உணவிற்கு மட்டும் அந்தப் பெண் வீட்டிற்குத் தவறாமல் செல்கிறார். மற்ற நேரங்களில், தன் தொழில் உண்டு, தன் வீடுண்டு என்று இருப்பதால் யாருக்கும் இதுவரைச் சிறு ஐயமும் எழுந்ததில்லை.

**மணியரசன் :**

இருவர்க்கும் திருமணம் ஆகி விட்டதா?

**உரிமையாளர் :**

தெரிந்து கொள்ள முடியவில்லை. அந்தப் பெண்ணின் பெயர், வீட்டு முகவரி, தொலைப்பேசி எண் ஆகியவை அனைத்தும் அந்த அறிக்கையில் உள்ளன. இவையே போதுமென்று நினைக்கிறேன். இன்னும் வேறேதும் எதிர் பார்க்கிறீர்களா?

*(மணியரசன் சிறிது நேரம் சிந்தித்தபடி அமைதியாக அமர்ந்திருக்கிறார்.)*

**மணியரசன் :**

நீங்கள் சொல்வது சரிதான். இவையே எனக்குப் போதும். உங்கள் உதவிக்கு மீண்டும் நன்றி.

**உரிமையாளர் :** *(மெல்லச் சிரித்தபடி)*

நன்றி எதற்கு? என் தொழிலே இதுதானே!

*(மணியரசன் எழுந்து விடை பெற்று வெளியேறுகிறார்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 16

**இடம்** : கண்ணனின் வீடு.

**காலம்** : மாலை வேளை.

**உறுப்பினர்கள்** : மணியரசன், மங்கை, தேன்மொழி.

**சூழல்** : கூடத்தில் அமர்ந்து மங்கையும் தேன்மொழியும் பேசிக்கொண்டு இருக்கின்றனர். மணியரசன் அலுவலக அறையில் கோப்புகளைப் புரட்டிக் கொண்டு இருக்கிறார்.

**தேன்மொழி :**

தொடர்ந்து நான்கு நாட்களுக்கு விடுமுறை! பொழுதே போகமாட்டேன் என்கிறது. நீயேனும் வீட்டில் சமையல் செய்வதில் நேரத்தைக் கழித்து விடுகிறாய்; எனக்குத்தான் என்ன செய்வது என்று தெரியவில்லை.

**மங்கை :**

ஏன்? நீயும் சமையல் செய்ய வேண்டியதுதானே?

**தேன்மொழி :**

சேச்சே! அஃதெல்லாம் எனக்குச் சரிபட்டு வராது. வீட்டில் அடுப்படி எங்கே இருக்கிறது என்பதையே நான் அறியேன். அம்மாவும் என்னை வற்புறுத்துவது கிடையாது.

*(மணியரசன் அப்போது அவர் பேச்சைக் கேட்டவாறு அங்கே வந்து சேருகிறார்.)*

**மணியரசன் :**

இந்தக் காலப் பெண்களுக்கு இப்படிப் பேசுவது ஒரு நாகரிகம்! நீங்கள் மட்டும் எப்படி மாறாக இருக்க முடியும்?

**தேன்மொழி :**

நீங்கள் சொல்வது உண்மையாக ஒருவேளை இருக்கலாம்; ஆனால், என்னைப் பொறுத்தவரை நான் சொன்னவை பொய்யல்ல; முற்றும் உண்மை.

**மணியரசன் :**

உண்மை அதுதான் என்றால் உங்களை மணந்து கொள்பவர் பாடு பெரும் திண்டாட்டம்தான்.

**தேன்மொழி :**

ஏன்? பெண்டாட்டி என்றால் சமையல் தெரிந்திருப்பது கட்டாயத் தேவையா? நீங்கள் எல்லாம் பெண்களைப் பற்றி என்னதான் எண்ணிக்கொண்டு இருக்கிறீர்கள்?

**மணியரசன் :**

தற்காத்துக் தற்கொண்டான் பேணித் தகைச்சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்! நான் சொல்லவில்லை; வள்ளுவர் சொல்லி உள்ளார்.

**தேன்மொழி :**

ஏன் சொல்லி இருக்க மாட்டார்? அவர் மட்டும் யார்? அவரும் ஓர் ஆண்மகன்தானே? பெண்களை அன்று மட்டும் இணையாகவா மதித்தார்கள்! தமக்குத் துணையாகத்தானே கொண்டார்கள்?

**மணியரசன் :**

வள்ளுவர் சொல்லுக்கும் மறுப்பா?

**தேன்மொழி :**

மறுப்பில்லை; மனதில் எழும் வெறுப்பு! பண்பாட்டை, பகுத்தறிவை முதன்முதல் புகட்டிய பார்புகழும் பெரியார் அவர்! அதில் எந்த முரண்பாடும் எனக்கில்லை. நெஞ்சார நினைந்து நினைந்து உளம் மகிழ்கின்றேன்; நெடிது வீழ்ந்து தலை தாழ்த்தி வணங்கி வாழ்த்துகின்றேன்.

**மணியரசன் :**

பின்னெதற்கு வெறுப்பென்றீர்கள்?

**தேன்மொழி :**

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு; வள்ளுவர்தான் சொல்லி இருக்கிறார். பெண்களின் பெருமையைப் பற்றி அவர் சொல்லி இருக்கிறார்; உண்மைதான். ஆனால், பெண்களை ஆண்களுக்குத் துணை என்றுதானே சொல்லி உள்ளார்; எங்கேனும் ஆண்களுக்கு இணை என்று சொல்லி உள்ளாரா? சொல்லுங்கள்.

**மணியரசன் :**

வள்ளுவர் மேல் இப்படியும் ஒரு குற்றச்சாட்டா?

**தேன்மொழி :**

ஏன்? தவறா? வாழ்க்கைத் துணைநலம்! அதிகாரத் தலைப்பே ஆணாதிக்கத்தை அறிவுறுத்துகிறதே. ஆண்கள் வாழ்விற்குப் பெண்கள் துணையாம்; துணையாம் பெண்கள் இப்படி இப்படி இருக்க வேண்டும் என்ற வரையறையாம்! ஆண்கள் எப்படிப்பட்ட தன்னல விரும்பிகள்!

**மணியரசன் :**

நீங்கள் சொல்வது எனக்குச் சரியாகப் படவில்லை. ஆண் களுக்கு வள்ளுவர் சொல்லாத வரையறைகளா? எவையெவை எல்லாம் கொள்ளத் தக்கன; எவையெவை எல்லாம் தள்ளத் தக்கன என்று எத்தனையோ அதிகாரங்களில் அவர் அறிவுறுத்தி உள்ளாரே; அவையெல்லாம் அறியாதவரா நீங்கள்? பிறனில் விழையாமை, கள்ளாமை, கொல்லாமை, அவா அறுத்தல், இப்படி எத்துணையோ ஆண்களுக்குச் சொல்லி உள்ளாரே!

**தேன்மொழி :**

உண்மைதான்; ஆனால், பெண்களை ஆண்களுக்குப் பின் நிற்பவர்களாக, உதவியாளராக அல்லவோ அவர் உருவகப் படுத்தி உள்ளார். பெண்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ள வேண்டும்; தங்களை மணந்தவரைப் பேணிப் போற்ற வேண்டும்; குடும்பப் பெருமையைக் காக்க வேண்டும்; சோர்விலாது நாளும் உழைக்க வேண்டும்! எத்தகைய எதிர்பார்ப்புகள்!

**மணியரசன் :**

எனக்கென்னவோ அவற்றில் எந்தத் தவறும் இருப்ப தாகத் தோன்றவில்லை. இயற்கையாகவே பெண்கள் மென்மை யானவர்கள்; நாள்மலர் போன்ற உடல் நலமும் குழந்தை உள்ளமும் கொண்டவர்கள். வள்ளுவர் வாய்மொழியில் சொல்வ தென்றால், பெண்கள் அனிச்சமும் அன்னத்தின் தூவியும் வருத்தக் கூடிய தளிர் மேனியர்; முகம் திரிந்து நோக்கக் குழையும் அக உணர்வு உடையவர்.

**தேன்மொழி :**

போதும் உங்கள் புகழுரைகள். பெண்களைத் தங்கள் கைப்பாவைகளாக வைத்திருக்க ஆண்கள் கையாளும் ஆய்தமே இந்தப் புகழ்ச்சி மொழிகள்; வேறென்ன?

**மணியரசன் :**

மென்மையும் தண்மையும் பெண்மை இல்லையா?

**தேன்மொழி :**

பெண்ணை ஒரு நுகர்பொருளாக மட்டுமே நீங்களெல்லாம் நினைக்கிறீர்கள். வயிற்றுப் பசிக்கு வகை வகையான உணவுப் பொருட்கள் உங்களுக்குத் தேவை. அப்படியே உடற்பசிக்கும் உங்களுக்குக் கட்டான உடல் அமைந்த கன்னிப் பெண்கள் தேவை. எனவே, அவர்களை அழகுப் பதுமைகளாய் அழகு படுத்தி, அறைக்குள்ளே அடைத்து வைத்து, மகிழ்ந்து வருகிறீர்கள். அதற்காக எந்த நிலையையும் எடுக்க நீங்கள் தயங்குவது இல்லை. மலரினும் மெல்லியர் என்று ஏற்றிப் புகழ்வீர்கள்; தங்கக் கூட்டிலிட்டுத் தாலாட்டுப் பாடுவீர்கள். அதே நேரம், படித்துப் பட்டம் பெற்றால், பலரோடு பழக நேர்ந்தால் இற்றிடுமே நம் எண்ணம் என்று, ‘அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு’ என்று அறிவுக்கு அணை இட்டு அடிமைப்படுத்துவீர்கள்.

**மணியரசன் :**

அருள் கூர்ந்து என் அறியாமையைப் பொறுக்கவும். தமிழ் முதுகலைப் படிப்பில் இலக்கியம் உங்கள் முதன்மை

யான பாடம் என்பதை நானறிவேன். உங்களோடு உரையாடும் அளவிற்கு நிறைவான அறிவுடையவன் அல்லன் நான். இருப்பினும் ஓர் ஐயம். இயற்கையில் பெண்களின் உடலமைப்பு மென்மையானது; எனவே, அவர்களால் ஆண்களைப் போன்று கடின உடல் உழைப்பை மேற்கொள்ள இயலாது. இஃது அனைத்துத் துறை வல்லுநர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. ஒப்புக் கொள்வீர்கள் இல்லையா?

**தேன்மொழி :**

வீட்டுள் ஒரு செடி வளர்கிறது. இன்னொரு செடி காட்டில் வளர்கிறது. இந்த இரண்டு செடிகளில் இயற்கை யில் வளர்வது எந்தச் செடி?

**மணியரசன் :**

காட்டில் வளர்கிற செடிதான். எல்லோர்க்கும் தெரிந்தது தானே!

**தேன்மொழி :**

பிறந்தது முதற்கொண்டு பெண்கள் வீட்டிற்குள்ளேயே வளர்க்கப்படுகின்றனர். அவர்களுக்குத்தாம் எத்தனை கட்டுப்பாடுகள்! இங்கே அங்கே என்று அவர்களால் எங்கேயும் தன்னிச்சையாகச் சென்று விளையாடவோ, சுற்றி வரவோ கூடுகிறதா? ஆனால், ஆண்கள்? பிறந்தது முதல் திறந்த வெளியில் குறைந்த உடையில் வெய்யில், மழை என்று வேறுபாடில்லாது அலைந்து திரிந்து ஆடிய ஆட்டங்கள் எத்தனை? அவர்களுக்கு உணவிலோ, உடையிலோ, ஊர் சுற்றுவதிலோ அத்துணைக் கட்டுப்பாடுகள் உண்டா? ஆனால், பெண்களுக்கு அப்படி எந்த உரிமையாவது உண்டா? இங்கே எங்கே இருக்கிறது இயற்கை? ஆண் குழந்தைகளைப் போல் பெண் குழந்தைகளையும் இயல்பாய் வளர விடுங்கள்; பலரோடும் சேர்ந்து பழக விடுங்கள்; பின்னர்ச் சொல்லுங்கள், பெண்கள் மென்மையானவர்களா? தண்மையானவர்களா? என்று.

**மங்கை :**

என்னடி இது? மணியரசன் அப்படி என்ன சொல்லி விட்டார்? பொழுது போகவில்லை என்றால் வீட்டு வேலை களைக் கவனிக்கலாமே என்றுதானே சொன்னார். இதற்காகவா இத்துணைப் பேச்சு? எனக்கே போதும் போதும் என்றாகி விட்டது! இருங்கள்; நான் சென்று அருந்த ஏதேனும் எடுத்து வருகிறேன்.

*(மங்கை எழுந்து உள்ளே செல்ல, சிறிது நேரம் பேச்சின்றி இருவரும் அமர்ந்திருக்கின்றனர். தேன்மொழி பேச்சைத் தொடர்கிறார்.)*

**தேன்மொழி :**

ஏன் அமைதியாகி விட்டீர்கள்? நான் சொன்னவை தவறானவையா?

**மணியரசன் :**

நீங்கள் சொன்னவை அனைத்தும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவை. ஆனால், அதற்கான புலமையும் பயிற்சியும் எனக்கில்லை. எனினும், இளமையில் நான் படித்த பாடல் இந்நேரத்தில் நினைவிற்கு வருகிறது.

**தேன்மொழி :**

சொல்லுங்கள்; கேட்கிறேன்.

**மணியரசன் :**

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
    நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
    செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்.

**தேன்மொழி :** *(மெல்லச் சிரிப்புடன்)*

பாரதி இன்னும் ஒன்றையும் சொல்லி இருக்கிறார்.

**மணியரசன் :**

என்ன அது?

**தேன்மொழி :**

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணி இருந்தவர் மாய்ந்துவிட்டார்;
வீட்டுக்குள் ளேபெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்.

**மணியரசன் :**

நான் உங்களைத் தலை தாழ்த்தி வணங்குகிறேன். நீங்கள் நிறையவே தெரிந்து வைத்திருக்கிறீர்கள். கற்றிலன் ஆயினும் கேட்க! அடிக்கடி இங்கு வாருங்கள்; உங்களோடு அளவளாவ, என் அறிவு மேலும் விரிவடைய வழி கிடைக்கும்.

*(மங்கை பழச்சாற்றோடு வந்து அவர்களிடம் நீட்டுகிறாள்.)*

**மங்கை :**

எடுத்துக் கொள்ளுங்கள். இன்று இத்துடன் உங்கள் பேச்சை நிறுத்திக் கொள்ளுங்கள். உங்கள் இருவர் பேச்சுமே வீண்.

**தேன்மொழி :**

ஏன் அப்படிச் சொல்கிறாய்?

*(அனைவரும் பழச்சாற்றைப் பருகியவாறே உரையாடு கின்றனர்.)*

**மங்கை :**

மாந்தர் வாழ்க்கை மாற்றங்கள் நிறைந்தது. நேற்று இருந்தது போல் இன்று இருப்பதில்லை. பத்தாண்டிற்கு முன்னர்ப் பெண்களின் நிலை என்ன? இன்றைய நிலை என்ன? உடையில், உணவில், படிப்பில், பழக்கவழக்கங் களில்தாம் இன்று எத்தனை, எத்துணை மாற்றங்கள்! இம் மாற்றங்கள் யாவும் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டனவா? இல்லை என்பது தான் என் கருத்து. தேவைக்கேற்ப மாற்றங்கள் நிகழும்; யாரும் தடுத்து நிறுத்த முடியாது.

**தேன்மொழி :**

உன் கருத்துக்கள் எனக்கு உடன்பாடானவை இல்லை. அடைய வேண்டுமென்ற அவாவும் அதற்கான முயற்சியும் செயல்திறனும் இருந்தால்தாம் இலக்கை யாரும் எய்த முடியும்.

**மங்கை :**

மணி! அப்போதே நீங்கள் வந்ததும் கேட்க எண்ணி இருந்தேன்; மறந்து விட்டேன். ஊரிலிருந்து எழிலி காலை யில் பேசினாள். அவள் அப்பா இப்போது பார்த்துள்ள மாப்பிள்ளையை முடிப்பதில் மிகவும் உறுதியாக இருக் கிறாராம். வரும் வியாழம் அன்று மாப்பிள்ளை வீட்டாரைச் சந்திக்க இங்கு வருகிறாராம்.

**மணியரசன் :**

நல்லவேளை! நினைவு படுத்தினீர்கள். நான் இங்கு முதலில் வந்ததே அது பொருட்டுத்தான்.

**தேன்மொழி :**

எழிலிக்குத் திருமணமா? நல்ல செய்தியாயிற்றே! மாப்பிள்ளை எப்படி?

**மங்கை :**

எனக்குத் தெரியாது. இவரைக் கேள். அண்ணார் இவரிடம் தான் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

**மணியரசன் :**

நானே சொல்கிறேன். பையன் பெயர் பன்னீர் செல்வன். நல்ல பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் அப்பாவும், எழிலியின் அப்பாவும் இளமையிலிருந்தே நண்பர்களாம். பையனும் மிக மிக நல்லவர். எந்தக் கெட்ட பழக்கவழக்கங் களும் பையனுக்குக் கிடையாது.

**தேன்மொழி :**

மாப்பிள்ளை பார்வைக்கு எப்படி இருப்பார்?

**மணியரசன் :**

அழகாகவே இருப்பார். எப்போதும் அமைதி தவழும் முகம்.

**மங்கை :**

என்ன சொல்ல வருகிறீர்கள்? இந்த மாப்பிள்ளை வேண்டா என்றன்றோ எழிலி சொல்லி வருகிறாள். இந்த உறவைத் தடுத்து நிறுத்தி விடுவதாக அண்ணாவிடம் அன்று சொன்னீர்களே, அஃது என்னாயிற்று?

**மணியரசன் :**

கொஞ்சம் பொறுங்கள்.

*(மணியரசன் தொலைப்பேசியை எடுத்து எண்களைச் சுழற்றுகிறார்; இணைப்புக் கிடைத்ததும் பேசுகிறார்.)*

**மணியரசன் :**

வணக்கம். என் பெயர் மணியரசன். உங்கள் கணவர் பன்னீர் செல்வம் இருக்கிறாரா? அவரோடு நான் பேச வேண்டும்.

**மறுமுனையிலிருந்து :**

இல்லையே. நீங்கள் யார்? உங்களுக்கு இந்த எண் எப்படிக் கிடைத்தது?

**மணியரசன் :**

நான் ஒரு வழக்குரைஞர். உங்கள் திருமணத்தில் ஒரு சிக்கல்! அது குறித்து உங்கள் கணவரிடம் பேச வேண்டும். நேரில் சந்தித்தால் நன்றாக இருக்கும். எப்போது வீட்டில் இருப்பார்?

**மறுமுனையிலிருந்து :**

திருமணத்தில் சிக்கலா? என்ன சொல்கிறீர்கள்?

**மணியரசன் :**

உங்கள் பெயர் அன்னம்; சரிதானே?

**மறு முனையிலிருந்து :**

சரிதான்.

**மணியரசன் :**

திருமணம் எங்கே நடந்தது? கோவிலிலா?

**மறுமுனையிலிருந்து :**

இல்லை; திருமணப் பதிவாளர் அலுவலகத்தில் சட்டப் படி நடந்தது.

**மணியரசன் :**

அப்படியானால் கவலை இல்லை. நாளைக் காலை உங்கள் வீட்டிற்கு வருகிறேன். திருமணச் சான்றிதழ், உங்கள் இருவரின் இணைந்த நிழற்படம் இரண்டும் தேவை; அணியமாய் எடுத்து வைத்திருங்கள்.

**மறுமுனையிலிருந்து :**

நீங்கள் மதியம் வர முடியுமா? அப்போது அவரும் இருப்பார்.

**மணியரசன் :**

அதற்கென்ன? மதியமே வருகிறேன்.

**மறுமுனையிலிருந்து :**

எனக்கென்னவோ...

**மணியரசன் :**

உங்களுக்கு எந்த அச்சமும் வேண்டா; அனைத்தையும் நான் கவனித்துக் கொள்கிறேன். எல்லாம் நன்மையிலேயே முடியும்; நம்பிக்கையோடு இருங்கள். நாளை பார்ப்போம்.

*(தொலைப்பேசிக் கைக்கருவியை அதனிடத்தில் வைக்கிறார் மணியரசன். மங்கையும் தேன்மொழியும் அவரையே பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருக்கின்றனர்.)*

**மணியரசன் :**

என்ன? யாருமே பேச மாட்டீர்களா?

*(மங்கை தன்னை நிலைப்படுத்திக் கொண்டு பேசுகிறாள்.)*

**மங்கை :**

என்ன பேசச் சொல்கிறீர்கள்? ஏற்கனவே திருமணம் ஆனவர் உங்கள் அகரமுதலியில் நல்லவர் என்ற பொருளா? மிக நன்றாக இருக்கிறதே!

**மணியரசன் :** *(மெல்லச் சிரித்தபடி)*

தோற்றத்தைக் கொண்டு நாம் எதையும் தேற்றமாய்த் தெரிந்து கொள்ள முடியாது. எதற்கும் இன்னொரு பக்கம் இருக்கும். இரண்டு பக்கங்களையும் யாரால் ஒரே நேரத்தில் பார்க்க இயலும்? துருவித் துருவி ஆய்ந்தால்தான் உண்மை உரு தெரியவரும். பையன் எப்படி இருந்தால் நமக்கென்ன? எழிலிக்கு இவர் மாப்பிள்ளை இல்லை; அதுதானே நாம் விழைவது?

**தேன்மொழி :**

நன்றாக இருக்கிறதே! மனைவி இருக்கும் போதே இன்னொரு மணமா? இதை இத்தோடு விட்டு விடுவதா?

**மணியரசன் :**

பதற்றம் எதற்கு? நான் பார்த்துக் கொள்கிறேன். நல்லதையே நினைப்போம்; நல்லதே நடக்கும்.

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 17

| | | |
|---|---|---|
| **இடம்** | : | உயர்நிலை உணவு விடுதியின் மாடித் தோட்டம். |
| **காலம்** | : | மாலை மணி ஆறரை. |
| **உறுப்பினர்கள்** | : | மங்கை, அறிவாளன். |
| **சூழல்** | : | உணவு விடுதியின் மாடித் தோட்டத்தின் தனித்த பகுதியில் மங்கையும் அறிவாளனும் பழச்சாறு பருகியவாறு அமர்ந்திருக்கின்றனர். |

**மங்கை :**

அவர் வரச் சொன்னதாகத் தொலைப்பேசியில் கூறினீர்கள்; ஆனால், அவரை இன்னும் காணோமே, எங்கே?

**அறிவாளன் :**

முதலில் நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

**மங்கை :**

எதற்காக?

**அறிவாளன் :**

பொய்யுரைத்து உங்களைப் புறப்பட்டு வரச் செய்தமைக்காக.

**மங்கை :**

பொய்யா?

**அறிவாளன் :**

ஆமாம். தனியாக உங்களைச் சந்திக்க வேண்டும்; தெரியாத சிலவற்றைத் தெரிவிக்க வேண்டும் என்று சில மாதங்களாகவே காத்திருந்தேன். இனியும் காலம் தாழ்த்துவது சரியாகாது என்பதாலேயே இன்று இங்கு உங்களை வர வழைத்தேன். தவறாகக் கருத மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

**மங்கை :**

இல்லை; மேலே சொல்லுங்கள்.

**அறிவாளன் :**

நான் நல்லவன்; எந்தத் தவறான எண்ணத்திலும் உங்களை இங்கே வரவழைக்கவில்லை.

**மங்கை :**

தெரியும்; சொல்லுங்கள்.

**அறிவாளன் :**

எப்படித் தொடங்குவது? எங்கே தொடங்குவது? தடுமாற்றமாகவே உள்ளது.

**மங்கை :**

தயக்கம் எதற்கு? தேன்மொழி உங்களைப் பற்றித் தெளிவாகவே சொல்லி இருக்கிறாள். நீங்கள் எந்த ஒளிவு மறைவும் இன்றி வெளிப்படையாகவே பேசலாம். தேன்மொழியைப் பற்றித்தானே பேச விழைகிறீர்கள்?

**அறிவாளன் :**

இல்லை.

**மங்கை :** *(வியப்புடன்)*

இல்லையா? பின்னர் எதைப்பற்றி?

**அறிவாளன் :**

உங்களைப் பற்றித்தான். அச்சம் வேண்டா.

*(அப்போது விடுதிப் பணியாளர் உணவு வகைகளைக் கொண்டுவந்து அவர்களுக்குப் படைக்கிறார்.)*

**பணியாளர் :**

வேறென்ன வேண்டும்?

**அறிவாளன் :**

இப்போதைக்கு இவையே போதும். உண்டு முடித்த பிறகு குளிர்பழக்கூட்டு கொண்டு வாருங்கள்.

*(பணியாளர் அங்கிருந்து அகல்கிறார். அறிவாளன் உணவுத் தட்டுகளை இருவரும் உண்பதற்கு ஏற்றவாறு நகர்த்தி வைக்கிறார்.)*

**அறிவாளன் :**

உண்டபடியே பேசலாம்; உண்ணுங்கள்.

*(இருவரும் உண்கின்றனர்.)*

**அறிவாளன் :**

கதிரவனை எத்தனை காலமாக உங்களுக்குத் தெரியும்?

**மங்கை :**

கடந்த பதினான்கு மாதங்கள் இருபது நாட்களாகப் பழக்கம்.

**அறிவாளன் :**

எனக்கு அவனை இருபது ஆண்டுகளாகத் தெரியும். பழக்கம் என்றால் எப்படி?

*(மங்கை உடனே விடையளிக்காது அமைதியாக உண்டபடி அமர்ந்திருக்கிறார்.)*

**அறிவாளன் :**

நான் வெளியாள் இல்லை; உங்களில் ஒருவன்தான். எல்லாரும் நன்றாக இருக்க வேண்டும்; அஃதே என் ஆசை. எனவே, என்னிடம் மனம் திறந்து நீங்கள் பேசலாம்.

**மங்கை :**

ஒருவரை ஒருவர் நாங்கள் உளமார விரும்புகிறோம்.

**அறிவாளன் :**

திருமணம் செய்து கொள்வதைப் பற்றிச் சிந்தித்தது உண்டா?

**மங்கை :**

காதலிப்பது வேறெதற்கு?

**அறிவாளன் :**

நல்லது. ஓராண்டிற்கு மேல் பழக்கம் என்கிறீர்களே, அவனைப் பற்றி எல்லாம் அறிந்து வைத்திருக்கிறீர்களா?

**மங்கை :**

அவர் மிகவும் நல்லவர். அவருக்கு எல்லாமே நான் தான். என்மேல் உயிரையே வைத்துள்ளார்.

**அறிவாளன் :**

இவ்வளவுதான் தெரியுமா?

**மங்கை :**

ஏன்? இவை போதாவா? மேலும் நான் என்ன தெரிந்து கொள்ள வேண்டும்?

**அறிவாளன் :**

அவனைப் பற்றி நீங்கள் அறிந்தவை ஒரு பக்கத்தின் மிகச் சிறு பகுதியே. அவனுக்கு இன்னொரு பக்கமும் உண்டு. அவனை நீங்கள் விரும்புகிறீர்கள்; திருமணம் செய்து கொள்ளவும் விழைகிறீர்கள். ஆகவே, கதிரவனைப்பற்றிய அனைத்துச் செய்திகளையும் நீங்கள் முன்னரே அறிந்திருப்பது நல்லது. ஏதும் தெரியாததால் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்ற எண்ணம் உங்களுக்கு என்றும் எழக்கூடாது; இல்லையா?

**மங்கை :**

என்ன சொல்கிறீர்கள்? என் மனம் கலங்குகிறது.

**அறிவாளன் :**

சொல்கிறேன்; கலக்கம் வேண்டா. கதிரவனை நல்லவன் என்றீர்கள்; எனக்கு மகிழ்ச்சிதான். அவன் என் உயிர் நண்பன் இல்லையா? இருப்பினும், அவன் குறைகளைக் கோடிட்டுக் காட்டாமல் இருக்க என்னால் கூடவில்லை. நல்லவனே அவன்; ஆனாலும், கண்ட கண்ட நண்பர்களின் பழக்கத்தால் கட்டுப்பாடற்ற வாழ்க்கை வாழ்ந்தவன்; இன்றும் தவிர்க்க இயலாது தடுமாறிக் கொண்டிருப்பவன்.

**மங்கை :**

நீங்களும் அவருக்கு நண்பர்தானே?

**அறிவாளன் :**

ஆமாம்; என்ன செய்வது? நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண் மேற்சென்று இடித்தல் பொருட்டு; உண்மைதான். இவனின் தவறான நடவடிக்கைகள் தகுந்த நேரத்தில் தெரிய வந்திருந்தால், ஒருவேளை தடுத்து நிறுத்தி இருக்கலாம்; ஆனால், எனக்குத் தெரிய வந்தபோது, என்னால் எதுவும் செய்ய இயலவில்லை. அந்த அளவிற்கு அவன் தன் பழக்க வழக்கங்களுக்கு மிகவும் அடிமையாகி விட்டிருந்தான். எனினும், அவன் உள்ளத்தால் இன்றும் நல்லவன்தான்.

**மங்கை :**

உறுதி இல்லா உள்ளம் நல்லதாய் இருந்து என்ன பயன்?

**அறிவாளன் :**

அவனுக்குள்ள கெட்ட பழக்கமே பெண்கள்தாம்.

**மங்கை :**

இல்லையே! புகை பிடிக்கிறார்; குடிப்பதாகவும் தெரிகிறது.

**அறிவாளன் :**

இவை எல்லாம் இப்போது இடையில் வந்தவை. ஆனால், பெண்கள் தொடர்பு விடமுடியாத அளவிற்கு

அவனுள் வேரூன்றி விட்டது. என்ன செய்தும் அவனை மீட்க இயலவில்லை. அந்த நேரத்தில்தான் அந்தப் பெண் அவன் வாழ்வில் வந்து சேர்ந்தாள். அவள் நல்ல குடும்பப்பாங்கான பெண். அவள் அன்பில் அவன் தன்னை இழந்தான்; தன் கெட்ட பழக்க வழக்கங்கள் அனைத்தையும் விட்டொழிந்தான். எங்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி. அவளே அனைத்தும் என்று அவளிடம் தன் அன்பு முழுவதையும் செலுத்தினான். எல்லாம் சில மாதங்கள்தாம்! இடையில் என்ன நடந்ததோ? யாருக்கும் தெரியாது. காதும் காதும் வைத்தாற்போல் என்பார்களே; அதுபோல், உறவினர் பையன் ஒருவனை உடனடியாக மணந்து கொண்டு அவள் ஒதுங்கிச் சென்று விட்டாள்! சில நாட்கள் கழித்தே செய்தி தெரிய வந்தது. தெரிந்து என்ன செய்வது?

**மங்கை :**

பிறகு என்ன நடந்தது?

**அறிவாளன் :**

கதிரவன் அதிர்ந்து போய்ச் சிலையாகிவிட்டான். முதற் காதல் இல்லையா! முற்றும் நொந்து போய் நூலாகிவிட்டான். அவனைத் தேற்றுவது எப்படி என்று தெரியாது நாங்கள் திகைத்தோம்.

**மங்கை :**

நாங்கள் என்றால்?

**அறிவாளன் :**

தேன்மொழி, அவர் அம்மா, நான், இன்னும் சில உண்மையான நண்பர்கள்.

**மங்கை :**

தேன்மொழிக்கு எல்லாம் தெரியுமா? அவள் என்னிடம் சொல்லவில்லையே?

**அறிவாளன் :**

அண்ணனைப்பற்றி உன்னிடம் சொல்ல அஞ்சி இருக்கலாம்.

**மங்கை :**

பிறகு என்ன நடந்தது?

**அறிவாளன் :**

எங்கே தன்னையே அழித்துக் கொள்வானோ என்று அஞ்சினோம். அந்த அளவிற்கு அவன் மனம் புண்பட்டு இருந்தது. அவளை மறக்க முடியாததால் அவனுக்கு உறக்கம் இல்லை. இந்த நிலையில் யார் சொன்னார்களோ? தெரிய வில்லை; குடிக்கத் தொடங்கிவிட்டான். அதே போல், முன்னர் விட்டுவிட்ட கெட்ட பழக்கமும் மீண்டும் வந்து ஒட்டிக் கொண்டுவிட்டது.

**மங்கை :**

நீங்கள் அவர் நண்பர்தானே? அவரை விரும்புகின்ற என்னிடம் அவரைப் பற்றி, அவை உண்மையே ஆயினும், உரைப்பது முறைதானா? நண்பர்க்கு இழைக்கும் தீங்கு இல்லையா?

*(விடுதிப் பணியாளர் அப்போது அங்கு வந்து சேர்கிறார். அவர்கள் எதிர் அமைந்த வெற்றுத் தட்டுகளை எடுத்து அப்பால் வைத்துவிட்டுக் கொண்டு வந்திருந்த குளிர்பழக் கூட்டை வைக்கிறார்.)*

**அறிவாளன் :**

போதும்; அவ்வளவே.

*(பணியாளர் அங்கிருந்து அகல்கிறார்.)*

**அறிவாளன் :**

நண்பனைப்பற்றி இல்லாத பொல்லாத சொல்லி உங்கள் இருவர் உறவை அறுப்பது என் நோக்கம் இல்லை. நான் சொன்னவை அனைத்தும் உண்மைகளே. கதிரவனை நீங்கள் காதலிக்கிறீர்கள்; மிக்க மகிழ்ச்சி. காதல் என்பது விளையாட்டன்று. கொண்ட காதலர்க்காகத் தன்னையும் இழக்கும் தகைமை கொண்டது காதல். ஈட்டம், இழப்புப் பார்த்து வாங்கப்படும் வணிகப் பொருளில்லை காதல். காதல் உள்ளுணர்வுகளின் ஒருங்கிணைப்பு; உள்ளார்ந்த அன்புள்ளங்

களின் உயிர்ப்பிணைப்பு. உண்மைக் காதலுக்கு உயர்வு தாழ்வு கிடையாது; மற்றவர் குறைகளும் நிறைகளாகவே விளங்கும்.

**மங்கை :**

இதுவரை எந்தக் குறைகளையும் நான் அவரிடம் கண்டது இல்லை.

**அறிவாளன் :**

உண்மைதான். எழுதுங்கால் கோல் காணாக் கண் களைப் போல் காதலிக்கும் போது குறைகள் கண்களில் படா. ஆனால், அதே குறைகள் பின்னொரு காலத்தில் பெரிதாகத் தோன்றிப் பெரும் துன்பத்தை விளைவிப்ப. காதல் என்பது கண்களைக் கட்டிக் கொண்டு கிணற்றில் இறங்குவதாக இருக்கக் கூடாது; எல்லாவற்றையும் முன்னரே தெரிந்து, தெளிந்து, ஏற்பதாக அமைய வேண்டும். அதற்காகவே, கதிரவனைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் ஒளிவு மறைவின்றி உங்களிடம் உரைத்தேன். தவறெனின் மன்னிக்கவும்.

**மங்கை :**

என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?

**அறிவாளன் :**

நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். குணம் நாடிக் குற்றமும் நாடி மிகை நாடும் இலக்கணம் காதலுக்குப் பொருந்தாது. உங்கள் உள்ளத்தைத் தட்டுங்கள்; உணர்வை எழுப்புங்கள். விடை உங்கள் உள்ளிருந்து வர வேண்டும். இத்தனை குறைபாடுகள் நிறைந்த இவனுக்காக உங்களையே இழப்பது இன்பம் அளிக்குமா? எண்ணிப் பாருங்கள்; நல்ல முடிவுக்கு வாருங்கள். ஒன்றுமே தெரியாமல் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதினும் தெரிந்து, தெளிந்து அதைத் தெரிந் தெடுப்பது சிறந்தது இல்லையா?

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 18

**இடம்** : கண்ணன் வீடு.

**காலம்** : பிற்பகல் மணி இரண்டு.

**உறுப்பினர்கள்** : கண்ணன், மணியரசன், மங்கை, எழிலியின் தந்தை தங்கப்பர்.

**சூழல்** : கண்ணன் அமர்ந்திருக்க, சற்றுத் தள்ளி மங்கை புத்தகம் ஒன்றைப் புரட்டிய படி அமர்ந்திருக்கிறார். அப்போது மணியரசனும் [redacted] தங்கப்பரும் உள்ளே வருகின்றனர்.

**கண்ணன் :**

வாருங்கள்; வாருங்கள்.

**தங்கப்பர் :**

என்ன கண்ணா? எப்படி இருக்கிறாய்? மங்கை, இதோ, இந்தப் பையை வாங்கிக் கொள்.

*(மங்கை அவரிடம் இருந்து பையைப் பெற்றுக் கொள்கிறார்.)*

**கண்ணன் :**

மாமா, இப்படி அமருங்கள், மங்கை, உணவை எடுத்து வை; மாமாவும் மணியும் உண்ணட்டும்.

**தங்கப்பர் :**

அம்மா, இரு. நாங்கள் உண்டுவிட்டோம். நண்பர் வீட்டில் நல்ல விருந்து! மூச்சு முட்ட உண்ண வேண்டிய தாயிற்று. நண்பரைவிட அவர் மனைவியின் அன்பான விருந்தோம்பலுக்கு அணையிடக் கூடவில்லை.

**கண்ணன் :**

மாப்பிள்ளை பார்க்க நாளைதானே வருவதாகச் சொன்னீர்கள்? அதற்குள் எப்படி?

**தங்கப்பர் :**

உண்மைதான். ஆனால், இன்றே சென்று எல்லா வற்றையும் பேசி முடித்து விட்டோம். அவர்களுக்கும் அளவிலாத மகிழ்ச்சி.

**கண்ணன் :**

என்ன மாமா சொல்கிறீர்கள்? எங்களை எல்லாம் கலந்து பேசாமலா?

**தங்கப்பர் :**

எல்லாம் இந்தத் தம்பி மணியரசன் முயற்சியால் இனிது முடிந்தது. உன்னிடம் பிறகு சொல்லிக் கொள்ளலாம் என்று மணியரசன்தான் சொன்னார்; எனக்கும் அதுவே சரியெனப் பட்டது.

**கண்ணன் :**

அங்கு என்னதான் நடந்தது? இப்போதேனும் சொல்லுங்கள்.

**தங்கப்பர் :**

சொல்லத்தானே வந்திருக்கிறேன். முதலில் அவர்கள் மிகவும் முரண்டு செய்தார்கள்; ஆனால், இறுதியில் மணியரசன் பேச்சைக் கேட்டு மயங்கி ஏற்றுக் கொண்டனர். எல்லாம் பேசி இறுதி செய்துவிட்டுத்தான் இப்போது வந்தோம். திருமண வரவேற்பு மட்டும்தான்! அதற்கான நாள், மண்டபம் உறுதி செய்தாகிவிட்டது.

**கண்ணன் :**

எனக்கு எதுவும் புரியவில்லை. மணி, நீயாவது விளங்கும்படி சொல்லேன்.

**தங்கப்பர் :**

நானே சொல்கிறேன். நாம் எழிலிக்குப் பார்த்தோமே என் நண்பரின் பையன், அவனுக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது. யாருக்குமே இது தெரியாது. நேற்று மணியரசன் வீட்டிற்கு வந்து சொன்னபோது நானும் முதலில் நம்பவில்லை; அவர்களின் திருமணப் படத்தைப் பார்த்த

போதே நம்பினேன். சரி; இந்த இடம் இல்லை என்றால் என்ன? இன்னும் இதைவிட எத்தனையோ நல்ல இடங்கள் இருக்கின்றன என்று அமைதியானேன். ஆனால், இந்தப் பிள்ளை என்னை அமைதியாக இருக்க விடவில்லை. 'மாப்பிள்ளையின் தந்தை உங்கள் உயிர் நண்பர்தானே? வாருங்கள்; யாருக்கும் தெரியாமல் நடந்த அவர் பிள்ளையின் திருமணத்தை ஊரறிய நடத்தி வைப்போம்; அதைக்கூட நடத்தி வைக்கவில்லை என்றால் நீங்கள் என்ன நண்பர்? இடுக்கண் வரும்போது அடுத்து உதவுவதே நட்பாகும்; உண்மையான நண்பர்கள் இடர் வரின் இப்படி ஏனோ, தானோ என்று அமர்ந்திருக்க மாட்டார்கள். உடனே புறப்படுங்கள்; உற்றதைச் செய்வோம்.' இப்படி எல்லாம் என்னென்னவோ இன்னும் நிறைய சொல்லி என்னை இரவு முழுவதும் உறங்க விடவில்லை. எழிலியும் இவருக்கு உடந்தை! போதாதற்கு உன் அத்தையும் ஓயவில்லை.

**கண்ணன் :**

பிறகு?

**தங்கப்பர் :**

பிறகென்ன? விடியலில் புறப்பட்டோம். காலையில் இருந்து நண்பர் வீட்டில் இருந்துவிட்டு நேரே இங்கு வந்தோம். நல்லவேளை! எல்லாம் எங்கள் எண்ணப்படி இனிது முடிந்தது; மகிழ்ச்சியோடு திரும்பினோம்.

**மங்கை :**

ஏன், மாமா? உங்கள் நண்பர் உடனே ஒப்புக் கொண்டு விட்டாரா?

**தங்கப்பர் :**

எங்கே ஒப்புக் கொண்டார்? என்னென்னவோ பேசி எகிறிக் குதித்தார்! வீட்டை இரண்டு செய்து விட்டார். நல்ல வேளை; நாங்கள் சென்ற அந்த நேரத்தில் அந்தப் பையன் இல்லை! இருந்திருந்தால், என்ன செய்திருப்பாரோ? ஆனால், பையனின் அம்மா எதுவுமே எதிராகப் பேசவில்லை. மணியரசன் பேசாத பேச்சே இல்லை. யார் யாரோ

சொன்னதாக ஏதேதோ பாடல்களை எல்லாம் எடுத்து அடுக்கிக் கொண்டே சென்றார்; ஒன்றும் பயனில்லை. இறுதியாக, ஒரு பாடலைத் தம்பி முழுதாகப் பாடியபோதே அவர் ஆர்ப்பாட்டம் அடங்கியது.

**கண்ணன் :**

மணி, அஃதென்ன அப்படிப்பட்ட பாடல்?

**மங்கை :**

நான் பாடட்டுமா?

**தங்கப்பர் :**

உனக்குத் தெரியுமா? எங்கே பாடு; கேட்போம்.

**மங்கை :**

'நாடகத்தில் காவியத்தில் காதல் என்றால், நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்; ஊடகத்தே, வீட்டினுள்ளே, கிணற்று ஓரத்தே, ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்; பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய்கின்றார்; பாரினிலே காதலென்னும் பயிரை மாய்க்க, மூடரெலாம் பொறாமை யினால் விதிகள் செய்து முறைதவறி இடரெய்திக் கெடு கின்றாரே.' சரிதானா? பாரதியார் பாடல் இது.

**தங்கப்பர் :**

மிகவும் சரி! இதோ பாரம்மா, உன் திருமணச் செலவு முழுவதையும் நான்தான் செய்வேன்; என்ன?

**மங்கை :**

எப்படி என்றாலும் நீங்கள்தானே மாமா செய்யப் போகிறீர்கள்?

**தங்கப்பர் :**

அதுவும் சரிதான். இந்தப் பாட்டைக் கேட்டதும் நண்பர் சிறிது அடங்கினார்; அவ்வளவுதான் பையனின் அம்மா தொடங்கி விட்டார்கள்.

**மங்கை :**

ஐயய்யோ!

**தங்கப்பர் :**

எல்லாம் நல்லதுக்குத்தான். அந்த அம்மா எப்போதுமே தன் பையன் பக்கம்தான். மருமகள் படத்தைப் பார்த்ததுமே அவர்களுக்கு அவ்வளவு பிடித்துப் போய் விட்டது. அழகு, அமைதி, பண்பு, பணிவு அத்தனையும் நிறைந்த அந்த முகம் யாருக்குத்தான் பிடிக்காமல் போகும்? படத்தைப் பார்த்ததும் அப்பாவும் படிந்து விட்டார். படித்த பெண் வேறு; கசக்குமா?

**கண்ணன் :**

ஏன் மங்கை? பாரதியாரின் அந்தப் பாடல் பகுதியைத்தான் மணி சொல்லி இருப்பார் என்பது உனக்கு எப்படித் தெரியும்?

**மணியரசன் :**

நானே சொல்லி விடுகிறேன். பையனின் அப்பாவிடம் எப்படி அணுக வேண்டும்? எவ்வெவ்வாறெல்லாம் பேச வேண்டும்? நாங்கள் இதை எல்லாம் முன்னரே கலந்து முடிவு செய்து வைத்திருந்தோம். தேன்மொழிதான் இந்தப் பாடலை எங்களுக்கு நினைவுபடுத்தி இருந்தார்.

**கண்ணன் :**

எனக்குத் தெரியாமலே இங்கு எல்லாமே நடக்கின்றன.

*(அப்போது தொலைப்பேசி மணி ஒலிக்கிறது. கண்ணன் தொலைப்பேசிக் கேள்கருவியை எடுத்துக் கேட்டுவிட்டு, மணியரசனிடம் நீட்டுகிறார்.)*

**கண்ணன் :**

மணி, உனக்குத் தான்.

*(மணியரசன் கேள்கருவியைப் பெற்று எதிர்முனைப் பேச்சைக் கேட்கிறார். அதுவரை அங்கு அமைதி நிலவுகிறது. கேள்கருவியை அதனிடத்தில் வைத்துவிட்டு மணியரசன் ஏதோ சிந்தித்தபடி அமர்ந்து இருக்கிறார்.)*

**கண்ணன் :**

மணி! யாரப்பா அந்தப் பெண் அன்னம்? இதற்கு முன்னர் எந்தப் பெண்ணும் உன்னோடு பேசி நான் கேட்டது இல்லையே.

**மங்கை :**

அந்தப் பெண் அன்னம் வேறு யாரும் இல்லை. இத்தனை நேரமாகப் பேசிக் கொண்டு இருந்தோமே, அந்த மருமகப் பெண்தான் அவள்!

**தங்கப்பர் :**

இங்கெதற்குப் பேச வேண்டும்? ஏதேனும் சிக்கலா?

**மணியரசன் :**

நேற்றே நீங்கள் சொன்னீர்களே, எதற்கு இந்தத் தரகு வேலை என்று! அது நம்மை விடுவதாக இல்லை.

**தங்கப்பர் :**

என்ன தம்பி சொல்கிறீர்கள்? நாம் அங்கிருந்து கிளம்பும் போது எல்லாரும் மகிழ்ச்சியாக இருந்தார்களே.

**மணியரசன் :**

அதெல்லாம் சரிதான். அப்பா, அம்மா, பிள்ளை அனைவரும் இப்போது அந்தப் பெண் வீட்டில்தாம் இருக்கிறார்கள். இன்னும் சற்று நேரத்தில் எல்லாரும் கிளம்பி பையன் வீட்டிற்குப் போய் விடுவார்கள்.

**மங்கை :**

எதிர்பார்த்ததுதானே; அப்புறம் என்ன சிக்கல்?

**மணியரசன் :**

பையனுடைய அப்பா அம்மாவைச் சேர்த்து வைத்தோம் இல்லையா? அதே போல் பெண்ணுடைய அப்பா அம்மாவை யும் அவர்களுடன் சேர்த்து வைக்க வேண்டுமாம். அந்தப் பெண் மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். அதுதான் சிந்தனை.

**தங்கப்பர் :**

எதற்குச் சிந்தனை? புறப்படு; அதையும் செய்திடுவோம்.

**மணியரசன் :**

நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**தங்கப்பர் :**

அந்தப் பெண்ணின் ஊர் தெரியும் இல்லையா? அந்தக் குறை மட்டும் எதற்கு? பெண்ணின் பெற்றோரைப் பார்ப்போம்; பேசி எல்லோருடனும் ஒன்றாகச் சேர்த்து வைப்போம். செய்வதை முழுமையாகச் செய்வோமே.

**கண்ணன் :**

மாமா, நீங்கள் செய்வது எதுவும் சரி இல்லை.

**தங்கப்பர் :**

கண்ணா, நீ சொல்வதுதான் சரியில்லை. என் வாழ்க்கையிலேயே இன்றுதான் நான் முதல்முறையாக மன நிறைவாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறேன். மற்றவர்கள் மகிழ்ச்சியைக் காண, மனதில் எழும் இன்பமே இன்பம்! இப்படி ஓர் இன்பத்தைக் காட்டிய மணியரசனுக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

**கண்ணன் :**

எழிலிக்கு மாப்பிள்ளை பார்ப்பதாய்ச் சொல்லிவிட்டு, யார் யாரையோ சேர்த்து வைத்துக் கொண்டு இருக்கிறீர்களே; நல்லதுதானா?

**தங்கப்பர் :**

யாராய் இருந்தால் என்னப்பா? எல்லாரும் இன்புற்று இருக்க வேண்டும்; அந்த ஓர் எண்ணம் மட்டும் எனக்கு என்றும் இருந்தால் போதும். இன்றும் பெரியவர்கள் சொல்வார் களே, 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்று; அது பொய்க்காது. என் பெண்ணுக்கு நீங்கள் எல்லாரும் ஆசைபடுகிறதுபோலவே நிச்சயம் நல்ல பையன் அமைவான்.

**கண்ணன் :**

மாமா, இப்படி எல்லாம் நீங்கள் பேசி நான் கேட்டதே இல்லை! உங்கள் பேச்சும் சிந்தனையும் புதுமையாய் உள்ளன. எப்படி இவை எல்லாம்?

**தங்கப்பர் :**

எல்லாம் இந்தத் தம்பி மணியரசனின் ஓயாத உரையாடல்கள்தாம் காரணம். எத்தனை மேற்கொள்கள்! எடுத்துக் காட்டிய பாடல்கள், நிகழ்வுகள்தாம் எத்தனை! இரண்டு நாட்களில் பெரும் மாற்றத்தை என்னுள் நானே உணர்கிறேன். இப்படி ஒரு பிள்ளையைப் பெற்றவர்கள் கொடுத்து வைத்தவர்கள்!

**மணியரசன் :**

ஐயா, போதும் புகழ்ந்தது. எனக்கு நாணமாக இருக்கிறது.

**கண்ணன் :**

மாமா, இப்போது உங்களைக் காணப் பெருமையாக இருக்கிறது. நீங்கள் மிகவும் உயர்ந்து விட்டீர்கள்.

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 19

| | | |
|---|---|---|
| **இடம்** | : | கண்ணனின் வீடு. |
| **காலம்** | : | இரவு மணி எட்டு. |
| **உறுப்பினர்கள்** | : | கண்ணன், கதிரவன், மங்கை. |
| **சூழல்** | : | கதவு மூடப்பட்டிருக்கிறது. வெளியிலிருந்து திரும்பிய கண்ணன் உள்ளே பேச்சுக் குரல் கேட்டு, நின்று கவனிக்கிறார். |

**மங்கை :**

முதலில் நீங்கள் இங்கிருந்து போங்கள். நேரமாகி விட்டது.

**கதிரவன் :**

என்ன நீ? எப்போது வந்தாலும் என்னை விரட்டிக் கொண்டே இருக்கிறாய்?

**மங்கை :**

உங்களை யார் இங்கு வரச் சொன்னார்கள்? இப்போது போகப் போகிறீர்களா? இல்லையா?

**கதிரவன் :** *(கெஞ்சுங் குரலில்)*

இன்னும் கொஞ்சம் நேரம் இருந்து விட்டுப் போகிறேனே?

**மங்கை :**

அதெல்லாம் வேண்டா. அண்ணா வந்துவிடப் போகிறார்; உடனே போங்கள்.

*(கதவு திறக்கப்படுகிறது. உள்புறம் பார்த்தவாறே கதிரவன் வெளிவருகிறார். மங்கை அவரை உந்தித் தள்ளிய வண்ணம் வெளியே வர, எதிரே கண்ணன் இருப்பதைக் காண அதிர்ச்சி அடைந்து நிற்கிறார்.)*

**கதிரவன் :**

மறக்காமல் நாளை மாலை வீட்டிற்கு வந்து சேர்; உனக்காக அணியமாய்க் காத்திருப்பேன். என்ன? ஏன் விழிக்கிறாய்?

*(புரியாதவராய்க் கதிரவன் திரும்பிப் பார்க்கிறார். கண்ணன் அங்கு நிற்பதைக் காணக் கலக்கம் அடைகிறார்.)*

**கண்ணன் :**

என்ன அப்படியே நிலைத்து நின்று விட்டாய்?

**கதிரவன் :** *(தடுமாற்றத்துடன்)*

உன்னைத்தான் பார்க்க வந்தேன்.

**கண்ணன் :**

ஓஒ! அப்படியா? பார்த்து விட்டாய் இல்லையா? போ.

*(கதிரவன் வெளியே விரைகிறார். கண்ணனின் பேச்சு அவரை இடையே நிற்க வைக்கிறது.)*

**கண்ணன் :**

கதிரவா! நாம் ஒருவரை ஒருவர் நன்கு அறிவோம். நினைவில் இருக்கட்டும்.

*(கதிரவன் அங்கிருந்து அகல, கண்ணன் அமைதியாக உள்ளே நுழைந்து கூடத்தில் அமர்கிறார். கதவை வெறுமே மூடிவிட்டு, அச்சத்தோடு மங்கை உள்ளறையை நாடுகிறார்.)*

**கண்ணன் :**

மங்கை!

*(அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் மங்கை அமைதியாக நின்று திரும்பிப் பார்க்கிறார்.)*

**கண்ணன் :**

குடிக்கத் தண்ணீர் கொண்டு வா.

*(மங்கை சமையல் அறைக்குச் செல்கிறார்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 20

| | | |
|---|---|---|
| **இடம்** | : | கதிரவனின் வீடு. |
| **காலம்** | : | இரவு மணி எட்டரை. |
| **உறுப்பினர்கள்** | : | கதிரவன், தேன்மொழி. |
| **சூழல்** | : | தேன்மொழி தன்னறையில் படுக்கையில் சாய்ந்தபடி படித்துக் கொண்டிருக்க, கதிரவன் அங்கு விரைந்து வந்து சேர்கிறார். |

**கதிரவன் :**

தேன்மொழி! தேன்மொழி!

*(அண்ணனின் குரல் கேட்டுத் தேன்மொழி எழுந்து அமர்கிறார். அவர் தோற்றம் தேன்மொழிக்கு வியப்பை அளிக்கிறது.)*

**தேன்மொழி :**

என்னஅண்ணா? என்ன?

**கதிரவன் :**

எழுந்திரு; எழுந்திரு. உடனே புறப்படு.

*(தேன்மொழி ஏதும் புரியாது அண்ணனைத் திகைப் போடு பார்க்கிறாா்.)*

**தேன்மொழி :**

எங்கே போகச் சொல்கிறாய்? அஃதும் இந்த இரவு நேரத்தில்?

**கதிரவன் :**

மங்கை வீட்டிற்குத்தானம்மா.

**மங்கை :** *(வியப்போடு)*

எதற்கு? நீ இப்போது அங்கிருந்தா வருகிறாய்?

**கதிரவன் :**

ஆமாம்; உடனே போயேன்.

*(கதிரவன் தங்கையை விரைவுபடுத்துகிறாா். தேன்மொழி படுக்கையினின்றும் எழுந்து புறப்படுகிறாா்.)*

**தேன்மொழி :**

போய் என்ன செய்யச் சொல்கிறாய்? புரியும்படி சொல்லேன்.

**கதிரவன் :** *(வேதனையோடு)*

அதை உன்னிடம் எப்படிச் சொல்வேன்? கண்ணன் நான் மங்கையோடு இருந்ததைப் பாா்த்து விட்டாா்! மங்கையை இந்நேரம் அவா் என்ன கொடுமைப்படுத்துகிறாரோ? விரைந்து போய் வாம்மா.

**தேன்மொழி :**

அண்ணா, அவா் ஒன்றும் செய்ய மாட்டாா்; நீ அஞ்சாதே.

**கதிரவன் :**

உனக்குத் தெரியாதம்மா கண்ணனை!

**தேன்மொழி :** *(மெல்லச் சிரித்தவாறு)*

எனக்காத் தெரியாது?

**கதிரவன் :**

ஆமாம், அம்மா. அவர் கட்டுப்பாட்டில் மிகக் கடுமை யானவர். தவறெனில் எவர் எனினும் தண்டிக்கத் தயக்கம் காட்ட மாட்டார். தங்கை என்றாலும் மன்னிக்க மாட்டார். இந்நேரம் என்ன நடந்ததோ? பேசிக்கொண்டே நிற்கிறாயே? உடனே போய் வா.

**தேன்மொழி :**

சரி; நான் போகிறேன். பதட்டம் வேண்டா. அங்கு எதுவும் நடந்திருக்காது; அமைதியாக இரு.

## காட்சி - 21

| | | |
|---|---|---|
| **இடம்** | : | கண்ணனின் வீடு. |
| **காலம்** | : | இரவு மணி ஒன்பது. |
| **உறுப்பினர்கள்** | : | கண்ணன், மங்கை, தேன்மொழி, கதிரவன். |
| **சூழல்** | : | கூடத்தில் கண்ணன் அமர்ந்திருக் கிறார். சற்றுத் தள்ளி மங்கை நின்று கொண்டு இருக்க, இருவர் முகங்களும் இறுக்கமாய் இருக்கின்றன. |

**கண்ணன் :**

எத்தனை நாட்களாக இது நடந்து வருகிறது?

*(மங்கை விடை அளிக்காது அமைதியாக நிற்கிறார்.)*

**கண்ணன் :**

ஏன்? வாயைத் திறந்து சொல்லேன். கதிரவன் இங்கு எதற்கு வந்தான்?

**மங்கை :**

என்னைப் பார்க்க வந்தார்.

**கண்ணன் :** *(ஏளனமாக)*

என்னைப் பார்க்க வந்தார்! வெட்கம் கெட்டவளே, வெளியே சொல்ல வேதனையாய் இல்லை? நீதானே அவனை இங்கு வரச் சொன்னாய்?

**மங்கை :**

இல்லை; அவராகத்தான் வந்தார்.

**கண்ணன் :**

வந்தால் என்ன? அவனை உள்ளே விட்டு விடுவதா? போடா நாயே என்று போகச் சொல்வதற்கு என்ன?

**மங்கை :**

என்னால் அப்படிச் சொல்ல இயலாது.

**கண்ணன் :**

உன்னால் எப்படி இயலும்? நீதான் உன்னையே இழந்து விட்டு இருக்கிறாயே! அண்ணன் ஒருவன் இருப்பதை எண்ணிப் பார்த்திருந்தால், இப்படி நடந்து கொண்டு இருப்பாயா? என்னையும் ஏமாற்றி விட்டு, நீயும் ஏமாறி வருகிறாய்.

**மங்கை :**

யாரையும் ஏமாற்றவும் இல்லை; ஏமாற நான் ஏதும் அறியாதவளும் இல்லை.

**கண்ணன் :** *(சினத்தில் கத்துகிறார்)*

பேசாதே. எனக்குத் தெரியாது என்றா எண்ணுகிறாய்? சென்ற ஞாயிற்றுக் கிழமை எங்கே சென்று இருந்தாய்? ஏன் மௌனம்? படத்திற்குத் தானே?

**மங்கை :**

ஆமாம்.

**கண்ணன் :**

அவனோடுதானே போய் இருந்தாய்?

*(மங்கை விடை அளிக்காது அமைதியாகத் தலை தாழ்த்தி நிற்கிறாள்).*

**கண்ணன் :**

எனக்கு அன்றே தெரியும்! அன்று அவள், உன் தோழி துடித்த துடிப்பிலேயே நான் ஐயம் கொண்டேன். ஒரு கூட்டமே என்னை ஏமாற்றி வந்து இருக்கிறது! எல்லா வற்றிற்கும் அவளும் உடந்தை. *(சினத்தோடு எழுந்து நடந்தபடி)* என் தங்கையா நீ? யார் அவன்? எப்படிப் பட்டவன்? ஏதேனும் உனக்குத் தெரியுமா? அவன் ஓர் எத்தன்; ஏமாற்றுக்காரன்; வஞ்சகன்!

**மங்கை :** *(குறுக்கிட்டு)*

அவர் ஒன்றும் அப்படிப்பட்டவர் இல்லை.

*(கண்ணன் நின்று திரும்பி மங்கையை ஏளனமாகப் பார்க்கிறார்.)*

**கண்ணன் :**

அவன் அப்படி இல்லை! பின் எப்படி? அவனைப் பற்றி அணு அளவேனும் நீ அறிவாயா? நீ எப்படி அறிவாய்? என்னைக் கேள்; நான் சொல்கிறேன். அவன் ஒரு குடிகாரன்! மதுவகங்களே தன் வாழ்வகங்களாகக் கொண்டவன். அது மட்டுமா? விலைமகளிர் மடிகளிலேயே விழுந்து கிடப்பவன். பணக்காரன்; பெரும்பாலரான பணக்காரர்களைப் போலவே இவனும் பண்பில்லாதவன்.

*(கண்ணன் மங்கை முன்வந்து நின்று அன்போடு பார்க்கிறார். பேசும்போது மென்மையும் அன்பும் வெளிப் படுகின்றன.)*

**கண்ணன் :**

மங்கை, நான் சொல்வதைக் கேளம்மா. அவனை மறந்து விடு. அவன் நல்லவன் இல்லை. உனக்கு ஏற்றவன் அவன் இல்லை. விலங்கினும் கீழானவன்! பெண் வெறி பிடித்த பித்தன்! உன்னை நம்ப வைத்து ஒன்றுக்கும் உதவாதவளாக ஆக்கி விடுவான். காதல் என்பதெல்லாம் அவனுக்குத் தெரியாது. அவனுக்குத் தெரிந்தவை எல்லாம் கன்னிப் பெண் களின் கட்டு உடல்கள்தாம். அவனைப் பொறுத்தவரைக்

காதல் என்பது ஒரு வெறும் சொல்தான். உடலை மட்டுமே விரும்பும் இழிஞன் அவன். என் பேச்சைக் கேளம்மா.

**மங்கை :** *(அமைதியாக)*

அவர் உங்களைப் போல் இல்லை.

**கண்ணன் :**

அதைத்தானம்மா நானும் இந்நேரம் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். என்னைப் போல் அவன் இருந்திருந்தால், காதலில் குறுக்கிடும் கயமைத்தனம் எனக்கு எதற்கம்மா? நல்லவன் அவன் இல்லையே.

**மங்கை :**

நான் அதைச் சொல்லவில்லை.

**கண்ணன் :**

பிறகு?

**மங்கை :**

நீங்கள் தேன்மொழியோடு பழகத் தொடங்கி ஆறு மாதங்கள் இருக்குமா?

**கண்ணன் :**

இருக்கும். அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு?

**மங்கை :**

ஏனில்லை? அவளோடு பழகத் தொடங்கிய பத்து நாட்களுக்குள் நீங்கள் புரிந்த திருவிளையாடல்கள் எனக்குத் தெரியும். எதற்காக என்னை மாமா வீட்டிற்கு அடிக்கடி அனுப்பினீர்கள் என்பதையும் நான் அறிவேன். அப்படி என்னை அனுப்பிவிட்டு, நீங்கள் அவளோடு எப்படி எல்லாம் பழகினீர்கள்! எல்லாம் நான் அறிவேன். தேன்மொழி என்னிடம் எதையும் மறைக்கவில்லை. அவள் சொன்னவைகளைக் கேட்டபோது, என் அண்ணனா இப்படி என்று என்னையே நொந்து கொண்டேன். உங்கள் நடத்தையில் ஒழுங்கில்லை; ஆனால், உயர்ந்தவரான அவரைக் குறை கூறுகிறீர்கள்.

**கண்ணன் :**

நான் நடந்து கொண்டது தவறுதான். அதற்காக, தங்கையின் வாழ்க்கையில் தலையிட இந்த அண்ணனுக்குத் தகுதி கிடையாதா? என் பேச்சைக் கேளம்மா. உன் வாழ்க்கை உயர்வாக அமைய வேண்டும்; அதைவிட ஓர் அண்ணனுக்கு வேறு என்னம்மா வேண்டும்? அவனை மறந்து விடு. அவன் ஒரு செல்லாக் காசு! அவன் பழக்கமே உனக்கு வேண்டா.

**மங்கை :**

ஆயிரம் சொல்லுங்கள்; நான் கேட்க மாட்டேன். எனக்கு ஓராண்டிற்கும் மேலாய் அவரைத் தெரியும்.

**கண்ணன் :**

உனக்கு இப்போதுதான் தெரியும்; எனக்கு அவனையும் அவனைச் சார்ந்தவர்களையும் கல்லூரி நாட்களில் இருந்தே தெரியும். கொலைக்கு அஞ்சாக் கொடியவர்களிடம் எல்லாம் அவன் தொடர்பு கொண்டுள்ளான்! என் பேச்சைக் கேள். நான் உன் அண்ணனம்மா.

**மங்கை :**

அவர் என் எண்ணம் ஆயிற்றே!

**கண்ணன் :** *(கெஞ்சியபடி)*

அண்ணன் சொல்வதைக் கேட்க மாட்டாயா?

**மங்கை :** *(நிமிர்ந்து நேருக்கு நேர் நோக்கியபடி)*

கேட்பேன்; நீங்கள் சொல்பவை ஏற்புடையவாக இருப்பின்! ஓராண்டிற்கும் மேலாக நாங்கள் நெருங்கிப் பழகுகிறோம்; இருந்தும், அவர் இன்றும் என் கையைத் தொடவும் அஞ்சுவார். ஆனால், நீங்களோ, பத்து நாட்களும் நெருங்கிப் பழகி அறியா நிலையிலும் தேன்மொழியைத் தொட்டுப் பழகத் தயங்க வில்லை.

*(கண்ணன் வேறு பக்கமாய்த் தன் முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்.)*

**மங்கை :**

எனக்கே வெட்கமாய் இருந்தது இதை எல்லாம் தேன்மொழி அன்று சொன்னபோது! இப்படி எல்லாம் இயல்

பிகழ்ந்து நடந்து கொண்ட நீங்கள், என்னைத் தொட்டும் அறியாத் தூயவரைத் தூற்றுகிறீர்கள். உங்களைப் போன்றா நாங்களும் ஐம்புல உணர்வுகளுக்கு அடிமையாகி விடுவோம்?

*(வெளியே மகிழுந்து நிற்கும் ஒலி கேட்கிறது. சற்றைக் கெல்லாம் தேன்மொழி தெருக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வருகிறாள். தேன்மொழி வருகையைக் கண்ட மங்கை அறையுள்ளே செல்ல, கண்ணன் சோர்வோடு அமர்கிறார். அங்கு நிலவிய அமைதியைக் கண்டு தேன்மொழி சில வினாடிகள் திகைத்து நிற்கிறாள். பின்னர்ப் புன்னகையுடன் கண்ணன் அருகில் அமர்கிறாள்.)*

**தேன்மொழி :**

என்னிடம் பேச மாட்டீர்களா?

*(கண்ணன் பேசாது அமர்ந்திருக்கிறார்.)*

**தேன்மொழி :**

என்ன வந்தது உங்களுக்கு? ஏன் இந்தச் சினம்?

**கண்ணன் :**

ஏன்? எனக்குச் சினம் வரக்கூடாதா? அண்ணனுக்குத் தெரியாமல் ஒரு தங்கை அயலானோடு பழகலாமா?

**தேன்மொழி :**

தெரிந்து பழகலாம் என்று சொல்கிறீர்கள்; அவ்வளவு தானே? இதற்கு எதற்குச் சினம்? இப்போது உங்களுக்குத் தெரிந்து விட்டது. பிறகு என்ன? கவலையை விடுங்கள்.

**கண்ணன் :** *(அவளை முறைத்துப் பார்த்தவாறு.)*

என்னை என்ன முட்டாள் என்று எண்ணி விளையாடு கிறாயா?

**தேன்மொழி :** *(கொஞ்சலாக)*

பின் என்ன? நீங்கள் மட்டும் என் அண்ணனுக்குத் தெரிந்தா என்னோடு பழகுகிறீர்கள்? அஃதென்ன? உங்களுக்கு என்றால் ஒன்று; மற்றவர்களுக்கு என்றால் வேறொன்று!

**கண்ணன் :**

நீ ஒரு பணக்காரி.

**தேன்மொழி :**

அதனால்?

**கண்ணன் :**

யாரோடு வேண்டும் என்றாலும் எப்படி வேண்டும் என்றாலும் நீ பழகலாம்; இந்த உலகம் எதையும் கண்டு கொள்ளாது. ஏனென்றால், நீ பணம் படைத்தவள்! ஆமாம்; என்ன நேர்ந்தாலும் யாரும் எதுவும் சொல்லார். ஆனால், நாங்கள்? மானத்தோடாவது இருந்தால்தாம் சற்றேனும் மதிப்போடு வாழக் கூடும்.

**தேன்மொழி :**

நீங்கள் என்னை மிகவும் இழிவுபடுத்துகிறீர்கள்!

**கண்ணன் :**

உண்மையைதான் சொல்கிறேன்.

**தேன்மொழி :**

அதனால் என்ன? இருக்கட்டும்; பிறகு அதைப்பற்றித் தனியே பேசுவோம். என் அண்ணன் மங்கையோடு பழகு வதால் என்ன இழுக்கு ஏற்பட்டு விடும்?

**கண்ணன் :**

என்ன ஏற்படாது என்று நீயே சொல்லேன்.

**தேன்மொழி :**

என் அண்ணன் நல்லவர்.

**கண்ணன் :**

யார் சொல்வது?

**தேன்மொழி :**

ஏன்? நான்தான் சொல்கிறேன்.

**கண்ணன் :** *(ஏளனமாகச் சிரித்தபடி)*

**நல்லவன்!**

**தேன்மொழி :**

ஏன் சிரிக்கிறீர்கள்?

**கண்ணன் :**

சிரிக்காமல்? நஞ்சுள்ள பாம்பை நல்ல பாம்பு என்பவர்கள்தாமே நாம்! தேன்மொழி, உன் அண்ணனைப் பற்றி உண்மையிலேயே அறியாதவளா நீ? உன் அண்ணன் ஒரு குடிகாரன்; உனக்குத் தெரியாதா? கண்ணில் கண்ட பெண்களை எல்லாம் தேடி அலையும் காம வெறியன் அவன்; நீ கேள்விப்பட்டதில்லையா?

**தேன்மொழி :**

பொய் சொல்கிறீர்கள்!

**கண்ணன் :**

நானா? இல்லை; நீயும் மங்கையும்தாம் பொய் சொல் கிறீர்கள். உங்கள் இருவருக்குமே உன் அண்ணனைப் பற்றிய எல்லா உண்மைகளும் தெரியும். இருந்தும், அவை உங்களுக்குப் பொருட்டாக இல்லை. அவன் ஒரு சிற்றறிவினன்; குறை மதியாளன்.

**தேன்மொழி :**

உங்களினும் அவர் ஒன்றும் அவ்வளவு கீழானவர் இல்லை.

**கண்ணன் :**

தேன்மொழி!

**தேன்மொழி :**

ஏன் சீறுகிறீர்கள்? உண்மை உறுத்துகிறதோ?

**கண்ணன் :**

உண்மை உறுத்தவில்லை. தென்றலைத் தீயோடு ஒப்பிட்டுப் பேசுகிறாயே, அஃது உறுத்துகிறது. அவனும் ஒரு மனிதன்தானா? மடையன்!

**தேன்மொழி :**

போதும், நிறுத்துங்கள். நீங்கள் முதலில் ஒழுங்கானவர் தானா? தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காணும் தகைமை

உங்களிடம் இல்லை. என்னிடம் முறைகேடாக நடந்து கொண்ட உங்களுக்கு, மற்றவர்களைக் குறை கூற என்ன தகுதி உள்ளது?

**கண்ணன் :** *(முகத்தை மறு பக்கம் திருப்பிக் கொண்டு)*

முழுக்கக் குற்றம் என் மேல் இல்லை; மறந்து விடாதே.

**தேன்மொழி :**

ஆமாம்! எப்படி மறக்க முடியும்? பெண்ணின் உணர்வு களைப் பெரிதுபடுத்தத் தெரிந்த பேரறிஞர் ஆயிற்றே தாங்கள்! உடல் உணர்வுகளைத் தட்டி எழுப்பி உச்ச நிலைக்குக் கொண்டு வந்தது யார்? உறங்கிய புலியை உலுப்பி விட்டது யார்? நீங்கள்தாமே?

**கண்ணன் :**

சரி; சரி. அதை ஏன் இப்போது கிளறுகிறாய்?

**தேன்மொழி :**

ஆனால், அடுத்த நாளே என்ன செய்தீர்கள்? மாமன் மகளைப் பார்க்க என்னை மறந்து ஓடினீர்கள்! என் அண்ணன் உங்களைப் போலவா? மங்கையை ஏமாற்றினாரா?

**கண்ணன் :**

இதுவரை ஏமாற்றவில்லை; மகிழ்ச்சி! இனி, ஏமாற்ற வாய்ப்பு நேரக்கூடாது. அதற்காகவே இடையில் தடை எழுப்புகிறேன்.

**தேன்மொழி :**

ஆனால், நீங்கள் என்னை ஏமாற்றினீர்கள்.

**கண்ணன் :**

நானா உன்னை ஏமாற்றினேன்? *(மெல்லச் சிரித்தபடி அவள் கையைப்பற்றி அமர வைத்துத் தானும் அருகில் அமர்கிறார்)* இல்லை; தேன்மொழி, இல்லை. உன்னை இழந்து உயிர் வாழ உள்ளம் ஒருப்படுமா? நீ இன்றி நான் இல்லை; நீ அறிய மாட்டாயா? எழிலி, என் உடன் பிறவாத் தங்கை! என்னை அத்தான் என்று அவள் அழைத்தாலும்

அண்ணனிடம் கொள்ளும் அன்பைத்தான் என்னிடம் கொண்டுள்ளாள். அடிக்கடி அவள் என்னை ஏன் வரச் சொன்னாள் என்பதை நீ அறிந்தவள் தானே? மாமா பார்க்கின்ற மாப்பிள்ளைகளை அவளுக்குப் பிடிப்பது இல்லை; எனவே, அவர் முயற்சிகளைத் தடுத்து நிறுத்த என்னை அவ்வப்போது அங்கு வரச் சொல்வாள். இவை எல்லாம் உங்களுக்குத் தெரிந்தவைதாமே!

**தேன்மொழி :** *(கொஞ்சும் குரலில்)*

மங்கைக்கும் என் அண்ணனுக்கும்...

*(கண்ணன் சீற்றத்தோடு விரைந்து எழுந்து கொள்கிறார்.)*

**கண்ணன் :**

மேலே எதுவும் பேசாதே. பூனை அவன்; புறா என் தங்கை. பொருந்தாது இருவர் உறவும்!

**தேன்மொழி :**

அப்படி என்றால் என் அண்ணன் நம் காதலில் குறுக்கிட மாட்டாரா?

**கண்ணன் :**

குறுக்கிட மாட்டான்; குறுக்கிட்டாலும் நிறைய நாட்கள் வெளியே இருக்க மாட்டான்.

**தேன்மொழி :**

அவரே ஒப்புக் கொண்டாலும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்.

**கண்ணன் :**

அஃது உன் விருப்பம். நானும் கட்டாயப்படுத்த மாட்டேன். ஆனால், ஒன்று! என் தங்கையோடு இனியும் அவன் பழக முயன்றால், உயிரோடு இருக்க மாட்டான்; சொல்லி வை.

**தேன்மொழி :** *(எழுந்து நின்றபடி)*

நான் உங்களை வெறுக்கிறேன்; உங்களை விரும்ப நேர்ந்த தற்காகப் பெரிதும் வேதனைப்படுகிறேன். இனி உங்கள் முகத்தில் விழிக்க மாட்டேன்.

*(தேன்மொழி சினத்தோடு வெளியேற, வெளியே அங்கே சுவரோரம் நின்றிருந்த கதிரவனைக் கண்டு கலங்கியபடி நெருங்குகிறார். கண்கள் நீரைச் சிந்துகின்றன.)*

**தேன்மொழி :**

அண்ணா! அவர்... அவர்...

*(தேம்பித் தேம்பித் தேன்மொழி அழுகிறார்.)*

**கதிரவன் :**

அழாதே அம்மா. எல்லாம் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். கண்ணனை எனக்கு நன்றாகவே தெரியும். நல்லவர். என்னால் உன் வாழ்வில் எந்த இடையூறும் நேர இடம் கொடுக்கக் கூடாது. நீ கவலைப் படாதே; எல்லா வற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். வா, போகலாம்.

*(இருவரும் அங்கிருந்து அகல்கின்றனர்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 22

**இடம்** : எழிலியின் வீடு.

**காலம்** : மாலை மணி நான்கு.

**உறுப்பினர்கள்** : மணியரசன், எழிலி.

**சூழல்** : எழிலி ஊஞ்சலில் அமர்ந்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருக்க, திறந்திருந்த கதவு வழியே மணியரசன் உள்ளே எட்டிப் பார்க்கிறார்.

**மணியரசன் :**

உள்ளே வரலாமா?

*(மணியரசனைக் கண்ட எழிலியின் முகம் மலர்கிறது. விரைந்து எழுந்து வந்து வரவேற்கிறார்.)*

**எழிலி :**

நீங்களா! வாருங்கள்; வாருங்கள்.

*(மணியரசன் அங்கும் இங்கும் நோக்கியவாறு உள்ளே வருகிறார்.)*

**மணியரசன் :**

எங்கே யாரையும் காணோம்? வீடு அமைதியாக உள்ளது!

**எழிலி :**

அப்பா சற்று முன்னர்த்தான் வெளியே சென்றார். அம்மா உள்ளே உறங்கிக் கொண்டு இருக்கிறார். நிற்கிறீர்களே; இப்படி உட்காருங்கள்.

**மணியரசன் :**

இந்தக் கடிதத்தை மங்கை உங்களிடம் உடனே சேர்க்கும்படி அனுப்பினார். இது, நான் வாங்கிக் கொண்டு வந்தது; உங்களுக்கு.

*(எழிலி கடிதத்தைப் பெற்றுப் பக்கத்தில் வைத்துவிட்டு, மணியரசன் கொடுத்த பூச்சரத்தை அங்கேயே பிரித்து எதிரிலேயே தலையில் சூடிக்கொள்கிறார். மணியரசன் முகம் மலர்கிறது. அவர் அங்கிருந்த நாற்காலியில் அமர்கிறார்.)*

**எழிலி :**

எல்லோரும் எப்படி இருக்கிறார்கள்?

**மணியரசன் :**

மிகவும் நலமாகவே இருக்கிறார்கள்.

**எழிலி :**

நீங்கள் எப்படி?

**மணியரசன் :**

எனக்கென்ன? நேரிலேயே பார்க்கிறீர்களே! நன்றாகவே உள்ளேன். உங்கள் உதவியால் நிலையான ஓரிடம் கிடைத்து விட்டது. வேறென்ன இன்னும் வேண்டும்?

**எழிலி :**

இப்போது எங்கே தங்கி இருக்கிறீர்கள்?

**மணியரசன் :**

எல்லாம் பழைய இடத்தில்தான். என்ன செய்வது? அருகிலேயே சில வீடுகள் வாடகைக்கு உள்ளன; நான் போய்க் கேட்டால், திருமணம் ஆகிவிட்டதா என்று கேட்கிறார்கள்.

**எழிலி :** *(சிரிப்புடன்)*

நீங்கள் பேசாமல் வந்திருக்க மாட்டீர்களே?

**மணியரசன் :**

பேசினேனே! 'ஐயா, நான் தங்குவதற்குத் தான் வீடு கேட்டு வந்தேன்; உங்கள் பெண்ணைக் கேட்டில்லை; நான் முன்னரே ஒரு பெண்ணைப் பார்த்து முடிவு செய்து வைத்துள்ளேன்; எனவே, உங்கள் பெண் வேண்டா' என்று அடித்துச் சொல்லிவிட்டேன்.

**எழிலி :**

அடடே! பிறகு?

**மணியரசன் :**

இன்னொருவர், 'தனியாளா? வீடு கிடையாது', என்றார். விட்டேனா? 'ஏனய்யா, உங்கள் வீட்டுப் பெண்களின் நடத்தையில் அத்துணை நம்பிக்கையா?' கேட்டேனே! அவன் உம்மென்று முறைத்தான்.

**எழிலி :**

அவ்வளவுதானா?

**மணியரசன் :**

அதுதான் இல்லை. அடிக்க வந்தானே! 'ஐயா, என்னை ஏன் அடிக்க வருகிறீர்கள்? காலில் கிடக்கிறதே, அதை எடுத்து உங்கள் அறியாமைக்காக உங்களையே அடித்துக் கொள்ளுங்கள்', என்று அறிவுரை கூறினேன்.

**எழிலி :**

பிறகு அங்கு என்ன நடந்தது?

**மணியரசன் :**

எனக்கு எப்படித் தெரியும்? அப்போதே ஓடி வந்து விட்டேனே!

**எழிலி :**

அச்சமாக்கும்?

**மணியரசன் :**

அச்சமா? அஃதும் எனக்கா? சே! சே! அவன் முகத்தைப் பார்க்கவே எனக்கு என்னவோ போல் இருந்தது; அதனால் தான் வந்து விட்டேன்.

**எழிலி :**

நன்றாகவே பேசுகிறீர்கள்!

**மணியரசன் :**

என்னிடம் பேசிக் கொண்டே இருக்கிறீர்களே; மங்கை யின் கடிதத்தைத் திறந்து படியுங்கள்.

**எழிலி :** *(புன்னகையுடன்)*

அவள் கடிதம் என்னோடு இங்கு இருக்கப் போவது; நான் எப்போது வேண்டும் என்றாலும் படித்துக் கொள்ளலாம். ஆனால், நீங்கள்? உடனே போகவேண்டும் என்பீர்கள். உங்களோடு பேசிக்கொண்டு இருந்தால் உள்ளம் அமைதி அடைகிறது. இருங்கள்; அம்மாவை அழைக்கிறேன்.

*(எழிலி எழுகிறார்.)*

**மணியரசன் :**

தூங்குபவரை எதற்குத் தொல்லைப்படுத்துகிறீர்கள்?

**எழிலி :**

உங்களைப் பார்த்தால் அம்மா மகிழ்ச்சி கொள்வார். அப்பாவும் அம்மாவும் உங்களைப் பற்றிப் பேசாத நாளே இல்லை எனலாம். அத்துணை மதிப்பு அவர்களுக்கு உங்களிடம்! நாளும் பணம், பணம் என்று அலைந்து கொண்டு இருந்தவர், இன்று நல்லவைகளுக்காகத் தேடிச் சென்று பண உதவி அளித்து வருகிறார். எத்துணை நல்ல மாற்றம்! எல்லாம் உங்களால்தாம்.

**மணியரசன் :**

நீங்கள் என்னைத் தகுதிக்கு மீறிப் பாராட்டுகிறீர்கள்; நன்றி.

**எழிலி :**

இருக்கட்டும். கொஞ்சம் பொறுங்கள்; அப்படியே சிற்றுண்டியும் எடுத்து வருகிறேன்.

*(எழிலி உள்ளே செல்கிறார்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 23

| | | |
|---|---|---|
| **இடம்** | : | வழக்கு மன்ற வளாகம். |
| **காலம்** | : | மாலை மணி நான்கு. |
| **உறுப்பினர்கள்** | : | கண்ணன், காவற்றுறை ஆய்வாளர் அரிச்சந்திரன். |
| **சூழல்** | : | வழக்காடு மன்றத்தை விட்டுக் கண்ணன் வெளியே வருகிறார். அப்போது அரிச்சந்திரன் இடையே சந்திக்கிறார். |

**அரிச்சந்திரன் :**

வணக்கம். என்னுடைய நல்வாழ்த்துக்கள்.

*(அரிச்சந்திரன் கண்ணனின் வலக் கையைத் தன்னிரு கைகளால் பற்றி மகிழ்ச்சியோடு குலுக்குகிறார்.)*

**கண்ணன் :**

வணக்கம். உங்கள் வாழ்த்துக்களுக்கு நன்றி.

*(கண்ணன் தன் கையினை விடுவித்துக் கொள்கிறார்.)*

**அரிச்சந்திரன் :**

எனக்கு எத்துணை மகிழ்ச்சி தெரியுங்களா! எத்தனையோ பேர்கள் அரசு வழக்குரைஞர்களாக இதற்கு முன்னர் ஆகி உள்ளனர். ஆனால், பெரும்பாலும் ஆட்சியில் உள்ள கட்சி யினரைச் சார்ந்தவர்களாகவே இருப்பர். நீங்கள் ஒருவர் தான் வெளியார் எவரின் பரிந்துரையும் இன்றிப் பணி அமர்த்தப் பட்டிருக்கிறீர்கள்!

**கண்ணன் :**

இஃதென்ன அத்துணைச் சிறப்புள்ள பணியா, அகம் மகிழ்வதற்கு?

**அரிச்சந்திரன் :**

நிச்சயமாக! உங்களுக்கே தெரியும் அரசு சார்ந்த வழக்குகளில் நிலவும் ஊழல்களைப் பற்றி. பெரும்பாலான அரசு வழக்குகள் தோற்றுப் போகின்றனவே; ஏன்? வழக்கு களின் வலிவின்மையாலா? இல்லையே. அரசியல் தலையீடு, அரசு வழக்குகள் தாமே என்கிற அக்கறை இன்மை, இன்னும் என்னென்னவோ! இவை எல்லாம் உங்களிடம் எடுபடாது இல்லையா? அதுதான் எனக்கு மகிழ்ச்சி.

**கண்ணன் :**

நன்றி, அரிச்சந்திரன். உங்கள் நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் எந்தக் குறையும் ஏற்படாது நடந்து கொள்வேன்; என்னை முழுக்க நம்பலாம்.

**அரிச்சந்திரன் :**

எனக்குத் தெரியாதா? எப்போது பொறுப்பு எடுத்துக் கொள்கிறீர்கள்?

**கண்ணன் :**

இன்னும் இரண்டொரு நாட்களில். வாருங்கள்; பேசிக் கொண்டே போகலாம்.

*(இருவரும் நடக்கின்றனர்.)*

**அரிச்சந்திரன் :**

உங்களுக்குத் தெரியுமா? விடுதி விண்மீனின் மேலாளர் இரண்டு நாட்களுக்கு முன்னர் விடுதலை ஆகி உள்ளார்.

**கண்ணன் :**

தண்டனைக் காலம் முடிந்தால் விடுதலையாக வேண்டியதுதானே! அதைப் பற்றி இப்போது என்ன?

**அரிச்சந்திரன் :**

காரணம் இருக்கிறது. நீங்கள் எதற்கும் எச்சரிக்கையாய் இருப்பது நல்லது.

**கண்ணன் :**

ஏன்? என்ன செய்தி?

**அரிச்சந்திரன் :**

முத்தப்பர், அதுதான் அந்த மேலாளர் பெயர்; சரியான ஆள் இல்லை. அவருக்குப் பலவகையான குற்றவாளி களுடைய தொடர்புகள் உள்ளன. ஆண்டவருக்கு அவர் மனைவி வழி நெருங்கிய சொந்தம் என்பதால், அவரால் அவரை எதுவும் செய்யக் கூடவில்லை.

**கண்ணன் :**

கவலை வேண்டா; நான் கவனமாக இருப்பேன்.

**அரிச்சந்திரன் :**

உங்களால்தான் அவர் தண்டனைக்கு உள்ளானார். அதை அவர் மறக்கவில்லை. பழிக்குப் பழி வாங்கப் போவதாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்; கேள்விப் பட்டேன். அதனால்தான் உங்களிடம் சொல்ல வந்தேன்.

**கண்ணன் :**

மிக்க நன்றி. வருகிறேன்; பிறகு பார்க்கலாம்.

❀ ❀ ❀ ❀ ❀

## காட்சி - 24

இடம் : கண்ணனின் வீடு.

காலம் : இரவு மணி எட்டு.

உறுப்பினர்கள் : கண்ணன் மணியரசன், தங்கப்பர், மங்கை, எழிலி, எழிலியின் தாய்.

சூழல் : மங்கையும் தேன்மொழியும் கூடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கின்றனர்.

**தேன்மொழி :**

உன் அண்ணனை நான் எத்துணையோ உயர்வாக எண்ணி இருந்தேன்; ஆனால், இவ்வளவு விரைவில் அது பொய்த்துப் போய்விடும் என்பது தெரியாது. மற்றவர் கருத்துக் களை மதித்து ஏற்க வேண்டா; அவை என்ன என்றாவது கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடாதா? அவரோடு எப்படித் தான் இத்தனை காலம் நீ குப்பைக் கொட்டினாயோ?

**மங்கை :**

என் அண்ணனை நீ அறிந்து கொண்ட அழகு அவ்வளவு! எதையும் அவர் எண்ணிச் செய்வார்; செய்வதையும் திருந்தச் செய்வார். எண்ணம், பேச்சு, செயல் எல்லாமே நல்லதாக, பிறர்க்கு நலம் பயப்பதாக இருக்க வேண்டும். இதைக் கொள்கையாக அன்று, வாழ்க்கையாகவே கொண்டவர் என் அண்ணன். அவர் எதைச் செய்தாலும் அது பிறர் நன்மைக் காகவே அமையும்.

**தேன்மொழி :**

அஃதென்னவோ? எனக்குப் புரியவில்லை. பின்னெதற்கு அன்று உன்னிடம் அத்துணைக் கடுமையாக நடந்து கொண்டார்?

**மங்கை :**

அவர் அப்படி நடந்து கொண்டதில் என்ன தவறு கண்டாய்? உன் அண்ணனைப் பற்றி அவர் சொன்னவை

உண்மை அல்லவா? உனக்குத்தான் எல்லாம் தெரியுமே; நீ சொல்.

**தேன்மொழி :** *(வியப்புடன்)*

எல்லாமே உனக்குத் தெரியுமா?

**மங்கை :**

ஏன் தெரியாமல்? உன் அண்ணனைப் பற்றி அன்று அவர் சொன்னவை அனைத்தும் முழுக்க முழுக்க உண்மை!

**தேன்மொழி :**

தெரியுமா? தெரிந்துமா இன்னும் அவரோடு நெருங்கிப் பழகி வருகிறாய்?

**மங்கை :**

என்னோடு பழகுதற்கு முன்னர், அவர் எப்படி இருந்திருந்தால் எனக்கென்ன? அதைப்பற்றிக் கவலைப்பட்டு ஆகப் போவதென்ன? இப்போது எப்படி நடந்து கொள்கிறார்? அதுபற்றித்தானே எனக்கு அக்கறை இருக்கவேண்டும்.

**தேன்மொழி :**

உன் காதல் இத்துணை உயர்வானதா?

**மங்கை :**

மண்ணாங்கட்டி! என் காதலில் எதுவும் இல்லை. தோல்வி அடைந்தாலும் துவண்டிட மாட்டேன். ஆனால், உன் அண்ணனின் அன்பு? அதற்கு எல்லையே இல்லை! எனக்காக எதையும் செய்வார். உயிரே உனக்காக! இவை அவர் உணர்ச்சியின் உச்சத்தில் உரைத்தவை இல்லை; உள்ளார்ந்த அன்பின் பெருக்கத்தில் உருகிக் கரைந்து உதிர்த்தவை! உன்னால் விரும்பப்படுபவனைக் காட்டிலும் உன்னை விருப்புகிறவன் வாழ்க்கைக்கு மேலானவன் என்பது என் துணிபு. உன் அண்ணனின் அன்பிற்கு உகந்தவளாக நான் என்றும் இருக்க வேண்டும்; என் சிந்தனை எப்போதும் இங்கு அதுவே! அவரை ஒருநாளும் நான் ஏமாற்ற மாட்டேன்.

**தேன்மொழி :**

நீ தெளிவாகச் சிந்திக்கிறாய். உன்னை அடைய என் அண்ணன் உண்மையில் ஏதேனும் நல்லது செய்திருக்க வேண்டும். அது சரி; உன் காதலைக் கண்ணன் எதிர்க்கிறாரே, என்ன செய்யப் போகிறாய்? அவர் மனதை மாற்ற உன்னால் முடியுமா?

**மங்கை :**

என்னால் முடியாது; ஆனால், எழிலியால் முடியும்.

**தேன்மொழி :**

என்ன சொல்கிறாய்?

**மங்கை :**

எழிலி சொன்னால் அண்ணா மறுக்க மாட்டார்; அவளிடம் அத்துணை அன்பு.

**தேன்மொழி :**

தவறாக இருந்தாலுமா?

**மங்கை :**

அவள் என்றைக்கும் தவறுக்குத் துணைப்போக மாட்டாள். அவள் எடுக்கும் முடிவு சரியானதாகவே இருக்கும். அண்ணா விற்கு அது நன்றாகத் தெரியும்.

**தேன்மொழி :**

அவள் உனக்காகப் பரிந்து பேசுவாளா?

**மங்கை :**

பேசாமல்? எல்லாவற்றையும் விளக்கமாக எழுதி மணியரசன் மூலம் அனுப்பி வைத்திருந்தேன்; அவள் உடனே வருவாள். காலையில் இருந்து அவளுக்காகவே காத்திருக் கிறேன். இந்நேரம் வந்திருக்க வேண்டும்; ஏனோ இன்னும் காணோம். நேற்றே திரும்பிவிடுவதாகச் சொல்லிச் சென்ற மணியரசனையும் காணோம்.

*(அப்போது வெளியே வண்டி வந்து நிற்கும் ஓசை கேட்கிறது. வாடகை வண்டியினின்று இறங்கி மணியரசன்,*

*எழிலி, எழிலியின் தாய், தந்தை தங்கப்பர் உள்ளே வருகின்றனர். விரைந்து சென்று எழிலியைக் கட்டி அணைத்துக் கொள்கிறார் மங்கை.)*

**மங்கை :**

வாருங்கள் மாமா; வாருங்கள் அத்தை. ஏன் இவ்வளவு நேரம்?

*(எல்லோரும் உள்ளே வருகின்றனர். தங்கப்பர் நாற்காலி யில் அமர்ந்து கொள்கிறார்.)*

**மங்கை :**

என்னம்மா செய்வது? நேரத்திற்குப் பேருந்து கிடைக்க வேண்டாவா?

**மணியரசன் :**

பொய்; பொய்.

**தங்கப்பர் :**

எதப்பா பொய்?

**மணியரசன் :**

நாம் புறப்பட்டதே காலம் தாழ்த்தித்தானே?

**தங்கப்பர் :**

பொய்தான்; அதனால் என்ன? பொய் சொன்னால் தப்பில்லை என்று நீதானப்பா சொன்னாய்.

**மணியரசன் :**

நானா? எப்போது?

**தங்கப்பர் :**

வள்ளுவர் சொல்லி இருக்கிறார் என்று போனமுறை நான் இங்கு வந்தபோது சொன்னாயே; அதற்குள்ளா மறந்து போகும்?

**மணியரசன் :**

ஆமாம்; சொன்னேன். அதற்காக, எதற்கெடுத்தாலும் பொய் சொல்லுவதா?

**தங்கப்பர் :**

சொன்னதால் என்ன தவறு நடந்து விட்டது?

**மணியரசன் :**

என்ன நன்மை விளைந்தது?

**தங்கப்பர் :**

உன்னோடு என்னால் பேச முடியாது; நேரத்திற்கு ஏற்ப நீ பேசக் கற்றிருக்கிறாய்! எங்கே கண்ணன்?

**மங்கை :**

இப்போது வந்துவிடுவார். நீங்கள் பேசிக் கொண்டு இருங்கள்; நான் உணவுக்கு ஏற்பாடு செய்கிறேன்.

*(எழிலியின் தாய் மங்கையைத் தடுத்து நிறுத்துகிறார்.)*

**தாய் :**

நீ பேசிக் கொண்டு இரு; நான் போய் ஏற்பாடு செய்கிறேன்.

*(எழிலியின் தாய் சமையல் அறைக்குச் செல்கிறார். மணியரசன் புறப்படுகிறார்.)*

**மணியரசன் :**

ஐயா, நான் காலையில் வந்து பார்க்கிறேன்.

**தங்கப்பர் :**

சரி தம்பி.

**மங்கை :**

மணி, கொஞ்சம் பொறுங்கள்; உண்டு விட்டுச் செல்லலாம்.

**மணியரசன் :**

இருக்கட்டும்; நாளை வருகிறேன்.

*(மணியரசன் புறப்பட்டு வெளியேற, பெண்கள் மூவரும் தனித்துப் பேச உள்ளறைக்குச் செல்கின்றனர். சிறிது நேரத்தில் கண்ணன் அங்கு வந்து சேருகிறார்.)*

**கண்ணன் :**

வாருங்கள் மாமா; வந்து நிறைய நேரமாகி விட்டதா?

**தங்கப்பர் :**

இல்லை; ஓர் அரை மணி நேரம் இருக்கும்.

*(கண்ணன் எதிரே அமருகிறார்)*

**கண்ணன் :**

இப்போது எழிலிக்கு ஓரிடம் பார்த்துள்ளதாக எழுதி இருந்தீர்களே; எப்படி?

**தங்கப்பர் :**

அந்தக் கூத்தை என்ன என்பது? எழிலிக்கு இனி என்னால் மாப்பிள்ளை பார்க்க இயலாது. நான் பார்க்கிற எந்தப் பையனும் சரியாக அமைவது இல்லை. ஏனென்று எனக்கும் புரிவதில்லை. இதோ, இந்தக் கடிதத்தைப் பார்.

*(கண்ணன் அவர் நீட்டிய கடிதத்தை வாங்கிப் படிக்கிறார்.)*

**கண்ணன் :**

இதைப் பற்றி யாரிடமேனும் கேட்டீர்களா?

**தங்கப்பர் :**

இன்று காலையில் அதுதான் எனக்கு முதல் வேலை! பையனைப்பற்றி வெளிப்படையாக எதுவும் தெரிந்து கொள்ளக் கூடவில்லை. ஆனால், நான் பேசிய அத்தனை பேரிடமும் ஒருவகைத் தயக்கம் இருந்தது.

**கண்ணன் :**

அப்புறம்?

**தங்கப்பர் :**

அதுதான் முதலிலேயே சொன்னேனே; இனி, நானாகப் போய் எந்தப் பிள்ளையையும் பார்ப்பதாக இல்லை. புறப்படும் போது உன் அத்தை ஒன்று சொன்னாள்; எனக்கும் அது நல்லதாகவே படுகிறது. அதைப்பற்றி நீ தான் முடிவு செய்ய வேண்டும்.

**கண்ணன் :**

அதற்கென்ன? சொல்லுங்கள்.

**தங்கப்பர் :**

இப்போது வேண்டா; இன்னொரு நாளைக்கு மெதுவாய்ப் பேசுவோம்.

**கண்ணன் :**

சரி மாமா. எழிலி எங்கே? காணோம்.

*(கண்ணன் எழுந்து உள்ளறையை நாடிச் செல்கிறார். தங்கப்பரும் எழுந்து அவரைத் தொடர்கிறார்.)*

**எழிலி :**

நீ சரி இல்லை. இவ்வளவு நடந்துள்ளன! இருந்தும், அவரை உன் காலடியில் விழ வைக்க உன்னால் முடியவில்லை.

**கண்ணன் :** *(அறைக்குள் நுழைந்தபடி)*

எழிலி! என்ன சூழ்ச்சி இங்கு அரங்கேறுகிறது? யார் காலில் யாரை விழச் சொல்கிறாய்?

*(அங்கு அமர்ந்து இருந்த பெண்கள் மூவரும் எழுந்து கொள்கின்றனர்.)*

**எழிலி :**

உங்களைத்தான் தேன்மொழியின் கால்களில் விழச் சொன்னேன்.

**கண்ணன் :**

அதனால் என்ன? நீ விழச் சொன்னால் மறுக்கவா போகிறேன்?

**தேன்மொழி :**

மங்கை, நான் போகிறேன்.

**கண்ணன் :**

ஏன்? உண்டு விட்டுப் போயேன்.

**தேன்மொழி :**

எழிலி, காலையில் வருகிறேன்.

*(தேன்மொழி கண்ணனைத் திரும்பியும் பாராது விரைந்து வெளியேறுகிறார்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 25

**இடம்** : கண்ணனின் வீடு.

**காலம்** : இரவு மணி பத்து.

**உறுப்பினர்கள்** : கண்ணன், மங்கை, எழிலி, தேன்மொழி.

**சூழல்** : நடுக்கூடத்தில் கண்ணனும் எழிலியும் பேசிக்கொண்டு இருக்கின்றனர். அறைக் கதவைப் பிடித்தபடி மங்கை மறைவில் நின்றபடி அவர்கள் பேசுவதைக் கவனித்துக் கொண்டு இருக்கிறார்.

**எழிலி :**

இவ்வளவு நேரம் நான் எடுத்துச் சொல்லியும் நீங்கள் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்களே!

**கண்ணன் :**

நீ மட்டும் என்ன? மங்கை சொன்னவைகளை அப்படியே நம்புகிறாய்; ஆனால், நான் சொல்வதைக் கேட்கவே மறுக்கிறாய்.

**எழிலி :**

உங்கள் பேச்சில் உள்ள உண்மைகள் எனக்குப் புரியாமல் இல்லை. உங்கள் தொழிலுக்கு ஒப்ப, இதை ஒரு வழக்காகக் கொண்டு அலசி நீங்கள் ஆராய்கிறீர்கள்; அது சரி இல்லை. இது வாழ்க்கை; வழக்கு இல்லை. காதலைப் பிறர் திணிக்கவும் முடியாது; பிறரால் தணிக்கவும் முடியாது. காதல் என்பது இரு உள்ளங்களின் உள்ளார்ந்த ஒருங்கிணைப்பு; ஏற்றத்

தாழ்வுகள் அங்கு இயல்பாய் எழுவது இல்லை. காதலிக்கும் போது குறைகள் கண்ணில் படா; அப்படிப்படினும், அவை ஒரு பொருட்டாகத் தோன்றா.

**கண்ணன்**

கண்ணெதிரில் தெரிந்தே தவறு நடக்கிறது; கண்டிக்க வேண்டாவா?

**எழிலி :**

எடுத்துச் சொல்லலாம்; ஏற்கவில்லை என்பதற்காக அடித்து அழிப்பதா? இது காதல்! காதலுக்குக் கண்ணில்லை என்பதெல்லாம் இன்றைய பெண்களுக்குப் பொருந்தாது. எதையும் எண்ணித் துணியும் இயல்பைப் பெற்று உள்ளனர். அவர்கள் ஏமாற மாட்டார்கள். மங்கை, தன் வாழ்வைத் தானே அமைத்துக்கொள்ள விரும்புகிறாள்; அவள் விருப்பத்தை நாம் ஏன் தடுக்க வேண்டும்?

**கண்ணன் :**

எனக்கு இது சரியாகப் படவில்லை.

**எழிலி :**

இதை நீங்கள் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். மங்கை இதற்கு முன் எதற்குமே ஆசை கொண்டவள் இல்லை. இது வேண்டும்; இது வேண்டா என்று என்றாவது விளையாட்டிற்கேனும் சொல்லியது உண்டா? உங்களுக்குத் தெரியுமே. வாழ்க்கையிலேயே முதல்முறையாக இப்போது தான் ஆசைபட்டிருக்கிறாள்! அவள் ஆசை நிறைவேற வேண்டும். அவள் மகிழ்ச்சிதான் அனைவர் மகிழ்ச்சியும்.

**கண்ணன் :**

அந்த மகிழ்ச்சி இறுதி வரை நிலைத்திருக்க வேண்டுமே! வேறென்ன?

**எழிலி :**

இன்பம், துன்பம் இரண்டும் அவரவர் ஏற்கின்ற இயல்பைப் பொறுத்து மாறுபடும். துன்பத்தையும் இன்பமாக்கிக் கொள்ளும் துணிவு மிக்கவள் மங்கை. வாழ்க்கை ஓட்டத்தைத் தன்

மனதின் எண்ணத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொள்ளும் திண்மை அவளுக்கு உண்டு. அவள் எதிர்காலம் இனிதாகவே அமையும். அவள் வாழ்க்கையைப்பற்றி நாம் அஞ்சிக் கொண்டிருப்பது பேதைமை!

**கண்ணன் :**

கூடாது என்பதற்குக் கோடி காரணங்களை நான் கூற முடியும்; ஆனால், கேட்கும் நிலையில் இங்கு யாரும் இல்லை. வழக்குகளிலும் பெரும்பான்மையர் தீர்ப்பே சரி என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது! சரி; ஒப்புக் கொள்கிறேன். அண்ணன் என்ற பொறுப்பு; சொல்ல வேண்டியதைச் சொன்னேன். நடப்பவை நடந்தே தீரும்; அவை நல்லவை களாய் அமைந்தால் மகிழ்ச்சி.

**எழிலி :** *(மகிழ்ச்சியுடன்)*

அத்தான் என்றால் அத்தான்தான்! தேன்மொழி கொடுத்து வைத்தவள்.

**கண்ணன் :**

என்ன புதிர் போடுகிறாய்? யாரிடம் என்ன கொடுத்து வைத்திருக்கிறாள்?

**எழிலி :** *(சிரித்தபடி)*

போதும் அத்தான் விளையாட்டு. எனக்கு இப்போது தான் மகிழ்ச்சி.

**கண்ணன் :**

அது போகட்டும். மாமா ஏதோ கடிதம் என்று சொன்னாரே, எப்போது அது வந்தது?

**எழிலி :**

நேற்று மாலை ஆறு மணி இருக்கும்; ஒரு பையன் வந்து, யாரோ கொடுக்கச் சொன்னதாகச் சொல்லிக் கொடுத்து விட்டுப் போனான்.

**கண்ணன் :**

மணியரசன் அப்போது அங்கிருந்தாரா?

**எழிலி :**

இல்லையே; ஏன் கேட்கிறீர்கள்?

**கண்ணன் :** *(புன்முறுவலுடன்)*

ஒன்றும் இல்லை.

*(கண்ணன் தன் அறையை நாடிப் போகிறார். எழிலி சிந்தனையோடு நிற்க, மங்கை ஓடி வந்து அவளை அணைத்துக் கொள்கிறார்.)*

**மங்கை :**

எழிலி, எனக்கு இப்போதே உயிர் வந்தது! எனக்குத் தெரியும் உன்னால் எதுவும் முடியும் என்று.

*(அப்போது வெளியே வண்டி வந்து நிற்கும் ஒலியும் வண்டிக் கதவு விரைந்து அறைந்து மூடும் ஓசையும் கேட்கின்றன. சில வினாடிகள் இடைவெளியில் தேன்மொழி உள்ளே விரைந்து ஓடி வருகிறார். அதிர்ச்சியும் கலக்கமும் அவள் முகத்தில் தெரிகின்றன.)*

**மங்கை :** *(மகிழ்ச்சியுடன்)*

தேன்மொழி வா; வா. அண்ணன் சரி என்று ஒப்புக் கொண்டு விட்டார்.

*(தேன்மொழி, மங்கை சொன்னதைக் கவனிக்காத வளாய்ப் பரபரக்கிறார்.)*

**தேன்மொழி :**

எங்கே அவர்? எங்கே உன் அண்ணார்?

*(கண்ணன் தேன்மொழி குரல் கேட்டு அங்கே விரைந்து வந்து சேருகிறார்.)*

**கண்ணன் :**

என்ன? என்ன?

**தேன்மொழி :** *(பதட்டத்துடன்)*

என் அண்ணன் நிறையக் குடித்துவிட்டு வண்டியில் எங்கோ போனார்!

**கண்ணன் :** *(ஏளனச் சிரிப்போடு)*

இதற்குத்தானா இத்துணை ஆர்ப்பாட்டம்! அவன் குடிப்பது என்பது புதுமையா?

**தேன்மொழி :**

நான் இதற்கு முன் பார்த்தது இல்லையே! தற்கொலை செய்து கொள்ளப் போவதாக வேறு பிதற்றிக் கொண்டு இருந்தார்.

*(மங்கை, கலக்கத்தோடு வந்து கண்ணன் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுகிறாள்.)*

**மங்கை :**

அண்ணா, ஏதாவது செய்; எனக்கு அச்சமாக இருக்கிறது.

**கண்ணன் :** *(அமைதியாக)*

அச்சம் எதற்கு? நீயாக விரும்பி ஏற்ற முடிவுதானே? நான் சொன்னதை நம்ப மறுத்தாய்; என்னையே இகழ்ந்தாய்! இப்போது என்ன ஆயிற்று?

*(எழிலி இடையில் குறுக்கிட்டுப் பேசுகிறாள்.)*

**எழிலி :**

அத்தான், நீங்கள் பேசுவது சரி இல்லை! எப்போது எதைப் பேசுவது என்பது உங்களுக்குத் தெரியாதா?

**கண்ணன் :**

சரி; சரி; நீ, சீறாதே. நடப்பது நடந்தே தீரும்! தேன்மொழி, வா, போகலாம்.

*(கண்ணன் வீதிக்காக நடக்கிறான். பெண்கள் மூவரும் தொடர்கின்றனர்.)*

**தேன்மொழி :**

அண்ணன் எங்கே போயிருக்கிறார் என்பது தெரியுமா?

**கண்ணன் :**

ஏன் தெரியாமல்? கழுதை கெட்டால் குட்டிச்சுவர்! வழக்கமாய் உன் அண்ணன் போகும் விடுதி எனக்குத் தெரியும்; அவன் வேறெங்கும் போக மாட்டான்.

*(கண்ணனும் தேன்மொழியும் வண்டியில் ஏறிச் செல்கின்றனர். மங்கையும் எழிலியும் வீட்டிற்குள் திரும்பு கின்றனர்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 26

**இடம்** : உயர் உணவு விடுதியின் மாடித் தோட்டவெளி உணவகம்.

**காலம்** : இரவு மணி பதினொன்று.

**உறுப்பினர்கள்** : அறிவாளன், கதிரவன், கண்ணன், தேன்மொழி, கோதை.

**சூழல்** : ஓரமான பகுதியில் அமைந்த உணவு மேசை; அறிவாளனும் கோதையும் உணவருந்தியபடி உரையாடிக் கொண்டு இருக்கின்றனர்.

**அறிவாளன் :**

நீ செய்வது சரி இல்லை. எவ்வளவு பணம் வேண்டும் என்றாலும் பெற்றுக் கொள்; தருகிறோம். ஆனால், அத்தோடு விட்டுவிட வேண்டும். பிறகு எந்தக் காலத்திற்கும் தொடர்பு கொள்ளக் கூடாது.

**கோதை :**

அஃதெல்லாம் முடியாது. பணம் மட்டுமே வாழ்க்கை இல்லை. பணம் தேவைதான்; ஆனால், எனக்கு அவரை விட்டால் யார் இருக்கிறார்கள்?

**அறிவாளன் :**

அதற்காக என்ன செய்யச் சொல்கிறாய்?

**கோதை :**

நான் கதிரவனை என் உயிரினும் மேலாக விரும்பு கிறேன்; உங்களுக்குத் தெரியாதா?

**அறிவாளன் :**

தெரியும்.

**கோதை :**

தெரிந்துமா என்னை அவரிடமிருந்து பிரிந்து செல்லச் சொல்கிறீர்கள்?

**அறிவாளன் :**

எனக்கும் வருத்தமாய்த்தான் உள்ளது. வேறு வழி? நீ அவனை நெஞ்சார விரும்புகிறாய்; உண்மைதான். அதைக் குறைத்து நான் எதுவும் உரைக்க மாட்டேன். உன் காதலைக் கதிரவனும் உணர்ந்தே உள்ளான்; ஆனால், அவன் உன்னைக் காதலித்தது இல்லை. உன் உடல் அவனுக்கு வேண்டியதாய் இருந்தது; அதனால், உன்னோடு விரும்பி உறவு வைத்துக் கொண்டான்.

**கோதை :**

இப்போது மட்டும் என்ன நடந்தது?

**அறிவாளன் :**

இப்போது போலவே அவன் எப்போதும் இருந்துவிட முடியாது. அவனைச் சுற்றி ஒரு குடும்பம் உள்ளது; அதற்காகச் சில கடமைகள் அவனுக்கு உண்டு. திருமணம் செய்து கொண்டு திருந்தி வாழ வேண்டியவன் அவன்!

**கோதை :**

ஏன்? எனக்கென்ன குறை?

*(கோதையின் குரலில் துயரமும் ஏக்கமும் இழை யோடுகின்றன.)*

**அறிவாளன் :**

புரிந்தும் புரியாமல் பேசினால் எப்படி? முதலில், உன்னைத் திருமணம் செய்து கொள்ளும் அளவிற்கு அவன்

உன்மேல் அன்பு கொண்டிருக்கவில்லை. நீயோ, முன்னரே திருமணம் ஆனவள்; ஒழுக்கக் கேட்டிற்காக வழக்குமன்றத்தில் நிறுத்தப்பட்டவள்.

**கோதை :**

என் ஒழுக்கத்தை நீங்களும் ஐயப்படுகிறீர்களா?

**அறிவாளன் :**

இல்லை; இல்லை. நான் எல்லாம் அறிவேன். நாம் படித்தவர்கள்; பட்டறிவு பெற்றவர்கள். வாழ்க்கை நடைமுறை இயல்பை ஒப்புக் கொண்டே ஆகவேண்டும். நீ விட்டுக்கொடு; விட்டுக் கொடுப்பதுதான் உண்மையான வாழ்க்கை. கதிரவனிடமிருந்து நீ ஒதுங்கிக் கொள்.

*(கோதையின் கண்கள் கலங்குகின்றன.)*

**கோதை :**

கட்டிய கணவனை அவருக்காக விட்டுவிட்டு வந்தவள் ஆயிற்றே நான்; என் நிலை என்னாவது?

**அறிவாளன் :**

அவன் உண்மையாகவே ஒரு பெண்ணை உளமார விரும்புகிறான்; திருமணம் செய்து கொள்ளவும் விழைகிறான். அதைத் தடுக்கலாமா?

**கோதை :**

தடுக்கலாம்; அதில் எந்தத் தவறும் இல்லை. இன்னொருத்தியை அவர் திருமணம் செய்து கொண்டு விட்டால், என்னை ஏறெடுத்தும் பிறகு பார்க்க மாட்டார்; அப்புறம் நானென்ன செய்வேன்? நானென்ன விலைமகளா? என் எதிர்காலத்தைப்பற்றி நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டாவா?

**அறிவாளன் :**

அதற்காக நீ அச்சுறுத்துவது சரி இல்லை. உங்கள் உறவு ஊர் அறியாதது; அதை வெளிச்சம் போட்டுக் காட்டுவேன் என்பது வீண். உன்னால் என்ன செய்ய முடியும்?

**கோதை :**

என்னால் முடியும்; முன்னரே சொல்லி உள்ளேன். என்னிடம் சில படங்கள் இருக்கின்றன; அவையே போதுமானவை!

**அறிவாளன் :**

இதையே எத்தனை நாட்கள் சொல்லிக் கொண்டு இருப்பாய்? உன் முடிவு தான் என்ன?

**கோதை :**

அவர் எனக்கு வேண்டும்; அவரின்றி எனக்கு வாழ்க்கை இல்லை. அவர் திருமணம் செய்துகொள்ளட்டும்; ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், என்னை அவர் புறக்கணிக்கக்கூடாது.

*(கோதையின் கண்களிலிருந்து கண்ணீர் வழிகின்றது.)*

**அறிவாளன் :**

நீ சொல்வது முறையாகப்படவில்லை; இருப்பினும் உனக்காகப் பேசிப் பார்க்கிறேன்.

*(அப்போது கதிரவன் அங்கு வருகிறார். அவரைக் கண்டதும் அறிவாளன் எழுந்து தாங்கி அருகே அமர வைக்கிறார். பின்னர் அவரிடம் பேச்சைத் தொடர்கிறார்.)*

**அறிவாளன் :**

நான் முடிந்தவரைப் பேசி உள்ளேன். நான் போகிறேன்; நீ மீண்டும் பேசிப் பார்.

*(அறிவாளன் அங்கிருந்து நீங்குகிறார். கதிரவன் கோதை அருகில் நகர்ந்து நெருங்கி அமருகிறார்.)*

## காட்சி - 27

**இடம்** : உணவு விடுதியின் வண்டிகள் நிறுத்திடம்.

| | | |
|---|---|---|
| **காலம்** | : | இரவு மணி பன்னிரண்டு. |
| **உறுப்பினர்கள்** | : | கண்ணன், கதிரவன், தேன்மொழி, கோதை. |
| **சூழல்** | : | கண்ணனும் தேன்மொழியும் வண்டியில் அமர்ந்தவாறு கதிரவன் வருகைக்காகக் காத்திருக்கின்றனர். |

**தேன்மொழி :**

இன்னும் எவ்வளவு நேரம் இங்குக் காத்திருப்பது? உள்ளே சென்று பார்ப்போமா?

**கண்ணன் :**

பொறு; இந்தப் பெரிய விடுதியில் எங்கென்று தேடுவது? உன் அண்ணன் வந்த வண்டி அதோ நிற்கிறது; எப்படியும் இங்கு வந்தே ஆக வேண்டும்.

**தேன்மொழி :**

அதோ! அதோ! அண்ணா வருகிறார். உடன் யாரோ ஒரு பெண் வருகிறாளே?

*(கதிரவனும் கோதையும் வண்டிக்காக வருகின்றனர்.)*

**கண்ணன் :**

அந்தப் பெண் பெயர் கோதை; உன் அண்ணனுக்கு மிகவும் நெருக்கமானவள்.

*(கதிரவனும் கோதையும் வண்டியில் அமர்ந்து செல்கின்றனர்.)*

**கண்ணன் :**

மெல்ல அவர்களைத் தொடர்ந்து செல். பெரும்பாலும் இந்த நேரத்தில் அவர்கள் அந்தப் பெண் வீட்டிற்குத்தான் செல்லக் கூடும்.

*(தேன்மொழி, முன் சென்ற வண்டியைத் தொடர்ந்து தன் வண்டியை ஓட்டிச் செல்கிறார். பல மணித்துளிகள் பயணத்திற்குப் பிறகு, முன் சென்ற வண்டி ஒரு வீட்டினுள்*

*நுழைகிறது. தேன்மொழி வண்டியை வாயில் வழியைத் தாண்டி மதில் ஓரம் நிறுத்துகிறார்.)*

**தேன்மொழி :**

இப்போது என்ன செய்வது?

**கண்ணன் :**

வீட்டிற்குப் போக வேண்டியதுதான். புறப்படு; எப்படியும் உன் அண்ணன் காலையில் வீட்டிற்கு வந்து விடுவார். இங்குக் காத்திருப்பதால் எந்தப் பயனும் இல்லை.

**தேன்மொழி :**

அங்கே பாருங்கள்! யாரோ ஒளிந்து ஒளிந்து வெளியே வருகிறார்!

*(கண்ணன் தேன்மொழி காட்டிய இடத்தை நோக்கு கிறார். அங்கே ஒருவர் சுவர் ஓரமாக ஒளிந்தபடி வெளியேறி மதிலைத் தாண்டிக் குதித்து எதிர்த் திசையில் சென்று மறைகிறார்.)*

**தேன்மொழி :**

யார் அவர்? இங்கு என்ன நடக்கிறது?

**கண்ணன் :**

திருடனாக இருக்கும். ஆட்கள் வந்துவிடவே அகப் படாதிருக்கத் தப்பிச் செல்கிறான்.

**தேன்மொழி :**

இல்லை; நிச்சயம் அவர் திருடன் இல்லை.

**கண்ணன் :**

எப்படிச் சொல்கிறாய்?

**தேன்மொழி :**

அவர் பகட்டான உடை உடுத்தி உள்ளார். எதையும் கை களில் கொண்டு செல்லவில்லை. தெருவிளக்கு வெளிச்சத் தில் ஒரு வினாடி அவர் உருவம் தெளிவாகத் தெரிந்தது. நான் அவரை இதற்கு முன்னர்ப் பார்த்ததாக நினைவு!

**கண்ணன் :**

சரி; நீ கவனமாக அமர்ந்திரு. வீட்டினுள் எந்த வெளிச்சத்தையும் காணோம்; எதற்கும் நான் சென்று பார்த்து விட்டு வருகிறேன்.

*(கண்ணன் வண்டியிலிருந்து இறங்கி வீட்டிற்காக நடக்கிறார். வீட்டு வாயில் எதிரில் கதிரவனின் மகிழுந்து நிற்கிறது. வீட்டினுள் முற்றும் வெளிச்சம் இல்லை. முன் கதவு கண்ணன் கை வைத்துத் தள்ளியதும் திறந்து கொள்கிறது. கண்ணன் உள்ளே நுழைகிறார். அடுத்த வினாடி பளீர் என்று ஒளி அறையை நிரப்பி மறைகிறது. என்ன நடந்தது என்று கண்ணன் எண்ணிப் பார்ப்பதற்கு இடம் இல்லாமல் 'வீல்' என்ற பெண்ணின் அலறல் அறை யின் அமைதியைக் குலைக்கிறது. யாரோ தன் மேல் இடித்துக் கொண்டு செல்வதைக் கண்ணன் உணர்கிறார். சற்றைக் கெல்லாம் ஓர் அதிகாரக் குரல் அங்கு ஆணை பிறப்பிக் கிறது.)*

**குரல் :**

யாரும் அசையாதீர்; அப்படி அப்படியே இருங்கள்.

*(யாரோ இருட்டில் நகர்ந்து செல்லும் ஓசை கேட்கிறது. சில வினாடிகள் செல்கின்றன. திடீரென்று அறை ஒளி வெள்ளத்தில் மூழ்குகிறது. அங்கு அறைக்குள் கண்ட காட்சி கண்ணனைத் திகைக்க வைக்கிறது. அறையில் காலதர் அருகே போடப்பட்டுள்ள கட்டிலில், கோதையை அணைத் தவாறு கதிரவன் அமர்ந்திருக்கிறார்; கோதையின் இடது முதுகினின்றும் குருதி கொட்டிக் கொண்டு இருக்கிறது. திறந்திருந்த கதவருகே மின்விளக்குப் பொருத்தியை இயக்கிய மனிதர் நின்று கொண்டு இருக்கிறார். அவர் மார்பில் படமெடு கருவி தொங்கிக்கொண்டு இருக்கிறது. அவருடைய தோற்றம் அவர் காவற்றுறையைச் சேர்ந்தவர் என்பதைக் காட்டுவதாக விளங்குகிறது. அந்த மனிதரின் அதிகாரக் குரல் மீண்டும் அவ்வறையை நிரப்புகிறது.)*

**அவர் :**

அப்படியே இருந்த இடத்திலேயே இருங்கள். நான் காவல்துறைத் துணை ஆய்வாளர் தூயவன்.

*(காவற்றுறைத் துணை ஆய்வாளர் தூயவன் தன் படமெடு கருவியைப் பயன்படுத்தி அந்த அறையைப் பல கோணங்களில் படமெடுத்து முடிக்கிறார். பின்னர்க் கட்டில் அருகே நெருங்கிக் கோதையின் கையைத் தொட்டுப் பார்க்கிறார்; மூச்சுள்ளதா என மூக்கில் கையை வைத்து ஆய்கிறார்.)*

**தூயவன் :**

உயிர் பிரிந்து விட்டு இருக்கிறது. அப்படியே கட்டிலில் கிடத்துங்கள்.

*(கதிரவன் கோதையின் உடலைக் கட்டிலில் கிடத்தத் தூயவன் உதவி செய்கிறார். கதிரவன் அதிர்ச்சி அடைந்தவராக அசைவின்றி அமர்ந்திருக்கிறார். தூயவன் அறையில் இருந்த தொலைப்பேசியை எடுத்துக் கட்டுப்பாட்டு அறையோடு தொடர்பு கொள்கிறார்; பின் கண்ணன் அருகே வருகிறார்.)*

**தூயவன் :** *(கண்ணனைப் பார்த்து)*

நீங்கள் யார்?

**கண்ணன் :**

நான் அவருடைய நண்பர்; என் பெயர் கண்ணன். அவர் இங்கு இருப்பதை அறிந்து, அவரை அழைத்துப் போக வந்தேன்.

**தூயவன் :**

இனி அதற்குத் தேவை இருக்காது.

**கண்ணன் :**

அப்படியானால் நான் என்ன செய்யட்டும்?

**தூயவன் :**

கொஞ்சம் பொறுங்கள்; கட்டுப்பாட்டு அறைக்குச் செய்தி தெரிவித்து விட்டேன். இந்நேரம் எல்லோரும் வந்து கொண்டு இருப்பார்கள். அதுவரை எதையும் தொடாதீர்கள்.

*(தூயவன் அறையை நுணுக்கமாய் ஆய்ந்து பார்க்கிறார். பின்னர்ச் சிந்தனையோடு கண்ணன் அருகில் வந்து பேசுகிறார்.)*

**தூயவன் :**

இருட்டில் நீங்கள் யார் மீதேனும் மோதிக் கொண்டீர்களா?

**கண்ணன் :** *(வியப்புடன்)*

ஆமாம். ஏன்?

**தூயவன் :**

நான் யார் மீதோ மோதிக் கொண்டேன்; அது நீங்களாக இருக்குமோ என்றுதான் கேட்டேன்.

*(அப்போது காவற்றுறை வண்டிகள் வந்து நிற்கும் ஓசையும் ஆட்கள் இறங்கி விரைந்து வரும் ஒலியும் கேட்கின்றன.)*

**கண்ணன் :**

உங்கள் உடையில் குருதி படிந்திருக்கிறதே?

*(தூயவன் குனிந்து தன் உடையில் படிந்திருந்த குருதியைக் கவனிக்கிறார்.)*

**தூயவன் :**

உடலைக் கட்டிலில் கிடத்தும் போது பட்டிருக்கும்.

*(காவற்றுறையைச் சார்ந்த பல பிரிவினரும் உள்ளே நுழைந்து அவரவர் கடமைகளை விரைந்து கவனிக்கின்றனர். சற்று நேரத்தில் காவற்றுறை ஆய்வாளர் அரிச்சந்திரன் வந்து சேருகிறார். கண்ணனை அங்குக் கண்டு வியப்பு அடைகிறார்.)*

**அரிச்சந்திரன் :**

கண்ணன், நீங்கள் எப்படி இங்கு?

**தூயவன் :**

கொலை நடந்த நேரத்தில் இவரும் இங்கு இருந்தார். அதனால், முறையான உசாவல் பொருட்டு இங்கேயே இருக்கும்படி நான்தான் கூறி இருந்தேன்.

**அரிச்சந்திரன் :**

என்ன கண்ணன்? ஒருவர்க்கு ஒருவர் நீங்கள் அறிமுகம் செய்து கொள்ளவில்லையா?

**கண்ணன் :**

இல்லை; அதற்கு நேரம் இடம் கொடுக்கவில்லை.

**அரிச்சந்திரன் :**

அப்படியா? தூயவன், இவர் அரசு வழக்குரைஞர்; பெயர் கண்ணன்.

**தூயவன் :**

வணக்கம்.

**கண்ணன் :**

வணக்கம்.

**அரிச்சந்திரன் :**

தூயவன், கண்ணன் என் நெருங்கிய நண்பர்; நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

**கண்ணன் :**

இந்த நேரத்தில், இந்த இடத்திற்கு இவர் எப்படி வந்து சேர்ந்தார்?

**அரிச்சந்திரன் :**

இந்தப் பெண்ணைப் பற்றித்தான் உங்களுக்கும் தெரியுமே! அருகே குடியிருக்கும் பெரிய மனிதர்கள் சிலர் குறைபட்டுக் கொண்டனர்; அதனால், நான்தான் கண்காணிக்குமாறு இவரைப் பணித்திருந்தேன்.

*(அப்போது உடலை ஆய்வு செய்த மருத்துவர் அருகே வருகிறார்.)*

**மருத்துவர் :**

நெஞ்சத்தைக் கத்தி ஊடுருவி உள்ளது. உயிர் உடனே பிரிந்திருக்கக் கூடும். கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட கத்தி மிகக் கூர்மையாய், வலியதாய், மெல்லியதாய் இருந்திருக்க வேண்டும்.

**அரிச்சந்திரன் :**

ஏன்? கத்தி என்னாயிற்று?

**தூயவன் :**

கொலை நிகழ்ந்த சற்றைக்கெல்லாம் நான் நன்கு தேடிப் பார்த்து விட்டேன்; இந்த அறைக்குள் எங்கும் காணோம்.

**அரிச்சந்திரன் :**

அஃது எப்படி? கொலை செய்தவர் இங்கிருக்கக் கத்தி மட்டும் எப்படிக் காணாமல் போகும்?

**தூயவன் :**

எனக்கும் புதிராகவே உள்ளது! நாங்கள் இருவரும் கதவருகேயே நின்று கொண்டு இருந்தோம்.

*(வெளியிலிருந்து காவலர் ஒருவரின் விரைவான குரல் கேட்கிறது.)*

**காவலர் :**

ஐயா, இங்கே வாருங்கள்; கத்தி ஒன்று புதரில் கிடக்கிறது.

*(அரிச்சந்திரனும் தூயவனும் உடன் வெளியே விரைகின்றனர்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 28

| | | |
|---|---|---|
| **இடம்** | : | கண்ணன் வீடு. |
| **காலம்** | : | விடியற் பொழுது. |
| **உறுப்பினர்கள்** | : | கண்ணன், தேன்மொழி, மங்கை, எழிலி. |
| **சூழல்** | : | சோர்ந்த நிலையில் கண்ணனும் மங்கையும் வந்து கூடத்தில் அமர் கின்றனர். இரவெல்லாம் தூங்காது கண் விழித்துக் காத்திருந்த மங்கையும் |

எழிலியும் அவர்களை ஆவலோடு நோக்குகின்றனர்.

**மங்கை**

அண்ணா, அவர்?

*(தங்கையைக் கண்ணன் இரக்கத்தோடு பார்க்கிறார். தேன்மொழி மங்கையை ஏறெடுத்துப் பார்க்க இயலாது தலை தாழ்த்தி அமர்ந்திருக்கிறார்.)*

**கண்ணன் :** *(அமைதியாக)*

அவர் வரவில்லை; வரவும் மாட்டார்.

**மங்கை :**

என்ன சொல்கிறீர்கள்?

**கண்ணன் :**

கோதை என்ற பெண்ணைக் கொலை செய்த குற்றத் திற்காக, இப்போது கதிரவன் காவலில் இருக்கிறார்.

*(அதிர்ச்சி அடைந்தவராய் மங்கை வாயடைத்து நிற்கிறார்.)*

**மங்கை :** *(மெல்ல)*

கடிக்கின்ற கொசுவையே அடிக்கத் தயங்குவாரே, அவரா கொலை செய்தார்?

**கண்ணன் :**

ஆமாம். அப்போது நானும் அங்குத்தான் இருந்தேன்.

**மங்கை :**

தேன்மொழி, அண்ணா சொல்வது உண்மையா?

**தேன்மொழி :**

உண்மைதான். நானும் அருகில்தான் இருந்தேன்.

*(மங்கை தேன்மொழியின் தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி அழுகிறார். தேன்மொழி ஆறுதலாய் அணைத்துத் தட்டிக் கொடுக்கிறார். தங்கை அழுவதைக் காணக் கண்ணன் வேதனை கொள்கிறார்.)*

**கண்ணன் :**

ஏனம்மா அழுகிறாய்? எப்படிப் பட்டவர் அவர் என்று நான் சொன்னபோது அன்று என்னை ஏளனப் படுத்தினாய்; ஆனால் இன்று? அந்தப் பெண் யார் தெரியுமா? விலைமகள் எனக் குற்றவாளிக் கூண்டிலே முன்னர் நிறுத்தப் பட்டவள்; என்னால் விடுவிக்கப் பட்டவள்! யாருக்காக அன்று அந்த வழக்கை எடுத்துக் கொண்டேன் தெரியுமா? கதிரவனுக்காக! உன் காதலனுக்காக!

*(மங்கை அழுதபடி உள்ளே ஓடுகிறார். அவரைத் தொடர்ந்து ஆறுதல் சொல்லத் தேன்மொழியும் எழிலியும் விரைகின்றனர். கண்ணன் பெருமூச்சு விட்டவாறு நன்கு சாய்ந்து கண்களை மூடி ஓய்வு கொள்கிறார்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 29

| | | |
|---|---|---|
| **இடம்** | : | காவல் நிலையம். |
| **காலம்** | : | காலை மணி பதினொன்று. |
| **உறுப்பினர்கள்** | : | கதிரவன், மணியரசன், தேன்மொழி, மங்கை. |
| **சூழல்** | : | காவல் அறையில் கதிரவன் இருக்க, அவரைச் சந்திக்க ஒப்புதல் பெற்று மங்கை, தேன்மொழி, மணியரசன் மூவரும் அங்கு வருகின்றனர். அவர் களைக் கண்டதும் கதிரவன் ஆவலுடன் எழுந்து எதிர் வருகிறார். |

**தேன்மொழி :**

அண்ணா!

*(கதிரவன் தங்கையின் கைகளை அன்போடு பற்றிக் கொள்கிறார். அவர் பார்வை பக்கம் நின்ற மங்கைக்குத் திரும்புகிறது.)*

**கதிரவன் :**

மங்கை, இந்த இழிந்தவனைப் பார்க்கவா இவ்வளவு தூரம் வந்தாய்?

*(மங்கை கண்ணீர் சிந்துகிறார்.)*

**கதிரவன் :**

அழாதே. உன் கண்ணீர் எனக்கு உவகை அளிக்கிறது. எனக்காக அழ நீ ஒருத்தி இருக்கிறாய் என்பதை அறிய, நெஞ்சம் மகிழ்ச்சியால் நெகிழ்கிறது. மங்கை, என்னை மன்னித்து விடு. வாழ்க்கையில் துன்பத்திலேயே உழன்றவன் நான்; என்னால் எதையும் தாங்கிக் கொள்ள இயலும். ஆனால், நீ? இன்பத்தைத் தவிர ஏதும் அறியாதவள் ஆயிற்றே! இதை எப்படித் தாங்கிக் கொள்வாயோ?

**தேன்மொழி :**

அண்ணா, இந்தச் செயலை எப்படிச் செய்தீர்கள்?

*(கதிரவன் தன் கையால் தங்கை வாயை மூடுகிறார்.)*

**கதிரவன் :**

நான்..நான்..என்னம்மா? இப்படிக் கேட்டு விட்டாயே! என்னைத் தெரியாதா உனக்கு? அதிர்ந்து பேசவும் அறியாதவன் ஆயிற்றே நான்; நானா கொலை செய்வேன்? ஏமாற்றம் அடைந்த ஏக்கத்தில் தவறான வழிகளில் நான் தடுமாறிச் சென்றிருந்தாலும், இன்றுவரை யாருக்கேனும் எந்தத் தீங்கும் இழைத்து இருக்கிறேனா? கொலை செய்யும் அளவிற்குக் கொடியவன் இல்லை நான்.

**மங்கை :**

பின் செய்தவர்தான் யார்?

**கதிரவன் :**

எனக்கு அது புதிராகவே இருக்கிறது. கொலை நடந்த நேரத்தில் நான் குடி மயக்கத்தில் இருந்துள்ளேன். அப்போது, அங்குக் கண்ணனும் துணை ஆய்வாளரும் இருந்திருக் கின்றனர். அறையில் வெளிச்சம் இல்லை. கொலையைச்

செய்தது யார்? எப்படிச் செய்தார்? யாருக்கும் தெரியாது. ஆனால், நான் செய்ததாகச் சொல்லி இங்கே என்னை அடைத்து வைத்திருக்கின்றனர்.

**தேன்மொழி :**

இதன் முடிவுதான் என்ன?

**கதிரவன் :**

முடிந்த முடிவுதான்! கொலை செய்தவர்க்கு என்ன தண்டனையோ, அஃது எனக்குக் கிடைக்கும்; அதில் ஐயம் இல்லை.

**மங்கை :**

எதிர்த்து வழக்காடி வெற்றி பெற இயலாதா?

**கதிரவன் :**

வழக்காடலாம்; ஆனால் என்ன நடக்கும்? குடி மயக்கத்தில் நான் இருந்திருக்கிறேன். கண்ணனுக்கோ, காவல்துறைத் துணை ஆய்வாளருக்கோ கோதையைக் கொல்லத் தேவை இல்லையே!

**மங்கை :**

குடி மயக்கத்தில் நடந்த கொலை என்பதால் தண்டனை குறைந்ததாக இருக்காதா?

**கதிரவன் :**

இருக்கலாம்; எல்லாம் போகப் போகத்தான் தெரிய வரும்.

**மங்கை :**

பெரிய வழக்குரைஞராக வைத்து வழக்கை நடத்துவோம்.

**கதிரவன் :**

எத்துணைச் சிறந்த வழக்குரைஞராக இருந்தும் என்ன பயன்? கண்ணன் சிறந்த வழக்குரைஞர்தான்; ஆனால், அவர் எனக்காக வழக்காட முடியாது. எனக்கு எதிரான முதன்மைச் சான்றாளர்களில் அவரும் ஒருவர்.

*(மணியரசன் இத்தனை நேரம் அமைதியாக இருந்தவர், முதன் முதலாகப் பேசினார்.)*

**மணியரசன் :**

புறப்படுவோம்; கொடுத்த நேரம் முடிந்து விட்டது.

**கதிரவன் :**

போய் வாருங்கள். மங்கை, நீ மட்டும் கொஞ்சம் இரு.

*(மணியரசனும் தேன்மொழியும் அங்கிருந்து அகல் கின்றனர். அவர்கள் பார்வையினின்றும் மறைந்ததும் கதிரவன் மங்கையின் கைகளைப் பற்றிக் கொள்கிறார்.)*

**கதிரவன் :**

மங்கை, என் நினைவு உன்னைச் சுற்றியே என்றும் இருக்கும். உடலால் நான் ஒழுக்கம் இல்லாதவன்தான்; ஆனால், உள்ளத்தால் என்றுமே நல்லவன். உன்னை நான் உண்மையிலேயே உயிரினும் மேலாகக் காதலிக்கிறேன். நான் விரும்புவது உன் உடலை இல்லை; தூய்மையான உன் உயர்ந்த உள்ளத்தை! உன்னை உள்ளார விரும்பினேன்; இன்றும் விரும்புகிறேன்; இனி என்றும் விரும்புவேன். என் உயிரே உனக்காகத்தான்! உனக்காக என்னையும் இழக்கத் தயங்க மாட்டேன். மறந்து விடாதே.

*(கதிரவன் கண்ணீரைக் கட்டுப்படுத்த ஆற்றாதவராய் முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 30

| | | |
|---|---|---|
| **இடம்** | : | வழக்குரைஞர் ஆடியபாதம் வீடு. |
| **காலம்** | : | மாலை மணி ஆறு. |
| **உறுப்பினர்கள்** | : | மணியரசன், மங்கை, தேன்மொழி, எழிலி, ஆடியபாதம். |

**சூழல்** : ஆடியபாதம் தன்னிடத்தில் அமர்ந்து இருக்கிறார். எதிரே மங்கை, தேன்மொழி, எழிலி, மணியரசன் நால்வரும் அவர் முகத்தை எதிர்பார்ப்போடு நோக்கிய வாறு காத்து இருக்கின்றனர்.

**ஆடியபாதம் :** *(மெல்லப் பேசுகிறார்)*

இந்த வழக்குத் தொடர்பாக எல்லாவற்றையும் இரண்டு நாட்களாய் அலசி, ஆராய்ந்து, படித்துப் பார்த்து விட்டேன். மேலும், இதைப் பற்றியே இடையறாது சிந்தித்தும் வந்தேன்.

**மங்கை :**

சொல்லுங்கள்; உங்கள் முடிவு என்ன?

**ஆடியபாதம் :**

சொல்கிறேன்; பதற்றம் எதற்கு? இந்த வழக்கை எடுத்து நடத்த எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

**மணியரசன் :**

மிக்க நன்றி.

**ஆடியபாதம் :**

பொறுங்கள்; பொறுங்கள். நான் சொல்ல வந்தவற்றை முழுமையாகச் சொல்லி விடுகிறேன். நீங்கள் கண்ணனிடம் உதவியாளராக இருப்பதாகச் சொன்னீர்கள்; இல்லையா? உங்களுக்குத் தெரிந்து இருக்க வேண்டுமே இந்த வழக்கைப் பற்றி?

**மணியரசன் :**

நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?

**ஆடியபாதம் :**

நீங்கள் அறியாத எதை நான் புதிதாகச் சொல்லப் போகிறேன்? என்னைச் சந்திப்பதற்கு முன்னரே என்னினும் திறமையான வழக்குரைஞர்களைச் சந்தித்து இருப்பீர்கள்; உண்மைதானே?

**மணியரசன் :**

ஆமாம்.

**ஆடியபாதம் :**

அவர்கள் என்ன சொல்லி இருப்பார்கள் என்பதை என்னால் சொல்ல முடியும். உண்மையை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளத் தயங்குவதால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை. இந்த வழக்கில் உண்மைகள் உள்ளங்கை நெல்லிக்கனி என்பார்களே, அதுபோலத் தெளிவாக உள்ளன.

**மணியரசன் :**

என்ன சொல்கிறீர்கள்? புரியவில்லையே.

**ஆடியபாதம் :**

எப்படிப்பட்ட குற்றவாளிக்கும் வழக்கு மன்றத்தில் தன்னைத் தற்காத்துக் கொள்ள வழக்குரைஞர் ஒருவர் கட்டாயம் தேவை; அந்த முறையில் இந்த வழக்கை எடுத்துக் கொள்ள நான் அணியமாக இருக்கிறேன். ஆனால், வழக்கின் முடிவு நமக்குச் சார்பாக இருக்காது. அரசுப் பக்கச் சான்றுகள் மிக வலுவானவை. இருக்கின்ற சான்றுகளையும் வழக்கின் தன்மைகளையும் நுணுகி ஆய்ந்த பிறகே சொல்கிறேன்; சொல்வது என் கடமை என்பதால் சொல்கிறேன். எத்துணைச் சிறந்த, திறமையான வழக்குரைஞராக இருந்தாலும் இவ் வழக்கைப் பொறுத்த மட்டில் நிச்சயம் வெற்றி பெற இயலாது.

**மங்கை :**

வேறு வழியே இல்லையா?

**ஆடியபாதம் :**

இல்லை அம்மா. இருந்து இருந்தால் கண்ணனே சொல்லி இருப்பாரே.

**மணியரசன் :** *(மெல்ல)*

உங்கள் முடிவுதான் என்ன?

**ஆடியபாதம் :**

இத்தனை நேரமும் அதைத்தான் சொல்லிக் கொண்டு இருந்தேன். வழக்குத் தோற்கும் என்று தெரிந்த பின்னர், எந்த

உண்மையான வழக்குரைஞரும் அப்படிப்பட்ட வழக்கை எடுத்துக் கொள்வது கிடையாது. கண்ணனை நான் நன்கு அறிந்தவன் என்பதால் இந்த வழக்கை எடுத்து நடத்துகிறேன். ஆனால், உங்களுக்கு எந்த எதிர்பார்ப்பும் இருக்கக் கூடாது. நன்கு சிந்தித்து உங்கள் முடிவைத் தெரிவியுங்கள்.

*(வழக்குக் கட்டை ஆடியபாதம் நீட்ட, மணியரசன் பெற்றுக் கொள்கிறார்.)*

**மணியரசன் :**

நன்றி; பிறகு வந்து சந்திக்கிறேன்.

*(அனைவரும் எழுந்து அங்கிருந்து வெளியேறு கின்றனர்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 31

**இடம்** : கடற்கரை மணற்பரப்பு.

**காலம்** : மாலை மணி ஏழு.

**உறுப்பினர்கள்** : மணியரசன், மங்கை, தேன்மொழி, எழிலி.

**சூழல்** : மணியரசன் மணலில் படுத்துக் கொண்டு கண்களை மூடியவனாய்ச் சிந்தனையில் மூழ்கி இருக்க, அருகில் எழிலி அமர்ந்து இருக்கிறார். சற்றுத் தொலைவில் மங்கையும் தேன்மொழியும் தனியே அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கின்றனர்.

**எழிலி :** *(மெதுவே)*

மணி?

**மணியரசன் :** *(கண்களைத் திறக்காமலேயே)*

உம்ம்.

**எழிலி :**

நீங்கள் விரும்புவது போலவே நான் உங்களைத் திருமணம் செய்து கொள்கிறேன்.

*(மணியரசன் திடுக்கிட்டு எழுந்து அமர்கிறார்.)*

**மணியரசன் :**

என்ன சொன்னீர்கள்?

**எழிலி :**

நான் உங்களைக் கட்டிக் கொள்கிறேன் என்று சொன்னேன்; போதுமா?

**மணியரசன் :**

ஐயய்யோ!

**எழிலி :**

ஏன் அலறுகிறீர்கள்? கரும்புத் தின்னக் கசக்கிறதோ!

**மணியரசன் :**

கரும்புத் தின்னக் கசக்குமா? ஆனால், திருமணம்? தெவிட்டிடுமே!

**எழிலி :**

நீங்கள் என்னை விரும்புவது உண்மை இல்லையா?

*(மணியரசன் வாய்விட்டுச் சிரிக்கிறார்.)*

**மணியரசன் :**

உங்களை மட்டும்தானா? எழிலான பெண்கள் எல்லோரையும் நான் விரும்புகிறேன்! அதற்காக அத்தனை பேர்களையும் திருமணம் செய்துகொள்ள முடியுமா?

**எழிலி :** *(கொஞ்சலாக)*

எழிலான பெண்கள் இருக்கட்டும்; எழிலி என்ற பெயர் கொண்ட என்னை எல்லோரினும் மேலாக விரும்புகிறீர்கள்; இல்லையா? எல்லாம் எனக்குத் தெரியும்.

**மணியரசன் :**

தெரியுமா? எப்படி? உங்களிடம் நான் ஏதும் உரைத்ததும் இல்லையே!

**எழிலி :** *(நாணத்துடன்)*

உங்கள் பார்வை ஒன்று போதாதா? வெட்கம் இல்லாது என்னை விழுங்கி விடுவது போல் நீங்கள் பார்ப்பதை, நான் என்ன? வீட்டில் எல்லோருமே அறிவார்கள்!

**மணியரசன் :**

இல்லை, இல்லை; என்னைத் தவறாக எடை போட்டு விட்டீர்கள்!

**எழிலி :** *(முக வாட்டத்துடன்)*

அப்படி என்றால்?

**மணியரசன் :**

தவறான எண்ணத்தோடு நான் தவறியும் பழகியது கிடையாது.

**எழிலி :**

கல்லூரிகள் ஆண்டு விழாவில் முதன்முதலாக என்னைச் சந்தித்தீர்கள். அதிலிருந்து என்னையே சுற்றிச்சுற்றி வந்தீர்கள்; என் அத்தானிடமே உதவியாளராகவும் வந்து சேர்ந்தீர்கள். நான்தான் இவற்றை எல்லாம் தவறாக எண்ணிக்கொண்டு விட்டேன்; என் அறியாமையை மன்னிக்கவும்.

**மணியரசன் :**

அதனால் என்ன?

**எழிலி :**

இல்லை, இல்லை; செய்த தவற்றிற்கு மன்னிப்புக் கேட்கா விடில் மனம் அமைதி அடையாது. எனக்கு மாப்பிள்ளை நிச்சயம் செய்கிற நேரத்தில் அதைத் தடுத்து நிறுத்தினீர்கள்.

**மணியரசன் :**

கண்ணன் கேட்டுக் கொண்டார்; அதனால் செய்தேன்.

**எழிலி :**

அதையும் நீங்கள் எனக்காகச் செய்ததாக நான் தவறாக எண்ணிக் கொண்டு விட்டேன். இப்போது பார்த்த மாப்பிள்ளையைப் பற்றி எழுதி அதையும் நிறுத்தினீர்கள்.

**மணியரசன் :**

இல்லை; நான் எழுதவில்லை.

**எழிலி :**

ஏன் பொய் சொல்கிறீர்கள்? கடிதம் கொடுத்த பையன் உங்கள் படத்தை அடையாளங் காட்டி விட்டான்.

**மணியரசன் :** *(தோற்றுப் போன முகத்தினனாய்)*

இப்போது உங்களுக்கு என்ன வேண்டும்? நான் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

**எழிலி :**

எனக்கு எதுவும் வேண்டா. எனக்குத் தொடர்பு இல்லாதவர்களிடம் நான் எதையும் எதிர்பார்ப்பது கிடையாது.

**மணியரசன் :**

என்னை மன்னித்து விடுங்கள். உங்களை நான் விரும்புவது உண்மைதான். நான் உங்களைக் காதலிக்கிறேன்; என் உள்ளத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். போதுமா?

**எழிலி :**

வற்புறுத்தலால் வருவது காதல் இல்லை; தடைகளை எல்லாம் தகர்த்து எழும் காட்டாற்று வெள்ளம் அது!

**மணியரசன் :**

ஒப்புக்கொள்கிறேன். ஏதோ முதலில் சொல்ல வந்தீர்களே, அஃதென்ன?

**எழிலி :**

ஒன்றும் இல்லை.

**மணியரசன் :**

பொய் எதற்கு? நீங்கள் பேச்சைத் தொடங்கிய முறையைப் புரிந்து கொள்ளத்தக்க அறிவு எனக்கு உண்டு. என்னிடம் எதை எதிர்பார்க்கிறீர்கள்?

**எழிலி :**

சொல்கிறேன். நான் உங்களைக் காதலிக்கிறேன். ஆனால், நான் உங்களிடம் கேட்பதற்கும் என் காதலுக்கும்

எந்தத் தொடர்பும் இல்லை. நீங்கள் இந்தக் கொலை வழக்கை எடுத்து நடத்த வேண்டும்; வெற்றி பெற வேண்டும். இஃது என் ஆசை.

*(மணியரசன் மீண்டும் மெல்ல மணலில் படுத்துக் கொள்கிறார்.)*

**மணியரசன் :**

நான் என்ன தீங்கு இழைத்தேன்? என் எதிர்காலத்தைப் பாழாக்க எண்ணமா? உங்களைக் காதலித்தது ஒரு குற்றமா?

**எழிலி :**

உங்களால் முடியும். என் கண்களைப் பாருங்கள். எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்மை உங்களுக்கு உண்டு; உங்களை நான் அறிவேன்.

**மணியரசன் :**

சொல்வது யார்க்கும் எளிது; தெரியும் இல்லையா?

**எழிலி :**

உங்களை நான் உயர்வாக எண்ணி உள்ளேன். இயலாதது என்பது இங்கு எதுவும் இல்லை. உங்களால் நிச்சயம் முடியும். காதலுக்கு அத்துணை வலிமை உண்டு.

**மணியரசன் :**

நீங்கள் காதலை ஒரு கடைப் பொருளாகக் கருதுகிறீர்கள்.

**எழிலி :**

நம் காதலுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது; அதை உறுதியாக உணர்ந்து கொள்ளுங்கள். உங்கள் திறமையை நீங்களே உணர்ந்து கொள்ளக் கிடைத்த அரிய வாய்ப்பு இந்த வழக்கு! பிறர் முடியாது என்பதை நீங்கள் முடித்துக் காட்டுகிறீர்கள்; அதுதான் எனக்கு வேண்டும்.

*(மணியரசன் சிந்தனையில் மூழ்கினவராய் அமைதி யாகப் படுத்திருக்கிறார்.)*

**மணியரசன் :**

எண்ணித் துணிக கருமம்! அது மேம்போக்கான கருத் தன்று; மிக மிக ஆழ்ந்து ஆய்ந்து உரைத்த அறிவுரை ஆகும்.

**எழிலி :**

முயன்றால் முடியாதது எதுவும் கிடையாது. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்; நீங்கள் அறியாததா?

**மணியரசன் :**

நீங்கள் சொன்னால் சரியாகத்தான் இருக்கும். சரி; பார்ப்போம்.

**எழிலி :** *(மகிழ்ச்சியுடன்)*

வெற்றி உங்களுக்குத்தான்! என் உள்ளுணர்ச்சி என்றும் பொய்த்தது கிடையாது.

**மணியரசன் :**

ஒரு பாடல் இந்த நேரத்தில் நினைவிற்கு வருகிறது.

**எழிலி :**

சொல்லுங்கள்; கேட்போம்.

**மணியரசன் :**

கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர்கடுகாம்!

**எழிலி :**

கடைப் பார்வைக்கே அத்துணை ஆற்றல் என்றால், இந்தக் காதலியின் அருள் பார்வை முற்றுமே இப்போது உங்கள் மேல்! பிறகு என்ன? எல்லாமே இனிதாக முடியும்.

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 32

**இடம்** : வழக்கு மன்றம்.

**காலம்** : காலை மணி பதினொன்று.

**உறுப்பினர்கள்** : நடுவர், அரசு வழக்குரைஞர், கண்ணன், கதிரவன், மணியரசன், காவற்றுறை

ஆய்வாளர் அரிச்சந்திரன், துணை ஆய்வாளர் தூயவன், தேன்மொழி, மங்கை, எழிலி, மற்றும் பலர்.

**சூழல்** : வழக்கு மன்றம் நிறைந்து உள்ளது. கதிரவன் குற்றவாளிக் கூண்டிலே நின்று கொண்டு இருக்கிறார். பார்வையாளர் கள் பகுதியிலே தேன்மொழி, மங்கை, எழிலி அமர்ந்து இருக்கின்றனர். அரசு வழக்குரைஞர், கண்ணன், மணியரசன் போன்றோர் நடுவர் இருக்கைக்கு எதிர் உள்ள நீள் மேசையைச் சுற்றி அமர்ந்து இருக்கின்றனர். நடுவர் தன் இருக்கை யில் அமர்ந்து இருக்கிறார். அரசு வழக்குரைஞர் எழுந்து தன் தொடக்க உரையைத் தொடங்குகிறார்.

**அரசு வழக்குரைஞர் :**

மதிப்பிற்குரிய நடுவர் அவர்களே, இந்த வழக்கின் தொடக்க உரையை ஒரு சிற்றுரையாக முடித்துக் கொள்ள விழைகிறேன். கடந்த மே மாதம் பதினாறாம் நாள், திங்கள் கிழமை, நள்ளிரவு பன்னிரண்டு மணி இருபத்தைந்து மணித் துளிகள்! கோதை என்ற பேதைப் பெண் கொடிய முறையிலே கொலை செய்யப் பட்டார்! கொலையை இங்குக் கூண்டிலே நிற்கும் கதிரவன் குடி மயக்கத்திலே செய்துள்ளார். இவர் தான் இக்கொலையைச் செய்தார் என்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன. இவை இந்த மன்றத்திலே எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி உறுதிப்படுத்தப்படும். இந்த வழக்கு ஒரு திறந்த புத்தகம்; எனவே, தெளிவாகக் காட்டப்படும். நடுவர் அவர்களே, என்னுரை இவ்வளவே.

**நடுவர் :**

மிக்க மகிழ்ச்சி. குற்றஞ் சாட்டப்பட்டவரின் வழக்குரைஞர் தன் தொடக்க உரையைத் தொடங்கலாம்.

*(மணியரசன் மெல்ல எழுந்து சற்றுத் தயங்கிய, மயங்கிய முகத்தினராய் நடுவரையும் அனைவரையும் சில வினாடிகள் சுற்றிப் பார்க்கிறார்.)*

**மணியரசன் :**

அறிவார்ந்த நடுவர் அவர்களே, வணக்கம். திறந்த புத்தகம்; தெரிந்த செய்திகள்! இந்த வழக்கைப் பற்றிய அரசு வழக்குரைஞர் அவர்களின் கணிப்பு இவை. எனவே, என் தொடக்க உரையை நான் தவிர்த்துக் கொள்கிறேன். கோதை என்றொரு பேதைப் பெண்! கொலையுண்ட பெண்ணிற்கு அரசு வழக்குரைஞர் அளித்துள்ள சான்றிதழ்! பேதையா? இல்லை, குற்றங்களிலே கை தேர்ந்த மேதையா? கொலை நடந்திருக்கிறது; உண்மை. ஆனால், அதைச் செய்தவர் என் கட்சிக்காரர் கதிரவன் இல்லை. என்னால் காட்டப்படும். நன்றி.

**நடுவர் :**

வழக்கின் தொடக்கம் எனக்கு மிக்க மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. இரண்டு பக்க வழக்குரைஞர்களும் வேண்டாத வற்றை விலக்கித் தொடர்பு உடையவற்றை மட்டும் சுருக்கமாக எடுத்துரைத்தது மன நிறைவை அளிக்கிறது. அரசு வழக்குரைஞர் அகவை முதிர்ந்தவர்; பலவகை வழக்கு களை நாளும் நடத்திப் பழக்கப் பட்டவர். எதிர்பக்க வழக்குரைஞரோ, இளைஞர். இவ்வழக்குத்தான் அவர் ஏற்றிருக்கும் முதல் வழக்கென அறிய வருகிறேன். முதல் வழக்கு என்பதாலும் முன் பட்டறிவு இல்லாதவர் என்பதாலும் அவருக்குப் போதிய வாய்ப்பு அளிப்பது முறையாகும். இனி அரசு வழக்குரைஞர் வழக்கைத் தொடரலாம்.

**அரசு வழக்குரைஞர் :**

இவ்வழக்கில் பிணவாய்வு நடத்திய மருத்துவர் இளங்கோவன் அவர்களை அரசுப்பக்கச் சான்றாளராகச் சான்றளிக்க அழைக்க விழைகிறேன்.

**நடுவர் :**

சரி; ஆகட்டும்.

**பணிஉதவியாளர் :** *(உரக்க)*

மருத்துவர் இளங்கோவன்! மருத்துவர் இளங்கோவன்! மருத்துவர் இளங்கோவன்!

*(மருத்துவர் இளங்கோவன் சான்றுரைஞர் கூண்டிலேறி உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்.)*

**மருத்துவர் :**

நான் சொல்வதெல்லாம் உண்மை; உண்மையைத் தவிர வேறில்லை என்று என் மனச்சான்றின்மேல் உறுதி கூறுகிறேன்.

**அரசு வழக்குரைஞர் :**

கொலை செய்யப்பட்ட கோதையின் பிணத்தை ஆய்வு செய்தவர் நீங்கள்தானே?

**மருத்துவர் :**

ஆமாம்.

**அரசு வழக்குரைஞர் :**

உங்கள் ஆய்வின் முடிவுகள் என்ன?

**மருத்துவர் :**

கூர்மையான கத்தியால் குத்தப்பட்ட காரணத்தாலேயே சாவு நிகழ்ந்து உள்ளது. புண்ணின் ஆழத்தையும் அதன் தன்மையையும் நோக்கச் சில வினாடிகளிலேயே உயிர் பிரிந்திருக்க வேண்டும். இடது முதுகின் எலும்புகளுக்கு இடையே ஊடுருவிய கத்தி நெஞ்சையும் ஊடுருவி உள்ளதால், இறப்பு உடனே ஏற்பட்டு இருக்கிறது. இதைத் தவிரச் சாவிற்கு வேறு எந்தக் காரணமும் கிடையாது.

**அரசு வழக்குரைஞர் :**

உயிர் பிரிந்த நேரம் என்ன?

**மருத்துவர் :**

மே மாதம் பதினாறாம் நாள், இரவு பன்னிரண்டு மணி இருபத்தைந்து மணித்துளிகள் இருக்கும். முன்பின் ஒன்று அல்லது இரண்டு மணித்துளிகள் கூடலாம்; இல்லை, குறையலாம்.

**அரசு வழக்குரைஞர் :**

நேரத்தை எப்படி அத்துணைத் துல்லியமாக முடிவு செய்தீர்கள்?

**மருத்துவர் :**

கொலை நிகழ்ந்த ஒரு சில மணித்துளிகளுக்கு உள்ளாகவே காவல்துறைக் கட்டுப்பாட்டு அறைக்குச் செய்தி சேர்ந்து விட்டது. எனவே, எங்களால் உடனே அங்குப் போக முடிந்தது. பிணத்தைக் கள ஆய்வு செய்த போது, உடல் வெப்பம் முற்றும் குறைந்து இருக்கவில்லை. ஆகவே, உயிர் பிரிந்த நேரத்தை முடிவு செய்ததில் சிக்கல் இருக்கவில்லை.

**அரசு வழக்குரைஞர் :**

நன்றி; என் கேள்விகள் அவ்வளவே.

*(அரசு வழக்குரைஞர் தன் இடத்தில் சென்று அமர்கிறார்.)*

**நடுவர் :**

குற்றஞ் சாட்டப்பட்டவரின் வழக்குரைஞர் சான்றாளரைக் குறுக்கு உசாவல் செய்யலாம்.

*(மணியரசன் மெல்ல எழுந்து சான்றாளர் கூண்டருகே செல்கிறார்.)*

**மணியரசன் :**

முதுகெலும்பைத் துளைத்து நெஞ்சைக் கத்தி ஊடுருவி உள்ளது என்பதால், குத்தியவர் மிக வலுவானவராக இருந் திருக்க வேண்டும்; இல்லையா?

**மருத்துவர் :**

இந்தக் கொலையில் கத்தி எலும்புகளுக்கு இடையே ஊடுருவி உள்ளது; எலும்பைத் துளைத்து அன்று. எனவே, கத்தியின் கூர்மையையும் வலிமையையும் நோக்கக் குத்தியவர் வலுவானவராகத்தான் இருக்க வேண்டும் என்பது இல்லை.

**மணியரசன் :**

உடலோடு உடலாக எதிர் எதிராக அணைத்துக் கொண்டிருக்கும் நிலையில், ஒரு மனிதரால் தன்

அணைப்பில் இருக்கும் மற்றவரின் முதுகில் இப்படிப் பட்ட ஆழமான புண்ணை உண்டாக்க முடியுமா?

**மருத்துவர் :** *(ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்)*

கடினம்தான். அதற்காக, முடியாது என்று ஒதுக்கி விடவும் முடியாது.

**மணியரசன் :**

இன்னொரு கேள்வி. அப்படி அணைத்துக் கொண்டிருப் பவர் மிகையாகக் குடித்திருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம்; அப்படிக் குடி மயக்கத்தில் இருப்பவரால் தன் அணைப்பில் இருக்கும் மற்றவரின் முதுகில், நீங்கள் முன்னர் விளக்கினீர் களே, அப்படிப்பட்ட ஆழமான புண்ணை முன்புறம் அணைத்திரு நிலையில் உண்டாக்க இயலுமா? விடையை உடனே சொல்ல வேண்டும் என்பது இல்லை; நீங்கள் சிந்தித்தே மெதுவாகச் சொல்லலாம்.

**மருத்துவர் :**

உங்கள் கேள்வியின் உள் நோக்கம் புரிகிறது. இந்தக் கேள்விக்கு உறுதியான விடையை என்னால் அளிக்க இயலாது.

**மணியரசன் :**

எனக்கு இயல்பான விடை போதும்; உறுதியான விடை தேவை இல்லை.

**மருத்துவர் :**

பெரும்பாலும் அப்படி நிகழ வாய்ப்பு இல்லை; ஆனால், எதற்கும் விதி விலக்கு உண்டு.

**மணியரசன் :**

மன்னிக்கவும். இங்கு நாம் விதி விலக்குகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யவில்லை! பெரும்பாலும் அப்படி நிகழ வாய்ப்பு இல்லை; சரிதானே?

**மருத்துவர் :**

உண்மைதான்.

**மணியரசன் :**

நன்றி. இறுதியாக ஒரு கேள்வி. கொலை நிகழ்ந்த கொஞ்சம் நேரத்திற்கெல்லாம் நீங்கள் அந்த இடத்தை அடைந்து விட்டதாகச் சொன்னீர்கள்; சரிதானே?

**மருத்துவர் :**

உண்மைதான்.

**மணியரசன் :**

அப்படியானால், குற்றஞ் சாட்டப் பெற்றுள்ள என் கட்சிக்காரரை நீங்கள் அங்கு நெருக்கத்தில் மிக அருகில் பார்த்து இருப்பீர்களே?

**மருத்துவர் :**

ஆமாம்; பார்த்தேன்.

**மணியரசன் :**

அப்போதைய அவர் நிலைமைப் பற்றி மருத்துவர் என்ற முறையில் உங்கள் கருத்து என்ன?

**மருத்துவர் :** *(புன்னகையுடன்)*

நிறையவே குடித்து இருந்தார். அவரின் மூச்சும் உடையின் நாற்றமும் அவர் மிகையாகக் குடித்திருந்ததை உறுதிப் படுத்தின. அவர் பேச்சில் தெளிவு இல்லை; கால்கள் தடுமாறின. விடை போதுமென்று கருதுகிறேன்.

**மணியரசன் :** *(புன்னகையுடன்)*

மிக மிக நன்றி. என் கேள்விகள் அவ்வளவே.

*(மணியரசன் சென்று நிறைவோடு தன்னிடத்தில் அமர்கிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

மீள் உசாவலில் சான்றாளரிடம் ஒரு விளக்கம் கேட்க விழைகிறேன்.

**நடுவர் :**

கேளுங்கள்.

**அரசு வழக்குரைஞர் :** *(சான்றாளரை நெருங்கி)*

குடித்திருக்கும் ஒருவர் எந்த அளவிற்குக் குடித்து உள்ளார் என்பதை உறுதி செய்ய ஒரே வழி, அவரின் குருதியை ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்வது தான்; சரிதானா?

**மருத்துவர் :**

சரிதான்.

**அரசு வழக்குரைஞர் :**

அப்படி ஏதும் குற்றஞ் சாட்டப்பட்டவரின் குருதி அன்று ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டதா?

**மருத்துவர் :**

இல்லை.

**அரசு வழக்குரைஞர் :**

அளவாகக் குடித்துள்ள ஒருவர், தான் மிகையாகக் குடித்திருப்பது போல் தெளிவில்லாத பேச்சாலும் நடைத் தடுமாற்றத்தாலும் மற்றவர்களை நம்ப வைக்கக் கூடும்; இல்லையா?

**மருத்துவர் :**

கூடும்; ஆனால், நல்ல திறமை வேண்டும்.

**அரசு வழக்குரைஞர் :**

நன்றி; அவ்வளவுதான்.

*(அரசு வழக்குரைஞர் சென்று தன்னிடத்தில் அமர்கிறார்.)*

**நடுவர் :**

சான்றாளர் செல்லலாம்.

*(மருத்துவர் கூண்டை விட்டு இறங்கி வெளியேறு கிறார். நடுவர் குறிப்புகளை எழுதி முடிக்கும் வரை அமைதி நிலவுகிறது. எழுதி முடித்து, நடுவர் தலையை உயர்த்தி அரசு வழக்குரைஞரைப் பார்க்கிறார். குறிப்பறிந்து அரசு வழக்குரைஞர் எழுந்து பேசுகிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

அரசுப் பக்கச் சான்றாளராக அடுத்துக் காவல் துறைத் துணை ஆய்வாளர் தூயவன் அவர்கள் சான்றளிப்பார்.

**நடுவர் :**

நல்லது; அழையுங்கள்.

**பணி உதவியாளர் :**

தூயவன்! தூயவன்! தூயவன்!

*(காவற்றுறைத் துணை ஆய்வாளர் தூயவன் கூண்டில் ஏறி உறுதி மொழி எடுத்துக் கொள்கிறார்.)*

**தூயவன் :**

நான் சொல்வதெல்லாம் உண்மை; உண்மையைத் தவிர வேறில்லை.

**அரசு வழக்குரைஞர் :**

இந்தக் கொலை வழக்கில் தொடக்கம் முதலே ஆய்வு செய்தவர் நீங்கள்தானே?

**தூயவன் :**

ஆமாம்.

**அரசு வழக்குரைஞர் :**

என்ன நடந்தது? விளக்கமாகச் சொல்லுங்கள்.

**தூயவன் :**

சொல்கிறேன். அன்று இரவு கொலையுண்டவரின் வீட்டை நான் கண்காணித்துக் கொண்டு இருந்தேன். நள்ளிரவு நேரம். அப்போது, இங்கே குற்றஞ் சாட்டப்பட்டுள்ள கதிரவனும் கோதையும் வெளியில் இருந்து வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். முன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தனர். என் மனதில் ஏனோ ஒரு தடுமாற்றம்! அங்கு ஏதோ நடக்கப் போகிறது என்று என் உள்ளுணர்வு உறுத்தியது. வெளிக் கதவும் திறந்தே இருந்தது. எனவே உள்ளே மெல்லப் போனேன். எங்கும் இருட்டு. சில மணித்துளிகள் கடந்து இருக்கும். திடீரென்று ஓர் அலறல்! ஒரு வினாடி ஒன்றுமே ஓடவில்லை.

ஒரே அமைதி! மெதுவாக நகர்ந்து கதவோரம் சுவரில் தேடி மின் விளக்குகளை எரியச் செய்தேன். வெளிச்சத்தில் பார்க்கிறேன்; கதிரவனின் அணைப்பில் குருதி கொப்பளிக்கக் கோதை நிலை குலைந்து கிடக்கிறார். என் அருகே கண்ணன் நின்று கொண்டு இருக்கிறார். அதிர்ச்சியில் அப்படியே நிற்கிறேன்! எல்லாம் சில வினாடிகள்தாம்; இருந்தாலும் உடனே செயலில் இறங்கினேன். என்னிடம் படமெடு கருவி அணியமாய் இருந்தது; எனவே, பல கோணங்களில் அந்த அறையை இருந்த நிலையில் படங்கள் எடுத்தேன். பின்னர்க் கதிரவனும் கோதையும் இருந்த கட்டிலை நெருங்கிப் பார்த்தேன்; கோதை இறந்து விட்டிருந்தார்! அப்போது நேரம் சரியாகப் பன்னிரண்டு மணி இருபத்தெட்டு மணித்துளிகள். தொலைப்பேசி அந்த அறையிலேயே இருந்தது. அதனால், உடனே கட்டுப்பாட்டறைக்குச் செய்திகள் தெரிவித்தேன். சற்றைக்கெல்லாம் எல்லோரும் அங்கு வந்து சேர்ந்து விட்டனர்.

**அரசு வழக்குரைஞர் :**

இந்த நிழற்படங்களைப் பாருங்கள்.

*(அரசு வழக்குரைஞர் நான்கு நிழற்படங்களைத் தூயவனிடம் நீட்டுகிறார். தூயவன் அப்படங்களை ஆய்ந்து பார்க்கிறார்.)*

**தூயவன் :**

இந்த நான்கு படங்களும் என்னால் எடுக்கப்பட்டவை; அடையாளத்திற்குப் படங்களின் பின்புறம் என் கையொப்பங்கள் உள்ளன. கொலை நடந்த உடனே நான் எடுத்தவை. அறையின் அப்போதைய அமைப்பு, இருப்பு நிலை அனைத்தும் தெளிவாகத் தெரிகின்றன.

*(அரசு வழக்குரைஞர் அப்படங்களைத் திரும்பப் பெற்று, நடுவர் அருகே செல்கிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

நடுவர் அவர்களே, இந்தப் படங்களை அரசுப் பக்கச் சான்று ஆவணங்களாகக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*(நடுவர் படங்களைப் பெற்றுப் பார்க்கிறார். பின்னர் மணியரசனிடம் அளிக்கிறார். மணியரசன் படங்களை நன்கு ஆய்வு செய்த பின், நடுவரிடம் திருப்பி அளிக்கிறார்.)*

**மணியரசன் :**

இந்தப் படங்களின் படிகள் எங்களுக்குக் கொடுத்தால் மேல் ஆய்வுக்கும் உசாவலுக்கும் மிக்க உதவியாக இருக்கும்.

**அரசு வழக்குரைஞர் :**

படங்களின் படிகள் உள்ளன; தருவதற்கு அணியமாக உள்ளோம். இதோ, வாங்கிக் கொள்ளுங்கள்.

*(அரசு வழக்குரைஞர் படங்களின் படிகளைத் தர, மணியரசன் பெற்றுக் கொள்கிறார்.)*

**மணியரசன் :**

நன்றி.

**நடுவர் :**

இந்த நான்கு படங்களும் அரசுப் பக்கச் சான்று ஆவணங் களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. உங்கள் உசாவலைத் தொடருங்கள்.

*(அரசு வழக்குரைஞர் சான்றாளரை நெருங்குகிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

இந்தக் கத்தியைத் தெரிகிறதா?

*(தூயவன் கத்தியைப் பெற்றுப் பார்க்கிறார்.)*

**தூயவன் :**

இந்தக் கத்தி கொலை நிகழ்ந்த இடத்தில் என்னால் கைப்பற்றப்பட்டது. கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட கத்தி இதுதான்.

**அரசு வழக்குரைஞர் :**

எதை வைத்து அப்படி உறுதியாகச் சொல்கிறீர்கள்?

**தூயவன் :**

கொலை நடந்த இடத்தில் இந்தக் கத்தி மட்டுமே காணப்பட்டது. கத்தியின் கூர்மையும் அகலமும் பிணத்தில்

காணபட்ட புண்ணின் அளவிற்கு ஒத்திருந்தன. மேலும், கத்தியில் படிந்து இருந்த குருதியும் கொலை செய்யப் பட்டவரின் குருதியும் ஒரே தன்மையானவை என்று ஒப்பிடப் பட்டு ஆய்வுக் கூடத்திலே உறுதி செய்யப் பட்டது.

**அரசு வழக்குரைஞர் :** *(நடுவரை நெருங்கி)*

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட இக்கத்தியை, இவ் வழக்கிற்குச் சான்றாகக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்.

*(நடுவர் அரசு வழக்குரைஞரிடம் இருந்து கத்தியைப் பெற்றுக் கொள்கிறார்.)*

**நடுவர் :**

சான்றாக இக்கத்தி ஏற்கப்படுகிறது; மேலே தொடருங்கள்.

**அரசு வழக்குரைஞர் :**

இத்துடன் என் உசாவலை முடித்துக் கொள்கிறேன்.

**நடுவர் :**

நல்லது; எதிர்பக்க வழக்குரைஞர் தன் உசாவலைத் தொடங்கலாம்.

*(அரசு வழக்குரைஞர் சென்று தன் இடத்தில் அமர்கிறார். மணியரசன் எழுந்து தூயவன் அருகில் வருகிறார்.)*

**மணியரசன் :**

கொலையுண்டவரின் வீட்டைக் கண்காணித்துக் கொண்டு இருந்ததாகச் சொன்னீர்கள்; இல்லையா?

**தூயவன் :**

ஆமாம்; உண்மைதான்.

**மணியரசன் :**

ஏன்? கொலை நடக்கப் போவது உங்களுக்கு முன்னரே தெரியுமா?

**தூயவன் :**

இல்லை; தெரியாது.

**மணியரசன் :**

தெரியாதா? பின் எதற்கு அந்த வீட்டைக் கண்காணித்து வந்தீர்கள்?

**தூயவன் :**

சிலர் அந்தப் பெண் மீது குற்றம் சுமத்தி இருந்தனர்.

**மணியரசன் :**

என்னவென்று?

**தூயவன் :**

அவர் முறைகேடாக நடந்து கொள்வதாக.

**மணியரசன் :**

புரியவில்லை!

**தூயவன் :**

சரியான விடையைத்தானே சொன்னேன்.

**மணியரசன் :**

அஃதில்லை. உங்கள் செய்கைக்கும் சொன்ன விடைக்கும் தொடர்பு இல்லையே!

**தூயவன் :**

நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?

**மணியரசன் :**

முறைகேடாக நடந்து கொள்வதாகக் குற்றச்சாட்டு; சரிதானே?

**தூயவன் :**

சரிதான்.

**மணியரசன் :**

நீங்கள் உயர்பதவியில் இருப்பவர்; குற்றச்சாட்டோ அத்துணைக் கடுமையானது இல்லை. அப்படி இருக்க, காவல்துறைத் துணை ஆய்வாளர் பொறுப்பில் உள்ள தாங்கள், அந்தப் பெண்ணின் வீட்டை இரவு முழுதும்

கண்காணித்து இருக்கிறீர்கள்; இது சரியாகப் படவில்லையே! ஒரு காவலரைப் பணித்திருக்கலாமே?

**தூயவன் :**

நீங்கள் சொல்வது சரிதான். ஒரு காவலரே அந்தப் பெண்ணைக் கண்காணிக்கும்படி பணிக்கப்பட்டிருந்தார்; அதுவும் தொடர்ந்து செய்யும்படி பணிக்கப்படவில்லை. கொலை நிகழ்ந்த அன்று, அந்த நேரத்தில் வேறு வேலை பொருட்டு அந்த வழியே நான் அங்குச் செல்ல வேண்டி இருந்தது. நினைவுக்கு வரவே, என்னதான் அங்கு நடக்கிறது என்பதை நேரில் பார்க்க நான் செல்ல நேர்ந்தது; அவ்வளவே.

*(மணியரசன் சிந்தனையோடு சிறிது நிலைத்து நிற்கிறார்.)*

**மணியரசன் :**

முறைகேடு என்றீர்களே; அஃதென்ன?

**தூயவன் :**

அக்கம் பக்கம் இருப்போர் அந்த வீட்டில் சட்டத்திற்குப் புறமான செயல்கள் நிகழ்வதாய்க் குறை கூறி இருந்தனர்.

**மணியரசன் :**

அஃதென்ன சட்டத்திற்குப் புறமான செயல்கள்? விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்.

**தூயவன் :**

அந்தப் பெண் அந்த வீட்டில் பரத்தமைத் தொழிலை நடத்தி வருவதாகக் குற்றச்சாட்டு.

**மணியரசன் :**

இதைச் சொல்லவா இத்துணைத் தயக்கம்? நல்லது; இன்னொரு கேள்வி. கொலை செய்யப்பட்ட கோதையை முன்னரே உங்களுக்குத் தெரியுமா?

**தூயவன் :**

தெரியும்.

**மணியரசன் :**

எப்படி?

**தூயவன் :**

பரத்தமைத் தொழிலில் ஈடுபட்டார் என்று முன்னர் ஒருமுறை எங்களால் சிறைபடுத்தப் பட்டுள்ளார்.

**மணியரசன் :**

அப்படியா? வியப்பாக உள்ளதே! கொலையுண்ட அந்தப் பெண் ஏதும் அறியாத பேதைப் பெண் என்றாரே அரசு வழக்குரைஞர்; அஃது எப்படி? நீங்களும் இங்குக் கேட்டுக் கொண்டுதானே இருந்தீர்கள்?

**தூயவன் :**

அவரைத்தான் கேட்க வேண்டும்.

**மணியரசன் :**

சரி; உங்கள் கருத்து என்ன? நீங்கள்தானே கோதையைக் கண்காணித்து வந்தீர்கள்.

**தூயவன் :**

உறுதியாக என்னால் உரைக்கக் கூடவில்லை. ஆனால், வெளியாட்கள் அந்த வீட்டிற்கு வந்து செல்லும் வழக்கத்தை வைத்துக்கொண்டு இருந்துள்ளனர். நான் கேட்டறிந்ததி லிருந்து, கட்டிய கணவனை விட்டுக் கதிரவனோடு மட்டுமே கோதை தொடர்பு கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

**மணியரசன் :**

அதற்கான சான்றுகள் கிடைத்தனவா?

*(அரசு வழக்குரைஞர் எழுந்து குறுக்கிடுகிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

நடுவர் அவர்களே, இக்கேள்விகள் வழக்கின் போக்கைத் திசை திருப்புவனவாக உள்ளன. எனவே, இத்தகைய கேள்விகள் கேட்கப்படுவதை நான் எதிர்க்கிறேன்.

*(நடுவர் மணியரசனை நோக்குகிறார். குறிப்பறிந்து மணியரசன் தன் பேச்சைத் தொடர்கிறார்.)*

**மணியரசன் :**

ஒரு கொலை நடந்துள்ளது; அதற்கான காரணம் என்ன? அரசுப் பக்கத்தில் காட்டப்படவில்லை. எந்தச் செயலுக்கும் ஏதேனும் ஒரு காரணம் இருக்கும். எனவே, இக்கொலைக்கும் கட்டாயம் இருந்தே ஆக வேண்டும். அந்தக் காரணத்தை நாம் அறிய வேண்டாவா? அந்த நோக்கிலேயே என் கேள்விகள் அமைந்து உள்ளன. நடுவர் அவர்கள் என் கேள்விகளைத் தொடர ஒப்புதல் அளிக்க வேண்டும்.

**நடுவர் :**

அரசு வழக்குரைஞரின் எதிர்ப்பு ஏற்கப்படவில்லை. நீங்கள் உங்கள் கேள்விகளைத் தொடரலாம்.

**மணியரசன் :**

மிக்க நன்றி, நடுவர் அவர்களே. *(சான்றாளர் பக்கம் திரும்பி)* என் கேள்வியை மீண்டும் சொல்கிறேன். கொலையுண்ட அந்தப் பெண் கோதைக்கு எதிரான சான்றுகள் கிடைத்தனவா?

**தூயவன் :**

கிடைத்தன.

**மணியரசன் :**

என்ன சான்றுகள்?

**தூயவன் :**

அந்த வீட்டைச் சிலர் தங்கள் அடாத செயலுக்குப் பயன்படுத்திக் கொண்டமைக்கான நிழற்படங்கள்.

**மணியரசன் :**

யார் அந்தச் சிலர்?

*(அரசு வழக்குரைஞர் விரைந்து எழுந்து குறுக்கிடுகிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

இடையில் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். இந்தக் கேள்விக்குக் கிடைக்கும் விடையால் சில நல்ல மனிதர் களின் பெயர் வீணே கெட்டுப் போகக் கூடும்; தேவை தானா? இவ்வழக்கில் இந்தக் கேள்வியால் எந்தப் பயனும்

எதிர்க்கட்சியினருக்கு விளையப் போவதில்லை. எனவே, இந்தக் கேள்வியைக் கேட்க ஒப்புதல் அளிக்க வேண்டா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**நடுவர் :**

அரசு வழக்குரைஞரின் எதிர்ப்பு ஏற்கப்படுகிறது. சான்றாளர் அந்தக் கேள்விக்கு விடை அளிக்க வேண்டியது இல்லை. உங்கள் உசாவலைத் தொடருங்கள்.

**மணியரசன் :**

கிடைத்த சான்றுகள் மேல் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

**தூயவன் :**

எதுவும் இல்லை.

**மணியரசன் :** *(வியப்புடன்)*

எதுவும் இல்லையா? என்ன சொல்கிறீர்கள்?

**தூயவன் :**

கிடைத்த சான்றுகள் அனைத்தும் கொலை நிகழ்ந்த பின்னர், அந்த வீட்டை நன்கு ஆய்வு செய்தபோது அகப் பட்டவை; எனவே, மேற்கொண்டு எதுவும் செய்யத் தேவை இல்லாது போயிற்று.

*(மணியரசன் சில வினாடிகள் திகைத்து நிற்கிறார். அடுத்து எப்படித் தொடர்வது என்பதைச் சிந்திப்பவராய் நடுவரை நோக்குகிறார்.)*

**மணியரசன் :**

ஏதோ உள்ளுணர்வு என்னவோ நடக்கப் போவதாக உங்களை உந்தித் தள்ளியதால் வீட்டின் உள்ளே நுழைந்த தாகச் சொன்னீர்கள்; இல்லையா?

**தூயவன் :**

ஆமாம்; சொன்னேன்.

**மணியரசன் :**

அஃதென்ன உள்ளுணர்வு? எப்படித் திடீரென்று ஏற்பட்டது? விளக்கமாகச் சொல்லுங்களேன்; கேட்போம்.

**தூயவன் :**

அந்த வீட்டைக் கண்காணிக்கத் தொடங்கிச் சில மணித் துளிகளே ஆகி இருக்கும். அப்போது, கதிரவனும் கோதையும் வந்த மகிழுந்து வண்டி வீட்டு வாசலில் வந்து நின்றது. வண்டி வெளிச்சத்தில் வீட்டுக் கதவு சிறிது திறந்து இருந்தது போல் எனக்குத் தெரிந்தது. ஆனால், கதிரவனும் கோதையும் உள்ளே சென்றபோது கதவைத் திறவுகோல் கொண்டு திறந்த ஒலி எனக்குத் தெளிவாகவே கேட்டது. அதே நேரம், யாரோ சுவரைத் தாண்டி ஓடி விரைந்தது என் பார்வையில் பட்டது. எனக்கு ஒரே குழப்பம்! வீட்டின் உள்ளே சென்றவர்கள் விளக்கைப் போடவில்லை. தெருக்கதவோ திறந்தே கிடந்தது வீதியில் சென்ற ஒன்றிரண்டு வண்டிகளின் ஒளிக் கீற்றில் தெரிந்தது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இங்கு என்னவோ நடக்க உள்ளதை எனக்கு உணர்த்தின. எனவே, நான் மெல்ல வீட்டினுள் நுழைந்தேன். பின்னர் நடந்ததை நீங்கள் அறிவீர்கள்.

**மணியரசன் :**

அந்த வீட்டில் சில நிழற்படங்கள் கிடைத்ததாகச் சொன்னீர்கள்; இல்லையா?

**தூயவன் :**

ஆமாம்.

**மணியரசன் :**

அப்படங்களில் இங்குக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள கதிரவனின் படமும் ஒன்றா?

*(அரசு வழக்குரைஞர் எழுந்து குறுக்கிடுகிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

இந்தக் கேள்விக்கு என் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நடுவர் :**

உங்கள் எதிர்ப்பு ஏற்கப்படவில்லை. சான்றாளர் விடை அளிக்கட்டும்.

*(அரசு வழக்குரைஞர் மெல்லத் தன்னிடத்தில் அமர்கிறார்.)*

**தூயவன் :**

குற்றஞ் சாட்டப்பட்டவரின் படம் அவற்றில் இல்லை.

**மணியரசன் :** *(வியப்புடன்)*

அப்படியா?

**தூயவன் :**

ஆமாம்.

**மணியரசன் :**

கோதை அச்சுறுத்திப் பணம் பறிப்பதாகக் கதிரவன் காவல்துறையில் முறையிட்டு இருந்தாரா?

**தூயவன் :**

இல்லை.

**மணியரசன் :**

அப்படி என்றால், கோதை கதிரவனை மிரட்டிப் பணம் பறிக்கவில்லை; எனவே, கதிரவன் கோதையைக் கொலை செய்யக் காரணம் இல்லை. சரி தானே?

**தூயவன் :**

சரி இல்லை.

**மணியரசன் :** *(வியப்புடன்)*

சரி இல்லையா? எப்படி? கதிரவனின் நிழற்படம் கண்டுபிடிக்கப்பட்ட படங்களில் இல்லையே!

**தூயவன் :**

உண்மைதான். ஆனால், நாங்கள் அந்த வீட்டை ஆய்வு செய்வதற்கு முன்னரே யாரோ நன்கு ஆய்வு செய்திருந்தனர். அங்கு இருந்த பொருள்கள் கலைக்கப்பட்டு அறையே

தாறுமாறாக விளங்கியது. எனவே, கதிரவனின் படமும் இன்னும் பலரின் படங்களும் அங்கிருந்து யாராலோ அகற்றப் பட்டு இருக்கலாம்; ஒதுக்குவதற்கு முடியாது.

**மணியரசன் :**

கதிரவன் காவல்துறையில் முறையிட இல்லையே! அவர் மிரட்டப்பட்டிருந்தால் நிச்சயம் முறையிட்டு இருப்பார் இல்லையா?

**தூயவன் :**

தேவை இல்லை. அந்த வீட்டில் சில பெரிய மனிதர் களின் படங்கள் கிடைத்தன; ஆனால், அவர்களில் எந்த ஒருவரும் காவல்துறைக்கு முறையீடு செய்திருக்கவில்லை.

**மணியரசன் :**

அந்தச் சில பெரிய மனிதர்களிடம் நீங்கள் ஆய்வு செய்தீர்களா?

**தூயவன் :**

செய்தேன்.

**மணியரசன் :**

என்ன சொன்னார்கள் அவர்கள்? கோதை மிரட்டிப் பணம் பறித்ததாக ஒப்புக் கொண்டார்களா?

**தூயவன் :**

இல்லை; யாருமே ஒப்புக் கொள்ளவில்லை.

**மணியரசன் :**

என்ன சொல்கிறீர்கள்? சற்று முன்னர்த்தானே சிலரைக் கோதை அச்சுறுத்திப் பணம் பறித்ததற்குக் காரணமாகிய நிழற்படங்கள் கிடைத்தன என்று இங்குச் சொன்னீர்கள்? பிறகு எப்படி?

**தூயவன் :**

நான் அப்படிச் சொல்லவில்லை. அந்த வீட்டைச் சிலர் தங்களின் தவறான உறவுக்குப் பயன்படுத்திக் கொண்டதற் கான நிழற்படங்கள் கிடைத்தன என்றுதான் சொன்னேன்.

நீங்கள் கேட்டது போலவும் நடந்திருக்கலாம்; ஆனால், அதை உறுதிப்படுத்த யாரும் முன்வரவில்லை.

**மணியரசன் :**

ஏன்? அச்சமா?

**தூயவன் :**

இல்லை, கொலையுண்ட கோதை அவர்களிடம் நெருங்கிய நட்புடையவராம்.

**மணியரசன் :**

அப்படியானால், கோதையோடு தொடர்புடைய அந்த நிழற்படங்கள்?

**தூயவன் :**

அந்தப் படங்கள் எதிலும் கோதை கிடையாது. வெவ்வேறு பெண்கள். அவரவர்களுக்கு நெருங்கிய தொடர்புடைய அயல் பெண்கள். கோதையின் வீட்டை அவ்வப்போது பயன் படுத்திக் கொண்டுள்ளனர்.

*(மணியரசன் பல வினாடிகள் தூயவனைப் பார்த்தவாறு நிற்கிறார். பின்னர் நடந்து தன்னிடத்திற்கு வந்து அங்கிருந்த கோப்புகளைச் சிறிது ஆராய்கிறார். மீண்டும் சான்றாளரை நெருங்குகிறார்.)*

**மணியரசன் :**

இந்த வழக்கில் முதல் குற்றச் செய்தி அறிக்கையை நீங்கள்தான் பதிவு செய்தீர்களா?

**தூயவன் :**

ஆமாம்.

**மணியரசன் :**

இந்தக் கொலையை என் கட்சிக்காரர் கதிரவன்தான் செய்தார் என்று எப்படி முடிவுக்கு வந்தீர்கள்?

**தூயவன் :**

கொலை செய்யப்பட்டவர் குற்றஞ் சாட்டப்பட்டவரின் அணைப்பிலே **இருந்தார்;** அங்கு அவரைத் தவிர நானும்

வழக்குரைஞர் கண்ணனும் மட்டுமே இருந்தோம். கதிரவன் குடித்து இருந்தார். அவரிடம் கேட்டபோது, குடி மயக்கத்தில் தான் இந்தக் கொலையைச் செய்திருக்கலாம் என்று ஒப்புக் கொண்டார். எனவே, சூழ்நிலைச் சான்றுகளை நோக்கிக் கதிரவனே இக்கொலையைச் செய்து உள்ளார் என்று முடிவுக்கு வர வேண்டியதாயிற்று. அப்படியே முதல் செய்தி அறிக்கையைப் பதிவு செய்தேன்.

**மணியரசன் :**

கொலை நடந்தபோது, அந்த அறையில் கதிரவன் நீங்கலாக நீங்களும் கண்ணனும்தாம் இருந்தீர்கள்?

**தூயவன் :**

ஆமாம்.

**மணியரசன் :**

நடந்த கொலையைக் கண்ணால் யாரும் பார்க்க வில்லை?

**தூயவன் :**

இல்லை; அறை நிறை இருட்டாக இருந்தது.

**மணியரசன் :**

அறை நிறை இருட்டாக இருந்தது; கதிரவன், கண்ணன், நீங்கள் மூவர் மட்டுமே, அப்போது அந்த அறையில் இருந்து இருக்கிறீர்கள்; இல்லையா?

**தூயவன் :**

ஆமாம்.

**மணியரசன் :**

கண்ணனோ, ஏன்? நீங்களோ, இந்தக் கொலையைச் செய்திருக்க வாய்ப்பு உள்ளது; இல்லையா?

*(தூயவன் உடனே விடை அளிக்காது ஆழ்ந்த சிந்தனையில் சிறிது நேரம் இருக்கிறார்.)*

**மணியரசன் :**

இதிலெதற்கு இத்துணைச் சிந்தனை? நிறைந்த இருட்டு; நீங்கள் மூவரே அங்கு இருக்கிறீர்கள். உங்கள் மூவரில் யார் வேண்டும் என்றாலும் கோதையைக் கொலை செய்திருக் கலாம்; இல்லையா?

**தூயவன் :**

செய்திருக்கலாம்; ஆனால், அதற்கு வாய்ப்பு இல்லை.

**மணியரசன் :**

எப்படிச் சொல்கிறீர்கள்?

**தூயவன் :**

கொலை செய்யப்பட்டவர் கதிரவன் அணைப்பிலே இருந்தார். அவரை அந்த இருட்டில் அடையாளம் கண்டு கொலை செய்வதென்பது எனக்கோ, கண்ணனுக்கோ இயலாத செயல். அதுவும்போக, அவரைக் கொலை செய்யப் போதிய காரணம் எங்களுக்குக் கிடையாது.

**மணியரசன் :**

வேறு யாருக்காவது இருக்கலாம்; இல்லையா?

**தூயவன் :**

இருக்கலாம்.

**மணியரசன் :**

அப்படி இருந்து, அந்த ஒருவர் இருட்டில் கொலை செய்துவிட்டு, யாரும் அறியாது அங்கிருந்து வெளியேறி இருக்கலாம்; இல்லையா?

**தூயவன் :**

அதற்குச் சிறிதும் வாய்ப்பு இல்லை.

**மணியரசன் :**

எப்படிச் சொல்கிறீர்கள்?

**தூயவன் :**

எனக்கும் கண்ணனுக்கும் எப்படி அந்த இருட்டில் கொலை செய்யப்பட்டவரை அடையாளங் காணக் கூடவில்லையோ,

அப்படித்தானே அந்த வேறொருவருக்கும் இருந்திருக்க முடியும்.

*(மணியரசன் சில வினாடிகள் சிந்தனை வயப் படுகிறார்.)*

**மணியரசன் :**

கொலை செய்ய வந்தவர், கோதையைத்தான் கொலை செய்யும் முடிவோடு வந்தவர் என்று எதைக் கொண்டு முடிவுக்கு வந்தீர்கள்? அவர் இலக்கு கதிரவனாகவும் இருந்து இருக்கலாம்; இல்லையா? இருட்டில் தவறிக் கதிரவனுக்கு மாறாகக் கோதையைக் கத்தியால் குத்தி இருக்கலாம்; இல்லையா?

**தூயவன் :**

இருக்கலாம்; ஆனால், அப்படி ஏதும் அங்கு நடை பெறவில்லை.

**மணியரசன் :**

எப்படி அத்துணை உறுதியாகச் சொல்கிறீர்கள்?

**தூயவன் :**

நான் கதவுக்கும் கட்டிலுக்கும் இடையே வழியில் நின்றிருந்தேன். கண்ணனும் சற்றுத் தள்ளி நின்று கொண்டு இருந்தார். யாரேனும் வெளியே செல்ல முயன்று இருந்தால், எங்களுக்குத் தெரியாமல் சென்று இருக்க இயலாது. நகர்கின்ற ஓசையாவது கேட்டிருக்கும்.

**மணியரசன் :** *(சிந்தனையுடன்)*

கண்ணன் அந்த அறையுள் இருப்பது உங்களுக்கு முன்னரே தெரியுமா?

**தூயவன் :**

தெரியாது. விளக்குகள் எரிந்த போதே அவரை அங்குப் பார்த்தேன்.

**மணியரசன் :**

அவர் அந்த அறைக்குள் உங்களுக்கு முன்னரே வந்து விட்டாரா?

**தூயவன் :**

இல்லை; பின்னர்த்தான் வந்து உள்ளார்.

**மணியரசன் :**

நீங்கள் அறையுள் முன்னரே இருக்கிறீர்கள்; அதுவும் கதவருகே நின்று கொண்டு இருக்கிறீர்கள். இருந்தும் கண்ணன் உள்ளே நுழைந்த ஓசையை நீங்கள் கேட்கவில்லை. ஆனால், மற்றவர் யாரேனும் ஓசை எழுப்பாது வெளியேற முயன்று இருந்தால், நகர்கிற ஓசையாவது கேட்டிருக்கும் என்று சொல்கிறீர்கள்! விடை இடிக்கிறதே.

*(தூயவன் விடை சொல்லத் தடுமாறுவது நன்கு தெரிகிறது.)*

**மணியரசன் :**

சொல்லுங்கள்; என்ன தடுமாற்றம்?

**தூயவன் :**

தவறுதான்.

**மணியரசன் :**

ஓசையாவது என்றீர்கள்; இல்லையா? அதில் ஏதோ தொக்கி நிற்கிறதே; அஃது என்ன?

**தூயவன் :**

அந்த இருட்டில் எங்கள் இருவர் மீதும் மோதிக் கொள்ளாமல் யாரும் வெளியேறி இருக்க முடியாது; அதிலும், குறிப்பாக நான் கதவருகே அப்போது இருந்தேன்.

**மணியரசன் :**

கொஞ்சம் பொறுங்கள்.

*(மணியரசன் தன் இருப்பிடம் சென்று மேசை மீதிருந்த தன் கோப்புகளைப் புரட்டி ஆராய்கிறார். பின்னர்ச் சான்றுரைஞர் அருகில் வருகிறார்.)*

**மணியரசன் :**

நீங்கள் என்ன சொன்னீர்கள்?

**தூயவன் :**

யாரேனும் தப்ப முயன்று இருந்தால், என் மீது இடித்துக் கொண்டுதான் சென்றிருக்க வேண்டும்.

**மணியரசன் :**

சரியாகச் சொன்னீர்கள். உங்கள் மீது அந்த அறையில் யாரும் இடித்துக் கொள்ளவில்லையா? சிந்தித்துச் சொல்லுங்கள்.

**தூயவன் :** *(சிந்தித்தபடி)*

கண்ணன் என் மீது இடித்துக் கொண்டார்.

**மணியரசன் :**

அவர்தான் இடித்துக் கொண்டார் என்று எப்படித் தெரியும்?

**தூயவன் :**

அவரே என்னிடம் கூறினார்.

**மணியரசன் :**

அதை நீங்கள் அப்படியே ஒப்புக் கொண்டீர்கள்?

**தூயவன் :**

ஆமாம்; அதில் என்ன தவறு?

**மணியரசன் :**

உங்கள் திறமையை நான் குறைவாக மதிப்பிட வேண்டி உள்ளது.

**தூயவன் :**

ஏன்? எனக்கு விளங்கவில்லை.

**மணியரசன் :**

விளக்கமாகவே சொல்கிறேன். அறை எங்கும் இருட்டு; கண்களுக்கு அங்கு எதுவுமே தெரியவில்லை. அந்த அளவிற்கு மையிருட்டு. உங்கள் மேல் யாரோ மோதிக் கொள்கிறார்; அதே போல், கண்ணனும் யார் மீதோ மோதிக் கொள்கிறார்; கண்ணனும் நீங்களும் ஒருவர்க்கு ஒருவர் மோதிக் கொண்டதாக நீங்கள் முடிவுக்கு வருகிறீர்கள்; சரி தானே?

**தூயவன் :**

சரிதான்.

**மணியரசன் :**

நான் சொல்கிறேன், அதுதான் இல்லை என்று! கொலை செய்த யாரோ ஒருவர், தப்பிச் செல்லக் கதவை நாடியபோது, முதலில் உங்கள் மேல் இடித்துக் கொண்டு இருக்கிறார். பிறகு, விலகி வெளியேறும்போது, கண்ணன் மீது இடித்துக் கொண்டு இருக்கிறார். அந்த இருட்டில் நடந்தவை அவ்வளவே! இதை நான் சொல்கிறேன்; இல்லை என்று நீங்கள் மறுக்கிறீர்களா? இல்லை, மறுப்பதற்கு ஏதேனும் காரணம் வைத்து இருக்கிறீர்களா?

**தூயவன் :** *(மிகுந்த சிந்தனைக்குப் பிறகு)*

நீங்கள் சொல்கிறபடியே நடந்து இருக்கலாம்; மறுப்பதற்கு இடமில்லை. ஆனால், என் எண்ணத்தைக் கேட்டால்...

*(மணியரசன் விரைந்து குறுக்கிடுகிறார்.)*

**மணியரசன் :**

நிறுத்துங்கள். உங்கள் எண்ணத்தை யாரும் இங்குக் கேட்கவில்லை. இது ஒரு கொலை வழக்கு! கொலைக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரின் உயிர் இங்கு ஊசல் ஆடிக்கொண்டு இருக்கிறது; இந்த இடத்தில் பேசப்பட வேண்டியவை, உண்மைகளே; எண்ணங்கள் அல்ல. காட்டுகளாக உறுதியான சான்றுகளே காட்டப்பட வேண்டும், கருத்துக்கள் அல்ல.

**நடுவர் :**

நல்லது; சான்றளிப்பவர் கேள்விக்கு உரிய விடையை மட்டும் அளித்தலே போதுமானது. எண்ணங்களையும் கருத்துக் களையும் வழக்குரைஞர் கேட்கும்போது சொல்லலாம். *(மணியரசன் பக்கம் திரும்பி)* நீங்கள் தொடருங்கள்.

**மணியரசன் :**

உங்கள் உடையின் முன் பகுதியில் குருதி படிந்து இருந்தது; இல்லையா?

**தூயவன் :**

ஆமாம்; கண்ணன் பார்த்துவிட்டு என்னைக் கேட்டார்.

**மணியரசன் :**

அதற்கு நீங்கள் என்ன சொன்னீர்கள்?

**தூயவன் :**

கோதை உடலைக் கதிரவன் அணைப்பிலிருந்து பிரித்துக் கிடத்தியபோது பட்டிருக்கும் என்றேன்.

**மணியரசன் :**

உடலைப் பிரித்துக் கிடத்தியபோதுதான் உங்கள் உடையில் குருதி பட்டிருக்கும் என்பதை உறுதியாகச் சொல்லக் கூடுமா?

**தூயவன் :** *(சிந்தனையுடன்)*

முடியாது.

**மணியரசன் :**

கோதையைக் கத்தியால் குத்திய போது அந்தக் குருதி உடையில் பட்டிருக்கலாம்; இல்லையா?

**தூயவன் :**

நான் குத்தி இருந்தால், பட்டிருக்கலாம்.

**மணியரசன் :**

அல்லது, இருட்டில் உங்கள் மேல் யாரோ இடித்துச் சென்றார்களே, அந்த ஆள் கொலையாளியாய் இருந்து, அவர் கையில் அப்போது வைத்திருந்த கத்தியிலிருந்த குருதி உங்கள் உடையில் பட்டிருக்கலாம் இல்லையா?

**தூயவன் :**

இருக்கலாம்.

**மணியரசன் :**

உங்கள் உடையில் குருதி பட்டமைக்கான மூன்று வெவ்வேறு நிகழ்வுகளைக் கூறினேன்; அவை அனைத்திற்கும் இருக்கலாம் என்றே விடை அளித்தீர்கள். அவற்றில்

எந்த நிகழ்வு உறுதியாக நடந்திருக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்கள்?

**தூயவன் :**

ஒன்று மட்டும் நடக்கவில்லை என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

**மணியரசன் :**

என்ன அது?

**தூயவன் :**

நான் கோதையைக் கத்தியால் குத்தவில்லை; எனவே, அந்நிகழ்வுக்கு இடம் இல்லை. உடலைக் கிடத்தும் போது பட்டதா? இருட்டில் கொலையாளி என்மேல் இடித்துக் கொண்ட போது ஏற்பட்டதா? எனக்கு உறுதியாகத் தெரியாது. இதுதான் உண்மை.

*(மணியரசன் நடுவர் இருக்கைக்கு எதிர் வந்து பேசுகிறார்.)*

**மணியரசன் :**

மதிப்பிற்குரிய நடுவர் அவர்களே, இவ்வழக்கைக் காவல்துறையும் அரசு வழக்குரைஞரும் ஏனோ தானோ என்று நடத்துவதாகத் தெரிகிறது. என் கட்சிக்காரர் கொலை நிகழ்ந்த இடத்தில் குடி மயக்கத்தில் இருந்துள்ளார் என்ற ஒரே காரணத்தாலேயே, அவர்தான் கொலை செய்தார் என்று அவர்களே முடிவுக்கு வந்து, அவரைச் சிறைப்படுத்தி இங்குக் குற்றவாளியாக நிறுத்தி உள்ளனர். இதுவரை என் கட்சிகாரருக்கு எதிராக எந்த உறுதியான சான்றும் இந்த மன்றத்தில் அரசுப் பக்கத்தில் நிலை நாட்டப்படவில்லை.

*(அரசு வழக்குரைஞர் எழுந்து குறுக்கிடுகிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட கத்தியை இங்குச் சான்றாக அளித்துள்ளோம். கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப் பட்டவரே ஒப்புதல் உறுதிமொழி தந்துள்ளார்.

**மணியரசன் :**

இவை எல்லாம் என் கட்சிக்காரருக்கு எதிரான சான்று களா? நல்ல வேடிக்கை!

**நடுவர் :** *(மணியரசனை நோக்கி)*

நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?

**மணியரசன் :**

இவை எல்லாம் சான்றுகளே இல்லை; எதற்கும் உதவாதவை! அதை இப்போதே, இங்கேயே உங்களுக்குக் காட்டுகிறேன்.

*(மணியரசன் சான்றுரைஞர் கூண்டருகே வருகிறார்.)*

**மணியரசன் :**

துணை ஆய்வாளர் அவர்களே, என் கட்சிக்காரர் என்ன என்று ஒப்பி எழுதிக் கொடுத்துள்ளார்?

**தூயவன் :**

குடி மயக்கத்தில் இந்தக் கொலையைத் தான் செய்திருக் கலாம் என்று எழுதிக் கொடுத்துள்ளார்?

**மணியரசன் :**

இருக்கலாம் என்பதன் பொருள் உங்களுக்குத் தெரியும் இல்லையா?

**தூயவன் :**

தெரியும்.

**மணியரசன் :**

இருக்கலாம் என்றால் இல்லாமலும் இருக்கலாம் என்ற பொருளும் உண்டு; இல்லையா?

**தூயவன் :**

ஆமாம்.

**மணியரசன் :**

அப்படியானால், என் கட்சிக்காரர் இந்தக் கொலையைச் செய்யாதும் இருந்திருக்கலாம் என்ற ஐயத்திற்கும் இடம் உண்டு; இல்லையா?

**தூயவன் :**

ஆமாம்; இடம் இருக்கிறது.

**மணியரசன் :**

இவ்வளவும் அறிந்த நீங்கள், பின்னர் எப்படி என் கட்சிக் காரர் மீது இந்தக் கொலைப் பழியைச் சுமத்தினீர்கள்?

*(தூயவன் விடையளிக்காது அமைதியாக நிற்கிறார்.)*

**மணியரசன் :**

குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே?

**தூயவன் :**

தெரியும்.

**மணியரசன் :**

தெரிந்துமா அதைச் சான்றாகப் பதிவு செய்தீர்கள்?

**தூயவன் :**

அவர் ஒப்புதலைப் பதிவு செய்தது, கொலை நடந்த அடுத்த நாள் காலையில் அவர் நல்ல தெளிந்த நிலையில் இருந்தபோது.

**மணியரசன் :** *(மெல்லச் சிரித்தபடி)*

இஃது அதைவிட மிகத் தவறானது! குடி மயக்கத்தில் ஒருவர் என்ன செய்தார் என்பது மயக்கம் தெளிந்த பிறகு அவருக்கு முழுமையாக நினைவு இருக்குமா?

**தூயவன் :**

ஐயம்தான்.

**மணியரசன் :**

இப்போதேனும் சரியாக விடை அளித்தீர்களே, மிக்க நன்றி. அடுத்துக் கொலை செய்யப் பயன்பட்ட கத்திக்கு வருவோம். அந்தக் கத்தியின் சொந்தக்காரர் யாரென்று கண்டு பிடித்தீர்களா?

**தூயவன் :**

இல்லை.

**மணியரசன் :** *(வியப்புடன்)*

இல்லையா? ஏன்? வழக்கிற்கு மிக இன்றி அமையாதது ஆயிற்றே!

**தூயவன் :**

உண்மைதான். ஆனால், என்ன முயன்றும் அதன் உரிமையாளர் யாரென்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. அந்தக் கத்தி உள்ளூர்க் கடைகள் அனைத்திலும் எளிதாகக் கிடைக்கக் கூடியதே. கத்தியில் எந்தச் சிறப்புக் குறியீடும் கூறுகளும் கிடையாது. எனவே, எங்கள் அனைத்து முயற்சி களும் வீணாயின.

**மணியரசன் :**

சரி; கைப்பிடியில் இருந்த விரல்குறி அடையாளங்கள் என்னாயின? அதைப்பற்றி இங்கு எதுவும் சொல்லப்பட வில்லையே, அஃது ஏன்? கொலை வழக்கில் மிக மிக இன்றி அமையாத சான்று அன்றோ அது?

**தூயவன் :**

ஆமாம்; ஆனால், கத்தியில் விரல்குறிகள் எதுவும் காணப்படவில்லை.

**மணியரசன் :**

காரணம்?

**தூயவன் :**

ஒன்று, கொலை செய்தவர் கையுறை அணிந்து இருந்து இருக்கலாம்; அல்லது, கைப்பிடியை நன்கு துடைத்து விட்டுக் கத்தியைத் தூக்கி வெளியே எறிந்து இருக்கலாம்.

**மணியரசன் :**

என்ன சொல்கிறீர்கள்? கொலை செய்யப் பயன்பட்ட கத்தி உடலிலேயே இருக்கவில்லையா?

**தூயவன் :**

இல்லை. கொலை நடந்த அறைக்கு வெளியே புதரில் கிடந்தது.

**மணியரசன் :**

அங்கே எப்படி வந்தது?

**தூயவன் :**

எங்கள் கணிப்பு, கதிரவன் கொலையைச் செய்து விட்டு, அறையினின்று தப்பிக்க முயன்று முடியாததால், கட்டிலுக்கு அருகே இருந்த காலதர் வழியே கத்தியை எறிந்து இருக்க வேண்டும்.

**மணியரசன் :**

இவற்றை எல்லாம் ஏன் முன்னரே இங்குச் சொல்ல வில்லை?

**தூயவன் :**

சொல்ல வாய்ப்பு அமையவில்லை; அதனால் முன்னரே சொல்லவில்லை.

**மணியரசன் :**

மிக நன்றாக உள்ளதே உங்கள் பேச்சு! நீங்களாக ஒருவரைக் குற்றவாளி என்று முடிவு செய்து கொள்வீர்கள்; அதை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகளை மட்டும் இவ் வழக்கு மன்றத்தில் அளிப்பீர்கள்; மற்றவற்றை வசதியாய் மறந்து விடுவீர்கள். அருமை; அருமை! இது தான் முறையா? உண்மையைக் கண்டு அறிவது மட்டும் அன்றோ உங்கள் உண்மை நோக்கமாக இருந்து இருக்க வேண்டும்! *(நடுவர் பக்கம் திரும்பி)* அறிவார்ந்த நடுவர் அவர்களே, இங்குக் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுக் கூண்டிலே நிறுத்தப் பட்டுள்ள என் கட்சிக்காரருக்கு எதிராக அரசுப் பக்க வழக்கில் அமைந்து இருந்த ஓட்டைகளை அடுக்கடுக்காய் எடுத்துக் காட்டி உள்ளேன். எந்தச் சான்றாளரும் எந்தச் சான்றாவணங் களும் என் கட்சிக்காரர் குற்றவாளி தான் என்பதை ஐயத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்தவில்லை என்பதை இங்கே நான் நாட்டி உள்ளேன். இவ்வழக்கில் எங்கு நோக்கினாலும் ஓட்டைகளே! அவற்றை இங்குப் பட்டியல் இட்டுக் காரணங் களோடு காட்டி, என் கட்சிக்காரர் குற்றவாளி இல்லை என்பதை

எளிதில் காட்ட முடியும்; இம்மன்றத்திற்கும் அது தெரியும். இருந்தும், நடுவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். மேலும் வழக்கைத் தொடரும் முன்னர், கொலை நிகழ்ந்த இடத்தைக் காவல்துறையினருடன் சென்று நான் ஒருமுறை நன்கு ஆய்வு செய்ய விழைகிறேன். நடுவர் அவர்கள் என் வேண்டுகோளை ஏற்று, இவ்வழக்கை நாளைக்குத் தள்ளி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நடுவர் :**

அரசு வழக்குரைஞரின் கருத்து என்ன?

**அரசு வழக்குரைஞர் :** *(எழுந்து)*

இதில் எந்த மறுப்பும் எங்களுக்கு இல்லை. எதிர்கட்சி வழக்குரைஞருக்கு உடன்பாடு என்றால், நானும் அவ்வாய்வில் இணைந்து கொள்கிறேன்.

**நடுவர் :**

நல்லது. இவ்வழக்கு நாளைக் காலைப் பதினொன்று மணிக்குத் தள்ளி வைக்கப்படுகிறது. வழக்குரைஞர்களின் கள ஆய்வுக்குக் காவல்துறைத் துணை ஆய்வாளர் தகுந்த ஏற்பாட்டைச் செய்து தர ஆணை இடுகிறேன். இப்போது மன்றம் கலையலாம்.

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 33

**இடம்** : கண்ணன் வீட்டுக் கூடம்.

**காலம்** : மாலை மணி ஏழு.

**உறுப்பினர்கள்** : கண்ணன், தேன்மொழி, மங்கை, எழிலி, எழிலியின் தந்தை தங்கப்பர், தாய்.

**சூழல்** : கண்ணன், தேன்மொழி, தங்கப்பர் ஆகியோர் மெல்லணை நாற்காலிகளில்

அமர்ந்து இருக்கின்றனர். மங்கையும் எழிலியும் அருகே நின்று கொண்டு இருக்கின்றனர்.

**தங்கப்பர் :**

கண்ணா, நீதான் பெரிய ஆள் என்று நினைத்து இருந்தேன்; ஆனால், உன் உதவியாளன் உன்னிலும் பெரிய ஆளப்பா! அந்தப் பிள்ளையை எந்தக் கொம்பனாலும் காப்பாற்ற முடியாது என்று சொல்லாதவர்களே இல்லை; இருந்தும் என்ன ஆயிற்று?

**எழிலி :**

அரசுப் பக்க வழக்குரைஞர் சரி இல்லை. அத்தான் மட்டும் இவ்வழக்கை எடுத்து நடத்தி இருந்தால், மணியரசன் ஒன்றும் செய்து இருக்க முடியாது; நீங்களும் இப்படிப் பேசிக் கொண்டு இருக்க மாட்டீர்கள். என்ன அத்தான் நான் சொல்வது?

**கண்ணன் :**

நீ சொல்வது ஓரளவிற்குச் சரி. இருந்தாலும், திறமை எங்கு இருந்தாலும் நாம் பாராட்டத்தான் வேண்டும். மணியரசன் இவ்வழக்கை மிகத் திறமையாகவே நடத்தி வந்திருக்கிறார்; அதில் எந்த ஐயமும் இல்லை, வழக்கின் ஒவ்வொரு பகுதியை யும் அணுவணுவாகப் பிரித்து ஆராய்ந்து விரல் நுனியில் வைத்திருக்கிறார்.

**தங்கப்பர் :**

கண்ணா, நான் கேட்பதற்குச் சரியான விடையை நீ சொல்ல வேண்டும். இந்த வழக்கைக் கதிரவன் சார்பாக நீ எடுத்து நடத்தி இருந்தால், மணியரசன் அளவிற்குத் திறமையாக நடத்தி இருப்பாயா?

**கண்ணன் :** *(மெல்லச் சிரித்தபடி)*

முதலில் இந்த வழக்கை நான் எடுத்துக் கொண்டு இருக்க மாட்டேன்.

**தங்கப்பர் :**

ஏன்?

**கண்ணன் :**

ஒரு வழக்கில் உண்மைகளை வெளிக்கொணர்வதும் நல்லவர்களைக் காப்பாற்றுவதும் பொல்லாதவர்களைத் தண்டனைக்கு உட்படுத்துவதும்தாம் ஓர் உண்மையான வழக்குரைஞரின் கடமை என்பது என் கருத்து. அந்த என் கொள்கையினின்றும் நான் பிறழ மாட்டேன்.

**எழிலி :**

என்ன அத்தான் சொல்கிறீர்கள்?

**கண்ணன் :**

உண்மையில் குற்றம் புரிந்தவர்களுக்கு நான் வழக்காட மாட்டேன்.

**தேன்மொழி :**

என்ன சொல்ல வருகிறீர்கள்? என் அண்ணன்தான் உண்மையில் கொலை செய்தார் என்கிறீர்களா?

**கண்ணன் :**

ஆமாம்.

**தேன்மொழி :**

அவர் கொலை செய்யவில்லை என்பதற்கான எத்தனையோ காரணங்களை மணியரசன் எடுத்தெடுத்து வழக்கு மன்றத்தில் அடுக்கிக் கொண்டு போனாரே, அவை எல்லாம் பொய்களா?

**கண்ணன் :**

பொய்கள் என்று சொல்ல மாட்டேன்; ஆனால், அவை அனைத்தும் மெய்கள் இல்லை. தன் பேச்சுத் திறமையால் பல ஐயங்களை இவ்வழக்கிலே எழுப்பி உள்ளார்; உண்மையே. ஐயங்களின் நன்மைகளைக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளிக்க வேண்டும். அந்த வகையில் கதிரவன் குற்றங் களினின்றும் விடுவிக்கப்படுவது உறுதி; அதில் எனக்கு ஐயம் இல்லை. ஆனால், உண்மை? குழி தோண்டிப் புதைக்கப் பட்டுவிடும்!

**எழிலி :**

எதைக் கொண்டு சொல்கிறீர்கள்? உங்களால் காட்ட முடியுமா?

**கண்ணன் :**

முடியும்; உங்களால் தாங்கிக் கொள்ள முடியுமா? ஒப்பனை இல்லாதது உண்மை; ஒத்துக்கொள்ள எப்படிப் பட்டவர்க்கும் கசக்கும்.

**தேன்மொழி :**

அதனால் என்ன? சொல்லுங்கள்; தெரிந்து கொள்கிறோம்.

**கண்ணன் :**

நீங்கள் தெரிந்து கொள்ளாமல் இருப்பதே நல்லது. தெரிந்து கொண்டால் மனம் பெரிதும் புண்படும்.

**தேன்மொழி :**

இப்போதே நிறைய சொல்லி விட்டீர்கள்; இனி என்ன புதிதாய் வேதனைப்பட உள்ளது? சொல்லுங்கள்.

**கண்ணன் :**

நான் அந்த வீட்டினுள் நுழைந்ததை நீ தெருவில் இருந்தபடி பார்த்துக் கொண்டு இருந்தாய்; சரிதானே?

**தேன்மொழி :**

ஆமாம்.

**கண்ணன் :**

நான் உள்ளே நுழைந்த சில வினாடிகளிலேயே 'வீஇல்' என்ற ஒலி அங்கு எழுந்தது. உனக்கும் கேட்டிருக்க வேண்டுமே?

**தேன்மொழி :**

தெளிவாகக் கேட்டது.

**கண்ணன் :**

எனவே, நீ வீட்டு வாயிலை முன்னிலும் கவனமாக ஊன்றிப் பார்த்துக் கொண்டு இருந்தாய்?

**தேன்மொழி :**

உண்மைதான்.

**கண்ணன் :**

யாரும் கதவு வழியாக வெளியேறியதை நீ அப்போது கண்டாயா?

**தேன்மொழி :**

இல்லை.

**கண்ணன் :**

'வீஇல்' என்ற ஒலி கேட்ட ஒரு மணித்துளி நேரத்திற்குள் மின்விளக்குகள் எரிய வைக்கப்பட்டன. அங்கே அறைக்குள் நான், உன் அண்ணன், காவல்துறைத் துணை ஆய்வாளர் தூயவன் ஆகிய மூவர் மட்டுமே இருந்தோம். கோதை குருதி வழிய உன் அண்ணன் அணைப்பிலே! இப்போது நீ என்ன சொல்கிறாய்?

*(தேன்மொழி அதிர்ச்சியோடு விடை அளிக்க இயலாது அமைதியாக அமர்ந்து இருக்கிறாள்.)*

**எழிலி :**

அங்குத்தான் எங்கும் ஒரே இருட்டாயிற்றே; எப்படி அறையிலிருந்து ஆள் வெளியேறியதைத் தேன்மொழி கவனித்து இருக்க முடியும்? அவள் பார்வையில் படாமல் போயிருக்கலாம் இல்லையா?

**கண்ணன் :**

அறைதான் இருட்டில் இருந்ததே ஒழிய, வீட்டு வாசல் அப்படி இல்லை. வீதி விளக்குகளின் ஒளி மங்கலாக அங்கு இருந்தது. சாலையில் சென்று கொண்டு இருந்த வண்டிகளின் முகப்பு விளக்குகளும் அவ்வப்போது வெளிச்சத்தைக் கூட்டின. தேன்மொழியின் பார்வைக்குத் தப்பி, வீட்டு முன் கதவு வழியாக யாரும் வெளியேறி இருக்க முடியாது; அஃதும், அந்த ஒரு மணித்துளி இடைப்பட்ட நேரத்தில்!

*(அங்கு அமைதி பல வினாடிகள் நிலவுகிறது. யாரும் பேச்சைத் தொடர அணியமாய் இல்லை. இறுதியாய், தேன்மொழியே மெல்லப் பேச்சைத் தொடர்கிறாள்.)*

**தேன்மொழி :**

இவர் சொல்பவை உண்மைதாம்.

**கண்ணன் :**

நான் அடுத்த நாள் இரவே அங்குச் சென்று, அதே நேரத்தில் ஊன்றி ஆராய்ந்தேன். முன் நாள் தேன்மொழி இருந்த இடத்தில் இருந்து வீட்டுத் தெருக்கதவு தெளிவாகத் தெரிந்தது. மங்கலான வெளிச்சம்தான்; இருந்தும், பார்வைக்கு எந்தப் பழுதும் இல்லை. எல்லாம் நன்கு தெரிந்தன. அதனால் தான், நான் அத்துணை உறுதியாகச் சொல்ல முடிகிறது.

**எழிலி :**

நீங்கள் சொல்பவை உண்மைகளாகவே இருக்கட்டும். அந்த அறையில் நீங்களும் துணை ஆய்வாளரும் உடன் இருந்து இருக்கிறீர்கள்; எனவே, உங்கள் இருவரில் ஒருவர் கொலை செய்திருக்கக் கூடும்; இல்லையா?

**கண்ணன் :**

எதற்காக? கோதையைக் கொலை செய்ய எங்களுக்கு என்ன தேவை?

**எழிலி :**

காரணம் காட்டினால்தான் குற்றவாளி என உறுதி ஆகுமா?

**கண்ணன் :**

எந்தக் குற்றம் எனினும் ஏதேனும் ஒரு நோக்கம் இருந்தே ஆக வேண்டும். அந்தக் குற்றத்தை வழக்கு மன்றத்தில் உறுதிப்படுத்தக் குற்றத்திற்கான காரணத்தை, நோக்கத்தைக் காட்டியே ஆகவேண்டும். கையுங் களவுமாகப் பிடிபட்ட குற்றம் வேண்டுமானால் காரணத்தைத் தெளிவு படுத்த முடியா விட்டாலும் ஏற்றுக் கொள்ளப்படும்; அதற்கான தண்டனை வழங்கப்படும். ஆனால், இப்படிப்பட்ட நேரடிச் சான்றுகள் இல்லாத கொலைக் குற்றத்திற்குக் கொலைக்கான காரணத்தைத் தெளிவுபடுத்துவது இன்றியமையாதது.

**எழிலி :**

காரணம்தானே? சொல்கிறேன். அந்தப் பெண் பல பேர்களை மிரட்டிப் பணம் பறித்து வந்தார்; அவர்களில் துணை ஆய்வாளரும் ஒருவர். அதனால், அவளை அவர் கொலை செய்திருக்கிறார்.

**கண்ணன் :**

இருக்கலாம். ஆனால், அதற்குச் சான்றுகள்? எதுவும் இல்லையே! துணை ஆய்வாளர் தானே இந்தக் கொலையைச் செய்ய வேண்டும் என்ற தேவை இல்லை. காவல்துறையைச் சார்ந்தவர்களுக்கு எத்தனையோ குற்றவாளிகளைத் தெரியும்; அவர்களில் சிலர் நண்பர்களாகவும் இருப்பர். அவர்களைப் பயன்படுத்திக் காதும் காதும் வைத்தது போல் யாருக்குமே தெரியாமல் அந்தப் பெண்ணைக் காணாமலே போகச் செய் திருக்கலாம். அவர்களால் முடியும். எனவே, துணை ஆய்வாளர் அடிபட்டுப்போகிறார். அடுத்து நான். நான் கொலை செய்ததற்கான எந்தக் காரணத்தைச் சொல்லப் போகிறாய்?

**எழிலி :** *(மெல்ல)*

கதிரவன் மிக மிக இழிந்தவர். உங்கள் தங்கை அவரைக் காதிலிக்கிறாள்; அவரையே மணந்து கொள்ளப் போவதாக முரண்டு பிடிக்கிறாள். உங்களுக்கு அது பிடிக்கவில்லை; நீங்கள் எதிர்க்கிறீர்கள். எப்படியாவது உங்கள் தங்கையை அவரிடமிருந்து பிரிக்க வேண்டும்; நல்ல வாய்ப்பு உங்களுக்கு அமைகிறது; பயன்படுத்திக் கொள்கிறீர்கள்! கோதையைக் கொன்று, அந்தப் பழியைக் கதிரவன் மேல் சுமத்துகிறீர்கள்; எப்படி?

**கண்ணன் :**

நன்றாகவே பேசுகிறாய்! நீ வழக்குரைஞருக்குப் படிக்கலாம்.

**எழிலி :**

அப்படியும் ஓர் எண்ணம் உண்டு.

**கண்ணன் :**

படி; நான் உனக்கு உதவுவேன். நீ இப்போது சொன்ன காரணம் நன்றாகவே உள்ளது; ஆனால், தக்க சான்றுகள் இன்றி வழக்கு மன்றத்தில் எடுபடாது. என் குணங்கள் எப்படி? கதிரவன் குணங்கள் எப்படி? என் நண்பர்கள் யார்? கதிரவன் நண்பர்கள் யார்? உங்களுக்கே தெரியும். நண்பர்களைக் கொண்டே ஒருவன் நல்லவனா? இல்லையா? என்று நம்மால் தெரிந்து கொள்ள முடியும்.

**தங்கப்பர் :**

அந்தப் பிள்ளைதான் கொலை செய்தார் என்பதை நினைக்கவே வருத்தமாய் உள்ளது.

**கண்ணன் :**

காவல்துறை போதிய கவனத்தை இந்த வழக்கில் காட்டவில்லை. அதற்குக் காரணம் கோதைக்குத் துணையாய் யாரும் இல்லாததே. இந்த வழக்கு விரைவில் முடிந்தால், அது போதும் அவர்களுக்கு. இவ்வழக்கில் வெற்றி பெற்றாக வேண்டுமென்ற கட்டாயம் அவர்களுக்கு இல்லை. அவர் களைப் பொறுத்தவரைப் பத்தோடு பதினொன்றாவது வழக்கு இது. அதுவே, மணியரசனுக்கு வசதியாகப் போய்விட்டது; வழக்கு மன்றத்தில் வெளுத்து வாங்கி விட்டார்.

**தங்கப்பர் :**

நல்ல எதிர்காலம் அந்தப் பிள்ளைக்கு இருக்கிறது.

**எழிலி :**

உண்மைதான்; அரசு வழக்குரைஞரே அரண்டு போய்விட்டார்.

**கண்ணன் :**

அவர் இந்த வழக்கில் தன்னை முழுமையாக ஈடு படுத்திக் கொள்ளவில்லை. அது மணியரசனுக்கு வாய்ப்பாக அமைந்து விட்டது.

**எழிலி :**

நீங்களே அவர் இடத்தில் இருந்திருந்தாலும் உங்கள் பேச்சு எடுபட்டு இருக்காது.

**கண்ணன் :**

இவ்வழக்கில் நான் அரசு வழக்குரைஞராக அமையாதது உங்கள் நற்பேறு என்று நம்புங்கள். நானாக அங்கு இருந்து இருந்தால், மணியரசனுக்குக் கேள்விகள் கேட்கவே இடம் இருந்து இருக்காது.

**எழிலி :**

எப்படிச் சொல்கிறீர்கள்?

**கண்ணன் :**

கதிரவன் கால்சட்டைப் பையில் இருந்த கைக்குட்டையில் குருதி காணப்பட்டது; அஃது எப்படி அங்கு வந்தது? மின் விளக்குகள் எரிவிக்கப்பட்ட பிறகு, கதிரவன் கட்டிலில் இருந்து அசையவில்லை; நான் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். அவர் உடையில் சில இடங்களில் குருதி படிந்து இருந்தது; ஆனால், கைகளில் எங்கும் இல்லை. காவல் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட போதே, அவரிடம் இருந்து குருதிக்கறை படிந்த கைக்குட்டை கைப்பற்றப் பட்டது. கைகளில் படிந்த குருதியைத் துடைத்தபோது கறை ஏற்பட்டிருக்கும் என்று காவல்துறையினர் முடிவு கொண்டனர். ஆனால், அந்தக் கறை எப்போது ஏற்பட்டது என்பதில் அக்கறை காட்டவில்லை. அக்கறை காட்டி இருந்தால், அந்தக் கறை கொலை நடந்ததற்கும் விளக்கு எரிந்ததற்கும் இடைப்பட்ட ஒரு மணித்துளி நேரத்திற்குள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கண்டுபிடித்திருப்பர்.

**தங்கப்பர் :**

அப்படியானால்?

**கண்ணன் :**

கொலை செய்த கதிரவன், தப்பிக்க முயன்று முடியாது போகவே, குருதியைத் துடைத்துக் காலதர் வழியே கத்தியை

வெளியே எறிந்து விட்டு, ஏதும் அறியாதவன் போன்று மீண்டு வந்து கோதையை அணைத்தபடி கட்டிலிலே அமர்ந்து கொள்கிறான். இவைகளுக்கான சான்றுகள் காவல்துறை யினரிடம் உள்ளன; ஆனால், அவர்களால் அவற்றைச் சரியாகக் கணித்துக் குற்றத்தோடு இணைத்துக் காட்டக்கூடவில்லை. காரணம், மணியரசன் சுட்டிக் காட்டியதுபோல், ஏனோ தானோ என்ற பொறுப்பற்ற போக்கு!

*(எல்லோரும் ஏதும் பேச விரும்பாது அமைதி காக்கின்றனர். பல வினாடிகளுக்குப் பிறகு மங்கை முதன்முதலாக அங்கு வாயைத் திறக்கிறார்.)*

**மங்கை :**

எனக்கு அச்சமாக இருக்கிறது.

**கண்ணன் :**

இப்போது அஞ்சி என்ன ஆகப் போகிறது? அன்றே நான் அடித்துக் கொண்டேன்; என் பேச்சை யார் கேட்டீர்கள்? தலைவலியும் திருகுவலியும் தனக்கு வந்தால்தான் தெரியும்! இப்போதேனும் புரிந்து கொண்டு திருந்தினால் நல்லது.

**எழிலி :**

அத்தான், நாளை நீங்கள் வழக்கு மன்றத்திற்கு வர வேண்டா; இங்கேயே விடுப்புப் போட்டுவிட்டு வீட்டில் இருங்கள்.

**கண்ணன் :**

ஏன்?

**எழிலி :**

நீங்கள் வேறு எங்காவது சென்று, எங்களிடம் சொன்னவை களை யாரிடமாவது சொல்லப்போய் வழக்கின் போக்கு மாறிவிடக் கூடாதில்லையா? அதனால்தான்.

**கண்ணன் :** *(சிரித்தபடி)*

கவலைப்படாதே. அப்படி எதுவும் நடக்காது. தொடக்கம் முதலே காவல்துறையினர் இவ்வழக்குத் தொடர்பாக என்னிடம்

கலந்து பேசியது கிடையாது. என்னையும் சான்றுரைக்க அழைக்கவில்லை. இனியும் அப்படிச் செய்ய வாய்ப்பு இல்லை. நாளைக் காலை அமர்விலேயே இவ்வழக்கில் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுவிடும்.

**தங்கப்பர் :**

தீர்ப்பு எப்படியப்பா இருக்கும்?

**கண்ணன் :**

இப்போதைய நிலையில், கதிரவனுக்குச் சார்பாகவே இருக்கும்.

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 34

**இடம்** : வழக்கு மன்றம்.


**காலம்** : காலை மணி பதினொன்றரை.

**உறுப்பினர்கள்** : நடுவர், அரசு வழக்குரைஞர், கதிரவன், மணியரசன், துணை ஆய்வாளர் தூயவன், கண்ணன், தேன்மொழி, மங்கை, எழிலி, தக்கப்பர், மற்றும் பலர்.

**சூழல்** : கதிரவன் குற்றவாளிக் கூண்டிலே நிற்கத் துணை ஆய்வாளர் தூயவன் சான்றுரைஞர் கூண்டில் நிற்கிறார். அவரவர் அவரவருக்கான இருக்கையில் அமர்ந்திருக்கின்றனர். சான்றுரைஞர் கூண்டருகே கரும்பலகை ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அக்கரும் பலகையில் வரைப்படம் ஒன்று விளக்கமாக வரையப்பட்டுள்ளது.

**மணியரசன் :**

இந்த வரைப்படத்தைப் பாருங்கள். கொலை நிகழ்ந்த அறையின் விளக்கமான படம் இது. அறை என்பதை விடக் கூடம் என்பதே பொருத்தமான சொல். படம் ஓரளவிற்குச் சரியான அளவுக்கு வரையப்பட்டுள்ளது. நன்கு கவனித்துப் பாருங்கள். கொலை நிகழ்ந்த உடன் கூடம் எப்படி இருந்ததோ, அந்த நிலையில் அனைத்தும் காட்டப் பட்டுள்ளன.




*(அனைவரும் வரைப்படத்தைக் கூர்ந்து பார்க்கின்றனர். மணியரசன் சிறிய கோல் ஒன்றைக் கையில் வைத்திருக் கிறார். அக்கோல் கொண்டு படத்தின் பகுதிகளைச் சுட்டிக் காட்டி உசாவுகின்றார்.)*

**மணியரசன் :**

பதினான்கு அடிகளுக்குப் பதினெட்டு அடிகள் கொண்ட கூடம் இது. இதோ கட்டில் கட்டிலின் இந்தப் பகுதியில்தான் கதிரவனும் கோதையும் அணைத்தபடி அமர்ந்திருந்தனர். இந்தப் படம் நீங்கள் கொடுத்த செய்திகளை உட்கொண்டு வரையப்பட்டுள்ளது.

**தூயவன் :**

சரியாகவே இருக்கிறது.

**மணியரசன் :** *(கோலால் சுட்டிக் காட்டியபடி)*

இது புதர். இங்குத்தான் கத்தி கண்டு பிடிக்கப்பட்டது; சரிதானே?

**தூயவன் :**

சரிதான்.

**மணியரசன் :**

கத்தி இங்கு எப்படி வந்தது என்று என்ன முடிவுக்கு வந்தீர்கள்?

**தூயவன் :**

அருகிருக்கிற காலதர் வழியே கதிரவன் எறிந்து இருக்க வேண்டும்.

**மணியரசன் :**

பின்னர் எப்படிக் கதிரவன் கட்டிலில் இங்கு அமர்ந்தபடி எறிந்த கத்தி, நேராகச் சென்று விழாமல், வளைந்து சென்று இங்குப் புதரில் விழுந்து உள்ளது?

**தூயவன் :**

இல்லையே! கதிரவன் அமர்ந்த இடத்தில் இருந்து கத்தி கிடந்த இடம் நேர்க்கோட்டில்தானே இருக்கிறது.

**மணியரசன் :**

இதற்குத்தான் முன்னரே நான் சொன்னேன், நீங்கள் போதிய அக்கறையை இவ்வழக்கில் காட்டவில்லை என்று! இதோ, இந்த நிழற்படத்தைப் பாருங்கள். இப்படம் கொலை

நடந்த கொஞ்சம் நேரத்திற்குள் உங்களால் எடுக்கப்பட்டது. இப்போது என் கேள்வியின் பொருள் உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்.

*(தூயவன் படத்தை நன்கு ஆராய்ந்து பார்த்து விட்டு விடை அளிக்கிறார்)*

**தூயவன் :**

கட்டிலில் அமர்ந்திருந்த இடத்தில் இருந்து புதரில் விழும்படி கதிரவனால் கத்தியை எறிந்து இருக்க முடியாது.

*(மணியரசனை நோக்கி நடுவர் கேட்கிறார்)*

**நடுவர் :**

விளங்கவில்லையே; எப்படிச் சொல்கிறார்?

**மணியரசன் :**

அவரே விளக்கினால் சிறப்பாக இருக்கும்; அதுவே நல்லதும் கூட.

**தூயவன் :**

கட்டில் அருகே உள்ள இந்தக் காலதர் மூன்று பிரிவு களைக் கொண்டு உள்ளன. ஒவ்வொரு பிரிவுக்கும் கீழ் மேல் என்று இரு கதவுகள் உள்ளன. கொலை நடந்த நேரத்தில், கதிரவன் அமர்ந்துள்ள இடத்திற்கு நேரான காலதர் பிரிவின் இரு கதவுகளுமே மூடப்பட்டுள்ளன. மற்ற இரண்டு பிரிவு களின் கீழ்க்கதவுகள் மட்டுமே மூடப்பட்டு உள்ளன. கத்தி எறியப் பட்டிருந்தால், திறந்திருந்த மற்ற இரண்டு பிரிவு களின் மேல் பகுதிகள் மூலமே எறிந்திருக்க முடியும். கதிரவன் தான் இருந்த இடத்திலிருந்து அப்படி எறிந்து இருந்தால், அந்தக் கத்தி இப்போது கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் விழுந்திருக்க இயலாது.

*(அரசு வழக்குறைஞர் சிந்தனையுடன் எழுந்து குறுக்கிடுகிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

நடுவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். இடையே ஒரு விளக்கம் கேட்டறிய ஒப்புதல் அளிக்கவும்.

**நடுவர் :**

கேளுங்கள்.

**அரசு வழக்குறைஞர் :**

எறியப்பட்ட கத்தி, பிரிவுகள் இரண்டு மூன்றுக்கு இடைப் பட்ட குத்துக்கட்டையில்பட்டுத் திசை திரும்பி, இப்போது கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் கிடந்து இருக்கலாம் இல்லையா?

**தூயவன் :**

அப்படியும் நடந்து இருக்கலாம்; அதற்கான வாய்ப்பும் உள்ளது.

**அரசு வழக்குரைஞர் :**

நன்றி; அவ்வளவுதான்.

*(அரசு வழக்குரைஞர் நிறைவோடு அமர்கிறார். நடுவர் மணியரசனைப் பார்த்துப் பேசுகிறார்.)*

**நடுவர் :**

நீங்கள் தொடருங்கள்.

**மணியரசன் :**

நள்ளிரவு; 'வீஇல்' என்ற அலரல் அங்கு உங்களை அதிர வைக்கிறது! சில வினாடிகள் அப்படியே நிலைத்து நின்று விடுகிறீர்கள்! எங்கும் அமைதி. அப்போது, யாரோ உங்கள் மேல் இடித்துக் கொள்கிறார்கள். எந்த ஓசையும் அங்கு இல்லை. சரிதானே?

**தூயவன் :**

சரிதான்.

**மணியரசன் :**

அந்த அமைதியான சூழலில் கத்தி எறியப்படுகிறது. அப்படி எறியப்பட்டால், எறியப்படும் ஓசை கேட்கும் இல்லையா?

**தூயவன் :**

உறுதியாகச் சொல்ல முடியாது. எறியப்படும் விரைவைப் பொறுத்தது அது. கேட்கும் என்பது ஐயமே.

**மணியரசன் :**

எறியப்பட்ட கத்தி, அரசு வழக்குரைஞர் சற்று முன்னர்க் கேட்டாரே, காலதர் குத்துக் கட்டையில் பட்டுத் திசை திரும்பி இருக்கலாமா என்று; அப்படிக் குத்துக் கட்டையில் கத்தி பட்டிருந்தால், ஓசை அங்கு எழுந்திருக்குமா?

**தூயவன் :**

எழுந்திருக்கும்.

**மணியரசன் :**

அப்படி எந்த ஓசையையாவது அந்த அறையில் நீங்கள் கேட்டீர்களா?

**தூயவன் :**

கேட்கவில்லை.

**மணியரசன் :**

உறுதியாகச் சொல்ல முடியுமா?

**தூயவன் :**

உறுதியாகத்தான் சொல்கிறேன்?

**மணியரசன் :**

இதைப்பற்றி இன்னொரு கேள்வி. நன்கு சிந்தித்துச் சொல்லுங்கள். கத்தி குத்துக்கட்டையில் பட்டுத் திசை திரும்பியதாகவே கொள்வோம். அப்படிப் பட்டிருந்தால், அதற்கான அடையாளங்கள் அங்கு இருந்து இருக்க வேண்டும் அல்லவா? ஏதேனும் அங்குக் காணப்பட்டனவா?

**தூயவன் :**

இல்லை.

**மணியரசன் :**

குத்துக் கட்டையில் கத்தியால் உண்டாகிய அழுத்தமோ? குருதிக் கறையோ? வேறு தடயமோ?

**தூயவன் :**

எதுவும் இல்லை.

**மணியரசன் :**

மற்றும் ஒரு கேள்வி. கத்தி எறியப்பட்டிருந்தால், குருதித் துளிகள் அறைக்குள் சிதறி இருக்க வேண்டும் அல்லவா? அப்படி ஏதும் காணப்பட்டனவா?

**தூயவன்:**

கத்தி துடைக்கப்பட்டிருந்தது; எனவே, குருதி சிதற வாய்ப்பு இல்லை. அங்கு அப்படி எந்த அடையாளமும் காணப்படவில்லை.

**மணியரசன் :**

அறையுள் இருந்து கத்தி எறியப்படவில்லை என்றாலும் குருதி சிதறி இருக்காது; இல்லையா?

**தூயவன் :**

ஆமாம்; உண்மைதான்.

**மணியரசன் :**

இப்போது சொல்லுங்கள்; கத்தியைக் காலதர் வழியாக வெளியே எறிந்தவர் கதிரவன்தான் என்பதை உறுதியாக உங்களால் சொல்ல முடியுமா?

**தூயவன் :**

முடியாது.

**மணியரசன் :**

கத்தியைக் காலதர் வழி வெளியே எறியக் கதிரவனுக்கு வாய்ப்பு இல்லை என்று நான் சொன்னால், இப்போது நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா?

**தூயவன் :**

ஒப்புக் கொள்கிறேன்.

**மணியரசன் :**

கத்தியைக் கதிரவன் எறியவில்லை; எனவே, வேறு யாரோதான் எறிந்திருக்க வேண்டும். இல்லையா?

**தூயவன் :**

ஆமாம்.

**மணியரசன் :**

கத்தியை எறிந்தவர்தான் கொலை செய்திருக்க வேண்டும் என்று நீங்கள் நம்புகிறீர்கள்?

**தூயவன் :**

ஆமாம்.

**மணியரசன் :**

கத்தியை எறிந்தவர் கதிரவன் இல்லை; முதலிலேயே சொல்லி இருக்கிறீர்கள். எனவே, அந்தக் கொலையைச் செய்தவர் கதிரவன் இல்லை; சரிதானே?

**தூயவன் :**

சரிதான்.

**மணியரசன் :**

அந்த அறையில், கொலை நடந்த நேரத்தில், கதிரவனைத் தவிர, நீங்களும் வழக்குரைஞர் கண்ணனும் மட்டுமே இருந்து இருக்கிறீர்கள்; இல்லையா?

**தூயவன் :**

ஆமாம்.

**மணியரசன் :**

கதிரவனும் கொலை செய்யவில்லை; நீங்களோ, கண்ணனோ கொலை செய்யவில்லை. அப்படியானால், அந்தக் கொலையைச் செய்தவர் யார்?

*(தூயவன் விடை அளிக்காது அமைதியாக நிற்கிறார்.)*

**மணியரசன் :**

உங்கள் மூவரில் எந்த ஒருவரும் அந்தக் கொலையைச் செய்யவில்லை; ஒப்புக் கொள்கிறேன். பின் செய்தவர் யார்? வாயைத் திறந்து சொல்லுங்கள்.

**தூயவன் :**

தெரியவில்லை.

**மணியரசன் :**

என்ன தெரியவில்லை? விடை தெரியவில்லையா? இல்லை, கொலை செய்தவர் யார் என்று தெரியவில்லையா?

**தூயவன் :**

இரண்டுதாம்.

**மணியரசன் :**

தற்கொலையாக இருக்குமோ?

**தூயவன் :**

இருக்க முடியாது.

**மணியரசன் :**

பின்னர் இந்தக் கொலையைச் செய்தவர் யார்?

**தூயவன் :**

தெரியாது.

*(நடுவர் குறுக்கிடுகிறார்.)*

**நடுவர் :**

மணியரசன், என்ன குழப்புகிறீர்கள்? உங்களுக்கு விடை தெரியுமா?

**மணியரசன் :**

கொலையைச் செய்தவர் யார்? நானும் உறுதியாக அறியேன். ஆனால், எப்படி நடந்து இருக்கலாம்? ஓரளவிற்குச் சொல்ல முடியும் என்று எண்ணுகிறேன்.

**நடுவர் :**

உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்; அறிந்து கொள்ள ஆர்வமாக உள்ளேன்.

*(மணியரசன் கரும்பலகைக்காகத் தன் பார்வையைத் திருப்புகிறார்.)*

**மணியரசன் :**

என் கணிப்பு முற்றும் தக்க காரணங்களை அடிப்படையாகக் கொண்டது. கதிரவன் கொலை செய்யவில்லை; செய்து இருக்க முடியாது. அதற்கான காரணங்களை இங்குச் சொல்லி உள்ளேன். அப்படிக் கதிரவன் கொலை செய்ய வில்லை என்றால், பின் செய்தவர் யார்? கொலை நடந்த அந்த நேரத்தில், அந்த இடத்தில், வழக்குரைஞர் கண்ணனும் துணை ஆய்வாளர் தூயவனும் மட்டுமே நமக்குத் தெரிந்து அங்கு இருந்து இருக்கின்றனர். அவர்களும் இந்தக் கொலையைச் செய்யவில்லை. நடந்தது தற்கொலையும் இல்லை. அப்படியானால், அந்த அறையில் இன்னும் ஒருவரும் இருந்து இருக்க வேண்டும்; கொலையைச் செய்துவிட்டு, மற்றவர்கள் அறியாமல் வெளியேறி இருக்க வேண்டும்! அப்படித்தானே இருக்க முடியும். அந்த ஒருவர் யார்? நான் அறியேன்.

*(மணியரசன் தன் பேச்சை நிறுத்திவிட்டு, மன்றத்தை ஒருமுறை சுற்றிப் பார்க்கிறார். சில வினாடிகளுக்குப் பின்னர்த் தன் பேச்சைத் தொடர்கிறார்.)*

கொலையைச் செய்தவர் வேறொருவர் என்று கொண்டால், கொலையைச் செய்த அவர் அடுத்துத் தப்பிக்கவே முயல்வார். அப்படித் தப்பிக்க முயன்றபோதுதான், அங்கே இடையில் நின்று கொண்டு இருந்த துணை ஆய்வாளரோடும் வழக்குரைஞர் கண்ணனோடும் இடித்துக் கொண்டு இருக்கிறார். ஆனால், துணைஆய்வாளரும் கண்ணனும் தங்களுக்குள் மோதிக் கொண்டதாக முடிவு செய்து கொண்டனர். கொலையாளி துணை ஆய்வாளருடன் மோதிக் கொண்டபோது ஏற்பட்டதே அவர் உடையில் பின்னர்க் கண்ணனால் சுட்டிக் காட்டப்பட்ட குருதிக் கறை.

**நடுவர் :**

நீங்கள் சொல்பவை சுவையாகவே உள்ளன; மேலே தொடருங்கள்.

**மணியரசன் :**

தெருக் கதவு வழியே வெளியேறிய அந்தக் கொலையாளி, கொலை செய்யப் பயன்படுத்திய கத்தியைக் கையோடு எடுத்துச் சென்று இருந்தால், இத்தனை சிக்கல்கள் இந்த வழக்கில் எழுந்து இருக்காது; கொலை செய்தவர் வேறொரு ஆள் என்று உடனே தெரிந்து இருக்கும். அவர் ஒரு மிகத் திறமையானவராக இருக்க வேண்டும். அதனால்தான், விரல் குறிகளின் பதிவு இல்லாமல் கைப்பிடியை நன்கு துடைத்துப் பின்னர்க் காலதர் அருகே வெளியே வைத்துவிட்டுச் சென்று இருக்கிறார். எறியப்பட்டு இருந்தால், கத்தி கீழே விழுந்த ஓசை அறைக்குள் இருந்தவர்களுக்குக் கேட்டு இருக்கக்கூடும். அந்த ஒருவர் எதையும் எண்ணி ஆய்ந்து செய்யக் கூடியவர் என்பது என் எண்ணம். அறையை விட்டுத் தப்பிச் சென்ற அவர், கத்தியை வேறெங்காவது செல்வழியில் எறிந்து சென்று இருக்கலாம்; ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. இந்தக் கொலை வழக்கைத் திசை திருப்பும் வகையில், அறைக்கு வெளியே, காலதர் அருகே விட்டுச் சென்றுள்ளார்! இவை எல்லாம் இருக்கின்ற சூழலை, சான்றுகளை வைத்துக் கணிக்கப் பட்டவை; இட்டுக்கட்டி ஏனோ தானோ என்று முடிவுக்கு வந்தவை அல்ல. உறுதியான சான்றுகள் உண்டா? இல்லை என்பதே என் விடை.

*(அரசு வழக்குரைஞர் எழுந்து குறுக்கிடுகிறார்.)*

**அரசு வழக்குரைஞர் :**

மதிப்பிற்குரிய நடுவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு என்னைப் பொறுத்துக் கொள்ளவும். எதிர்பக்க வழக்குரைஞரின் தக்க முறையான பேச்சு ஏற்றுக் கொள்ளக் கூடியதே; மறுப்பதற்கு இல்லை. உண்மைதான். என்றாலும், நாம் ஒன்றை மறந்து விடக் கூடாது. எதையும் பார்த்து அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு அந்த அறையில் எங்கும் நிறைந்த இருட்டு. இதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இங்கு இல்லை. அந்த மையிருட்டில், கோதை இவர்தான் என்று குறிப்பிட்டு அறிந்து, குறி தவறாமல், ஒரே முயற்சியில், கத்தியால் குத்துவது

என்பது எப்பேர்ப்பட்டவருக்கும் எளிதில்லை. ஆனால், கோதை குறி தவறாமல் குத்தப்பட்டுள்ளார்; அஃது எப்படி? குற்றஞ் சாட்டப்பட்ட கதிரவனுக்கு மட்டுமே அந்த இருட்டில் கோதையின் இருப்பிடம் நன்கு தெரியும்; ஏனெனில், கோதை அப்போது அவர் அணைப்பில் இருந்தார். குறி தவறாமல் அந்த இருட்டில் கோதையைக் கொலை செய்யக் கதிரவன் ஒருவருக்கே வாய்ப்பு இருந்து இருக்கிறது. கதிரவன் கொலை செய்யவில்லை என்றால், கொலையைச் செய்தவர் வேறு யார்? கொலையைச் செய்தவர் வேறு ஒருவர் என்றால், அந்த இருளிலே கோதையை அவர் அறிந்து கொண்டது எப்படி?

*(அனைவரும் மணியரசனை ஆர்வத்தோடு நோக்கு கின்றனர்.)*

**மணியரசன் :**

எனக்கும் அதுதான் புரியவில்லை.

**அரசு வழக்குரைஞர் :**

புரியாததில் வியப்பு இல்லை! குற்றஞ் சாட்டப் பட்டுள்ள கதிரவன்தான் இக்கொலையைத் திறம்படச் செய்து உள்ளார். மணியரசன் இளம் வழக்குரைஞர்; மேலும், இஃதே அவரின் முதல் வழக்கு! எனவே, அவர் கற்பனை அளவு கடந்து மேலே பறக்கிறது! அதனால்தான், அவருடைய பேச்சு அடிப்படை அற்று அமைந்து உள்ளது.

*(மணியரசன் விரைந்து குறுக்கிடுகிறார்.)*

**மணியரசன் :**

கற்பனை என்ற கணிப்பில் உங்கள் கண்ணோட்டம் இருந்தால், என் பேச்சு காரணம் அற்றதாகவே தோன்றும். இவ் வழக்கில் என் கடமை என்ன என்று எனக்கு நன்கு தெரியும். கதிரவன் இந்தக் கொலையைச் செய்யவில்லை; அவர்மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்குச் சான்றுகள் எதுவும் இல்லை. இவற்றை இங்கு உங்களுக்குக் காட்டுவதே என் கடமை. அந்தக் கடமையைத் திறம்படச் செய்த நிறைவு எனக்கு

இங்கு நிறையவே உண்டு. நடுநிலை பிறழாது நல்லதொரு தீர்ப்பை இம்மன்றம் வழங்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

நான் அரசு வழக்குரைஞரையே கேட்கிறேன். அவர் அகவை முதிர்ந்தவர்; பல வழக்குகளை நடத்திய பட்டறிவு மிக்கவர்! எங்கே, என் கேள்விகளுக்குச் சரியான விடைகளைச் சொல்லட்டும்.

கதிரவன் கோதையைக் கொலை செய்ய வேண்டிய காரணம் என்ன? எந்த உள் நோக்கமோ, பயனோ இன்றி யாரேனும் கொலை செய்வார்களா? கொலை நடந்த வீடு கதிரவனுக்குச் சொந்தமானது! கோதையைக் கொலை செய்யக் கதிரவன் விரும்பி இருந்தால், அவர் குடி இருக்கும் தன் வீட்டையா தேர்ந்து எடுத்து இருப்பார்? கொலை செய்து விட்டு யாரும் அறியாமல் தப்பிச் சென்றிருந்தாலும் உரிமையாளரான தன்னை அந்த வீடு கொலையில் தொடர்புப் படுத்திவிடும் என்பதை அறிய முடியாத அளவிற்கு அறிவிலியா அவர்? கோதையைக் கொலை செய்ய வேறு இடங்களா அவருக்கு இல்லை?

கோதை தவறுதலாய்க் கொலை செய்யப்பட்டார் என்கிறேன்; இல்லை என்று மறுக்க என்ன சான்றுகளை வைத்து இருக்கிறீர்கள்? கதிரவனைக் கொலை செய்ய வந்தவர், இருட்டில் தவறுதலாய்க் கோதையைக் கொலை செய்துவிட்டார் என்கிறேன்; உங்களால் சான்றுகளோடு மறுக்க முடியுமா? கோதையைக் குறிவைத்தே கொன்றும் இருக்கலாம்; அப்படி என்றால், அந்த இருட்டில் கோதையைக் கொலையாளிக்கு எப்படி அடையாளம் தெரிந்தது? உங்களால் உரைக்க முடியுமா?

*(அரசு வழக்குரைஞர் ஏதும் உரைக்காது அமைதி காக்கிறார். அனைவரும் அவரையே பார்க்கின்றனர். சில வினாடிகள் காத்திருந்த பின்னர், மணியரசனே தன் பேச்சைத் தொடர்கிறார்.)*

**மணியரசன் :**

அறிவார்ந்த நடுவர் அவர்களே, என் கட்சிக்காரர் இக் கொலையைச் செய்யவில்லை; அதற்கான காரணங்களை முன்னரே இவ்வவை முன்னர் உறுதிப்படுத்தி உள்ளேன். இருந்தும், மீண்டும் அவற்றைத் தொகுத்து இம்மன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

*ஒன்று :* கொலை செய்யப்பட்ட பெண் கோதை, கொலையுண்ட நேரத்திலே என் கட்சிக்காரர் அணைப்பில் இருந்து உள்ளார். அணைத்த நிலையில் கத்தியால் குத்தி, உயிர் உடனே போகும் அளவிற்கு ஆழமான புண்ணை உண்டாக்க, மிகவும் வலிமை உள்ளவர்களாலேயே முடியும் என்று அரசு மருத்துவர் இங்கு உரைத்து உள்ளார். இதோ, என் கட்சிக்காரர் உங்கள் கண்முன் நிற்கிறார்; அவர் உடல் வலிமையை நீங்களே பார்த்து அறிந்து கொள்ளலாம்.

*இரண்டு :* குடி மயக்கத்தில் இருப்பவரால் அணைத்த படி அந்த அளவிற்கான ஆழமான புண்ணை உண்டாக்க இயலாது என்று அரசு மருத்துவர் உரைத்து உள்ளார். என் கட்சிக்காரர் மிகையான குடி மயக்கத்திலே கொலை நிகழ்ந்த அந்த நேரத்தில் இருந்து உள்ளார் என்பதை அரசுப்பக்கச் சான்றுரைஞர்களான மருத்துவரும் காவல்துறைத் துணை ஆய்வாளரும் இங்கு உறுதிப்படுத்தி உள்ளனர்.

*மூன்று :* அந்த அறையில், கொலை நடந்த அதே நேரத்தில், என் கட்சிக்காரர் கதிரவன், வழக்குரைஞர் கண்ணன், காவல்துறைத் துணை ஆய்வாளர் தூயவன் ஆகிய மூவர் மட்டுமே நமக்குத் தெரிந்து அங்கு இருந்திருக்கின்றனர்; ஆனால், கொலையைக் கண்ணால் பார்த்தவர் யாரும் இல்லை. கொலையைச் செய்ய, அங்கிருந்த மூவருக்குமே வாய்ப்பு இருந்தும் எந்தச் சான்றும் இன்றி என் கட்சிக்காரர் மீது மட்டுமே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது! முறையான சான்றுகள் எவையும் காட்டப்படவில்லை என்பது இங்கு நோக்கத் தக்கது.

*நான்கு :* கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட கத்தி அறைக்கு வெளியே கிடக்கிறது. கத்தியின் கைப்பிடி நன்கு

துடைக்கப்பட்டுள்ளது; எந்தக் கைவிரல்குறி அடையாளமும் கண்டுபிடிக்கக் கூடவில்லை. கொலை நடந்த ஒரு மணித் துளி நேரத்திற்குள் விளக்குகள் துணை ஆய்வாளரால் எரிவிக்கப்படுகின்றன. அந்த ஒரு மணித்துளி நேர இடை வெளிக்குள், கத்தியின் கைப்பிடியை நன்கு துடைத்துக் காலதர் வழியே அறைக்கு வெளியே எறிவது என்பது, என் கட்சிக்காரருக்கு இயலாது. இயலும் என்பதற்கு எந்தச் சான்றாவது உண்டா?

*ஐந்து :* இருக்கின்ற அமைப்பின்படி கொலை செய்யப் பயன்பட்ட கத்தியைக் காலதர் வழியே வெளியே எறிய என் கட்சிக்காரருக்கு எந்த வாய்ப்பும் இல்லை; இதை அரசுப் பக்கச் சான்றுரைஞர் துணை ஆய்வாளர் தூயவனே இங்கு உறுதிப்படுத்தி உள்ளார்.

*ஆறு :* அந்த அறையில் வேறு ஒருவரும் மறைந்து இருந்தார்; யாரும் அறியா வகையில் கோதையைக் கொலை செய்தார்; கொலை செய்த கத்தியுடன் வெளியேறினார்; செல்வதற்கு முன்னர்க் கத்தியை நன்கு துடைத்துக் காலதர் அருகே வெளியே கீழே வைத்தார்; பின் அங்கிருந்து சென்று மறைந்தார். இப்படியும் அங்கு நடந்து இருக்கலாம்; இதற் கான வாய்ப்புகள் இருக்கின்றன; மறுப்பதற்கு இல்லை. அரசுப் பக்கச் சான்றாளர் துணை ஆய்வாளர் அவர்களே இதை இங்கு ஒப்புக் கொண்டு உள்ளார்.

*ஏழு :* கொலை செய்யப்பட்ட கோதை ஒழுக்கம் இல்லா தவர்; நான் கூறவில்லை; அரசுப் பக்கச் சான்றுரைஞர் காவல் துறைத் துணை ஆய்வாளர் தூயவன் இந்த மன்றத்திலே கூறியது; பதிவேட்டில் உள்ளது. கட்டிய கணவனை விட்டு விட்டுக் கள்ளத் தொடர்பு கொள்பவளை உயிரோடு விட்டு விடக் கூடாது என்று, கட்டிய கணவனே கொலை செய்து இருக்கலாம்; இல்லையா? கொலை செய்வதற்கான தகுந்த காரணம் அந்தக் கணவனுக்கு உண்டா? இல்லையா?

*எட்டு :* தவறான உறவுகளுக்குக் கோதை தன் வீட்டைப் பிறர்க்குத் தந்து உதவி இருக்கிறார். அதற்குச் சான்றான

நிழற்படங்கள் அவர் வீட்டிலேயே கிடைத்து உள்ளன. அப்படிப் பட்டவர்களில் யாரேனும் ஒருவர் இக்கொலையைச் செய்து இருக்கலாம்; இல்லையா?

*ஒன்பது :* என் கட்சிக்காரர் தன் வீட்டையே அந்தப் பெண் கோதை குடியிருக்கக் கொடுத்து உள்ளார்; அவர்கள் நட்பு அப்படி. அந்த நட்பு கூடா நட்பாக இருக்கலாம்; ஆனால், அவர்கள் நட்பில் கொலை செய்யத் தூண்டும் அளவிற்கு எந்தப் பிளவும் கிடையாது. என் கட்சிக்காரர் கொலை செய்யும் எண்ணம் உடையவராய் இருந்திருப்பின், எல்லோரும் பார்க்க அன்று இரவு உணவு விடுதியில் கொலை செய்யப்பட்ட வரோடு அமர்ந்து உணவு கொண்டிருப்பாரா? ஒன்றாய் அவரோடு வெளியேறி இருப்பாரா? தன் வண்டியிலேயே அவரை அழைத்துச் சென்றிருப்பாரா? வண்டியை அவர் வீட்டு வாசலிலேயே விட்டுவிட்டு உள்ளே சென்று இருப்பாரா?

*பத்து :* என் கட்சிக்காரர் கதிரவனும் கொலையுண்ட கோதையும் அந்த வீட்டினுள் நுழைந்தபோது அல்லது அதற்குச் சற்று முன்னர், யாரோ ஒருவர் சுவரைத் தாண்டி ஏறிக் குதித்து மறைந்ததைத் துணை ஆய்வாளர் தூயவன் அங்குக் கண்டிருக்கிறார். உள்ளே வந்த வண்டி வெளிச்சத் தில் வீட்டு வெளிக்கதவு திறந்து இருந்ததையும் அவரே கண்டு இருக்கிறார். ஆனால், கோதையும் கதிரவனும் உள்ளே நுழைந்தபோது, கதவைத் திறக்கத் திறவுகோலைப் பயன் படுத்தி உள்ளனர்; அந்தத் திறவுகோல் ஓசையைத் துணை ஆய்வாளர் அங்குக் கேட்டு இருக்கிறார். அஃது எப்படி? இந்த நிகழ்வுகள் எல்லாம் என்ன? இவை கொலைக்கான வேறொரு கோணத்தைக் குறிக்கவில்லையா? வேறு ஒருவரோ, மேலும் சிலரோ அங்கிருந்து இக்கொலையைச் செய்து இருக்கலாம்; இல்லையா? எழுகின்றதே ஐயங்கள்; இயற்கை தானே? தவறென்று தள்ள முடியுமா?

இறுதியாக, கோதை தவறுதலாகவும் கொல்லப்பட்டிருக் கலாம். ஏன் இருக்கக் கூடாது? கதிரவனைக் கொலை செய்ய எண்ணி வந்தவர், இருட்டில் தவறுதலாய் ஏன் கோதையைக்

குத்திக் கொலை செய்து இருக்கக் கூடாது? அப்படியும் இருக்கலாம் என்ற ஓர் ஐயம் உண்டாகிறதே? இல்லையா?

மதிப்பிற்குரிய, அறிவார்ந்த நடுவர் அவர்களே, இந்த மன்றத்தில் நடுநிலையான நல்ல தீர்ப்பை நான் எதிர்பார்க் கிறேன். என் கட்சிக்காரர் ஏன் இந்தக் கொலையைச் செய்து இருக்க முடியாது என்பதற்கான எண்ணற்ற காரணங்களை இங்கு இதுவரை எடுத்து அடுக்கிச் சொல்லி இருக்கிறேன். ஆயிரம் குற்றவாளிகள் தண்டனைகளிலிருந்து தப்பிப் போகலாம்; ஆனால், தவறு செய்யாத ஒருவர் எந்தக் காரணம் கொண்டும் தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது. இஃதே சட்டத்தின் நெறிமுறை. இதன் அடிப்படையில் எழுந்ததே, ஐயத்தின் நன்மைகள் குற்றஞ் சாட்டப் பட்டவரை அடைய வேண்டும் என்ற நடைமுறை. அந்த நடைமுறை இவ் வழக்கில் கடைபிடிக்கப்படும் என்பது என் நம்பிக்கை.

குற்றஞ் செய்யாத ஒருவர், சட்டத்திற்குப் புறம்பாய்த் தண்டனைக்கு உள்ளாகிவிடக் கூடாதே என்ற உந்துதலால், இம்மன்றத்தின் நேரத்தை மிகையாக நான் எடுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. நடுவர் அவர்கள் என் செய்கையைப் பொறுத்து மன்னிக்க வேண்டுகிறேன். இவ்வழக்கில் நான் இதுவரை எடுத்துக் கூறிய கருத்துக்களையும் சூழ்நிலை களையும் மனதில் நிறுத்தி, நடுநிலையாய் ஆய்ந்து, காய்த்தல் உவத்தல் இன்றித் தீர்ப்பு அளிக்குமாறு வேண்டி முடித்துக் கொள்கிறேன். நன்றி.

*(மணியரசன் தன் இடத்தில் சென்று மன நிறைவோடு அமர்கிறார். குறிப்புகள் எடுத்துக் கொண்டிருந்த நடுவர், அது முடிந்து தலையை நிமிர்த்தி அவையைச் சுற்றிப் பார்க்கிறார். பின்னர், அரசு வழக்குரைஞரைப் பார்த்துக் கேட்கிறார்.)*

**நடுவர் :**

அரசு வழக்குரைஞர் இவ்வழக்கில் இன்னும் ஏதேனும் சொல்ல விழைகிறாரா?

**அரசு வழக்குரைஞர் :** *(எழுந்து)*

எதுவும் இல்லை.

**நடுவர் :**

இதுவரை, எதிர்பக்க வழக்குரைஞர் இங்குப் பட்டிய லிட்டுக் காட்டிய கருத்துக்களின் மேல் உங்கள் எதிர் கருத்துக் கள் இருப்பின், எடுத்து உரைக்கலாம்.

**அரசு வழக்குரைஞர் :**

எதிர்பக்க வழக்குரைஞரின் கருத்துக்கள் தக்க நெறி முறை வழிப்பட்டவை; எவரும் ஏற்றுக் கொள்ளத்தக்கவையே. அவற்றை மறுத்துப் பேசப் போதிய சான்றுகளோ, காரணங் களோ அரசுப் பக்கம் இல்லை என்பதுதாம் உண்மை. எனவே, இவ்வழக்கில் இதுவரை அரசுப்பக்கத்தில் சொன்னவை போகப் புதிதாக எதுவும் சொல்வதற்கு இல்லை.

*(நடுவர் சில குறிப்புகளைக் குறித்துக் கொள்கிறார்.)*

**நடுவர் :**

ஆர்வத்தைத் தூண்டுகின்ற இந்த வழக்கில், உண்மையை அறிந்து கொள்ள இயலாதது உண்மையில் வருத்தத்தை அளிக்கிறது. இவ்வழக்கில் இளம் வழக்குரைஞர் மணியரசனின் உள்ளார்ந்த ஈடுபாட்டைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இத்துணை ஈடுபாடு உடைய வழக்குரைஞருக்கு உண்மைக் குற்றவாளி யாரென்று தெரிந்து இருக்க வேண்டுமே?

**மணியரசன் :**

இந்தக் கேள்விக்கு விடை அளிக்கும் முன்னர்த் துணை ஆய்வாளர் தூயவனிடம் இம்மன்றத்தில் சில செய்திகளைத் தெளிவுபடுத்திக் கொள்ள விழைகிறேன்.

**நடுவர் :**

கேளுங்கள்.

*(மணியரசன் எதையோ ஒரு சிறு தாளில் எழுதித் தூயவனிடம் நீட்டுகிறார். அதைப் பெற்றுத் தூயவன் படித்துப் பார்க்கிறார்.)*

**மணியரசன் :**

கொலை நடந்த உடனேயே அந்த அறையின் அமைப்புகளைப் பல கோணங்களில் படம் எடுத்ததாகச் சொல்லி, நான்கு நிழற்படங்களை இம்மன்றத்தில் சான்றுகளாக அளித்தீர்களே, அவற்றின் மூலப் படச்சுருளை எங்கே வைத்து இருக்கிறீர்கள்?

**தூயவன் :**

என் வீட்டில்தான்.

**மணியரசன் :**

அந்த மூலச் சுருளை நான் பார்க்கலாமா?

**தூயவன் :**

பார்க்கலாம். நாளை கொண்டுவந்து தருகிறேன்.

**மணியரசன் :**

ஏன்? இன்றைக்கு என்ன வந்தது?

**தூயவன் :**

மன்னிக்கவும். இன்று வழக்கு முடிந்ததும் உடனே சொந்த ஊருக்குச் செல்ல வேண்டியுள்ளது. நாளை குடும்பத்தினருடன் திரும்பி விடுவேன்; வந்ததும் கொண்டுவந்து தருவேன்.

**மணியரசன் :**

மிக்க நன்றி; அப்படியே செய்யுங்கள்.

*(மணியரசன் சிந்தித்தபடி நடுவர் அருகே செல்கிறான்.)*

**மணியரசன் :**

நடுவர் அவர்கள் முன்னர்க் கேட்ட கேள்விக்கு இப்போது விடை அளிக்கிறேன். கொலை செய்தவர் யாரென்பதை நான் அறியேன். ஆனால், அந்த இருட்டில், கொலையாளி கோதையைக் குறி வைத்துக் கொன்றது எப்படி? கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றது எப்படி? என்னால் சொல்ல முடியும்.

**நடுவர் :**

பின் என்ன? சொல்ல வேண்டியதுதானே?

**மணியரசன் :**

என் கட்சிக்காரர் குற்றவாளி இல்லை; அதை உறுதிப் படுத்த காரணங்கள் நிறையவே இருக்கின்றன. அவையே இங்குப் போதுமானவை. நான் அறிந்த மற்றவற்றை இந்தப் பொது மன்றத்திலே அறிவித்தால், குற்றவாளி தப்பித்துக் கொள்ள மாற்று நடவடிக்கை எடுக்க முயலக் கூடும். அதனால்தான் இங்குச் சொல்ல விரும்பவில்லை.

*(நடுவர் சிந்தனையுடன் சிறிது நேரம் அமைதி காக்கிறார். பின்னர்த் தன் குறிப்பேட்டில் சில மணித்துளிகள் எழுதுகிறார். எழுதி முடித்து அவையைச் சுற்றி ஒருமுறை பார்த்துவிட்டுப் பேசுகிறார்.)*

**நடுவர் :**

நல்லது. எதிர்பக்க வழக்குரைஞர் மணியரசனின் நோக்கத்தை நான் பாராட்டுகிறேன். கொலைக் குற்றம் சாட்டப் பட்டுக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப் பட்டிருக்கும் கதிரவனுக்கு எதிராக, அரசுப் பக்கத்திலே சரியான சான்று களை இம்மன்றத்தில் அளிக்க முடியவில்லை. குற்றஞ் சாட்டப்பட்டவர் அணைப்பில், கொலையுண்ட கோதை இருந்து இருக்கிறார்; குற்றஞ் சாட்டப்பட்டவர் அந்த நேரத்தில் நல்ல குடி மயக்கத்தில் இருந்து உள்ளார்; பின்னர்க் காவல் துறை உசாவலில், தான்தான் குடி மயக்கத்தில் இந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்று ஒப்புக் கொண்டு உள்ளார். இந்த மூன்றே மூன்று உண்மைகளின் மேலேயே அரசுப் பக்க வழக்கு முழுக்க அமைந்து உள்ளது.

அரசுப் பக்க இம்மூன்று அடிப்படை உண்மைகளும் குற்றவாளி இவர்தான் என்று உறுதி செய்ய முற்றும் போது மானவை அல்ல. மேலும், அவ்வுண்மைகள் எப்படி நம்பகத் தன்மை அற்றவை என்பதை, எதிர்பக்க வழக்குரைஞர் இங்குத் திறம்பட எடுத்து விளக்கி உள்ளார். அவருடைய கருத்துக்கள் முற்றும் ஏற்றுக் கொள்ளத் தக்கவையே.

கொலை வழக்கைப் பொறுத்தவரை, எவ்வித ஐயத்திற்கும் சிறிதும் இடமின்றிக் கொலையாளியை அடையாளம் காண்பது மிகவும் முதன்மையானதும் இன்றியமையாததும் ஆகும். ஆனால், இவ்வழக்கில், குற்றஞ் சாட்டப்பட்டவர் ஏன் இந்தக் கொலையைச் செய்திருக்க முடியாது என்பதற்கான பத்துக்கும் மேற்பட்ட காரணங்களை அவரின் வழக்குரைஞர் அடுத்தடுத்து இங்கு அடுக்கி உரைத்து உள்ளார். அவை அனைத்தும் தக்கவியல் முறையில் அமைந்தவை; எவராலும் தள்ள முடியாதவை. அந்தக் காரணங்களை அரசு வழக்குரைஞரும் மறுக்கவில்லை. உண்மையைச் சொல்வது என்றால், அவை சரியே என்று ஏற்றுக் கொண்டும் உள்ளார்.

எனவே, இரண்டு பக்கக் கருத்துக்களையும் காரணங் களையும் அலசி, ஆராய்ந்து, சீர்தூக்கி நோக்கியதில், இங்குக் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுக் கூண்டிலே நிற்கின்ற கதிரவனுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எதுவும் ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்படவில்லை என்ற இறுதி முடிவுக்கு வருகிறேன். எனவே, குற்றஞ் சாட்டப்பட்ட கதிரவனைச் சாட்டப் பட்ட குற்றங்களினின்று விடுவித்து விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கிறேன்.

இரண்டு பக்க வழக்குரைஞர்களும் துணை ஆய்வாளர் தூயவனும் என்னை என்னறையில் வந்து சந்திக்கவும்.

அவை கலையலாம்.

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 35

**இடம்** : நடுவர் உள்ளறை.

**காலம்** : மாலை மணி ஆறு.

**உறுப்பினர்கள்** : நடுவர், அரசு வழக்குரைஞர், கண்ணன், மணியரசன், ஆய்வாளர் அரிச்சந்திரன், துணை ஆய்வாளர் தூயவன்.

சூழல் : நடுவர் தன்னிடத்தில் அமர்ந்து இருக்க, மற்றவர்கள் எதிரே சுற்றி அமர்ந்து இருக்கின்றனர்.

**நடுவர் :**

மணியரசன், மீண்டும் என் பாராட்டுகள்.

**மணியரசன் :**

மிக்க நன்றி.

**நடுவர் :** *(கண்ணன் பக்கம் திரும்பி)*

கண்ணன், முதலில் நான் உங்களைத்தான் பாராட்டி இருக்க வேண்டும். உங்கள் உதவியாளர் மணியரசனை இத்துணைத் திறம்பட உருவாக்கி உள்ளமைக்கு என் பாராட்டுகள்.

**கண்ணன் :**

உங்கள் பாராட்டுகளுக்கு முற்றும் உரியவர் மணியரசன் மட்டுமே. கொலை நிகழ்ந்தபோது நானும் அங்கு இருந்திருக் கிறேன். மேலும், இப்போது நான் அரசு வழக்குரைஞராகவும் உள்ளேன். எனவே, இவ்வழக்குப் பற்றி ஒரு சொல்லும் மணியரசனிடம் பேசியது கிடையாது.

**நடுவர் :**

அப்படியா! உங்கள் நன்னடத்தையை நான் மதிக் கிறேன். எப்படியானால் என்ன? அவர் உங்கள் கீழ்ப்பயிற்சி பெறுபவர்; எனவே, நீங்களும் பாராட்டப்பட வேண்டியவரே.

*(வேலையாள் அப்போது அங்குத் தேனீர் கொண்டு வந்து அனைவர்க்கும் அளிக்கிறார்.)*

**நடுவர் :**

மணியரசன், இப்போது சொல்லுங்கள்; கொலை எப்படி நடந்தது? கொலை செய்தவர் யார்?

**மணியரசன் :**

யார் என்பது எனக்குத் தெரியாது; ஆனால், அந்த அறை யில் இன்னொரு ஆளும் அப்போது இருந்து இருக்கிறார் என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியும்.

**நடுவர் :**

சொல்லுங்கள்; கேட்போம்.

**மணியரசன் :**

இதோ, இந்த நான்கு படங்களையும் மீண்டும் பாருங்கள். இவைகள் கொலை நடந்த அடுத்த மணித்துளிக்குள் அந்த அறையில் துணை ஆய்வாளரால் எடுக்கப்பட்டவை; சான்று களாக இவ்வழக்கில் ஏற்கப்பட்டவை.

*(எல்லோரும் அந்த நான்கு படங்களையும் கூர்ந்து ஆய்ந்து பார்க்கின்றனர்.)*

**நடுவர் :**

ஒன்றும் புரியவில்லையே. முன்பே பார்க்கப்பட்ட படங்கள் தாம் இவை. *(மற்றவர்களை நோக்கி)* உங்களில் யாருக்கேனும் ஏதேனும் புதிதாய்த் தெரிகிறதா?

(மற்றவர்கள் இல்லை எனத் தலையை ஆட்டுகின்றனர்.)

**மணியரசன் :**

இந்த நான்கு படங்களில் ஒரு படம் மட்டும் அதே நேரத்தில் எடுக்கப்பட்டது இல்லை. கொலை நடப்பதற்கு முன்னர் எடுக்கப்பட்டு இருக்க வேண்டும்.

**அரிச்சந்திரன் :**

எதை வைத்து அத்துணை உறுதியாகச் சொல்கிறீர்கள்?

**மணியரசன் :**

இந்த நான்கு படங்களும் அடுத்தடுத்து எடுக்கப் பட்டிருக்கலாம்; ஆனால், ஒரே நேரத்தில் எடுக்கப்பட்டவை இல்லை. நேர இடைவெளி அங்கு இருந்து இருக்க வேண்டும். மேலும், எடுக்கப்பட்ட சூழலும் வேறுபட்டு இருக்க வேண்டும். துணை ஆய்வாளர் தான் இதை விளக்கக் கூடும்.

**தூயவன் :**

உண்மைதான். எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?

**மணியரசன் :**

அஃதொன்றும் அத்துணைக் கடுமையான செயல் இல்லை. இந்த ஒரு படம் மட்டும் தன் அமைப்பில் வேறு படுகிறது.

*(நடுவர் அந்தப் படங்களைப் பெற்று உற்றுப் பார்க்கிறார்.)*

**நடுவர் :**

ஆமாம்; இந்தப் படம் மட்டும் சற்று இருண்டு காணப் படுகிறது. காரணம், போதிய வெளிச்சம் இல்லாமை என்று கருதுகிறேன்.

**தூயவன் :**

நீங்கள் நினைப்பது சரிதான். அந்தப் படம் அறை இருட்டாக இருந்தபோது முதன்முதலில் எடுக்கப்பட்டது.

**மணியரசன் :**

கொலைகாரனுக்கு அந்த அறை இருட்டில், கோதையை எப்படி அடையாளம் தெரிந்தது என்று குழம்பிக் கொண்டு இருந்தோமே, அதற்கு விடை இதுதான். கொலை நடப்பதற்குச் சில வினாடிகள் முன்னர் இந்தப் படம் எடுக்கப்பட்டிருக் கிறது. படக்கருவியின் பளீர் ஒளியில் கோதையைக் கண்டு கொண்ட கொலையாளி, குறி தவறாமல் தன் வேலையை முடித்துக் கொண்டு உள்ளார்.

**அரிச்சந்திரன் :**

அது சரி. வேறொரு ஆள் அங்கு இருந்திருந்தால், இந்தப் படத்தில் அந்த ஆளின் உருவம் விழுந்திருக்க வேண்டுமே; எங்கே காணோம்? அறை முழுதும் தெளிவாகத் தெரிகிறதே!

*(எல்லோரும் மணியரசன் என்ன சொல்ல உள்ளார் என்பதை அறிவதில் ஆர்வமாக இருந்தனர்.)*

**மணியரசன் :**

இந்தப் படத்தைப் பாருங்கள். இதோ, கட்டில்; கட்டில் அருகில் மூலையில் புத்தக நிலைப்பேழை. நிலைப்பேழை யின் உயரம் சரியாக ஆறு அடிகள்; நானே அளந்து பார்த்தேன்.

பேழையின் ஒரு கதவு திறந்து உள்ளது; இல்லையா? இப்போது, மற்ற மூன்று படங்களையும் பார்த்துச் சொல்லுங்கள்.

*(அங்கே நெடுநேரம் அமைதி நிலவுகிறது. படங்களை ஒப்பிட்டு ஊன்றிப் பார்க்கின்றனர்.)*

**அரசு வழக்குரைஞர் :**

இந்தப் படத்தில் மட்டுமே, நிலைப்பேழைக் கதவு ஒன்று ஓரளவிற்குத் திறந்து உள்ளது; மற்ற படங்களில் பேழையின் கதவுகள் மூடியே காணப்படுகின்றன. அப்படியானால், அந்தக் கொலையாள் பேழைக் கதவுக்குப் பின்னால் ஒளிந்து இருந்திருக்கிறார்.

**மணியரசன் :**

என் கணிப்பும் அதுதான். படத்தில் தரைப்பகுதி தெரிந் திருந்தால், மறைந்திருந்தவர் கால்கள் தெரிந்து இருக்கும்; அந்த வாய்ப்பு இல்லாது போய்விட்டது.

**நடுவர் :**

புத்தக நிலைப்பேழையின் திறந்திருந்த கதவின் பின்னால் கொலையாளி நின்றிருந்திருக்கிறார். படமெடு கருவியின் பளீர் ஒளியில் கோதையை அவர் அடையாளம் கண்டு கொள்கிறார். கோதையைக் குறி தவறாமல் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டுத் தப்பிக்க முயலுகையில், முதலில் துணைஆய்வாளர் மீது மோதிக் கொள்கிறார்; அப்போது ஏற்பட்டதே தூயவனின் உடையில் படிந்த குருதிக் கறை. பின் நகர்ந்து வாயிலை நாடிய போது அப்போதுதான் உள்ளே நுழைந்திருந்த கண்ணன் மேல் இடித்துக் கொள்கிறார். வெளிக்கதவு வழியே வெளியேறியவர், கத்தியைத் துடைத்துக் காலதர் அருகே வெளியே வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். இதைத்தானே சொல்ல வருகிறீர்கள்?

**மணியரசன் :**

ஆமாம்; அப்படித்தான் அங்கு நடந்து இருக்க முடியும். இல்லையெனில், அந்த நிலைப்பேழையின் திறந்திருந்த கதவினை மூடியவர் யார்? முதற்படத்திற்கும் மற்ற மூன்று

படங்களுக்கும் இடைப்பட்ட நேரம் ஒரு மணித்துளி அளவு நேரமே கழிந்திருக்கும். கதிரவன் கட்டிலிலேயே அமர்ந்து இருக்கிறார்; துணை ஆய்வாளரும் *(கண்ணனைச் சுட்டி)* இவரும் தெருக் கதவருகே நின்றிருக்கின்றனர். பின்னர் யார் நிலைப்பேழையின் கதவை மூடி இருக்க முடியும்?

**தூயவன் :**

அப்படித்தான் நடந்து இருக்க வேண்டும்; வேறு வழி இல்லை.

**அரிச்சந்திரன் :**

இப்போது நாம் என்ன செய்வது?

*(கண்ணன் ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதை நடுவர் கவனிக்கிறார்.)*

**நடுவர் :**

கண்ணன், நீங்கள் ஒன்றும் சொல்லவில்லையே! என்ன சிந்தனை?

**கண்ணன் :**

இப்படித்தான் நடந்திருக்கும் என்ற உங்கள் கணிப்பை நான் முழுதும் ஏற்க இயலாது. ஆனால், அப்படி ஒரு வேற்றாள் அங்கு இருந்து, கொலையைச் செய்துவிட்டுத் தப்பிச் சென்றிருக்கிறான் என்றால், நிச்சயம் அவன் தெருக்கதவு வழியாகத் தப்பிச் சென்று இருக்க முடியாது. என்னால் இதை உறுதியாகச் சொல்ல முடியும்.

*(அங்கு நீண்ட அமைதி நிலவுகிறது.)*

**நடுவர் :**

பிறகு அங்கு என்னதான் நடந்தது? புத்தக நிலைப் பேழையின் திறந்த கதவை மூடியவர் யார்? தூயவனின் உடையிலே குருதிக் கறை படிந்தது எப்படி?

**மணியரசன் :**

அங்கு வேறோர் ஆள் இருந்தது உண்மை. அந்தப் புத்தகப் பேழையின் திறந்து இருந்த கதவினை மூடியவரும்

அவரே. அங்கிருந்து அவர் தப்பிச் சென்று உள்ளார் என்பது உறுதி.

**அரசு வழக்குரைஞர் :**

அஃதெப்படி முடியும்? தெருக் கதவு வழியாக யாரும் தப்பிச் செல்லவில்லை என்று கண்ணன் உறுதியாக உரைக்கிறாரே?

**மணியரசன் :**

ஆமாம்; அவர் சொல்வது சரியாகவும் இருக்கக் கூடும்.

**நடுவர் :**

பிறகு எப்படி? எல்லாம் புதிராக இருக்கின்றனவே!

*(அங்குச் சில மணித்துளிகள் அமைதி நிலவுகிறது. மணியரசன் நிழற்படங்களை மீண்டும் மீண்டும் ஊன்றி ஆய்ந்து பார்க்கிறார். அவர் கொண்ட ஆழ்ந்த சிந்தனை முகத்தில் நன்கு வெளிப்படுகிறது. திடீரென்று மணியரசன் முகத்தில் தெளிவு உண்டாகிறது.)*

**மணியரசன் :**

இந்தப் படங்களை மீண்டும் சற்றுக் கவனமாகப் பாருங்கள். இதோ, மூடியிருக்கும் இந்தக் கதவு வழியாகப் பின்கட்டிற்குச் சென்று, அப்படியே வெளியேற இயலும். கதவில் பொருந்தி யுள்ள தாட்பாளைப் பாருங்கள். தாழிடப்படாமல் கதவு வெறுமனே மூடப்பட்டுள்ளது.

**நடுவர் :**

ஆமாம்; அனைத்துப் படங்களிலும் அப்படித்தான் உள்ளது.

**மணியரசன் :**

ஆனால், அந்தத் தாட்பாளின் அமைப்பை, அளவை, அஃதாவது நீட்டத்தை முதற்படத்தோடு மற்ற மூன்று படங்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள்; உண்மை புரியும்.

*(அனைவரும் மிகமிக உன்னிப்பாகக் கவனிக்கின்றனர்.)*

**நடுவர் :**

நுணுக்கமாகக் கவனித்தால் சிறு வேறுபாடு தெரிகிறது. தாட்பாளின் தள்ளுகம்பி முதற்படத்தில் மட்டும் மிகச்சிறு அளவிற்கு இடது பக்கம் மிகையாக வெளி வந்துள்ளது.

**கண்ணன் :**

உண்மைதான்.

*(மற்றவர்கள் அதை ஒப்பும் முறையாய்த் தலையை ஆட்டுகின்றனர்.)*

**அரிச்சந்திரன் :**

கொலையாளி பின்புறமாகத் தப்பிச் சென்று உள்ளார்.

**அரசு வழக்குரைஞர் :**

எனக்கு அது சரியாகத் தோன்றவில்லை.

**மணியரசன் :**

ஏன்?

**அரசு வழக்குரைஞர் :**

கொலையாளி எத்துணை விரைவாக, ஓசையின்றிச் செயல்பட்டு இருந்தாலும் அஃது அந்த ஒரு மணித்துளி நேரத்தில் இயலக் கூடியதா?

**மணியரசன் :**

ஏன்? முடியாதா?

**அரசு வழக்குரைஞர் :**

எப்படி முடியும்? கோதையைக் குறி வைத்துக் கத்தியால் குத்தி விட்டு, முன் கதவு வழியே தப்பிக்க முயல்கிறார்; அங்குத் தூயவன் மீதும் கண்ணன் மீதும் மோதிக் கொண்டதால், அது முடியாது போய், பின்னர்ப் பின்கதவைத் திறந்து கொண்டு தப்பித்துச் செல்கிறார்; அஃதும் ஓசை ஏதுமின்றி! அந்த ஒரு மணித்துளி இடைவெளியில் இயலக் கூடியது தானா? எண்ணிப் பாருங்கள்.

**மணியரசன் :**

கொலையாளி இவர்களோடு மோதிக் கொண்டதாக இங்கு யார் சொன்னார்கள்?

**அரசு வழக்குரைஞர் :** *(வியப்புடன்)*

நீங்கள்தானே தொடக்கம் முதல் விடாது வற்புறுத்தி வந்தீர்கள்?

**மணியரசன் :**

ஆமாம்; சொன்னேன்; எப்போது? கொலையாளி முன் பக்கக் கதவு வழித் தப்பிச் சென்றிருக்கக் கூடும் என்றபோது, அப்படிச் சொன்னேன். ஆனால், இப்போது கொலையாளி பின்புறக் கதவு வழித் தப்பிச் சென்றுள்ளது உறுதி ஆகிறது. எனவே, அவர் யாரோடும் இடித்துக் கொண்டிருக்க வாய்ப்பு இல்லை.

**அரசு வழக்குரைஞர் :**

கண்ணனும் தூயவனும் யாரோடோ இடித்துக் கொண்டார்களே, அஃதெப்படி?

**மணியரசன் :**

அதுதான் துணைஆய்வாளர் முதலிலேயே சொன்னாரே. அவர்கள் ஒருவர்க்கு ஒருவர் தங்களுக்குள் இடித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

**அரசு வழக்குரைஞர் :**

தூயவன் உடையிலிருந்த குருதிக் கறை?

**மணியரசன் :**

கோதையின் உடலைக் கதிரவன் அணைப்பிலிருந்து பெற்றுக் கிடத்தினாரே, அப்போது ஏற்பட்டு இருக்கலாம்.

**அரசு வழக்குரைஞர் :** *(சிரித்தபடி)*

உண்மைதான்; அப்படியும் இருக்கலாம்.

**அரிச்சந்திரன் :**

இப்பொழுது என்ன செய்வது? இத்தனை நாட்கள் கடந்து விட்டனவே; மேலே எப்படித் தொடர்வது?

**கண்ணன் :**

நான் சொல்கிறேன். வழக்கின் முடிவில், மணியரசன் தூயவனிடம் கேட்ட கேள்விகள் பொருள் அற்றவையாகவும் பொருத்தம் இன்மையாகவும் அப்போது தோன்றின. எதற்காக இந்தப் படங்களின் மூலச் சுருளின் இருப்பிடம் பற்றியும் தூயவனின் நடவடிக்கை பற்றியும் பொதுவில் மணியரசன் அங்குக் கேட்க வேண்டும்? கொலை செய்தவரோ, கொலையில் தொடர்புடையவரோ வழக்கின் போக்கைத் தெரிந்து கொள்ள, வழக்கு மன்ற நடவடிக்கையைத் தெரிந்து கொள்ள ஒவ்வொரு நாளும் வந்திருக்கக் கூடும். கூடும் என்ன? கண்டிப்பாய் வந்து இருப்பார். அவருக்குத் தெரியும் அந்த இருட்டில் கோதையை எப்படி அடையாளம் தெரிந்தது என்று! நமக்குத் தெரியும், கொலைக்கு முன்னர்த் தூயவன் எடுத்த இந்தப் படத்தில் கொலையாளியின் உருவம் பதிய வில்லை என்று. ஆனால், அதை அவர் அறிய மாட்டார் இல்லையா? அந்தப் படத்தில் எங்கே தன் முகம் பதிந்து இருக்குமோ என்ற அச்சம் அவரை அலைக்கழிக்கலாம்; அதனால், அந்தப் படத்தைக் கைப்பற்ற முயலலாம்; இல்லையா?

**அரசு வழக்குரைஞர் :**

நீங்கள் சொல்லும் காரணம் கேட்க நன்றாக இருக்கிறது; ஆனால், நடக்கக் கூடியதா? ஒரே படச்சுருளில் எடுக்கப் பட்ட படங்கள் இவை. அப்படி, அந்தக் கொலையாளியின் உருவம் அந்தச் சுருளில் பதிந்து இருந்திருந்தால், அது தெரியாமல் போயிருக்கக் காவல்துறைக்கு வாய்ப்பு இல்லை; தெரிந்தும் நடவடிக்கை எடுக்காமல் அஃது இருக்காது என்பதை அவன் அறிய மாட்டானா?

**மணியரசன் :**

அறியாதும் இருக்கலாம். மிகப்பெரிய அறிவாளியும் இயல்பான தடயங்களைக் காண இயலாது போவதும் உண்டு. நல்லது நடக்கும் என்று நம்புவோம்.

**அரிச்சந்திரன் :**

அதுவும் சரிதான். நாங்கள் எத்தனையோ திறமையாளர்கள் இந்தப் படங்களை ஆராய்ந்தோம்; என்ன பயன்? மணியரசன் எடுத்துச் சொன்னபோதுதானே, எங்களுக்கும் தெரிந்தது!

**நடுவர் :**

உங்கள் மேல் தவறு இல்லை. மணியரசனுக்கு இவ்வழக்கில் வெற்றி பெற வேண்டும் என்ற ஒரு கட்டாயம், ஓர் இலக்கு, அதற்கும் மேலே ஒரு வெறி இருந்தது; ஆனால், உங்களுக்கோ இது பத்தோடு பதினொன்றாவது வழக்கு! மணியரசன் எதிர்பார்ப்பதுபோல், நல்லதே நடக்கும் என்று நம்புவோம்.

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 36

| | | |
|---|---|---|
| **இடம்** | : | கண்ணன் வீடு. |
| **காலம்** | : | இரவு மணி ஒன்பது. |
| **உறுப்பினர்கள்** | : | கண்ணன், மங்கை, தேன்மொழி. |
| **சூழல்** | : | வீடு ஒளி வெள்ளத்தில் மூழ்கி உள்ளது. எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். |

**கண்ணன் :**

மங்கை! தேன்மொழி! என்னோடு கொஞ்சம் தனியாக வாருங்கள்.

*(மங்கையும் தேன்மொழியும் கண்ணனைத் தொடர்ந்து வெளியே வருகின்றனர்.)*

**மங்கை :**

என்ன அண்ணா?

**கண்ணன் :**

தேன்மொழி, அவள் அம்மா, கதிரவன் எல்லோரும் இன்று இரவு நம் வீட்டிலேயே தங்கட்டும்.

**தேன்மொழி :**

எதற்கு? வேண்டா; மணி ஒன்பதுதானே ஆகிறது?

**கண்ணன் :**

சொல்வதைக் கேள். நான் ஒரு வேலையாய் இப்போது வெளியே செல்கிறேன்; காலையில் தான் வருவேன். நான் வந்ததும் நீங்கள் செல்லலாம்; என்ன?

**தேன்மொழி :**

சரி; ஆனால், அண்ணா என்ன சொல்வாரோ?

**கண்ணன் :**

எதுவும் சொல்ல மாட்டார். மங்கை, அவர்கள் தங்க அனைத்து வசதிகளையும் செய்து கொடு.

**மங்கை :**

சரி.

**கண்ணன் :**

கதிரவன் எங்கே?

**மங்கை :**

மொட்டை மாடியில் அறிவாளனோடு பேசிக்கொண்டு இருக்கிறார்.

**கண்ணன் :**

நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். எந்தக் காரணம் கொண்டும் கதிரவன் இன்று இரவு நம் வீட்டை விட்டு எங்கும் வெளியே செல்லக் கூடாது. ஏன்? எதற்கு? எதுவும் கேட்காதீர்கள்; நான் சொல்வதில் ஒரு காரணம் உள்ளது. என்ன?

**மங்கை :**

நான் பார்த்துக் கொள்கிறேன்.

**கண்ணன் :**

நல்லது; கவனம் இருக்கட்டும்.

*(கண்ணன் வெளியேறுகிறார்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 37

| | | |
|---|---|---|
| **இடம்** | : | கண்ணன் வீட்டு மொட்டை மாடி. |
| **காலம்** | : | இரவு மணி ஒன்பதரை. |
| **உறுப்பினர்கள்** | : | கதிரவன், அறிவாளன், மங்கை. |
| **சூழல்** | : | வெண்ணிலவின் தண்ணொளி எங்கும் வெளிச்சத்தை வாரி இறைத்துக் கொண்டிருக்கிறது. தென்றல் காற்று மெல்லென்று தவழ்கிறது. கூடை நாற்காலிகளில் வசதியாக அமர்ந்தபடி கதிரவனும் அறிவாளனும் பேசிக் கொண்டு இருக்கின்றனர். |

**அறிவாளன் :**

இன்னும் என்ன கவலையோடு இருக்கிறாய்? அச்சப்பட இனி எதுவும் இல்லை.

**கதிரவன் :**

உனக்கு அச்சம் இல்லையா?

**அறிவாளன் :**

இருந்தது; ஆனால், இப்போது இல்லை. வழக்கின் முதல் நாளிலேயே என் அச்சம் எல்லாம் அகன்று விட்டது. மணியரசனைத் தவிர, வேறு எந்த வழக்குரைஞர் உன் வழக்கை நடத்தி இருந்திருந்தாலும் நீ தப்பித்து இருக்க நிச்சயம் முடிந்திருக்காது. என்ன திறமை! எப்படிப்பட்ட சிந்தனை!

**கதிரவன் :**

அதனால்தான் அச்சமாக இருக்கிறது.

**அறிவாளன் :**

என்ன சொல்கிறாய்?

**கதிரவன் :**

நாங்கள் அங்கு வந்து சேர்வதற்கு முன்னர் அந்த வீட்டை விட்டு வெளியேறியவன் நீதான் என்று கண்டு பிடித்துவிட்டால்?

**அறிவாளன் :**

கவலையே இல்லை. மடியில் பணமிருப்பின் வழியில் அச்சம்! நமக்கென்ன? குற்றமுள்ள நெஞ்சே குறுகுறுக்கும்.

**கதிரவன் :**

உண்மைதான். ஆனால், மணியரசன் தன் முடிவுரையில் கூறியவை என்னைக் குழப்புகின்றன. கொலையாளிக்கு அந்த இருட்டில் கோதையை எப்படி அடையாளம் தெரிந்து இருக்கும் என்பதை நான்தான் அவரிடம் சொல்லி இருந்தேன்.

**அறிவாளன் :**

ஆமாம்; தெரியும். அதற்கென்ன?

**கதிரவன் :**

அந்த அறையில் எடுக்கப்பட்ட படங்களின் மூலங் களின் இருப்பிடத்தைப் பற்றி மணியரசன் இறுதியில் எழுப்பியது ஏன்? துணை ஆய்வாளரின் நடமாட்டத்தைப் பற்றிய கேள்வியை அங்குக் கிளப்பியது ஏன்?

**அறிவாளன் :**

நீ குழம்புவதிலோ, கவலைப்படுவதிலோ பொருள் இல்லை. இன்னொருவன் அந்த அறையில் மறைந்திருந்து கோதையைக் கொலை செய்துள்ளான். கொலையாளிக்கு அந்தப் படம் எடுக்கப்பட்டது தெரியும்; ஆனால், அந்தப் படத்தில் என்ன உள்ளது என்பது அவனுக்குத் தெரியாது.

எனவே, அந்தப் படத்தைக் கைப்பற்ற அவன் முயல்வான்; அவன் அப்படி முயலுகையில், கையுங் களவுமாகப் பிடித்துவிட முடியும் என்பது மணியரசனின் கணிப்பு. கொலையாளி அத்துணை அறிவற்றவனாக இருப்பானா? நான் நினைக்க வில்லை.

**கதிரவன் :**

நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?

**அறிவாளன் :**

எல்லாவற்றையும் இதோடு மற; இனிது படுத்து உறங்கு.

**கதிரவன் :**

அறிவாளா! என்னோடு நீ மட்டும் இல்லாது இருந் திருந்தால், நான் என்றோ இடிந்து போய் இருப்பேன். உன் நட்பு என் உயிரை மீட்டுத் தந்துள்ளது. என்றுமே நீ எனக்கு உதவுபவனாக உள்ளாய்; நானோ உனக்கு ஓர் உதவியும் செய்தவன் இல்லை.

**அறிவாளன் :**

நான் அதை எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்த்துச் செய் வதற்குப் பெயர் உதவி இல்லை; அது வாணிகம். காலம் அறிந்து செய்வதற்குப் பெயர்தான் உதவி! என்ன பயன் விளையும் என்று எதிர்பார்க்காது செய்வதற்குப் பெயர்தான் உதவி! நான் உன் நண்பன்; உனக்கு உதவ வேண்டியது என் கடமை. இருந்தாலும், நீ எனக்கு ஓர் உதவி செய்வாயா?

**கதிரவன் :**

என்ன? சொல். என்ன உதவி என்றாலும் தயக்கம் இல்லாமல் செய்கிறேன்.

**அறிவாளன் :**

நீ உன் இழிந்த பழக்க வழக்கங்களை உடனே விட்டொழிக்க வேண்டும்; என்றும் எல்லார்க்கும் நல்லவனாய் இருக்க வேண்டும். நண்பன் என்ற முறையில் எத்தனையோ முறைகள் இடித்துத் தடுத்தும் நீ திருந்தியதாய்த் தெரிய

வில்லை; இனியும் உன் தவறுகளைத் தாங்கிக் கொண்டு உன்னோடு பழகி வர என்னால் இயலாது.

**கதிரவன் :** *(மெல்லச் சிரித்தபடி)*

நான் நல்லவனாகி மாதங்கள் பலவாகின்றன. என்று மங்கை என்னையும் ஒரு மனிதனாக ஏற்றுக் கொண்டாளோ, அன்றே நான் நல்லவனாக மாறிவிட்டேன். விட்டகுறை, தொட்டகுறை என்பார்களே, அப்படி, என் வாழ்வில் கோதை ஒரு தடையாக இதுவரைக் குறுக்கே இருந்தாள்; அதுவும் இன்று அகன்று விட்டது. இருந்தவரை அவள் எனக்கு இனிமையானவளாகவும் உண்மையானவளாகவும் இருந்து வந்துள்ளாள். கோதையின் சாவு கொடுமையானது; எனக்கு அதில் மிக்க வருத்தமே! இனி, என்றும் நல்லவனாகவே நடந்து கொள்வேன். நீ என்னை நிச்சயம் நம்பலாம்.

**அறிவாளன் :**

நம்புகிறேன். நம் வாழ்க்கையே நம்பிக்கையில் தான் உள்ளது.

**கதிரவன் :**

அப்படியானால், உன் நம்பிக்கை? தேன்மொழியைக் காதலித்தாய்; என்ன ஆனது? என்னாலும் உனக்கு எந்த உதவியும் செய்ய முடியாமல் போய்விட்டதே!

**அறிவாளன் :**

காதலித்தாய் என்று ஏன் இறந்த காலத்தில் சொல்கிறாய்? காதல் என்றும் நிலையானது! அன்பின் மற்றொரு பெயர்தான் காதல். உண்மையான காதலுக்கு இறப்பு என்பதே கிடையாது. தேன்மொழி என்னைக் காதலிக்கவில்லை; அதனால் என்ன? நான் அவளைக் காதலிக்கிறேன்; காதலித்துக் கொண்டே இருப்பேன். அதை யாரால் தடுக்க முடியும்?

**கதிரவன் :**

சரி; உன் வாழ்க்கை? அவளையே எண்ணி எண்ணி அழிய வேண்டியதுதானா?

**அறிவாளன் :**

ஏன்? இன்னொரு பெண்ணை இனி நான் சந்திக்க மாட்டேனா? அவளிடம் காதல் கொள்ள மாட்டேனா? காதல் என்பது ஒரு மன உணர்வு. அஃது எந்தப் பெண்ணிடமும் ஏற்படலாம்; எந்த அகவையிலும் வரலாம். ஒருவன் ஒருத்தியைத் தான் காதலிக்க வேண்டும் என்பது ஒழுக்க முறையாகச் சொல்லலாம்; ஆனால், உண்மைக்கு ஒத்தது இல்லை. காதல் இல்லையேல் சாதல்! உண்மை. நாம் வாழ்க்கையில் காதலித்துக் கொண்டே இருக்க வேண்டும். காதலில் தோல்வி என்பதெல்லாம் இல்லை. உள்ளத்தில் காதல் உண்டாயின், கல்லும் கரையும்; கனிவு நிறையும். கனிவு கொண்ட நெஞ்சம், என்றும், எங்கும், நல்லதையே நினைக்கும்; நல்லதையே பேசும்; நல்லதையே செய்யும்.

**கதிரவன் :**

என்ன சொல்ல வருகிறாய்? குழப்புகிறாயே!

**அறிவாளன் :**

காதல் உணர்வு வேண்டும்; ஆனால், காதலே வாழ்க்கை இல்லை. காதல் தோல்வி என்று கண்ணீர் விட்டுக் கதறி அழுவதோ, அதற்காக உயிரை விடுவதோ உயர்வான செயல் இல்லை. காதல் கைகூடாதபோது, வாழ்க்கை கசப்பாகத் தோன்றும்; அஃது இயல்புதான். ஆனால், காலம் செல்லச் செல்ல எல்லாம் மறைந்து வரும். இயக்கம்தான் வாழ்க்கை; இங்கு இலம் என்று அசையாது இருப்பது விரும்பத் தக்கது அன்று. விரும்பியது நிறைவேறாதபோது, விடாது அழுவது குழந்தை குணம்; கிட்டாதாயின் வெட்டென மற என்பது என் குணம். நான் காதலித்தவள் என்னைக் காதலிக்கவில்லை; அதனால் என்ன? என்னைக் காதலிப்பவளை நான் என்றாவது, எங்கேயாவது இனி சந்திக்கலாம் இல்லையா? அப்படிப்பட்ட பெண்ணை அன்று நான் மணந்து கொள்கிறேன். சரிதானே?

**கதிரவன் :**

மிகச் சரியான பேச்சு!

*(அப்போது மங்கை அங்கு வந்து சேருகிறாா்.)*

**மங்கை :**

பால் கொண்டு வந்திருக்கிறேன். அருந்துங்கள். இப்போதே மணி பத்தாகி விட்டது; நீங்களும் இங்கேயே இவருடன் தங்கி இருந்துவிட்டுக் காலையில் செல்லலாம்.

**கதிரவன் :**

வேண்டா; எதற்கு வீண் தொல்லை? மகிழுந்துதான் உள்ளதே! எல்லோரும் வீட்டிற்கே சென்று விடுகிறோம்.

*(இருவரும் மங்கை அளித்த பால் குவளைகளைப் பெற்றுக் குடிக்கின்றனா்.)*

**மங்கை:**

இல்லை, இல்லை; அண்ணா உங்களை இங்கேயே இன்று தங்கச் சொல்லி உள்ளாா். மாடி அறையில் உங்கள் இருவருக்கும் வசதி செய்து வைத்துள்ளேன்; இன்றிரவு இங்குத் தங்குங்கள். தேன்மொழியும் அம்மாவும் கீழே எங்களுடன் தங்கிக் கொள்வாா்கள்.

**கதிரவன் :**

சரி.

*(வெற்றுக் குவளைகளைப் பெற்றுக் கொண்டு மங்கை கீழிறங்கிச் செல்கிறாா்.)*

**அறிவாளன் :**

கண்ணனின் ஏற்பாடு இது. இன்னும் அவருக்கு உன் மேல் உள்ள ஐயம் அகன்றதாகத் தெரியவில்லை.

**கதிரவன் :**

ஆமாம்; நானும் அப்படித்தான் நினைக்கிறேன். நான் நடத்திய வாழ்க்கை அப்படி! யாா்தான் நம்புவாா்கள்? என்றாவது ஒருநாள் எல்லாம் தெரியவரும்.

❀ ❀ ❀ ❀ ❀

## காட்சி - 38

| | | |
|---|---|---|
| **இடம்** | : | காவற்றுறைத் துணை ஆய்வாளர் தூயவனின் மூன்றாம் தள அடுக்கில்லம். |
| **காலம்** | : | இரவு மணி பதினொன்றரைக்கு மேல். |
| **உறுப்பினர்கள்** | : | கண்ணன், மணியரசன், அரிச்சந்திரன், தூயவன், மணவழகன். |
| **சூழல்** | : | கண்ணன், அரிச்சந்திரன், மணியரசன், தூயவன் கூடத்தில் அமர்ந்து இருக்கின்றனர். இரவு விளக்கு வெளிச்சம் அறையை மங்கலான ஒளியில் வைத்திருக்கிறது. |

**அரிச்சந்திரன் :** *(மெல்லிய குரலில்)*

மணி பன்னிரண்டை நெருங்குகிறது. நம் எதிர்பார்ப்புப் பொய்த்து விடுமோ?

**கண்ணன் :**

முன்னரே நீங்கள் சொன்னதுபோல், கொலையாளி அறிவுடையவராக இருக்கக்கூடும்.

**அரிச்சந்திரன் :**

உண்மைதான். எனக்கு அந்த எண்ணம் இன்னும் இருந்து கொண்டுதான் உள்ளது.

**கண்ணன் :**

கடமையைச் செய்கிறோம்; நடப்பது நடக்கட்டும்.

*(தொலைப்பேசி அந்த அமைதியான சூழ்நிலையைக் குலைத்துக் குரல் எழுப்புகிறது. தூயவன் கேள்கருவியை எடுத்துப் பேசுகிறார்.)*

**தூயவன் :**

வணக்கம். தூயவன் பேசுகிறேன்... உம்; சொல்லுங்கள்... உம்... உம்... நன்றி; நீங்கள் யார்?... சரி.. சரி.. நீங்கள்

செய்தது சரிதான். கட்டுப்பாட்டு அறைக்குத் தெரிவித்து உடன் நடவடிக்கை எடுக்கிறேன். ஆமாம், உங்கள் பெயர்? முகவரி?

*(தொலைப்பேசித் தொடர்பு மறுமுனையில் துண்டிக்கப் பட்டது அறிந்து, தூயவன் கட்டுப்பாட்டு அறையோடு தொலைப்பேசியில் தொடர்பு கொள்கிறார்.)*

**தூயவன் :**

துணை ஆய்வாளர் தூயவன் பேசுகிறேன்; வணக்கம். மலர் மருத்துவ மனைக்கு எதிரில் ஒரு கொலை நடந்துள்ள தாகச் சற்று முன்னர் எனக்குச் செய்தி வந்துள்ளது. அங்கே அருகில் உள்ள இயங்கு குழுவினரைப் போய்ப் பார்க்கச் சொல்லுங்கள். பார்த்ததும் நிலைமையை எனக்கு உடனே தெரிவிக்கச் சொல்லுங்கள். சரிதானே?

*(தூயவன் தொலைப்பேசிக் கேள்கருவியைக் கீழே வைத்துவிட்டு நிமிர்கிறார்.)*

**அரிச்சந்திரன் :**

உங்களுக்கு வந்த செய்தி உண்மையாக இருக்காது என்றே எண்ணுகிறேன். யாரேனும் இங்கு இருக்கின்றனரா என்பதைத் தெரிந்து கொள்ளும் முயற்சியாக அஃது இருக்கலாம். முன்சிந்தனை இலாது பேசி அனைத்தையும் குழப்பிவிட்டீர்கள்.

**தூயவன் :**

குழப்பிவிட்டேனா?

**அரிச்சந்திரன் :**

ஆமாம். அப்படித்தான் நான் நினைக்கிறேன். தொலைப் பேசியில் தொடர்பு கொண்டவர், நான் நினைப்பது போல், நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற குற்றவாளியாக இருக்கலாம். அவரின் நோக்கம் இங்கு யாரும் இருக்கின்றனரா என்பதை அறிந்து கொள்ளவும், அப்படி இருந்தால் அவரை வெளி யேற்றவும் இருக்கலாம். நீங்கள் முதலில் தொலைப்பேசியை எடுத்துப் பேசி இருக்கக்கூடாது; பேசிவிட்டீர்கள். பேசிய பிறகாவது, புரிந்து கொண்டு உடனே புறப்பட்டுப்

போவதாகப் போக்குக்காட்டி இருக்க வேண்டும். மாறாக, கட்டுப்பாட்டு அறைக்குத் தெரிவித்து நடவடிக்கை எடுப்பதாகப் பேசியவரிடமே சொல்லிவிட்டீர்கள்!

**தூயவன் :** *(சிந்தனையோடு)*

தவறுதான்; இப்போதே புரிகிறது.

**கண்ணன் :**

நாம் இவற்றை எல்லாம் முன்னரே எதிர்பார்த்து எண்ணி முடிவுக்கு வந்திருக்க வேண்டும்; செய்யத் தவறிவிட்டோம். மேலும், கொலையாளியின் அறிவைக் குறைத்து எடை போட்டுவிட்டோம். இனி, வருந்திப் பயனில்லை.

**தூயவன் :**

இப்போது என்ன செய்வது?

*(அப்போது காவல்துறை ஆய்வாளர் அரிச்சந்திரனின் செல்லிடைபேசி ஒலி எழுப்புகிறது. அரிச்சந்திரன் செல்லிடை பேசியில் தொடர்பு கொள்கிறார்.)*

**அரிச்சந்திரன் :**

நல்லது; அந்த ஆளுக்குத் தெரியாமல், கவனமாகப் பின் தொடர்ந்து வா.

*(செல்லிடைபேசியை நிறுத்தி அரிச்சந்திரன் பைக்குள் வைத்துக்கொள்கிறார்.)*

**அரிச்சந்திரன் :**

வெளியே காவலுக்கு நிறுத்தி இருந்த நம் ஆள்தான். யாரோ ஒருவர் இந்தக் கட்டடத்தை நோக்கி மறைந்து மறைந்து வந்துகொண்டு இருக்கிறாராம்; என்ன செய்யலாம்?

**கண்ணன் :**

வரட்டும். நாம் அந்த அறையில் மறைந்திருப்போம். வெளியே கதவில் பூட்டு தொங்குகிறது, இல்லையா?

**தூயவன் :**

உம்ம்! நான்தான் பூட்டிவிட்டு அலுவல் அறைவழி உள்ளே வந்தேன்.

*(அப்போது தொலைப்பேசி அழைப்பொலி அங்கு எழுகிறது. தூயவன் அரிச்சந்திரனைப் பார்க்க, அவர் எடுக்குமாறு தலையை அசைக்கிறார். தூயவன் தொலைப்பேசிக் கேள் கருவியை எடுத்து மெல்லவே பேசுகிறார்.)*

**தூயவன் :**

வணக்கம். சொல்லுங்கள்... உம்... உம்... சரி! நீங்கள் மேலே நடக்க வேண்டியதைச் செய்யுங்கள்.

*(தூயவன் தொலைப்பேசிக் கேள்கருவியை அதனிடத்தில் வைக்கிறார்; பின் மற்றவர்களைப் பார்த்துப் பேசுகிறார்.)*

**தூயவன் :**

அந்தத் தொலைப்பேசிச் செய்தி உண்மையானதே! கொலை நடந்து உள்ளது.

**அரிச்சந்திரன் :**

அதுவரை மகிழ்ச்சி. சரி, வாருங்கள்; இந்த அறையில் மறைந்திருப்போம்.

*(நால்வரும் எழுந்து பக்கத்து அறைக்குள் சென்று, கதவை வெறுமனே மூடிக்கொண்டு இருட்டில் அமர்கின்றனர். நேரம் மெல்ல நகர்கின்றது. சில மணித்துளிகளுக்குப் பிறகு, கதவின் பூட்டைத் திறக்க முயலும் ஓசை கேட்கிறது. கதவு திறக்கப்பட்டு ஆள் உள்ளே வரும் காலடி ஓசை நன்கு கேட்கிறது. அடுத்து, முன்கூடத்தில் சிறு கைமின் விளக்கு ஒளியும் தெரிகிறது. அறைக்குள் அமர்ந்திருந்த நால்வரும் அமைதி காக்கின்றனர். கை மின்விளக்கு வெளிச்சம் அலுவலக அறைக்காக நகர்கிறது. கண்ணன் எழுந்து அறைக் கதவைத் திறக்க முயலுகிறார்; முடியாது திகைத்துத் திரும்புகிறார்.)*

**கண்ணன் :** *(கிசுகிசுத்த குரலில்)*

கதவு வெளிப்பக்கம் தாழிடப்பட்டு உள்ளது; என்ன செய்யலாம்?

*(அரிச்சந்திரன் விரைந்து வந்து கதவைத் திறந்து பார்க்கிறார்.)*

**அரிச்சந்திரன் :**

உண்மைதான். நாம் தாம் குற்றவாளியைத் தவறாக எடை போட்டு விட்டோம். இனி வேறு வழி இல்லை.

*(அரிச்சந்திரன் தன் செல்லிடைபேசியை எடுத்து இயக்கிப் பேசுகிறார்.)*

**அரிச்சந்திரன் :**

மணவழகன்? எங்கே, கீழேயா நிற்கிறாய்? முதற் தளத்திலா? உடனே விரைந்து மேலே ஓடி வா. வந்தவன் மிகத் திறமையானவன்; நாங்களிருந்த அறையைத் தாழிட்டு விட்டு, இப்போது அலுவலக அறையை ஆராய்ந்து கொண்டிருக்கிறான்! அவன் தப்பிவிடக்கூடாது; கவனம். இரண்டாவது தளம்; வலது பக்க வீடு; விரைவாக வா!

*(அரிச்சந்திரன் செல்லிடைபேசியை நிறுத்திப் பைக்குள் வைத்துக் கொள்கிறார். மாடிப்படிகளில் தடதட என்று ஆள் விரைந்து மேலே ஏறிவரும் ஓசை நன்கு கேட்கிறது. தூயவன் அறை விளக்கைப் பொருத்துகிறார். அதே நேரம் முன்கூடம் வழியே வந்த ஆள் விரைந்து வெளியேறும் ஒலி எழுகிறது. அரிச்சந்திரன் கதவைத் தட்டியபடி திறக்கப் பார்க்கிறார். அப்போது, கதவு வெளியிலிருந்து திறக்கப்படுகிறது. கதவிற்கு வெளியே காவல் அலுவலர் மணவழகன் பெரிய கைமின் விளக்குடன் நிற்கிறார். மாடிப்படிப் பகுதியின் மின்விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது.)*

**அரிச்சந்திரன் :** *(அறையினின்று விரைந்து வெளிவந்தபடி)*

மணவழகன்? அந்த ஆள் எங்கே?

**மணவழகன் :**

மேலே படிகளில் ஓடியுள்ளான்.

**தூயவன் :**

மேலே மொட்டை மாடிதான்! அவன் தப்பிப்பதற்குள் பிடித்தாக வேண்டும்.

*(எல்லோரும் மொட்டை மாடிக்காக ஓடிச் செல் கின்றனர். மொட்டை மாடி, நிறைநிலா ஒளியில் முழுமை*

*யாகத் தெரிகிறது. மாடிக்கு ஓடிவந்த அனைவரும் நின்று, கவனமாகச் சுற்று முற்றும் விரைந்து பார்க்கின்றனர்.)*

**மணவழகன் :**

அதோ! அங்கே!

*(கைமின் விளக்கு ஒளியால் மணவழகன் சுட்டிக் காட்டிய பகுதியை அனைவரும் பார்க்கின்றனர். அங்கே ஓராள் மழைநீர் வெளியேற்றுக் குழாய் வழித் தப்பிக்க முயல்வது தெரிகிறது.)*

**தூயவன் :**

அசையாதே; அப்படியே இரு; இல்லையோ, சுட்டு விடுவேன்.

*(தூயவன் கைத்துமுக்கியோடு விரைகிறார். அவரைத் தொடர்ந்து அனைவரும் செல்கின்றனர். அந்த ஆள், செய்வதறியாது திகைப்புடன் காப்புச் சுவரைப் பிடித்தபடி நீர்க்குழாய் மேல் நிற்கிறார். தூயவன் அந்த ஆளை நெருங்கவும், துமுக்கி வெடியொலி எழவும் சரியாக இருக்கிறது. அந்த ஆள், 'அம்மாஅஅ' என்ற அவல ஒலியோடு அங்கிருந்து கீழே விழுகிறார். அனைவரும் திடுக்கிட்டுக் கீழே பார்க்கின்றனர். அங்கே, கல்தரையில் குருதி சிந்த அசைதல் அற்று அந்த ஆள் கிடக்க, சற்றுத் தள்ளி ஓராள் அங்கிருந்து விலகி ஓடுவது தெரிகிறது. எல்லோரும் விரைந்து கீழே இறங்கி வருகின்றனர். அப்போது தொலைவில் ஒரு வண்டி இயங்கிப் புறப்பட்டுச் செல்லும் ஓசை தெளிவாகக் கேட்கிறது. தூயவன் குனிந்து கீழே கிடந்த ஆளைத் தொட்டுப் பார்க்கிறார்.)*

**தூயவன் :**

உயிர் இருக்கிறது. கழுத்தில் குண்டு பாய்ந்திருக்கிறது.

*(அரிச்சந்திரன் செல்லிடைபேசி மூலம் காவல்துறைக் கட்டுப்பாட்டறையோடு தொடர்பு கொள்கிறார்.)*

**அரிச்சந்திரன் :**

ஆய்வாளர் அரிச்சந்திரன் பேசுகிறேன்; வணக்கம். இங்குத் தூயவன் வீட்டில் குண்டடிப்பட்டும் மாடியிலிருந்து கீழே விழுந்து அடிபட்டும் ஒருவர் உயிருக்குப் போராடிக் கொண்டு இருக்கிறார்; உடன் மருத்துவ உதவி தேவை. உடன் நடவடிக்கை எடுக்கவும்.

*(செல்லிடைபேசியை நிறுத்திவிட்டு, மற்றவர்களைப் பார்க்கிறார்.)*

**மணியரசன் :**

யாரிவர்? எதற்காகச் சுடப்பட்டார்? சுட்டவர் யார்?

**மணவழகன் :**

சுட்டவர் இவருடைய கூட்டாளியாக இருக்கக் கூடும். நம்மிடம் உயிரோடு அகப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகச் சுட்டிருக்கலாம். நான் மறைந்திருந்து கண்காணித்துக் கொண்டிருந்தபோது ஒரு மாருதி கூடுந்து சற்றுத் தள்ளிச் சென்று நின்றதைக் கண்டேன்; அதில் இவர்கள் வந்திருக் கலாம் என்பது என் எண்ணம்.

**அரிச்சந்திரன் :**

வண்டி எண்? நிறம்? தெரியுமா?

**மணவழகன் :**

இல்லை; சரியாகக் கவனிக்கவில்லை. என் கவனம் முழுதும் வீட்டைச் சுற்றியே இருந்தது.

**அரிச்சந்திரன் :**

இவர் உயிர் பிழைத்தால் அன்றி, நமக்கு வேறு வழி யில்லை. இனி ஆண்டவன் விட்ட வழி!

*(கண்ணனுக்குத் திடீரென்று தெளிவு பிறக்கிறது.)*

**கண்ணன் :** *(மெல்ல)*

ஆண்டவன் விட்ட வழி! அரிச்சந்திரன், இப்போது எல்லாம் எனக்குப் புரிகிறது. உடனே புறப்படுங்கள்; உண்மைக் குற்றவாளிகளைக் கையுங்களவுமாகப் பிடித்துவிடலாம்.

*(எல்லோரும் கண்ணனை வியப்போடு பார்க்கின்றனர்.)*

**அரிச்சந்திரன் :**

மணவழகன், நீங்கள் இங்கே இருந்து இவரைக் கவனித்துக் கொள்ளுங்கள்; நாங்கள் செல்கிறோம். இவரைக் காப்பாற்ற எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும்; கவனம்.

*(மணவழகன் அங்கு நிற்க, மற்றனைவரும் விரைந்து அகல்கின்றனர்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 39

**இடம்** : விடுதி விண்மீன்.

**காலம்** : நள்ளிரவு மணி ஒன்று.

**உறுப்பினர்கள்** : கண்ணன், மணியரசன், அரிச்சந்திரன், தூயவன், மேலாளர் முத்தப்பர், காவலர் கள் மற்றும் இருவர்.

**சூழல்** : எங்கும் அமைதி. எந்த நடமாட்டங் களும் அங்கு இல்லை. விடுதி விண்மீனின் உள் நுழைவாயிற் பெருங் கதவு மூடி இருக்கிறது. விடுதி மெல்லிருட்டில் அப்போது உறங்கிக் கொண்டிருக்கிறது.

*(அந்த அமைதியான சூழலில், சீருந்து வண்டியின் ஒலிப்பான் வாயிற்கதவிற்கு அப்பாலிருந்து ஒலி எழுப்பு கிறது. வாயிற் கதவு திறந்து கொள்ள, சீருந்து உள்ளே நுழைந்து நிற்கிறது. வாயிற் கதவு மூடப்படுகிறது. உள்ளே நுழைந்த வண்டியிலிருந்து இருவர் இறங்கி வருகின்றனர். அவர்களை நோக்கி மேலாளர் முத்தப்பர் முன்னே வருகிறார். வண்டியில்*

*வந்த இருவரில் முன்னே வந்தவர் முத்தப்பரைக் கண்டதும் பேசுகிறார்.)*

**முன்னவர் :**

ஐயா, மன்னிக்கவும்; நாம் ஏமாற்றப்பட்டு விட்டோம். காவல் துறையினர் விரித்த வலையில் முருகன் வசமாய் அகப்பட்டுக் கொண்டு விட்டார். வேறு வழிஇல்லாததால், நான் அவனைச் சுட வேண்டியதாயிற்று. அவர் செத்துவிட்டார்.

**அரிச்சந்திரன் :**

அதுதான் இல்லை; இன்னும் உயிரோடுதான் இருக்கிறார்.

*(இருட்டிலிருந்து அரிச்சந்திரனின் குரல் ஒலிக்கிறது. அதே நேரம் அப்பகுதி ஒளி வெள்ளத்தில் மிதக்கிறது. திடுக்கிட்ட புதியவர்கள் இருவரும் தாங்கள் காவலர்களால் சுற்றிச் சூழப் பட்டிருப்பதைக் கண்டு செயலிழந்து நிற்கின்றனர். கைத்துமுக்கியுடன் தூயவன் நிற்க, மற்ற காவலர்கள் நெருங்கிச் சூழ்கின்றனர்.)*

**தூயவன் :**

அவர்கள் இருவரையும் ஆய்வு செய்யுங்கள்.

*(இரு காவலர்கள் முன்வந்து முழுமையாக இருவரையும் ஆய்வு செய்கின்றனர். அவர்களில் ஒருவரிடமிருந்து ஒரு கைத்துமுக்கியும் சிறுகத்தி ஒன்றும் கண்டு எடுக்கப் படுகின்றன. கைத்துமுக்கியைப் பெற்றுத் தூயவன் முகர்ந்து பார்த்துவிட்டு அரிச்சந்திரனிடம் அளிக்கிறார். அரிச்சந்திரன் முகர்ந்து பார்த்துவிட்டுத் தலையை அசைக்கிறார்.)*

**தூயவன் :**

கோதை என்ற பெண்ணைக் கொலை செய்தமைக்காகவும் சற்று முன்னர் ஒருவரைக் கைத்துமுக்கியால் சுட்டுக் கொலை செய்ய முயன்றமைக்காகவும் உங்கள் மூவரையும் சிறை செய்கிறோம்.

*(காவலர்கள் மூவர்க்கும் விலங்கிடுகின்றனர்.)*

❁ ❁ ❁ ❁ ❁

## காட்சி - 40

இடம் : கண்ணன் வீடு.

காலம் : காலை மணி பத்து.

உறுப்பினர்கள் : மணியரசன், மங்கை, எழிலி.

சூழல் : முதல் தளக்கூடத்தில் மணியரசன், மங்கை, எழிலி மூவரும் அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கின்றனர்.

**மங்கை :**

மணி, பேசாமல் அமர்ந்திருந்தால் எப்படி? எதற்காக இங்கு என்னை அழைத்து வந்தீர்கள்?

**எழிலி :**

ஏன் பரபரக்கிறாய்? கொஞ்சம் பொறு.

**மணியரசன் :**

கதிரவன் வீட்டிலிருந்து இன்று வருகிறார்கள். திருமணம் பற்றி முறைப்படி நேரில் பேச வேண்டுமாம்.

**மங்கை :**

தெரிந்ததுதானே? அதற்கென்ன இப்போது?

**மணியரசன் :**

கதிரவனுக்கு உங்களைக் கட்டித் தருவதில் உங்கள் அண்ணனுக்கு அத்துணை விருப்பம் இல்லை.

**மங்கை**

அவருக்கு எப்பொழுது விருப்பம் இருந்தது? அவரை அண்ணனுக்கு ஆதி முதலே பிடித்தது இல்லை.

**எழிலி :**

ஏன் இப்படிப் பேசுகிறாய்? அத்தான் அப்படிப்பட்டவர் இல்லை. நீ கடைசிவரைக் கண்கலங்காமல் இருக்க வேண்டும்; அதைத் தவிர அவருக்கு வேறு ஆசை கிடையாது. உனக்குத் தெரியாதா?

**மங்கை :**

தெரியும். ஆனால், என் காதல் என்னாவது? கதிரவன் தவறானவராகவே இருக்கட்டும்; அதற்காக, அவர் திருந்தி நல்லவராக வாழக்கூடாதா? உங்களுக்கு அவர் எப்படிப் பட்டவராகவும் இருக்கட்டும். என்னைப் பொறுத்தவரை, அவர் இனியவர்; எனக்காக எந்த ஈகத்தையும் செய்யக் கூடியவர். எங்கள் காதல் கவர்ச்சியை முதலாகக் கொண்டது இல்லை; உள்ளார்ந்த அன்பை அடிப்படையாகக் கொண்டது.

**மணியரசன் :**

எனக்குப் புரிகிறது. இருந்தும், ஏற்ற இறக்கங்களை எண்ணிப் பார்ப்பது தவறில்லையே.

**மங்கை :**

ஏற்ற இறக்கங்களை எண்ணிப் பார்த்துக் கொள்வதற்குப் பெயர் காதல் இல்லை. காதல் இரு உள்ளங்களிடையே ஊற்றெடுத்துப் பீறிட்டுப் பரவும் உணர்ச்சிப் பெருக்கு! அன்பின் வழியது உயிர்நிலை மட்டுமன்று; காதலும்தான். அன்புதான் காதல்.

**எழிலி :**

ஏன்? காதலைப்பற்றி நீ மட்டும்தான் அறிவாயா? எங்களுக்குத் தெரியாதா? உன் விளக்கங்கள் எங்களுக்குத் தேவை இல்லை. இப்போது நீ என்னதான் சொல்கிறாய்?

**மங்கை :**

என்னைப் பற்றித்தான் நீ அறிவாயே; எதற்குப் பின் கேட்கிறாய்? உள்ளத்தில் காதல் என்ற விதையை ஊன்றிக் கொண்டவள் நான்தான் என்றாலும் எரு இட்டு, நீர்ப்பாய்ச்சி இடையறாது வளர்த்தவள் நீதானே? அதை இன்று அறுத்துவிடு என்கிறாயே, அடுக்குமா? அவர் இன்றி நானோ, நானின்றி அவரோ, இங்கு என்றும் இல்லை. இனி, என் வாழ்வும் தாழ்வும் அவரோடுதான்.

**மணியரசன் :**

புரிகிறது. உங்கள் அண்ணனிடம் சொல்கிறேன். அவர் உங்கள் விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்யமாட்டார். நாங்களும் உங்களுக்குத் துணையாகவே இருப்போம்.

**மங்கை :**

நன்றி. அவரும் நானும் உங்களுக்கு ஆயுள் உள்ளவரைக் கடமைப்பட்டவர்கள். நீங்கள் செய்யாமற் செய்த உதவிக்கு, நாங்கள் என்னதான் செய்யப் போகிறோமோ?

**மணியரசன் :**

எந்தத் தவறும் இனிச் செய்யாமல் கதிரவன் இருந்தால் அது போதும். அப்படி எதுவும் நடக்காமல் நீங்கள்தான் கவனித்துக் கொள்ள வேண்டும்.

**மங்கை :**

நீங்கள் எனக்குச் சொல்லவே வேண்டா. அன்பின் வலிமை அளவிட முடியாதது. அன்பு ஆக்கவும் செய்யும்; அழிக்கவும் செய்யும். எங்களின் ஒருமித்த அன்பு, இனி, என்றும் எல்லோர்க்கும் இனியதையே செய்யும்.

**மணியரசன் :**

அது போதும். என் இனிய வாழ்த்துகள். நீங்கள் சென்று மாலை நிகழ்வுக்கான ஏற்பாடுகளைக் கவனியுங்கள்.

**மங்கை :**

கவனிக்கிறேன். ஆனால் உங்கள் வாழ்த்துகளை அண்ணனிடம் சொல்லுங்கள்.

**எழிலி :**

என்ன சொல்கிறாய்?

**மங்கை :**

மாலையில் நடக்கப்போவது தேன்மொழி, அண்ணன் திருமணப் பேச்சுத்தான்; என் திருமணம்பற்றி இல்லை.

*(மங்கை வாய்விட்டுச் சிரித்தபடி அங்கிருந்து கீழிறங்கிச் செல்கிறாள்.)*

**எழிலி :**

என்னங்க? அவள் இப்படிச் சொல்லி விட்டுப் போகிறாள்!

**மணியரசன் :**

அதனால் என்ன? நாமெதற்கு இருக்கிறோம்? மங்கை, கதிரவன் திருமணத்தையும் சேர்த்தே இன்று உறுதி செய்து விடுவோம்.

**எழிலி :**

எப்படி? முடியுமா?

**மணியரசன் :**

முடியாமல்? என்ன கேள்வி இது? முடித்துக் காட்டுகிறேன். உன் திருமணத்தை எத்தனை முறை தடுத்து நிறுத்தி இருக்கிறேன்; மறந்து விட்டதா? உன் அப்பா, அம்மா இங்கு இருக்கிறார்களே, விட்டுவிடுவேனா? தங்கை இருக்க அண்ணனுக்கு மணமா? தகுமா? உன் அப்பா எதற்கு இருக்கிறார்?

**எழிலி :**

அஃதென்ன? அப்பா ஓயாமல் உங்களைப் பற்றியே பேசிக்கொண்டு இருக்கிறார்? என்ன மாயம் செய்தீர்கள்?

**மணியரசன் :**

ஒருவரை ஒருவர் விரும்புவதற்கு என்ன காரணம் தேவை? எல்லாம் அன்புதான்! நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதையை திரும்பப் பெறுவோம்; இது வாழ்வியல் விதி. மேலே எறியப் பட்ட பொருள் திரும்பக் கீழே வருகிறது இல்லையா? அது போலத்தான் அனைத்தும். அன்பிற்கு எந்தத் தடையும் இருக்க முடியாது. எப்படிப்பட்ட கல் நெஞ்சையும் இளக்கி, உருக்கக் கூடியது அன்பு. நீ உன் அன்பினால் எப்படி எப்படி எல்லாம் என்னை மாற்றிவிட்டாய்! உனக்குத் தெரியாதா?

**எழிலி :**

என் அன்பில் என்ன குறை?

**மணியரசன் :**

நல்லவன் கெட்டவன் ஆவதும் கெட்டவன் நல்லவன் ஆவதும் அன்பினால்தாம். ஆக்கவும் அழிக்கவும் வல்லது அன்பு. அன்பை ஆளுமை கொண்டவர் நல்லவர் எனின், நல்லது நடக்கும்; தீயவர் எனின் தீமை விளையும். அஃது அன்பின் பிழை அன்று; அஃதை ஆளுநர் தம் பிழை. அன்பும் அணுவும் ஆற்றலால் ஒன்றே! அவற்றை ஆளுநர்களின் மன வளர்ச்சிக்கு ஏற்ப, அவை நன்மை தீமைகளை விளைவிக்கின்றன.

**எழிலி :**

உண்மைதாம். என் அன்பில் குறை இருப்பின், கூறுங்கள்; திருத்திக் கொள்கிறேன்.

**மணியரசன் :**

சட்டக் கல்வியை நான் தேர்ந்தெடுத்ததில் சில நோக்கங்கள் எனக்கு இருந்தன. அந்த நோக்கங்களின் அடி வேரையே நீ அறுத்து விட்டாய். உண்மைக்குப் புறம்பாக ஒருபோதும் வழக்காடக்கூடாது என்ற என் நோக்கம், எடுத்துக் கொண்ட முதல் வழக்கிலேயே உன்னால் தகர்ந்து போயிற்று.

**எழிலி :**

ஏன் பொய் சொல்கிறீர்கள்? கொலை செய்தவர் வேறொருவர் என்று யாரும் குறுக்கிட்டுக் குழப்பாத அளவிற்கு உறுதியாக வழக்கு மன்றத்தில் நிலை நாட்டியவர், வழக்கில் வெற்றி பெற்றவர், நீங்கள்தானே? ஆறு மாதங்கள்கூட ஆகவில்லை; அதற்குள் மறந்து விட்டதோ?

**மணியரசன் :**

மறக்க முடிந்திருந்தால், நானேன் இன்றும் வருத்தப் பட்டுக் கொண்டு இருக்கிறேன்?

**எழிலி :**

கதிரவன்தான் அந்தக் கொலையைச் செய்ததாக, என் அத்தான் அப்போது சொல்லிக் கொண்டிருந்தார்; இப்போது நீங்களுமா?

**மணியரசன் :**

அதெல்லாம் இல்லை. அந்த வழக்கை நான் எடுத்துக்கொண்டபோது, கதிரவன்தான் கொலைசெய்தவர் என்று உறுதியா நம்பினேன்.

**எழிலி :**

உண்மையாகவா?

**மணியரசன் :**

ஆமாம்.

**எழிலி :**

அப்படி இருந்துமா வழக்கை எடுத்துக் கொண்டீர்கள்? எதற்கு?

**மணியரசன் :**

காதல்! காதலி நீ கேட்டுக் கொண்டாயே, அதற்காக! காதலுக்குக் கண்ணில்லை என்று சொல்கிறபோது, கருத்து மட்டும் எங்கிருந்து இருக்கும்? செய்யாமற் செய்த உதவி! மங்கையைப் பொறுத்தவரைச் சரிதான்; ஆனால், என்னைப் பொறுத்தவரை அது சரி இல்லை. உன்னிடம் பயனை எதிர்பார்த்து நான் செய்த உதவி அது! நீ, என் மனைவி ஆகவேண்டும் என்பதற்காக, என் கொள்கைக்கு முரணாக அமைந்திருந்தும் குற்றவாளி அவர்தான் என்று அப்போது நான் நம்பிய கதிரவனின் வழக்கை எடுத்துக்கொண்டேன்.

**எழிலி :**

உங்களைக் காதலராகப் பெற நான் கொடுத்து வைத்தவள்! எல்லாம் உங்களால் இனிது முடிந்தன. பலரும் உங்களைப் பாராட்டும்போது நான் இலவம் பஞ்சாய் எங்கெங்கோ பறந்து சென்றேன். என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. கதிரவன் இன்று புதிய வாழ்க்கையை ஏற்றிருக் கிறார். அவர் தண்டிக்கப்பட்டிருந்தால், மங்கையின் வாழ்வு பாழாகி இருக்கும்.

*(எழிலியின் குரலில் மகிழ்ச்சியும் இனிமையும் இழைந் தோடுகின்றன.)*

**மணியரசன் :**

உண்மைதான். எனக்கு மகிழ்ச்சியே! குற்றம் செய்தவர் தண்டிக்கப்படுவதே, திருந்தி வாழவேண்டும் என்பதற்காகத் தான். கதிரவன் கடந்த ஆறு மாதங்களாகத் திருந்திய மனிதராகவே நடந்து கொண்டு உள்ளார். தானுண்டு; தன் வேலை உண்டு என்று எந்தத் தவறும் செய்யாதவராய்ப் பொறுப்போடு இப்போது இருந்து வருகிறார். அதை நினைக்க எனக்கு மனநிறைவு ஏற்படுகிறது.

*(எழிலி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தபடி அமைதியாக அமர்ந்து இருக்கிறார்.)*

**மணியரசன் :**

என்ன சிந்தனை?

**எழிலி :**

கதிரவன் ஒளிவு மறைவின்றி அனைத்தையும் மங்கைக்கு உணர்த்தி இருக்க வேண்டும். அவள் தெளிவாகவே இருந்து இருக்கிறாள். கதிரவனை நல்லவன் என்ற அவள் நம்பிக்கை என்றுமே மாறியதில்லை.

**மணியரசன் :**

எப்படிச் சொல்கிறாய்?

**எழிலி :**

உயிரே உனக்காக!

*(எதுவும் புரியாமல் மணியரசன் எழிலியைப் புதிரோடு பார்க்கிறார்.)*

**எழிலி :** *(புன்னகையுடன்)*

ஒருநாள் மங்கையின் பெட்டியை எதற்கோ திறந்து பார்த்தேன்; அங்கே, கதிரவனும் மங்கையும் சேர்ந்து எடுத்துக் கொண்ட நிழற்படம்! படத்தைத் திருப்பிப் பார்க்கிறேன்; அதில், 'உயிரே உனக்காக', என்று எழுதப்பட்டுக் கீழே கதிரவனின் கையொப்பம்!

**மணியரசன் :**

உயிரே, உனக்காக! உயிரே உனக்காக! நீ நினைப்பது சரியாக இருக்கலாம். அப்படியே இருக்கட்டும்; ஒளிவுமறைவு இல்லாத உறவு நீடித்து நிலைத்து வாழும். அவர்கள் மகிழ்ச்சி யாக இருந்தால் நமக்கும் மகிழ்ச்சிதான்.

*(மணியரசன் எழிலியின் கைகளைத் தன் கைகளில் எடுத்துக் கொள்கிறார்.)*

**மணியரசன் :** *(கொஞ்சலாக)*

எழிலி?

**எழிலி :**

என்ன?

**மணியரசன் :**

என் கண்களை ஏறிட்டுப் பார்; என்ன தெரிகிறது?

*(அவர் கண்களை எழிலி அன்போடு பார்க்கிறார்.)*

**எழிலி :**

எதுவும் தெரியவில்லையே?

**மணியரசன் :**

அடுக்குமா உனக்கு? என் அன்பு அனைத்தும் இரு விழி களில் தேங்கித் தளும்புகின்றனவே; தெரியவில்லையா?

**எழிலி :**

இல்லை; ஏக்கம்தான் ஏராளமாகத் தெரிகிறது.

*(மணியரசன் எழிலியை இழுத்து மார்போடு இறுக வலிய அணைத்துக் கொள்கிறார்.)*

**எழிலி :**

இஃதென்ன முரட்டுத்தனம்? எப்போதுமே இப்படித்தானா?

**மணியரசன் :**

எழிலி, எப்போது நம் திருமணம்?

**எழிலி :**

ஏன்? பொறுக்க முடியவில்லையா?

**மணியரசன் :**

நான் பொறுத்துக் கொள்வேன்; ஆனால், என் புலன்களுக்கு அத்துணைப் பொறுமை இல்லை. புரிகிறதா?

**எழிலி :**

புரிகிறது; புரிகிறது! புரியாவிட்டாலும் நீங்கள் புரிகின்ற திருவிளையாடல்கள் தெளிவாகப் புரியவைக்கின்றன. விடுங்கள் என்னை. எப்போதும் இந்த நினைப்புத்தானா?

**மணியரசன் :** *(கெஞ்சலாக)*

எழிலி, என்ன இது?

**எழிலி :**

போதும்; இன்றைக்கு இவ்வளவுதான்; என்னை விடுங்கள். பொல்லாதவர் நீங்கள்!

*(மணியரசன் அணைப்பினின்றும் விடுபட எழிலி திமுறுகிறார்.)*

**மணியரசன் :** *(கொஞ்சலாக)*

ஏய்! ஏய்! என்ன இது?

**எழிலி :**

வரைமுறையே உங்களுக்குக் கிடையாது; எல்லாம் திருமணத்திற்குப் பிறகுதாம்!

**மணியரசன் :**

சரி; இறுதியாக ஒன்றே ஒன்று.

**எழிலி :**

இன்றைக்கு ஒன்றே ஒன்றா? போதுமா?

**மணியரசன் :**

இல்லை, இல்லை; இப்போதைக்குத்தான்!

*(எழிலி மணியரசனை வலிந்து அணைத்து வாய் திறந்த நிலையில் முத்தம் அளிக்கிறார். மணியரசன் மகிழ்ச்சியில் திளைத்தபடி ஏதேதோ குழறிக் கொட்டுகிறார்.)*

**எழிலி :**

என்ன சொல்கிறீர்கள்?

**மணியரசன் :**

உயிரே உனக்காக! உயிரே, உனக்காக!

❁ ❁ ❁ ❁ ❁